ignou
THE PEOPLE'S
UNIVERSITY

Indira Gandhi National Open University
School of Humanities

BTLLA-135
Modern Indian Language: Tamil

EXPERT COMMITTEE

Prof. R Thamotharan
Prof of Tamil, Centre of Indian Languages
School of Language Literature and Culture
Studies, JNU, New Delhi

Dr. S. Vivekananthan
Associate Professor, Department of Tamil,
Sri Venkateswara College,
University of Delhi, New Delhi-110021

Prof. Malati Mathur
Director-School of Humanities, IGNOU

COURSE COORDINATOR

Prof. Malati Mathur
Director, School of Humanities
IGNOU, New Delhi-110068

COURSE EDITOR

Prof. R Thamotharan
Prof of Tamil, Centre of Indian Languages
School of Language Literature and Culture
Studies, JNU, New Delhi

BLOCK PREPRATION

Block & Unit	**Writer**
Block 2 Unit 13:9	**Dr. S. Vivekananthan,** Associate Professor, Department of Tamil, Sri Venkateswara College, University of Delhi, New Delhi-110021

The course has been adapted from existing IGNOU material

Cover Design : **Mr. Tamal Basu,** IGNOU Panel

Printed and published on behalf of the Indira Gandhi National Open University,
New Delhi by Registrar, MPDD.

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

இந்திரா காந்தி
தேசியப் பொது நிலைப் பல்கலைக்கழகம்
கலைக்கல்வித்துறை

BTLLA-135
Modern Indian Language : Tamil
தமிழ்
இளநிலைக்கல்வி

தொகுதி

1

தமிழ்மொழியின் சிறப்பியல்புகள்

பாடப்பகுதி 1
தமிழ் எழுத்துக்களும் எழுத்துப் பழக்கங்களும் **3**

பாடப்பகுதி 2
சொற்களின் அமைப்பும் வகையும் **24**

பாடப்பகுதி 3
சொற்சேர்க்கையும் சந்தி விதிகளும் **47**

பாடப்பகுதி 4
வாக்கிய அமைப்பும் வகைகளும் **62**

பாடப்பகுதி 5
மொழி நடைக்கூறுகள் **82**

பாடப்பகுதி 6
சட்டத்துறையில் தமிழ்மொழி **100**

பாடப்பகுதி 7
இயற்பியல்துறையில் தமிழ்மொழி **109**

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

தொகுதி அறிமுகம்
தமிழ்மொழியின் சிறப்பியல்புகள்

அறிமுகம்

உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இன்று பேசப்பெற்று வருகின்றன. அவற்றுள் பத்திற்கும் குறைவான மொழிகள் தொன்மையான வரலாற்றை உடையனவாக உள்ளன. இந்தச் சில மொழிகளுள் இன்றுவரை பேச்சுவழக்கிலும் எழுத்துவழக்கிலும் பயன்பாட்டில் உள்ள மொழியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது. இடைவெளியற்ற இலக்கண இலக்கிய வரலாற்றை நெடுங்காலமாகப் பெற்றுள்ள மொழியாகவும் தமிழ் மொழி திகழ்கின்றது. இத்தகைய காரணங்களால் செம்மொழி என்றும் அழைக்கப்பெறுகின்றது. இத்தகு பெருமைக்குரிய தமிழ்மொழியின் இயல்புகளை இந்தத் தாளின் முதல் பகுதியில் அறிய இருக்கிறோம். தமிழ்மொழியில் எழுதப்பெற்ற வளமான இலக்கியங்களைக் கற்று அவற்றின்வழி இலக்கியங்கள் படைக்கப்பெறுகின்ற பாங்கை இந்தத் தாளின் இரண்டாவது பகுதிவழி அறிய உள்ளோம்.

பகுதி ஒன்று : தமிழ்மொழியின் சிறப்பியல்புகள்

ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் அந்த மொழிசார்கல்வியின் அடிப்படைகளுள் ஒன்று. இதற்கு மொழியின் சிறப்பியல்புகளை அறிந்துகொள்ளுதல் முதல் பணியாகும். இதன்வழி நாம் பணியாற்றும் பல்வேறு சூழல்களில் மொழியை வலுவாகக் கையாள இயலும். இந்தக் கையாளுகையே ஒருவரது வாழ்க்கையின் வெற்றியைப் பலபோது தீர்மானிக்கும், எனவே, இந்தத் தாளின் முதல் பகுதியில் தமிழ்மொழியின் சிறப்பியல்புகள் ஏழு பாடங்கள்வழி விளக்கப் பெற்றுள்ளன. தமிழ்மொழியின் அடிப்படை இயல்பு முதற்கொண்டு அறிவியல் துறையில் இன்றைய பயன்பாடு வரையிலான பயன்பாட்டு நிலைகளை இந்த முதல் பகுதிக்கான பாடங்கள்வழி அறிந்துகொள்ள இயலும்.

பாடம் 1 தமிழ் எழுத்துகளும் எழுத்துப் பழக்கங்களும்.

பாடம் 2 சொற்களின் அமைப்பும் வகையும்.

பாடம் 3 சொற்சேர்க்கையும் சந்தி விதிகளும்.

பாடம் 4 வாக்கிய அமைப்பும் வகைகளும்.

பாடம் 5 மொழி நடைக்கூறுகள்.

பாடம் 6 சட்டத்துறையில் தமிழ்மொழி.

பாடம் 7 இயற்பியல்துறையில் தமிழ்மொழி.

ignou THE PEOPLE'S UNIVERSITY

பாடப்பகுதி (Unit) *1*
தமிழ் எழுத்துக்களும் எழுத்துப் பழக்கங்களும்

படிப்பு நோக்கம்

- ★ இப்பாடத்தின் வழியாகத் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களை ஒரு வகைதொகையாக நினைவுபடுத்திக் கொள்ளலாம்.
- ★ எழுத்துக்களின் காலஅளவு, பிறப்பு, வரிசைமுறை, ஒலிப்பு முறைகளைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.
- ★ தனியே நிற்கும் எழுத்து, சொல்லிடையே நிற்கும் எழுத்து இவற்றினிடையே தோன்றும் வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளலாம்.
- ★ தமிழில் மொழி முதல் இடை இறுதியில் வரும் எழுத்துக்கள் பற்றிய வரன்முறைகளை அறியலாம்.
- ★ பிறமொழிச் சொற்கலப்பும் ஒலிக்கலப்பும் பற்றிய மரபுகளை விளங்கிக் கொள்ளலாம்.

பாடக்கருத்தலகுகள்

1.0 பாடமுன்னுரை

1.1 தமிழ் நெடுங்கணக்கு

1.1.1 முதல் எழுத்துக்கள்: உயிர், மெய், குறில், நெடில், வல்லினம் மெல்லினம், இடையினம்

1.1.2 சார்பெழுத்துக்கள்: மூன்று: குற்றியலிகரம் குற்றியலுகரம், ஆய்தம்.
பத்து: உயிர்மெய், அளபெடை குறுக்கம்

1.1.3 சுட்டெழுத்து, வினாவெழுத்து, போலி எழுத்து, இனஎழுத்து

1.2 ஒலிப்புப் பயிற்சி/ஒலிமயக்கம் தரும் எழுத்துக்கள்

1.2.1 ர,ற

1.2.2 ந,ன,ண

1.2.3 ல,ள,ழ

1.3 தமிழை எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள்

1.3.1 மொழி முதலில் வரும் எழுத்து மரபுகள்

1.3.2 மொழி இடையில் வரும் எழுத்து மரபுகள்

1.3.3. மொழி இறுதியில் வரும் எழுத்து மரபுகள்

1.4 இன்றைய மொழிப்பயன்பாடுகள்

1.4.1 கிரந்த எழுத்துக்கள்

1.4.2 எழுத்துச் சீர்திருத்தம்

1.4.3 பிறமொழிச் சொற்களை எழுதும் மரபுகள்

1.5 பாடத்தொகுப்புரை

1.6 மேலும் படித்தற்குரிய நூல்கள்

***1.7* தன் மதிப்பீடு: விடைகள்**

ignou THE PEOPLE'S UNIVERSITY

1.0 பாடமுன்னுரை

தமிழ்மொழியிலுள்ள எழுத்துக்களையும், அவற்றைக் கையாளும் பழக்கங்களையும் இம் முதல்பாடத்தின் மூலம் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறோம். ஒரு மொழியை நாம் எதற்காகக் கற்கிறோம்? நாம் சொல்வதையும் எழுதுவதையும் திறமையோடு, ஆற்றலோடு, நன்கு பழகிய பழக்கத்தோடு சொன்னால்தான் அவற்றைப் பிறர் ஏற்குமாறு சொல்லமுடியும். அதைப்போலப் பிறர் சொல்வதையும் எழுதுவதையும் நாம் நன்கு விளங்கிக்கொள்ளவும் இப் பயிற்சி உதவும்.

மொழியைக் கற்பதென்பது, அதனோடு பழகிக்கொள்வது பற்றியதே. ஒரு மொழியின் இயல்புகளையும் நன்கு பழகிக் கொண்டால், அதன்வழி உணர்த்தப்படும் கருத்தைப் புரிந்து கொள்வது எளியதாகும்.

நீங்கள் தொடர்ந்து படிக்கப் போகும் இப்பாடங்கள், உங்களுக்குத் தமிழ்மொழியுடன் நல்ல பழக்கத்தை ஏற்படுத்தும். ஒரு நல்ல நண்பரை அறிமுகப்படுத்துவது போலவே, இவை உங்களுக்கு என எழுதப் படுகின்றன. இம் முதல்பாடம் உங்களுக்கு முன்பு தெரிந்தவைகளையே மீண்டும் நினைவூட்டுகிறது. முன்பு பார்த்துப் பழகிய ஒருவரைப் புதுமுறையில் – புதிய சூழலில் கண்டு நினைவு படுத்திப் பழகுவதுபோல் இது காணப்படும்.

1.1 தமிழ் நெடுங்கணக்கு

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 'அரிச்சுவடி' என்பார்கள். முன்பு பனை ஓலைகளாலாகிய ஏட்டில் அ, ஆ எனத் தமிழ் எழுத்துக்கள் எழுதி யிருக்கும். அதனை மனப்பாடம் செய்யும் பள்ளிப் பிள்ளைகள் மணலில் அனா, ஆவன்னா, இனா, ஈயன்னா எனப் பாடுவது போல் சொல்லிக் கொண்டே அ, ஆ, இ, ஈ என்ற எழுத்துக்களை வரிவரியாக எழுதிக் கொண்டிருப்பர். இதற்கு **'முறைவைத்தல்'** என்று பெயர். ஒவ்வொரு நாளும் காலையில் பள்ளி தொடங்கியதும் முதல்வேலை முறைவைப்பதுதான்.

தொடக்கப்பள்ளிக்கு மேல் படிக்கப் போகும் போது இவற்றை அகர வரிசை, நெடுங்கணக்கு என்பர். முன்பு கணக்கு என்றால் நூல், இலக்கியம் என்று பொருள். அவை எல்லாவற்றுக்கும் அடிப்படை எழுத்துக்களே ஆதலால், அந்த 'அகரவரிசை'யை **நெடுங்கணக்கு** என்றனர்.

நெடுங்கணக்கிலுள்ள அகரவரிசைகள் ஒலிகளாகும். அவை பொருள்தரவல்ல ஒலிகளாகும். பொருட் தொடர்புள்ள சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் போன்ற நிலையில்தான் நாம் ஒரு மொழியை இயற்கையாகப் பேசுகிறோம். நம் வசதிக்காகத்தான் மொழியைச் சொற்களாகவும் சொற்களை ஒலிகளாகவும் பிரித்துப் பார்க்கிறோம். அவ்வாறு பார்க்கும் பொழுது மொழியிலுள்ள மிகச்சிறிய உறுப்பாக அமைவன ஒலிகளே. ஓர் ஒலி ஒரு பொருளைத்தர உதவ வேண்டும்.

மனம்-மணம், கல்-கள், கரை-கறை

ன், ண், ல், ள், ர், ற் என்பன வெவ்வேறு ஒலியன்கள் – எழுத்துக்கள் ஆகும். ஏன்? இவை பொருள் வேறுபடுத்தும் ஒலிகளாக உள்ளன. மனம் என்பதிலுள்ள 'ன' வை மாற்றி 'ண' ஆக்கி விட்டால் பொருள் மாறிவிடுகிறது. எனவே தமிழில் ன வேறு எழுத்து, ண வேறு எழுத்து என்பதில் ஐயமில்லை. இவை வெவ்வேறு **ஒலியன்கள்** எனப்படும்.

மனிதனால் எழுப்ப இயலும் எல்லா ஒலிகளும் ஒரு மொழியில் இடம் பெறுவதில்லை. ஒவ்வொரு மொழிக்கென்று சிறப்பாகவும் சில, ஒலிகள் உள்ளன. மொழியில் உள்ள ஒலிகளையே வரிவடிவில் எழுதிக் காட்டுகிறோம். **மொழியிலுள்ள எல்லா ஒலிகளுக்கும் நாம் எழுத்து வடிவம் அமைப்பதில்லை** பொருளை வேறுபடுத்தும் ஒலிகளுக்கு மட்டும் எழுத்துக்கள் அமைப்பதே சிக்கலான முறை. இவ்வாறு பொருளை வேறுபடுத்தும் ஒலிகளை ஒலியன்கள் என்பர். தமிழ் எழுத்து என்பது தமிழ் மொழியிலுள்ள பொருளை வேறுபடுத்தும் ஒலிகளை அதாவது ஒலியன்களை மட்டும் குறிக்கும்.

1.1.1 முதல் எழுத்துக்கள்

தமிழில் அடிப்படையானவை உயிரும் மெய்யும் ஆகிய 30 எழுத்துக்கள் மட்டும். தமிழில் தனி எழுத்தும், சொல்எழுத்தும் உச்சரிப்பதில் வேறுபடு வதில்லை. க-ட-லை. இவை தனியே சொன்னாலும் சொல்லில் வைத்துச் சொன்னாலும் ஒலி வேறுபடுவதில்லை. சொல்லில் வைத்துச் சொல்லும் போது வேறுபடும் ஒலிகள் மிகச் சிலவே.

உயிரெழுத்துக்கள்	அ இ உ எ ஒ – குறில் 5
இரண்டு வகைப்படும்	ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ – நெடில் 7
மெய்யெழுத்துக்கள்	க ச ட த ப ற – வல்லெழுத்து,
மூன்று வகைப்படும்	வல்லினம், வலி – 6
	ங ஞ ண ந ம ன – மெல்லெழுத்து,
	மெல்லினம், மெலி – 6
	ய ர ல வ ழ ள – இடையெழுத்து,
	இடையினம், இடை – 6

1.1.2 சார்பெழுத்துக்கள்

உயிரும் மெய்யும் ஆகிய முதல் எழுத்துக்களைச் சொல்லில் வைத்து ஒலிக்கும் போது ஒலிப்பும் புணர்ச்சியும் வேறுபடுவனவற்றைச் சார்பெழுத்துக்கள் என்றனர். ஆய்த எழுத்தும் வல்லோசையை மென்மைப் படுத்தவே பெரிதும் பயன்பட்டுள்ளது.

தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் மூன்று; குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பன அவை.

பிற்காலத்தார் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் பத்து: உயிர்மெய், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், உயிரளபெடை, ஒற்றளபெடை என்பன அவை.

நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்

1. மொழி என்று நாம் பேசுவதைப் பல ஒலிகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.
2. மனிதனால் எழுப்ப இயலும் எல்லா ஒலிகளும் ஒரு மொழியில் இடம் பெறுவதில்லை.
3. ஒவ்வொரு மொழிக்கென்றும் சிறப்பான சில ஒலிகள் உள்ளன.
4. மொழியிலுள்ள ஒலிகளை வரிவடிவில் எழுதிக் காட்டுகிறோம்.
5. மொழியிலுள்ள எல்லா ஒலிகளுக்கும் நாம் எழுத்து வடிவம் அமைப்பதில்லை. பொருளை வேறுபடுத்தும் ஒலிகளுக்கு மட்டும் எழுத்துக்கள் அமைப்பதே சிக்கனமான முறை.
6. பொருளை வேறுபடுத்தும் ஒலிகளை **ஒலியன்கள்** என்பர்.
7. தமிழில் சார்பெழுத்துக்கள் என்பன பொருளை வேறுபடுத்துவன அல்ல; சொல்லில் இடம்பெறும்போது ஏற்படும் ஒலிமாற்றங்கள் அல்லது ஒலித்திரிபுகளேயாகும். அவை புணர்ச்சி வேறுபடுமிடங்கள் உள.

8. தமிழில் முதல் எழுத்து தமிழ்மொழியிலுள்ள பொருளை வேறுபடுத்தும் ஒலிகளை அதாவது ஒலியன்களை மட்டும் குறிக்கும்.
9. சார்பெழுத்துக்களில் உயிர்மெய், ஆய்தம் இரண்டும் தனியெழுத்து வடிவம் உடையன; அளபெடைக்கு அடையாள எழுத்து உண்டு; பிறவற்றிற்கு இப்போது வரிவடிவ வேறுபாடு இல்லை.

தன்மதிப்பீடு : 1. வினாக்கள்

1. பொருளை வேறுபடுத்தும் ஒலிகளுக்குப் பெயர் யாது?
2. தமிழிலுள்ள முதலெழுத்துக்கள் யாவை? அவை ஏன் முதலெழுத்துக்கள் எனப்பட்டன?
3. தமிழிலுள்ள சார்பெழுத்துக்கள் யாவை? அவை ஏன் சார்பெழுத்துக்கள் எனப்பட்டன?

1.1.3 சுட்டெழுத்து, வினாவெழுத்து, போலி எழுத்து, இன எழுத்து

அ, இ, உ என்பன சுட்டெழுத்துக்கள் எனப்படுகின்றன. எ, ஏ, ஆ, ஓ, யா என்பன வினா எழுத்துக்கள்.

தமிழில் பூ, கா, ஈ, ஆ என ஓரெழுத்தொருமொழிகள் உள. அவை போல அ, இ, உ, என்பன தனித்து நின்றே சுட்டுப்பொருளை உணர்த்திய காலம் உண்டு. இன்றும் திராவிட மொழிகளில் அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களும் எ என்ற வினாவெழுத்தும் தனித்து நின்றே சுட்டுப் பொருளையும் வினாப்பொருளையும் உணர்த்துமிடங்கள் உள. தமிழில் இவை சுட்டு, வினா அடிப்படையில் பல்வேறு சொற்களாக வழங்குகின்றன.

சுட்டுச்சொற்கள்

அவன் இவன் (உவன்)
அது இது (உது)
அவர் இவர்
அந்த இந்த
அங்கே இங்கே (உங்கே, ஊங்கு)
அப்படி இப்படி

இவை இவ்வாறு ஒரு பொருளை உணர்த்தவே பயன்படுவதால் சுட்டெழுத்து, வினாவெழுத்து எனப்பட்டன. அ, இ, உ, எ, ஏ என்பன உயிர்களே. ஆயினும் அடிக்கடி பயன்படும் தன்மைநோக்கி இவை பெயரிடப்பட்டுள்ளன. அ, இ, உ, தனித்து நின்றே சுட்டுப்பொருள் உணர்த்தும்போது, சுட்டுச்சொல் ஆகிவிடுகின்றன; ஆனால் தமிழில் அவை அவ்வாறு வழங்காமல் சுட்டுச் சொற்களுடன் சேர்ந்து நின்றே வழங்குகின்றன.

வினாச்சொற்கள்

வந்தானா (ஆ)
வந்தானோ (ஓ)
வந்தானே (ஏ)
என், எவன், எது, எவர், எந்த, எங்கே, எப்படி (எ)
ஏது, ஏவன்(ஏ)
யாவை, யாவின், யாது, யாங்ஙனம் (யா),

இவ்வாறு வினாஎழுத்துக்கள் இடம்பெறுகின்றன. 'யா' என்று வினவும் பொழுது அஃது ஓரெழுத்து ஒருமொழியாகிவிடுகிறது.

போலி எழுத்து

ஒரு சொல்லில் ஓரெழுத்து நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்து வந்தாலும் பொருள் வேறுபடாதிருப்பது. சில சொற்கள் தொன்றுதொட்டு இவ்வாறு வழங்கி வருகின்றன.

அறம் – அறன்
மரம் – மரன் } ம் எழுத்துக்கு ன் போலி

இன எழுத்து

பிறப்பாலும் ஒலிப்பாலும் புணர்ச்சிவிதியாலும் ஒன்றற்கொன்று இனம் என்று கருதப்படும் எழுத்து இன எழுத்து எனப்படும்.

உயிர் : குறிலுக்கு நெடில் இனம்

மெய் : வல்லினம் ஆறுக்கும் முறையே மெல்லினம் ஆறும் இனம், இடையினம் ஆறும் ஓரினம்.

அவுக்கு ஆ இனம்; க் எழுத்துக்கு ங் இனம் என இவ்வாறு காண்க.

1.2 ஒலிமயக்கம் தரும் எழுத்துக்கள்

தமிழில் ஒலி மயக்கம் தரும் எழுத்துக்கள் சிலவுள. அவை வருமாறு:

ர ற
ந ன ண
ல ள ழ

இவை பிறக்குமிடத்தை அறிந்து உச்சரிக்க வேண்டும். தமிழ் நன்றாகப் பேசவராதவனை 'என்ன இவன்? ரகர றகரம் தெரியாதவன்' என்று கேலி செய்வார்கள்; 'ல, ழ வரவில்லையே' என்று வருத்தப்படுவார்கள்.

இவற்றைத் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதி மக்களும் ஒரே மாதிரியாக உச்சரிப்பதில்லை. 'வாழைப்பழம்' என்பதைச் சரியாக, அழுத்தமாக உச்சரிப்பவர்களும் உண்டு; 'வாளப்பழம்' என்பவர்களும் உண்டு; 'வாயப்பயம்' என்று பயமுறுத்துபவர்களும் உண்டு.

என்றாலும் மேடையிலும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இசை, நாடகம் போன்ற கலைத்துறைகளிலும் பயன்படுத்தும் பொதுத்தமிழில் இவ்வொலிகளைத் தெளிவாக உச்சரிக்கின்றனர். அதனால் எழுதும் பொழுதும் பிழை நேராமல் எழுதுகின்றனர்.

இவற்றைத் தெளிவாக உச்சரிக்கவில்லையென்றால் பொருள் தெளிவின்மை, நேர்த்தியின்மை போன்ற குறைகள் ஏற்படுவதுடன் பிறர் ஏளனத்திற்கும் ஆளாக நேரிடும். எழுதும் போது, எழுத்துப்பிழைகள் நேர்வதற்கும் இதுவே காரணமாகும். எனவே இந்த ஒலிகளைச் சரியாக உச்சரிக்கும் முறைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்; உச்சரித்துப் பழகிக் கொள்ள வேண்டும்.

சில ஒலிப்புப் பயிற்சிகள் கீழே தரப்பட்டுள்ளன. இவை நாட்டுப்புறத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் விளையாட்டுப்போல் ஒலிப்புப் பயிற்சி செய்யப்பயன்பட்டனவாகும்.

கடலிலே மரவுரல் உருளுது பிறழுது

வாழைப் பழம் அழுகிக் கொழகொழத்து
நழுவிக் கீழே விழுந்தது

தேர் உருளத் தேங்காய் உருளத்
தேரடி மணி நுனி உருள

ஓடும் நரிகளில் ஒரு நரி கிழநரி
கிழநரி முதுகினில் ஒருபிடி நரைமயிர்

அடடா கடலாடி வெள்ளைக்கோழி
கிழடல்ல மலடல்லவே

இவை நா பிறழ் பயிற்சியாகும், சொல்லிச் சொல்லிப் பிறழும் நா பிறகு தனியெழுத்துக்களை நன்கு உச்சரிக்கும். இதனால்தான் 'செந்தமிழ் நாப் பழக்கம்' என்றார் ஔவையார்.

1.2.1. ர,ற

ர

இதை இடையின ஒலி என்பர், இதன் உச்சரிப்பை விளக்குகிற முறையில் வருடொலி (Flap) என்றும் கூறுவர்.

நுனிநா அண்ணத்தை ஒரு நொடியில் வருடி ஒரு தட்டோடு (Flap) நின்றுவிடுவதால் ர பிறக்கிறது.

இது பேச்சுத்தமிழில் மொழிமுதலில் வருகிறது; மற்றபடி மொழியிடையிலும் இறுதியிலும் நிற்கிறது.

ராணி	மரம்	ஆர்ப்பு	ஏர்
ராகம்	கரி	மார்த்தல்	பார்
ரூபம்	வரகு	சர்க்கரை	வேர்
ரேவதி	கரை	நேர்த்தி	போர்
ரோகினி	நரை	தீர்ப்பு	

ற

இதை வல்லின ஒலி என்பர், இதன் உச்சரிப்பை விளக்குகிற முறையில் ஆடொலி (Trill) என்றும் கூறுவர்.

நுனிநா அண்ணத்தின் நடுப்பகுதியை நோக்கி உயர்ந்து வேகமாக அதிர்கிறது. இந்த அதிர்வால் நுனிநா ஆடுகிறது. அதனால்தான் ஆடொலி என்ற பெயர் வந்தது.

இது மொழி இடையில் வரும்; மொழியிறுதியில் உயிர் எழுத்துடன் சேர்ந்து வரும்.

அறம்	கறி	சேறு	சூறாவளி	கன்று
மறம்	சுறா	சோறு	கறவை	பன்றி
புறவு	பாறை	ஊற்று	உறவு	நன்று

இவற்றை ஒலித்துப் பாருங்கள். இனி 'ற' கரம் இரட்டித்து வரும் இடங்களையும் ஒலித்துப் பாருங்கள். நுனிநா அண்பல்லைப் பொருந்தி, அழுந்தி நின்று, சட்டென்று விடுபடுவதால் 'ற்ற' ஓசை பிறக்கும்.

கற்றை
காற்று
குற்றம்
சுற்றி
நாற்றம்
புற்று
மாற்று
குற்று

இவற்றை முறையே கத்தை, காத்து, குத்தம், சுத்தி, நாத்தம், புத்து, மாத்து, குத்து எனப் பேச்சு வழக்கில் ஒலிக்கக் காரணம், இவ்வழுத்தமான உச்சரிப்பின் விளைவேயாகும்.

ரகர, றகரங்கள் உச்சரிப்பு வேறுபாடும் பொருள் வேறுபாடும் உடையன என்பதைக் கீழ்வரும் உதாரணங்களைப் படித்துத் தெளிவு பெறுங்கள்.

ர	ற
அரம்	அறம்
அரை	அறை
எரி	எறி
கரி	கறி
கரை	கறை
குரு	குறு
பொருத்து	பொறுத்து
பொருப்பு	பொறுப்பு
மரம்	மறம்
விரல்	விறல்

இந்த ஒலிவேறுபாடு பற்றிய சிறுகதை ஒன்று கேரளத்தில் வழங்கி வருகிறது.

வெளிநாட்டுப் பாதிரியார் ஒருவர் புதிதாக மலையாள மொழி படித்தவர்; சமையலுக்காக அவர் மீன் வாங்கி வந்தார். வேலைக்காரியிடம் மீன் குழம்பு வைக்கத் தெரியுமா எனக் கேட்க எண்ணி, ''நீங்கள் மீன் குழம்பு வைக்க அரிவீர்களா?'' என்றாராம். அப்பாதிரியார் 'அறிவீர்களா?' என உச்சரிக்கத் தெரியாமல் கூறியதைக் கேட்டுத் தவறாகப் புரிந்து கொண்டு ''மீனை அரியாமல் எப்படிக் குழம்பு வைப்பது?'' என்றாளாம் வேலைக்காரி. பாதிரியார் விளங்காமல் விழித்தாராம். காரணம் அவருக்கு ர, ற, வேறுபாடு தெரியாததால் வந்த வினை இது. இந்தக் கதை, பொருள் வேறுபாடுடைய ஒலிகளை வேறுபடுத்தி ஒலிக்காவிட்டால் நிகழும் பொருள் விளக்கங்களை விளக்குகிறது அல்லவா?

தன்மதிப்பீடு : 2

செய்முறைப்பயிற்சி

கோடிட்ட இடத்தில், எதிரிலுள்ள பொருளுக்குப் பொருத்தமான ர அல்லது ற எழுத்தை எழுதி நிரப்புங்கள்:

1) அக்க– – ஆற்றின் மறுகரை
2) அக்க – – கவனம்
3) கு – – நாயின் ஒலி
4) கு – – நிறையின் எதிர்ச்சொல்
5) பொ – ப்பு மலை
6) பொ – ப்பு கடமை

உங்கள் கவனத்திற்கு

* மழையைப் பொறுத்து விளைச்சல் இருக்கும்.
  – இது போன்ற இடங்களில் பொறுத்து என்பதற்குப் பதிலாகப் பொருத்து என எழுதுவது தவறு.
* ர, ற வேறுபாடுகளை உணர்ந்து இலங்கைத் தமிழரும் கன்னியாகுமரி மாவட்டத்தினரும் நன்கு வேறுபடுத்தி ஒலிக்கின்றனர். இந்த இரண்டு இடங்களிலுமிருந்து வருபவர்கள் எப்படி வேறுபடுத்தி இவற்றை ஒலிக்கின்றனர் என்பதைக் கவனித்துக் கேளுங்கள்.
* இடையின 'ர'வும் வல்லின 'ற'வுமாகிய இவற்றை, எழுத்தை வைத்துச் சின்ன 'ர' பெரிய 'ற' என்று குறிப்பிடுவதைவிடச் சரியாக உச்சரித்துப் படிப்பது சிறந்தது.

1.2.2 ந, ன, ண

இம்மூன்று ஒலிகளும் மெல்லினம் எனப்படும். இவற்றை மூக்கொலி என்றும் குறிப்பிடுவர்.

வல்லினம் பிறக்குமிடத்தில்தான் அவற்றுக்கு இனமான மெல்லினம் பிறக்கிறது.

த் பிறக்குமிடத்தில்தான் ந் பிறக்கிறது.
ற் பிறக்குமிடத்தில்தான் ன் பிறக்கிறது.
ட் பிறக்குமிடத்தில்தான் ண் பிறக்கிறது.

வல்லினத்திற்கும் மெல்லினத்திற்கும் காற்று வெளியேறுவதில் மட்டுமே வேறுபாடு; மூக்குவழி அடைத்திருக்க **வாய் வழியே வரும் காற்று** தடைப்பட்டு ஒலிப்பதனால் வல்லினம் பிறக்கிறது; வாய்வழி அடைத்திருக்க **மூக்குவழியே வெளியேறும் காற்று** தடைப்பட்டு ஒலிப்பதனால் மெல்லினம் பிறக்கிறது.

'ந்' என்பது எப்போதும் 'த'கரத்திற்கு முன் வரும்.

கந்தன் சந்தி பந்து பொந்து வந்தனை

கன்தன், பன்து என வருவதில்லை. தனியே ஒலிக்கும் பொழுது ன, ந என்பன வேறுபாடின்றியே உச்சரிக்கப்படுகின்றன. ஆனால் பந்து எனும் பொழுது 'த'வுடன் இயைபுடைய ஒலிப்பைக் கேட்கலாம்.

மொழி முதல் வருவது என்ற முறையிலும் 'ந' மட்டுமே இடம் பெறுகிறது. ன, ண மொழி முதலில் வருவதில்லை. ஆனால், மொழி யிடையே ஒலிக்கும் 'ந்' எழுத்துக்கும் மொழி முதலில் வரும் 'ந்' ஒலிக்கும் வேறுபாடுள்ளது. பின்னது 'ன' போலவே ஒலிக்கிறது.

நாடு - னாடு
நாம் - னாம்

இரண்டையும் சொல்லிப் பாருங்கள். ஒன்று போலத்தான் ஒலிக்கிறோம். ஆயினும் மொழி முதலில் 'ந' எழுத்தையே பயன்படுத்துகிறோம். மலையாள மொழியில் னகரம், நகரம் என்ற இரண்டும் வரிவடிவில் ஒரே எழுத்தாக எழுதப்படினும் ஒலிப்பு நிலையில் வேறுபடுத்தப்படுகின்றன. தமிழில் னகரம் மொழியிடையிலும் மொழியிறுதியிலும் வரும்.

கனி	நன்மை	அன்னை	ஏன்
இனம்	தன்மை	நன்னன்	கூன்
பனி			
மனம்	புன்செய்	மன்னன்	நான்
வானம்	நன்மணி	கன்னி	பேன்
வேனில்		பொன்னி	பொன்

நகரம், னகரம் இடம் பெறுவதால் பொருள் வேறுபடுமிடங்கள் பலவுள. அவற்றையும் நீங்கள் தெரிந்து கொள்வது நலம்.

இந்நாடு (இ + நாடு) - இன்னாடு (இன் + நாடு) இனிய நாடு
எந்நாடு (எ + நாடு) - என்னாடு (என் + நாடு) அல்லது
(என் + ஆடு)

முந்நாள் (மூன்று + நாள்) - முன்னாள் (முன் + நாள்)
தந்நலம் (தம் + நலம்) - தன்னலம் (தன் + நலம்)
பன்மை குறித்தது ஒருமை சுட்டியது

இம்மூன்று எழுத்துக்களையும் முறையே தந்நகரம் (த் அடுத்த ந்), றன்னகரம் (ற் அடுத்த ன்), டண்ணகரம் (ட் அடுத்த ண்) என்று குறிப்பதும் உண்டு. அது மிகவும் பொருத்தம். பெரும்பாலும் இவை ந்த, ன்ற, ண்ட.

எனச் சேர்ந்து வரும் சொற்களே மிகுதி. ஒன்று தம்முடன் தாம் சேர்ந்து வரும்; அல்லது இவ்வாறு மெல்லினமும் வல்லினமுமாய்ச் சேர்ந்து வரும்.

பந்து	மூன்று	கண்டு
சந்து	என்று	முண்டு
வந்தேன்	நின்றனன்	பண்டைக்காலம்
கந்தை	கன்று	வண்டு
விந்தை	தின்றேன்	கண்டேன்
தந்நலம்	என்னை	கண்ணன்
முந்நாள்	கன்னி	வண்ணம்

ன, ண இடம் பெறும் சொற்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. பொருள் வேறுபாட்டையும் உச்சரிப்பு வேறுபாட்டையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

நான்-நாண்	கானம்-காணம்	கனி-கணி
கான்-காண்	தினை-திணை	கன்னி-கண்ணி
என்-எண்	மனை-மணை	குன்று-குண்டு
ஊன்-ஊண்	கனை-கணை	நன்று-நண்டு
மான்-மாண்	கானல்-காணல்	மனம்-மணம்
மன்-மண்	தன்மை-தண்மை	கொன்று-கொண்டு

தன்மதிப்பீடு : 3

பயிற்சி

அ. பொருத்தமானதை அடையாளமிட்டுக் குறிக்கவும்.

1) தன் + நலம் - தந்நலம்
   தன்னலம்

2) முந்நீர் - மு + நீர்
   முன் + நீர்

ஆ. பிரித்து எழுதுக:

பொன்னாடு, பன்னாட்டு வருகை, தென்னாடு, முந்நாள்

1.2.3. ல, ள, ழ

இவை மூன்றும் இடையின எழுத்துக்கள் எனப்படும். இவற்றை ஒலிப்பதில் சிலர் வேறுபாடின்றி உச்சரித்து இடர்ப்படுவர். நன்கு பழகினால் இவை தெளிவாக உச்சரிக்க வரும். ‘ழகரம்’ தமிழுக்குச் சிறப்பெழுத்து எனப்படும். அஃது ஒன்றே சில மாவட்டங்களில் பிறழ உச்சரிக்கப்படுகிறது. ஆயினும் இன்று வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றில் நன்கு உச்சரிக்கப்பட்டுப் பலரும் ஒழுங்காகவே ஒலிக்கின்றனர்.

அன்பல்லை நுனிநா வீங்கிப் பொருந்த ல வும் நுனிநா
சிறிது வளைந்து அண்ண நடுவைப் பொருந்த ள வும்
நாநுனி நன்கு வளைந்து நடு அண்ணத்தின் மிக அருகே வந்து,
தொடாமல் உராய்ந்து வருட ழ வும் பிறக்கின்றன.

லகரம் மொழியிடையிலும் இறுதியிலும் வரும். மொழியிடையே தன்முன்தான் என இரட்டித்தும் பிற மெய்களுடன் சேர்ந்தும் வரும். பேச்சுத்தமிழில் மொழி முதலிலும் ஆள்கின்ற பழக்கம் காணப்படுகிறது.

உலகம்	சிலை	எல்லை	சால்வை	கல்
காலம்	மலை	மல்லல்	சால்பு	குயில்
பலகை	வலை	வல்லமை	செல்வம்	சொல்
கால்				
ஏற்றல்		தொல்லை	சொல்வான்	பல்

லட்சுமி, லட்டு, லாடம், லூட்டி, லொட்டு, லொசுக்கு, லோட்டா என இவ்வாறு பேச்சினிடையே மொழி முதலில் லகரம் இடம் பெறும் சொற்கள் பல வழங்குகின்றன.

ளகரம் பேச்சிலும் மொழி முதலாவதில்லை; மொழியிடையே இரட்டித்தும் பிற மெய்களுடனும் வழங்குகிறது; மொழியிறுதியில் இடம் பெறுகிறது.

உளி	உள்	உள்ளம்	கள்வன்
நாளை	கள்	கள்ளம்	கேள்வன்
வெளி	முள்	எள்ளினான்	கேள்வி
வேளை	ஆள்	தள்ளுக	வேள்வி

ழகரம் மொழி முதலாவதில்லை; மொழியிடையே இரட்டிப்பதும் இல்லை. மொழியிடையிலும் இறுதியிலும் வரும்.

ஆழ்வார்	இழைபு	இழை	இகழ்	முழவு
காழ்ப்பு	எழில்	வாழை	குமிழ்	யாழ்
புகழ்ச்சி	பழம்	விழா	தமிழ்	குழல்
மகிழ்ச்சி	வேழம்	ஏழு	புகழ்	மழலை
	வழக்கு		வீழ்	

'ழ' தமிழிலும் மலையாளத்திலும் காணப்படுகிறது. தமிழில் சிறப்பாக மிகுதியாக வழங்குவதால் இதைச் சிறப்பு ழகரம் என்று கூறிச் சிறப்பிப்பர்.

கீழ்வரும் சொற்களைப் பலமுறை படித்து ஒலி வேறுபாடு, பொருள் வேறுபாடுகளை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

வால்	வாள்	வாழ்	கூலம்	கூளம்	கூழை
கிலி	கிளி	கிழி	தவலை	தவளை	தவழ்தல்
விலை	விளை	விழை	கோலம்	கோளம்	
கலை	களை	கழை	காலை	காளை	
தலை	தளை	தழை	வேலை	வேளை	வேழம்
வலி	வளி	வழி	கவலை	கவளம்	கமழும்
அலி	அளி	அழி		பவளம்	பவழம்
ஆல்	ஆள்	ஆழ்			
வலை	வளை	வழை			

சொல்லிப் பழகுங்கள்

நல்ல பிள்ளை மெல்லத் தவழும்
பிள்ளைச் செல்வம் கொள்ளை இன்பம்
பள்ளிப்பிள்ளை சொல்லிப் பழகும்
பழகப் பழகப் பாலும் புளிக்கும்
அழகும் எழிலும் வலுவும் பொலிவும்

தன்மதிப்பீடு : 4

அ. ல, ள இரட்டித்து இடையில் வரும் சொற்கள் ஐந்து எழுதுக.

ஆ. ழகரம், இறுதியில் வரும் சொற்கள் ஐந்து எழுதுக.

இ ல, ள, ழ பிற மெய்களுடன் கலந்து வரும் சொற்கள் பத்து எழுதுக.

ஈ. ல, ள, ழ மூன்றும் பொருள் வேறுபடும் ஒரு மாதிரியான சொற்கள் ஐந்து எழுதுக.

ignou THE PEOPLE'S UNIVERSITY

1.3 தமிழை எழுதும் போது கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள்

இன்ன எழுத்துக்குப்பின் இன்ன எழுத்து வரவேண்டுமெனவும் சில மரபுகள் பல காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றைக் காண்பது மொழியின் தன்மையை அறிய உதவும்.

1.3.1. மொழிமுதலில் வரும் எழுத்து மரபுகள்

'ணங்' என்ற ஒலியுடன் வெண்கலப் பாத்திரம் கீழே விழுந்தது

'டாண் டாண்' என மணி ஒலித்தது.

'பட் பட்' என்று பதில் சொன்னான்.

மேலே கண்ட வாக்கியங்களிலுள்ள 'ணங்', 'டாண் டாண்', 'பட் பட்' போன்ற சொற்கள் ஒலி முதலிய குறிப்புகளைத் தெரிவிப்பன ஆகும். இவை போன்றவற்றை **ஒலிக்குறிப்புச் சொற்கள்** என்பர். ஆனால் இத்தகைய சொற்கள் மொழியில் அதிகம் இல்லை.

'ணங்' என்ற ஒலிக்குறிப்புச் சொல்லில் ணகரம் சொல்லின் முதலில் வருவது போன்ற வேறு தமிழ்ச் சொற்களே இல்லை. இதிலிருந்து, என்ன தெரிகிறது?

பேசும் போதும் ஆகட்டும், எழுதும் போதும் ஆகட்டும் நாம் எல்லா ஒலிகளையும் எழுத்துக்களையும் எல்லா இடத்திலும் வரையறையில்லாமல் பயன்படுத்துவதில்லை; சில சில எழுத்துக்கள் சில சில இடத்தில்தான் வரும்.

அது போன்றே ட்யூப் (tube) என்ற ஆங்கிலச் சொல்லில் போன்று ட்-இல் தொட்ங்கி ப்-இல் முடியும் சொற்கள் தமிழில் இல்லை.

ஒவ்வொரு மொழிக்கும் சொற்களை ஒலிப்பதிலும் எழுதுவதிலும் தனித்தனியான முறைகள் உள்ளன என்பதை இதிலிருந்து அறியலாம்.

தமிழுக்கும் இதுபோன்று சில தனியான முறைகள் உள்ளன; அவற்றைப் பழகிக் கொள்ள வேண்டும்.

டாக்சி, டாக்டர், டமாரம்; கிளாஸ்

வுங்க வூரு யெது?

மேலே முதல் வரிசையில் உள்ளது போன்ற சொற்கள் தமிழில் அதிகம் இல்லை. ஏனென்றால் தமிழ்ச்சொற்களில் மொழிமுதலில் டகரம் வருவதில்லை. பிறமொழிச் சொற்களில்தான் வரும்.

இரண்டாவது வரிசையில் உள்ள சொற்கள் தமிழ் தான்; என்றாலும் பேச்சுமொழி என்று கண்டுபிடித்து விடுகிறோம். ஏனென்றால் வு, வூ, யெ ஆகிய எழுத்துக்களை மொழிமுதலாகக் கொண்ட சொற்கள் எழுத்துத் தமிழில் இல்லை.

தமிழிலே மொழிமுதலில் வரும் எழுத்து மரபுகளில் சிறப்பான சிலவற்றை விளக்கலாம்:

1. மொழிமுதலில் பனிரண்டு உயிர் எழுத்துக்களும் வரும்.

   அ – அணி; ஆ – ஆடை; இ – இல்லை; ஈ. – ஈரல்;

   உ – உரல்; ஊ – ஊர்தி, எ – எழு; ஏ – ஏரி;

   ஐ – ஐயம்; ஒ – ஒளி; ஓ – ஓடு; ஔ – ஔவை;

2. மொழி முதலில் கீழே கண்ட மெய்யெழுத்துக்கள் உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்து மொழி முதலாக வரும்:

   க-கண்; ச-சட்டி; த-தம்பி; ந-நண்பன்; ப-பல்; ம-மண்;

   ஞ-ஞாயிறு; ங-ஙனம்; யா-யானை; வ-வண்டு;

இவற்றில் சில மெய்கள் சில உயிர்களுடன் வாரா, எ-டு: யெ, ஞோ, யி. ஆனால் அவை பற்றியெல்லாம் இங்கு விரிவாகச் சொல்லவில்லை.

3. ங், ண், ழ், ள், ற், ன் - இவற்றை மொழி முதலாகத் தொடங்கும் சொற்கள் தமிழில் இல்லை. (ஙங போன்றவை ஒலிக்குறிப்பாக வரும்).

4. ட், ர், ல் ஆகிய எழுத்துக்களை மொழி முதலாகக் கொண்ட சொற்கள் தமிழில் இல்லை; ஆனால் பிற மொழிகளிலிருந்து வந்து வழங்குகிற சொற்கள் உள்ளன.

(எ-டு) டமாரம், டப்பா
ரசம், ராகம்
லட்டு, லாடம்

இவற்றில்

ரசம்
லாபம்

முதலியவற்றுடன் இகரம் சேர்த்து எழுதுவது உண்டு.
இரசம், இலாபம்.

மேலும் பாருங்கள்.

ராகு - இராகு
ராமன் - இராமன்
ரத்தினம் - இரத்தினம்
லட்சுமணன் - இலட்சுமணன்
லட்சுமி - இலட்சுமி

5. வுட், வோட்டு, வோல்கா போன்ற பிறமொழிச் சொற்களை எழுதுவதைப் போல

வுடு, வூடு, யிப்பவும், யிங்கே என்று பேச்சுத் தமிழ்ச் சொற்களை எழுதுவதில்லை. அதற்கு மாறாக,

விடு, வீடு, இப்பவும், இங்கே என்று எழுத்துத் தமிழ்ச்சொற்களையே எழுதுகிறோம்.

6. கை, தை எனத்தொடங்கும் ஒலிகளை கய், தய் என எழுவதில்லை. கை, தை (தையல்) என்றே எழுதுவர்.

மயிலாப்பூர் என்பதைச் சிலர் மைலாப்பூர் என எழுதுவர். மயிலாப்பூர் என எழுதுவதே சிறப்பு.

7. இரண்டு மெய்யெழுத்துக்கள் மொழிமுதலில் வாரா.

க்ளாஸ் - க்ள்ஆஸ் - என்பதில் க்ள் -

என ஆங்கிலத்தில் மொழி முதலில் மெய்கள் இரண்டு சேர்ந்து வருவது போன்று, தமிழில் சொற்கள் இல்லை. இவ்வாறு வரும் பிறமொழிச் சொற்களில் நாம் ஓர் உயிரைச் சேர்த்து எழுதுவது உண்டு.

க்ளாஸ் – கிளாசு

மேலும் பாருங்கள்:

க்ளப் – கிளப்(பு)
ட்யூப் – டியூப்(பு).

8. தனிமெய்கள் தமிழில் மொழி முதலில் வருவதே இல்லை. உயிருடன் கூடிய மெய்களே – உயிர்மெய்களே மொழி முதலில் வரும்.

ட்ரைவர் – Driver இதில் D, R, என இரு மெய்கள் மொழிமுதலில் உள. தமிழில் இது டிரைவர் ஆகிவிடும். வேறுவிதமாகச் சொன்னால் இருமெய்களோ மூன்று மெய்களோ கூடித் தமிழில் மொழி முதலாவதில்லை.

பயன்:

மொழிமுதல் எழுத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதால் என்ன பயன்? என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாம். அதற்கு விடை இதோ:

மொழி முதல் எழுத்துக்களைப் பற்றித் தெரிந்து கொள்வது சொற்கள் புணரும்போது எளிதில் பிரித்துப் படிப்பதற்கு ஏற்ற சரியான சொல்லுணர்ச்சியைத் தரும்.

கீழே உள்ள சொற்களைப் பாருங்கள்:

கற்றூண்
நற்றவம்
வாட்டடங்கண்
மடவாடன்னோடு
பொன்னகர்

போன்ற இலக்கியச் சொற்களைப் பாடங்களில் படித்திருப்பீர்கள். இவை களைப் பிரித்துப் படிக்கப் பலரும் தடுமாறுவார்கள். சிலர்,

கற் + றூண்
நற் + றவம்
வாட் + டடங்கண்
மடவா + டன்னோடு
பொன் + னகர்

என்றெல்லாம் பிரித்துப் படித்துத் துன்புறுவார்கள்.

னகர்
றூண்
றவம்
டடங்கண்
டன்னோடு

என்று **மொழிமுதலில் தமிழில் சொற்கள் வாரா** என்ற அறிவு இருந்தால் சரியான சொல்லுணர்ச்சி ஏற்படும்.

அவற்றை

தூண்
தவம்
தடங்கண்
தன்னோடு
நகர்

என்று படிப்பது எளிதாகும்.

நினைவு படுத்திக் கொள்ளுங்கள்:

1. தமிழில் எல்லா ஒலிகளும் எழுத்துக்களும் மொழிமுதலில் வருவதில்லை. அவை மொழிமுதலில் வருவது பற்றிச் சில முறைகள் உள்ளன.
2. மொழிமுதலில் வரும் எழுத்துக்களைப் பற்றித் தெரிந்துகொள்வது சொற்களைப் பிரித்துப் படிப்பதற்கு உதவியான சொல்லுணர்ச்சியைத் தரும்.

தன்மதிப்பீடு பயிற்சி : 5

அ. கீழ்க்கண்ட சொற்களைப் பிரித்துக் கூறுக/எழுதுக :

அ) மக்கட்டொகை	அ)
ஆ) ஆண்டகை	ஆ)
இ) கற்றேர்	இ)
ஈ) காற்றூசு	ஈ)
உ) பொற்றாள்	உ)

ஆ. கீழே கண்டவற்றை வேறெவ்வாறு எழுதலாம்?

அ) ரகுமான் -------------
ஆ) ராபர்ட் -------------
இ) ராகவன் -------------
ஈ) லட்சுமி -------------
உ) ராத்தல் -------------
ஊ) ராமசாமி -------------
எ) ராட்டினம் -------------

இ. கீழே கண்டவற்றின் சரியான வடிவம் தருக.

அ) நாயிறு --------- ''கிழமை''
ஆ) னாடு --------- ''இராச்சியம்''

1.3.2. மொழியிடையில் வரும் எழுத்து மரபுகள்

1. மொழியிடையில் வரும் உயிரொலிகளில் ஐ பற்றிய ஒன்றைக் குறிப்பிடலாம்.

மொழியிடையில் ஐ முழுமையாக ஒலிக்கப்படுவதில்லை. எனவே சிலர் பேசுவது போல,

பழய
வலயர்
பாளயம்

என்றே எழுதுவர். ஆனால் எழுத்துமொழியில்

பழைய
வலையர்
பாளையம்

என்பதே விரும்பப்படும்.

2. க், ச், ட், த், ப், ற் முதலிய வல்லெழுத்துக்கள் **இரட்டித்து** வரும்.

காக்கை, பச்சை, அட்டை, அத்தை, அப்பா, காற்று.

கீழே வருவனவற்றைச் சொல்லிப் பாருங்கள்.

நாக்லே நரம்பில்லை
பேச்லே தெளிவில்லை
வீட்லே ஆளில்லை
பத்லே ஒன்று
தோப்ல மரம்
இட்லி ஒன்று

இவ்வாறு நாம் பேசினாலும் எழுதுவதில்லை.

நாக்கிலே, பேச்சிலே, வீட்டிலே, பத்திலே, தோப்பிலே, இட்டலி என்றே எழுதுகிறோம்.

3. ட், ற் என்ற வல்லெழுத்துக்களுக்குப் பின் க், ச், ப் என்ற வல்லெழுத்துக்கள் வரும்.

வெட்கம், வெட்சி, நட்பு
கற்க, முயற்சி, கற்பு

இவ்வாறு எழுதும்போது கீழே கண்டவற்றைக் கவனியுங்கள்:

முறை மாறியது	முறையானது
வெட்க்கம்	வெட்கம்
கற்ப்பு	கற்பு
காட்ச்சி	காட்சி
சாட்ச்சி	சாட்சி
வயற்ப்பரப்பு	வயற்பரப்பு
கடற்க்கரை	கடற்கரை

வேறுபாடு அறிக:

அதர்க்கு – (அதர் + கு); அதற்கு – (அதன் + கு).

கவர்ச்சி – 'தன்பால் இழுத்தல்'; கவற்சி (கவல் + சி) கவலை.

4. கீழே கண்டவற்றைப் பாருங்கள்:

முள்ச்செடி
கல்ச்சுவர்
புல்த்தரை

நாம் பேசுவதுபோல எழுதியுள்ளோம். ஆனால் எழுத்துத் தமிழில் சிலர் அவ்வாறு எழுதுவதை ஊக்குவிப்பதில்லை.

முள்செடி
கல்சுவர்
புல்தரை

என்று எழுதவேண்டும் என்பர். அல்லது சந்திவிதிப்படி முட்செடி கற்சுவர், புற்றரை என்று எழுதவேண்டும்.

5. ங், ஞ், ண், ந், ம், ன் ஆகியவை

அ) இரட்டித்து வரும்.

அங்ஙனம், அஞ்ஞானம், எண்ணம், அந்நாள்; அம்மா, அன்னை.

ஆ) தன் இன வல்லெழுத்துக்கு முன்வரும்.

பங்கு, பஞ்சு, நண்டு, பந்து, கம்பு, கன்று.

பிழை	***சரி***
பன்து	பந்து
வன்டு	வண்டு
சென்ரான்	சென்றான்
பன்பாடு	பண்பாடு

தன்மதிப்பீடு : 6

பயிற்சி

சரியான வடிவம் தருக:

	சரியான வடிவம்
1. கொன்ரான்	*1.* -----------
2. கடசி	*2.* -----------
3. முயற்ச்சி	*3.* -----------
4. முயர்க்கொம்பு	*4.* -----------

1.3.3. மொழியிறுதியில் வரும் எழுத்து மரபுகள்

1. பனிரண்டு உயிரும் மொழியிறுதியில் வரலாம். ஆயினும் எ, ஒ மொழி யிறுதியில் சொல்லில் வைத்து வாரா. ஓரெழுத்தொருமொழி, தம் பெயர் கூறுமிடம் போன்றவற்றில் மட்டும் வரும். எனவே

எங்கெ, ஊரிலெ
அங்கெ, நாட்டிலெ
எங்கொ

போன்று எழுதுவதை ஏற்றுக்கொள்வதில்லை. இவற்றை

எங்கே, ஊரிலே
அங்கே, நாட்டிலே
எங்கோ

என்றுதான் எழுதவேண்டும். ஔவும் மொழியிறுதியில் வராது. கௌ, வௌ என்ற ஓரெழுத்தொரு மொழிகளில் மட்டும் வரும்.

ஏனைய உயிர்கள் மொழிக்கு இறுதியில் வரும்: பல (அ), பலா (ஆ), பலி (இ), பாட்டீ (ஈ), கொலு (உ), மலை, கலை (ஐ), வந்ததோ

(ஓ), ஊ, ஏ என்பன ஓரெழுத்தொரு மொழிகளாய் இறைச்சியையும் அம்பையும் குறிக்க வழங்குகின்றன. இவற்றில் மொழிமுதலும் இறுதியும் அவையேதான்.

2. க், ச், ட், த், ப், ற் என்ற ஆறு வல்லெழுத்துக்களும் மொழியிறுதியில் தமிழ்ச்சொற்களில் வாரா. அவை பிறமொழிச் சொற்களில் வரும்போது ஏற்ற இடங்களில் உகரம் பெற்றுவரும்.

மார்க் - மார்க்கு
பாங்க் - பாங்கு
ராக்கெட் - இராக்கெட்டு
கப் - கப்பு

3. யகர இறுதிச் சொற்களில் இறுதியில் இகரம் கொடுத்து உச்சரிப்பதுண்டு, ஆனால், அவ்விகரத்தை எழுதுவது இல்லை.

பேசுவது	**எழுதுவது**
வாயி	வாய்
மெய்யி	மெய்
பொய்யி	பொய்

4. ண். ர், ல், ள், ன் போன்ற மொழியிறுதிச் சொற்களில் உகரம் சேர்த்து எழுதுதல் உண்டு.

கல் – கல்லு
நெல் – நெல்லு
எள் – எள்ளு
கள் – கள்ளு
கண் – கண்ணு
பொன் – பொன்னு
பார் – பாரு

நினைவுபடுத்திக் கொள்க.

1. எ, ஒ மொழியிறுதியில் சொல்லில் வைத்து வாரா.
2. வல்லெழுத்துக்கள் ஆறும் மொழியிறுதியில் வாரா.
3. ண், ர், ல், ள், ன் ஆகியவை உகரம் பெற்று வருதலும் உண்டு
4. தனிமெய்கள் மொழிக்கு முதலில் வாரா. அங்கு உயிருடன் கூடியே மொழி முதலில் வரும்.
5. இரண்டு மெய்கள் கூடியும் மொழிமுதலாக வாரா. ஓரே மெய் உயிருடன் கூடி வரப் பிற மெய்கள் தொடர்ந்து வரும்.
6. பேச்சுத்தமிழில் இன்று சிற்சில வேறுபாடுகள் உள.

தன் மதிப்பீடு : 7

பயிற்சி

தமிழுக்கேற்ற சரியான சொல்வடிவங்களை எழுதுக. மொழி முதல், இடை, இறுதி எழுத்துக்களைத் திருத்துவதன் மூலம், இவ்வடிவங்களை அமைக்க வேண்டும்.

கல்லு	**பாங்க்**	**எங்கெ**	**க்ளாசு**
வாயி	**கப்**	**ஊர்லெ**	**ட்யூப்**
பொய்யி	**நாட்லெ**	**கடசி**	**ப்யூட்டி**
பாக்யம்	**நித்யம்**	**பத்யம்**	**வீட்லே**

1.4 இன்றைய மொழிப் பயன்பாடுகள்

இன்று வழக்கிலுள்ள மொழிப் பயன்பாடுகளை நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் எல்லையற்ற புதிய பொருள்களை, வெளிநாட்டுப் பொருள்களை நாம் இன்று பயன்படுத்துகிறோம். வெளிநாட்டுப் பெயர்களை - ஊர்ப்பெயர், மக்கட் பெயர்களை நாம் நாள்தோறும் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அறிவியல், தொழிலியல் கலைச்சொற்கள் பல உலகளாவிய நிலையில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைத் தமிழிலும் அவ்வாறே எடுத்தாள வேண்டியதிருக்கிறது. அதனால் தமிழில் தவிர்க்க இயலாத பல புதிய சொல்லாட்சிகள், நடையாக்கங்கள் பல்கி வருகின்றன. அவற்றையும் பழைய மரபையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது. ஏன்? நாம் பழைய இலக்கியங்களையும் படிக்க வேண்டியுள்ளது; இன்றைய உலக அறிவியல், தொழில் வளர்ச்சியோடும் போட்டி போட வேண்டி யிருக்கிறது. இதைத் தமிழுக்கேற்பட்ட சங்கடமான நிலை என்று வருந்தக் கூடாது. வாழும் மொழிகளுக்கெல்லாம் இஃது ஒரு முயற்சிக்குரிய உந்துதலேயன்றி வேறன்று. தமிழ் பழமைக்கு உரிய செவ்வியல் மொழி யாகவும், புதுமைக்குரிய புத்தம் புதிய மொழியாகவும் நடை பயில்வது அதற்குப் பெருமையே. அதற்காகச் சில விதிமுறைகளைத் தளர்த்த வேண்டும்; சிலவற்றைச் செறிவாக்க வேண்டும், முயற்சியுடைமையால் மொழி தழைக்கும். மொழியைப் பயன்படுத்தப் பழகினால் போதும்.

1.4.1 கிரந்த எழுத்துக்கள்

இடைக்காலத்தில் தமிழ்மொழி வழங்கிய பகுதியில் பிறமொழிகளும் வந்து உறவாடும் சூழ்நிலைகள் ஏற்பட்டன. அப்போது அப்பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதற்கென்று ஐந்து கிரந்த எழுத்துக்கள் தமிழில் கலந்து எழுதப்பட்டன.

ஐ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்பவை அவை. அவற்றுடன் ஸ்ரீ என்ற அடைமொழி எழுத்தையும் பயன்படுத்த முற்பட்டனர். ஜலம், ஸர்ப்பம், இஷ்டம், ஹாரம், பக்ஷம் என இவ்வாறு சொற்கள் சில வழங்கினாலும் அவற்றைத் தமிழ்ப்படுத்தி சலம், சருப்பம், இட்டம், ஆரம், பக்கம் என வழங்கும் முறையே நெடுநாள் வழக்கிலிருந்தது. எனினும் இன்றியமையாப் பெயர்ச்சொற்கள், கலைச்சொற்கள், துறைச்சொற்கள் போன்றவற்றில் இவை தவிர்க்க இயலாதனவாயின.

இராஜராஜன், இராசராசன்
வஸுமதி, வசுமதி
அஷ்டமம், அட்டமம்
ஹரித்வார், அரித்துவார்
லக்ஷ்மி, லட்சுமி

என இவ்வாறு. இருவிதமாக எழுதும் வழக்கங்களைக் காண்கிறோம்.

இன்று ஜலந்தர், சேக்ஷ்பியர், ஜபல்பூர், இஞ்செக்ஷன் என இவ்வாறு பல பெயர்க்குறியீடு - கலைச்சொற்களில் இக்கிரந்த எழுத்துக்கள் சேர்க்கப் படுகின்றன.

1.4.2. எழுத்துச்சீர்திருத்தம்

தமிழ் எழுத்துக்கள் காலம் காலமாகப் பயன்படுத்தப்பட்டு இன்று திருந்திய வடிவத்திலேயே வழங்குகின்றன. எனினும் இன்றைய தட்டச்சு, அச்சு யந்திரங்கட்கேற்ப எழுத்துச்சுருக்கம் கருதி ணு, று, னு போல்வன ணா, றா, னா எனவும், ணெ, றெ, னெ அவற்றின் நெடில் போல்வன ணொ, ணோ, றொ, றோ, னொ, னோ எனவும் எழுதப்படுகின்றன. ஐ, ஔ என்பன முற்றிலும் நீக்கப்படவில்லை. அரசு ஏற்றுக்கொண்டுள்ள இம்மாற்றங்கள் பெரிதும் இப்போது பலராலும் ஏற்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. பெரியார் இராமசாமி அவர்கள் இம்முறையை இடைவிடாது பின்பற்றி வந்தார். இப்போது அரசு இம்மாற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

1.4.3. பிறமொழிச் சொற்களை எழுதும் மரபுகள்

பழங்காலத்திலிருந்து வடமொழி போன்ற மொழிகளிலிருந்து பல சொற்கள் தமிழில் வந்து வழங்கி வருகின்றன. இன்று ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களை நாம் நம் மொழியில் பயன்படுத்தி வருகிறோம்.

தற்சமம்

பிற மொழிகளிலிருந்து நம்மொழிக்கு வந்து வழங்கும் சொற்களைப் பிறமொழியில் எப்படி உச்சரிக்கிறார்களோ அவ்வாறு உச்சரிக்கத்தக்க விதத்தில் தமிழ் எழுத்தில் எழுதிக்கொள்வது ஒரு முறை. அவை இருமொழிக்கும் பொது எழுத்துக்களால் ஆனவை. (தத் = அதற்கு; சமம் = நேரானது) என்பர்.

எ-டு; கமலம், பூமி

இவ்வடமொழிச் சொற்கள் தமிழ் போலவே இருப்பதால் அப்படியே எடுத்துக் கொள்ளப்பெறுவன. இவை, அலுமினியம், எடின்பரோ என மாற்றமின்றி, இரண்டு மொழிக்கும் பொதுவான, முதலியமைப்புடன் வந்து வழங்கும் ஆங்கிலச் சொற்களையும் இதில் அடக்கிக் கொள்ளலாம்.

தற்பவம்

ஆனால் சில சமயங்களில் பிறமொழிகளில் உள்ள ஒலிகளுக்கேற்ற எழுத்துக்கள் தமிழில் இல்லாமல் இருக்கும்; அல்லது பிறமொழியில் வரும் எழுத்து முறைகள் தமிழில் காணப்படா. அப்போது தமிழ் முறைக்கேற்பச் சிறிது மாற்றி ஒலிக்கிறோம், எழுதுகிறோம். இவ்வாறு நம் மொழிக்கேற்ற முறையில் மாற்றி எழுதுவதைத் தற்பவம் (அதிலிருந்து உருவானது) என அழைப்பர்.

எடு: ஸுர்யன் - சூரியன்; கார்யம் - காரியம்;
ஸ்வப்னம் - சொப்பனம்.

கிளாசு, பியூன், போன் என்பன ஆங்கில மொழியிலிருந்து சற்றே மாறி வழங்கப்படுவன. இவை 'தற்பவம்' எனலாம்.

இன்றைய நிலை

பிறமொழிச் சொற்களைத் தற்சமம், தற்பவம் என்ற இரண்டு முறையில் தமிழில் எழுதலாம் என்றாலும் இன்று பிறமொழி எழுத்துக்களிலேயே எழுதிக்காட்டுவது, தற்கால நூல்களிலும் கடிதம், குறிப்புகள் முதலிய சொந்த ஆவணங்களிலும் காணப்படுகிறது.

கீழேயுள்ள வாக்கியங்களைப் பாருங்கள்:

1. அவள் என்னைப் பார்த்து Smile பண்ணினாள்.
2. Train வர delay ஆயிடுத்து.

3. Remaswamy nut -ஐயும் bolt ஐயும் எடுத்துக்கொண்டு Screw driverஐத் தேடினார்.
4. இன்னிக்கும் exams postpone ஆயிடுத்து.
5. என் wife milk boil பண்ணும்போது Gas stove-இல் இருந்து Saree-இல் தீ பிடிச்சுட்டுது.

இவ்வாறு தமிழுடன் ஆங்கில எழுத்தில் சொற்களை எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். முற்றிலும் தமிழாக எழுத முயல வேண்டும்.

நினைவு படுத்திக்கொள்க:

1. பிறமொழிச் சொற்களைத் தற்சமம், தற்பவம் என்ற இரண்டு முறையில் தமிழில் வழங்குகிறோம்.
2. தமிழில் இயன்றவரை பிறமொழிச் சொற்களைக் கலக்காது பேசுவதும், எழுதுவதும் மொழித்திறனை வளர்க்கும்.

தன்மதிப்பீடு : 8

வினாக்களுக்கு விடை தருக:

அ. ஒலிக்குறிப்புச் சொற்கள் என்றால் என்ன?

ஆ. தமிழில் தனிமெய் மொழிமுதலில் வருமா?

இ. இரண்டு மெய்யெழுத்துக்கள் மொழிமுதலில் வரும் பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும் முறைக்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.

ஈ. மொழி முதல் எழுத்துக்களைத் தெரிந்து கொள்வதால் என்ன பயன்?

உ. பிற மொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கும்முறைகள் யாவை? சிறு விளக்கமும் எடுத்துக்காட்டும் தருக.

1.5 பாடத்தொகுப்புரை

தமிழ் மொழியைச் சீருற எழுதும் பழக்கங்களை இப்பாடத்தின் வழி அறிந்து கொண்டோம். தமிழின் அடிப்படையான முதல் எழுத்துக்கள் மற்றும் அவற்றைச் சார்ந்து வரும் எழுத்துக்கள், ஒலிப்புக்கள் போன்றவற்றைத் தெரிந்து கொண்டோம். தமிழ் நெடுங்கணக்கு அகர வரிசையைப் பழகிக்கொள்ள முயன்றோம். தமிழில் உச்சரிப்பு மயக்கம் ஏற்படுத்தும் எழுத்துக்கள் இவையெனக் கண்டு, அவற்றை மாறாமல் ஒலிப்பதற்கான வழிமுறைகளை நினைவு படுத்திக் கொண்டோம். தமிழில் மொழிமுதலில் வரும் எழுத்துக்கள், மொழியிடையில் மயங்கும் மெய்ம்மயக்க விதிகள், மொழியிறுதியில் வரும் எழுத்துக்கள் போல்வன ஒரு சிறிது, பயன்படுமளவு விளக்கப்பட்டன. தமிழில் பிறமொழிக் கலப்பு ஏற்பட்டதும், கிரந்த எழுத்துக்களைக் கடன் பெற்றதும், தமிழாக மாற்றும் நெறிமுறைகளும் பழக்கப்படுத்தப்பட்டன. தமிழ் எழுத்துக்களும் அவற்றைக் கொண்டு எழுதும் பழக்கங்களும் பற்றி அடிப்படையான செய்திகளை நாம் பலவாறு படித்து நினைவு கொள்வது கல்வி வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்வதாகும்.

1.6 மேலும் படித்தற்குரிய நூல்கள்

1. பவணந்தி முனிவர், **நன்னூல், ஆறுமுக நாவலர் காண்டிகையுரை**, சைவ சித்தாந்தக் கழகம், பிரகாசம் சாலை, சென்னை - 600 108.
2. அ. சண்முகதாஸ், **தமிழ்மொழி இலக்கண இயல்புகள்**, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
3. அ.கி. பரந்தாமனார், **நல்லதமிழ் எழுத வேண்டுமா?** பாரி நிலையம், பிரகாசம் சாலை, சென்னை - 600 108.
4. தி. முத்துக்கண்ணப்பன், **தமிழில் தவறுகளைத் தவிர்ப்போம்**, பாரி நிலையம், பிரகாசம் சாலை, சென்னை - 600 108.
5. மயிலை சின்னதுரை சண்முகம், **தமிழில் பிழையின்றி எழுதுவோம்**, திருமதி ச. மோகன சுந்தரி, 30/15, பாத்திரோ சாலை, சென்னை - 78.
6. தமிழண்ணல், **இனிய தமிழ் மொழியின் இயல்புகள்**, I, II, III, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1.
7. புலவர் செந்துறைமுத்து, **பிழையின்றித் தமிழ் எழுத வழிகள்**, சிறுவர் நூற்பதிப்புக் கழகம், 20, ஜானிஜான்கான் தெரு, சென்னை - 14.

1.7 தன்மதிப்பீடு : விடைகள்

1) அ. ஒலியன்கள் அல்லது எழுத்துக்கள் என்று பெயர்.

ஆ. உயிர் 12ம் மெய் 18ம் முதல் எழுத்துக்களாகும். அவை அடிப்படையானவையாதலால் முதலெழுத்துக்கள் எனப்பட்டன.

இ. தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் மூன்றும் சார்பெழுத்துக்கள் என்றார். பிற்காலத்தார் 'பத்து' என்றனர். உயிர் மெய், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், உயிரளபெடை, ஒற்றளபெடை. இவை அடிப்படை ஒலிகள் அல்ல; பொருளை இவை வேறுபடுத்துவதில்லை. சொல்லில் இடம் பெறும் போது ஏற்படும் ஒலிமாற்றங்கள் அல்லது ஒலித்திரிபுகளே இவை.

2) அக்கரை, அக்கறை. குரை, குறை. பொருப்பு, பொறுப்பு.

3) அ. தன்னலம், மு + நீர்,

ஆ. பொன் + நாடு, பல் + நாட்டு வருகை, தென் + நாடு, மு + நாள்.

4) அ. நல்ல, வெல்லம் எனவும் பிள்ளை, வெள்ளம் எனவும் வரும் சொற்களைக்கண்டு எழுதுக.

ஆ. வாழ், தாழ் என்பன போல்வன.

இ. தோல்வி, கல்வி, வெள்கினான், கொள்கை, வாழ்வு, தாழ்ச்சி எனத் தேடுக.

ஈ. வால், வாள், வாழ்; வலை, வளை, வாழை; இலை, இளை, இழை; தலை, தளை, தழை என இவ்வாறு காண்க.

5) அ. மக்கள் + தொகை, ஆண் + தகை, கல் + தேர், கால் + தூசு, பொன் + தாள்.

ஆ. 'இ' சேர்த்து 'இரகுமான்' என இதுபோல் எல்லாவற்றையும் எழுதலாம்.

இ. ஞாயிறு, நாடு.

6) கொன்றான், கடைசி, முயற்சி, முயற்கொம்பு

7) கல், பாங்கு, எங்கு, கிளாசு, வாய், கப்பு, ஊரில், டியூபு, பொய், நாட்டில், கடைசி, பியூட்டி, பாக்கியம், நித்தியம், பத்தியம், வீட்டில்.

8) அ. 'ஒலி'யைக் குறிப்பவை ஒலிக்குறிப்புச் சொற்கள். வண்டு 'தடால்' என்று விழுந்தது. 'டணார்' என்று கயிறு அறுந்தது.

ஆ. தமிழில் தனிமெய் மொழிமுதலில் வராது.

இ. Thrill - இதில் TH என்ற இரண்டு மெய்கள் மொழிமுதலில் உள்ளன. இதைத் தமிழில் 'த்ரில்' என்று எழுதாமல் 'திரில்' எனவே எழுதுக.

ஈ. 'கற்றூண்' போலப் புணர்ந்து வரும் சொற்களைப் பிரித்துப் படிக்கவும். (கல்+தூண்), சொற்களின் முழுவடிவத்தை அறியவும் உதவும்.

உ. பிறமொழிச்சொற்களை, அவை இரண்டு மொழிக்கும் பொதுவான ஒலியுடன் வரும்போது, அவ்வாறே எடுத்து வழங்குவது 'தற்சமம்' எனப்படும். எ-டு கமலம், பாதம், கார் சார் பிறமொழிச் சொற்களின் ஒலிகள் தமிழில் காணப்படாதவையாயின், அவ்வொலிகளையும் அமைப்பையும் தமிழுக்கேற்ப மாற்றி ஏற்பது 'தற்பவம்' எனப்படும். எ-டு இடபம் (ரிஷபம்), சுருதி (ஸ்ருதி), கிறித்து (Christ), விவிலியம் (Bible).

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

பாடப்பகுதி (Unit) 2
சொற்களின் அமைப்பும் வகையும்

படிப்பு நோக்கம்

★ தமிழில் உள்ள சொற்களின் வகைகளைத் தெரிந்து கொள்ளுதல் – அவற்றின் இயைபுகளை அறிந்துகொள்ளுதல்

★ திணை பால் எண் இடஇயைபுகளை விளங்கிக்கொள்வது.

★ வினைச்சொல்லின் உள்வகைகளை நன்கு அறிந்துகொள்ளுதல்.

★ பெயர்கள் வேற்றுமையேற்கும் மரபுகளைக் காணுதல்.

★ சொற்களின் கட்டமைப்பு, பகுபத இலக்கணம் போன்றவற்றைப் படித்துப் பழகிக் கொள்ளுதல்.

பாடக் கருத்தலகுகள்

2.0 பாடமுன்னுரை

2.1 சொல்வகை

2.1.1 பெயரும் வினையும்

2.1.2 இடைச்சொற்கள்

2.1.3 உரிச்சொற்கள்

2.2 இலக்கியவகைப் பாகுபாடு

2.3 திணை பால் எண் இடம்

2.3.1 திணை

2.3.2 பால்

2.3.3 எண்

2.3.4 இடம்

2.4 பெயர்ச்சொற்கள்

2.4.1 பெயர்ச்சொற்களின் பாகுபாடு

2.4.2 பெயர்ச்சொற்களின் அமைப்பு

2.4.3 பெயர்ச்சொற்களின் இயல்பு

2.4.4 பதிற்பெயர்கள் (விளியேலாப் பெயர்கள்)

2.5 வினைச்சொற்கள்

2.5.1 வினைச்சொல்லின் இயல்பு

2.5.2 வினைகளின் வகைகள்

2.5.3 வினைச்சொற்களின் அமைப்பு (பகுபத இலக்கணம்)

2.5.4 ஏனைய வினைவகைகள்

2.6 வேற்றுமைப்பொருள், உருபுகள், சாரியைகள்

2.6.1 வேற்றுமைகள்

2.6.2 வேற்றுமை மயக்கம்

2.6.3 பெயர்கள் வேற்றுமை உருபேற்கும் முறைகளும் சாரியைகளும்

2.7 மேலும் படிப்பதற்கு

2.8 **தன்மதிப்பீடு – விடைகள்**

ignou THE PEOPLE'S UNIVERSITY

2.0 தமிழ்ச்சொற்கள்

தமிழ் எழுத்துக்களைப்பற்றியும் அவை எவ்வாறெல்லாம் உச்சரிக்கப் படுகின்றன என்பது பற்றியும் அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் தெரிந்து கொண்டோம்.

'பல்லுப் போனால் சொல்லுப் போகும்' என்ற பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள். 'எல்லாம் என் தலையெழுத்து' என்று சிலர் சொல்வதையும் கேட்டிருப்பீர்கள். இந்தச் சொல், எழுத்து என்பனவற்றை இலக்கணத்திலும் பேசுகிறோம் அல்லவா? இங்கு அவற்றின் பொருள் என்ன என்பதைக் கொஞ்சம் விளக்கலாம்.

எழுத்தும் சொல்லும்

பேசும் ஒலியை எழுதும் போது எழுத்து என்கிறோம். வ,ள்,ளி - இந்த மூன்றும் எழுத்துக்கள். இவற்றையே கூட்டி வள்ளி என்று சொல்லி எழுதிக்காட்டினால் **சொல்** என்கிறோம்.

ளிள்வ - இவ்வாறு எழுதினால் இதைச் சொல் என்று நாம் சொல்வதில்லை. ஏன்? ளிள்வ என்று கூட்டிச் சொல்லி எழுதினாலும் **பொருள்** இல்லை. எனவே, பொருள் இல்லாமல் எழுத்துக்களைக் கூட்டிச் சொன்னால் அவற்றைச் சொல் என்று சொல்ல மாட்டோம்.

இவற்றைப் பாருங்கள்:

பூ, ஈ, பை

இங்கே ஓர் எழுத்தே நின்று சொல்லாக வருகிறது. இவை மொழியில் குறைவு; ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து நின்று சொல்லாக வருவதே பெரும்பான்மை.

மேலே பார்த்ததிலிருந்து நாம் என்ன முடிவு செய்யலாம்?

எழுத்துக்கள் தனியாகவும், ஒன்றுக்கு மேற்பட்டவை தொடர்ந்து, நின்றும் பொருள் தந்தால் அவற்றைச் **சொல்** என்கிறோம்.

சொல் =	எழுத்து / எழுத்துக்கள்
	பொருள்

நினைவிற் கொள்க:

சொல் என்பது எழுத்தால் அமைந்து பொருளை உணர்த்துவதாகும். சொல்லைக் குறிக்க மொழி, கிளவி, பதம் போன்ற ஒரு பொருட் பன்மொழிகள் (ஓரே பொருள் தரும் பல சொற்கள்) உள.

தன்மதிப்பீடு : 1. பயிற்சி

1. சில சொற்களின் எழுத்துக்களை முதலும் முடிவும் மாற்றி எழுதினாலும் அதே சொல் கிடைக்கும்.

   தாத்தா, மாமா, பாப்பா, சித்தி இத்தகைய சொற்கள் சிலவற்றை நீங்கள் கண்டுபிடித்துத் தரமுடியுமா?

2. ஓரெழுத்து ஒரு மொழிகள் பத்துக் கூறுக.

ignou THE PEOPLE'S UNIVERSITY

2.1 சொல்வகை

சொல்வகைகள் நான்கு வகைப்படும். அவற்றுள் பெயரும் வினையும் தலைமை வாய்ந்தவை; இடையும் உரியும் அவற்றைச் சார்ந்து விளங்குபவை.

2.1.1. பெயரும் வினையும்

சொல் என்றால் என்ன என்று பார்த்தோம்; நாம் பேசுவது எல்லாம் சொல் சொல்லாகத்தான்; என்றாலும் தனித்தனிச் சொற்களைச் சொல்லி நிறுத்துவதில்லை.

முருகன்... என்று சொல்லி நிறுத்திப் பாருங்கள். அதைக் கேட்டுக் கொண்டிருப்பவர், அவன் என்ன செய்தான் - அவனுக்கு என்ன என்றெல்லாம் கேள்வி கேட்பார்.

எனவே நாம்,

முருகன் படிக்கிறான்
இந்தப் பூ கொள்ளை அழகு
வெள்ளைப் பசு தோட்டத்தில் மேய்கிறது
கன்றுக்குட்டி துள்ளிக் குதிக்கிறது

என்று பொருள் முடிவுள்ள தொடர்களாகத்தான் பேசுகிறோம். மேலே நாம் எழுதியுள்ள முறையிலிருந்து முதல் தொடர்,

1	2
முருகன்	படிக்கிறான்

என்ற இரண்டு சொற்களாக இருப்பதை உணர்ந்து கொள்ளுகிறோம்.

கீழே சில சொற்களை வரிசையாக எழுதியுள்ளோம்:

தொகுதி : 1	தொகுதி : 2
படிக்கிறாள்	அழகி
எழுதுகிறாள்	ஆண்டாள்
பாடுகிறாள்	கண்ணகி
குதிக்கிறாள்	செல்வி
செல்வி	பார்க்கிறாள்

இந்த இரண்டு வரிசையிலும் இனத்திலிருந்து மாறுபட்டு நிற்கும் சொல் எது?

முதல் தொகுதியில் செல்வி
இரண்டாம் தொகுதியில் பார்க்கிறாள்

முதல் தொகுதியில் உள்ள சொற்கள் எல்லாம் ஏதாவது ஒரு செயலைக் குறிக்கின்றன - செல்வி என்பது தவிர. அஃது ஒரு பெயரைக் குறிக்கிறது.

இரண்டாம் தொகுதியில் உள்ள சொற்கள் எல்லாம் ஆட்களின் பெயரைக் குறிக்கின்றன - பார்க்கிறாள் என்ற சொல் தவிர. இஃது ஒரு செயலைக் குறிக்கிறது.

எனவே சொற்களை அடிப்படையில்,

1. பெயரைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச்சொற்கள்
2. செயலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள் என்று பிரிக்கலாம்.

2.1.2. இடைச்சொற்கள்

கீழே கண்ட வாக்கியங்களைப் பாருங்கள்:

1. கோவலன் கண்ணகி**யை** மணந்தான்.
2. கோவல**னும்** கண்ணகி**யும்** மதுரைக்குப் போனார்கள்.
3. **அவ்**விடத்தில் கோவலன் கொலையுண்டான்.
4. கோவல**னைக்** கொன்றது நீதி**யா?** என்று கண்ணகி பாண்டியனைக் கேட்டாள்.
5. நான் தவறு செய்து விட்டே**னே** என்று பாண்டியன் பதறினான்.

மேலே வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள

ஐ - என்பது இரண்டாம் வேற்றுமை உருபு - பெயரை ஒட்டி வந்தது.

உம் - என்பது எண்ணுவதற்குப் பயன்படும் சொல் - பெயரை ஒட்டி வந்தது.

அ - சுட்டுச்சொல் - பெயரை ஒட்டி வந்தது.

இல் - என்பது ஏழாம் வேற்றுமை உருபு - பெயரை ஒட்டி வந்தது.

ஆ - வினாவை உணர்த்தும் சொல் - பெயரை ஒட்டி வந்தது.

ஏ - தேற்றத்தை உணர்த்தும் சொல் - வினையை ஒட்டி வந்தது.

இவைகள் எல்லாம் ஏதாவது பெயர் அல்லது வினையைச் சார்ந்து வருவதைப் பார்க்கிறோம். இவ்வாறு பெயர் அல்லது வினையை இடமாகக் கொண்டு வருபவை **இடைச்சொற்கள்** எனப்படும். இவ்விடைச்சொற்கள் பெயர், வினையைப் போல் முழுச் சொற்களாகத் தனியாக வராமல் பெயர் வினையைச் சார்ந்துதான் வரும்.

இன்று மதுரை**யிலே** மாநாடு
இன்று மதுரையில் மாநாடு

இல் – ஏழாம் வேற்றுமை உருபு
ஏ – அசைநிலை

அசைநிலை பெரும்பாலும் பொருளின்றிச் சொல்லை எளிதாகச் சொல்வதற்காக வரும். இதுவும் **இடைச்சொல்**தான். மேலும் பாருங்கள்.

செய்தான் என்பதைச் செய்-த்-ஆன் என்றும் பாகுபடுத்திப் பார்க்கலாம். இங்கு-த்-இறந்த காலம் காட்டும், - ஆன் - ஆண்பால், படர்க்கை இடத்தை உணர்த்தும். இவையும் இடைச்சொற்கள் தான். கீழேவரும் உவமைஉருபு, மற்று என்ற சொல் முதலியனவும் இடைச்சொற்களே.

இறைவன் அகரம் **போல** முதல்வன்
மற்று இதனால் பயன்என்ன?

எனவே கீழே கண்டவை இடைச்சொற்களாக வரும்.

1. வேற்றுமை உருபுகள் – 2 முதல் 7 வரை (இதன் விளக்கம் பின்னால் பார்க்கலாம்).
2. சுட்டுச்சொற்கள் (அ, இ)
3. உம் போன்ற எண்ணிடைச் சொற்கள்.
4. வினாவை உணர்த்தும் வினாவிடைச் சொற்கள் (ஆ, ஓ முதலியவை).

5. தேற்றச்சொற்கள் (ஏ முதலியவை), குறிப்பை வேறுபடுத்துபவை (மற்று)
6. அசை நிலை (ஏ முதலியவை)
7. கால இடைநிலை, விகுதிகள் (த், ஆன் போன்றவை)
8. உவம உருபுகள் (போல)

2.1.3 உரிச்சொற்கள்

ஆலயம் தொழுவது **சாலவும்** நன்று.

இந்த மூதுரையைப் படித்திருப்பீர்கள். இங்கு வரும் சால என்பது மிகவும் என்ற பொருளைத்தரும். இவ்வாறு ஒரு சொல்லுக்கு அடையாக வரும் சொற்கள் அடைச்சொற்களாகும். இவை பெரும்பாலும் பழைய இலக்கியத்தில் வரும். இங்ஙனம் அடையாக, பண்பை உணர்த்துவனவாய், செய்யுளுள் பயின்று வருபவை உரிச் சொல் எனப்படும்.

நினைவிற் கொள்க:

சொற்கள்

பெயர் | வினை | இடை | உரி

தன் மதிப்பீடு : 2

பயிற்சியும் வினாக்களும்

(1) கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள பெயர், வினை, இடை உரிச் சொற்களைப் பிரித்தறிக. கீழே அடைப்புள் அவைகளை எழுதிக் காட்டுக.

1. எறும்பு ஊர்ந்து நனி விரைவாய்ச் செல்கிறது.
2. அன்பரசன் காலையில் எழுந்து படிக்கிறான்.
3. பூங்கொடி இரவும் பகலும் உழைக்கிறாள்.
4. செய்யும் தொழிலே தெய்வம்.
5. உறுபசி இல்லாததே நாடு.

பெயர்	வினை	இடை	உரி

(2) இடைச்சொற்கள் என்பன யாவை?

(3) உரிச்சொல்லின் இலக்கணம் யாது?

2.2 இலக்கியவகைப் பாகுபாடு

இலக்கியத்தில் வரும் சொற்களைக் கீழ் வருமாறு நான்காகப் பாகுபடுத்துவதும் உண்டு. முன் கூறியது பொதுவானது; இது நூல்களில் இடம் பெறும் சொற்களைப் பற்றியது.

1. **இயற்சொல்:-** எளிதில் பொருளுணரும் வழக்குச் சொற்கள்
(எ-டு) எருது, வீடு, ஆள்.
2. **திரிசொல் –** எளிதில், பொருளுணராத சொற்கள்
(எ-டு) மாலை - ஆரம், காலம்; குவளை-கோப்பை, மலர் போன்று இருபொருள் தருவன.

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

3. ***திசைச் சொல்*** – வட்டார வழக்குச் சொற்கள்.

(எ-டு) பள்ளம் என்றால் நீரோடை என்ற பொருளில் கொங்கு நாட்டில் பயன்படுத்துவர்; பள்ளம் என்றால் தாழ்வான பகுதி என்பது பொதுவான பொருள்.

4. ***வடசொல்*** – சமஸ்கிருதத்திலிருந்து வரும் சொற்கள்

(எ-டு) பங்கஜம், அரி

2.3 திணை, பால், எண், இடம்

வினைச் சொற்கள் திணை, பால், எண், இடம் என்ற உட்பிரிவுகளை உணர்த்துவனவாகும். ஒரு வாக்கியத்தில் இவற்றிடையே இயைபு இருந்தால்தான் தெளிவுதரும். அதற்கு இவை ஒவ்வொன்றும் என்ன என்பதை விளங்கிக் கொள்ளுதல் பயனுடையதாகும்.

2.3.1 திணை

நாய் ஓடினான்
ஆசிரியர் வந்தது

இந்த வாக்கியங்களைப் படித்ததும் நாம் சிரிக்கிறோம். ஏனென்றால் இவற்றில் பிழை உள்ளது என்று நமக்குத் தெரியும்.

நாய் ஓடியது
ஆசிரியர் வந்தார்

என்று சொல்லும் போது சரி என்று தலையாட்டுகிறோம். இந்த இரண்டு வித வாக்கியங்களுக்கிடையே உள்ள வேறுபாடு என்ன? நாய் என்ற பெயர்ச்சொல் ஓடினான் என்ற வினைச்சொல்லுடன் வந்து முடிவடையாது. ஏனென்றால் நாய் வாய் பேசாத விலங்கு; மனிதனிலிருந்து வேறு பட்டது; மனிதனைப் போன்ற பகுத்தறிவு அதற்கில்லை. எனவே நாயை மனிதனைப் போலச் சமமாக நினைத்துத் தமிழில் பேச இயலாது. அது போன்றே ஆசிரியர் – மனித இனத்தைச் சார்ந்தவர்; நாயைக் கூறுவது போல ஆசிரியரைத் தமிழில் கூற இயலாது. அதாவது நாய்க்கும் மனிதனுக்கும் அதன் வேறுபாட்டு அடிப்படையில் வேறுவேறு முறையில் மொழியில் அவற்றையும் அவற்றைப் பற்றியும் கூறுகிறோம். இந்த வேறுபாட்டை இலக்கணத்தில் **உயர்திணை, அஃறிணை** என்ற சொற்களால் குறிப்பிடுவார்கள்.

திணை என்றால் வகை, இனம், ஒழுக்கம் என்றெல்லாம் பொருள்கள் உண்டு. இங்கு **உயர்திணை** என்றால் உயர்ந்த வகை, இனம், ஒழுக்க முடையது என்று பொருள். **அஃறிணை** என்றால் **உயர்திணை** அல்லாத திணை ஆகும் (அல் + திணை = அஃறிணை).

உழவன், தொழிலாளி, மகள் - இவை போன்றவை எல்லாம் உயர்திணை
மாடு, மரம், பாம்பு, வண்டி - இவை போன்றவை அஃறிணை

இந்தப் பாகுபாடு மொழியைப் பயன்படுத்துபவர்களுக்கு இயற்கையாகத் தெரியும். இது பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் பொருந்தும்.

2.3.2 பால்

1. செல்வி வந்தான்
2. அழகன் வந்தாள்

இந்த வாக்கியங்கள் தவறுடையன என்று நாம் உடனே தெரிந்து கொள்கிறோம். ஏன்? செல்வி பெண்ணைக் குறிப்பது. எனவே செல்வி வந்தாள் என்றிருக்க வேண்டும். அழகன் வந்தான் - என வரவேண்டும். அழகன் என்ற சொல் ஆணைக் குறிக்கும்.

இவ்வாறு ஆணையும் பெண்ணையும் பாகுபடுத்துகிற பாகுபாட்டையும் பால் என்று கூறுகிறோம். **பால் என்றால் பாகுபாடு, பிரிவு என்பது பொருள்.** மேலே செல்வி வந்தாள் - **பெண்பால்.** அழகன் வந்தான் - **ஆண்பால்** ஆகும். இங்கு ள் - பெண்பாலையும் - ன் - ஆண்பாலையும் உணர்த்துகிற **விகுதிகள்** ஆகும். விகுதி என்றால் ஈறு என்று பொருள்.

1. முருகன் ஆடினான்

2. வள்ளி ஆடினாள்.

3. முருகனும் வள்ளியும் / ஆடினார்கள் (அவர்கள்)

4. வள்ளியும் தெய்வயானையும்/பாடினார்கள் (அவர்கள்)

5. ஆசிரியரும் மாணவரும்/வந்தார்கள் (அவர்கள்)

இவ்வாறு *3, 4, 5* வாக்கியங்களில் ஆண் பெண் பால்கள் கலந்து வரும்போது **பலர்பால்** என்கிறோம். இங்கு-ர்கள் என்பது பலர்பாலை உணர்த்தும் விகுதி, இவ்வாறு வரும் ஆண், பெண், பலர்பால் மூன்றும் உயர்திணையில் வரும்.

ஒன்றன் பாலும் பலவின் பாலும்

1. நாய் குரைத்தது.

2. காக்கைகள் கத்தின.

முதல் வாக்கியத்தில் குரைத்த நாய் ஒன்றுதான். இரண்டாம் வாக்கியத்தில் கத்தியவை ஒன்றல்ல பலகாக்கைகள்; ஒன்றை மட்டும் குறிப்பது **ஒன்றன் பால்.** ஒன்றுக்கு மேற்பட்டவை **பலவின்பால்** ஆகும்.

நாய்
குரைத்தது - து — ஒன்றன்பால் விகுதி

காக்கைகள் - கள்
கத்தின - அ
} இவை இரண்டும் பலவின்பாலை உணர்த்துகின்றன.

ஒன்றன் பாலும் பலவின்பாலும் அஃறிணையில் வரும்.

- திணை
  - உயர்திணை
    - ஆண்பால்
    - பெண்பால்
    - பலர்பால்
  - அஃறிணை
    - ஒன்றன்பால்
    - பலவின்பால்

2.3.3 எண்

மாணவன் படித்தான்	மாணவர்கள் படித்தார்கள்
மாணவி படித்தாள்	
குதிரை ஓடியது	குதிரைகள் ஓடின.

முதல் வரிசையில் உள்ள தொடர்களுக்கும் இரண்டாம் வரிசையில் உள்ள தொடர்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன? முதல் வரிசையில் உள்ள பெயர்களும் வினைகளும் ஒரு பெயரை/வினையை மட்டும் குறிக்கின்றன; இரண்டாம் வரிசையில் அவையெல்லாம் பல. இந்த எண்ணிக்கை வேறுபாட்டையே **எண்** என்கிறோம். ஒரு பெயர் வருவது **ஒருமை எண்.** பல பெயர் வருவது **பன்மை எண்.**

- எண்
  - ஒருமை
  - பன்மை

ignou THE PEOPLE'S UNIVERSITY

உயர்வுப்பன்மை / மரியாதைப் பன்மை

தாயார் வந்தார்

தகப்பனார் வந்தார்

இங்கு தாய், தந்தை ஒருவர் ஆயினும் மரியாதைக்காகப் பன்மையில் கூறுகிறோம். ஆனால் குறிக்கும் பொருள் ஒருமைதான். இவற்றை **உயர்வுப்பன்மை** என்பர்.

பால் உணர்த்தும் விகுதிகள்

1. பெயர்ச்சொற்களில் அவற்றின் விகுதியை வைத்துப் பால் கண்டுபிடிக்கலாம்.

செல்வ**ன்** - ஆண்பால்

செல்**வி** - பெண்பால்

அக்கா**ள்** - பெண்பால்

ஆனால் எப்பொழுதும் இவ்வாறு கண்டுபிடிக்க இயலாது. மிகச் சில இடங்களில் இவ்வாறு வரும்.

அம்ம**ன்** - இது ஆண்பாலன்று - பெண்பால்

ஆ**ள்** - இது பெண்பாலன்று - ஆண்பால்

2.3.4 இடம்

நான் படிக்கிறேன்

நீ எழுதுகிறாய்

அவன் கேட்கிறான்

இந்த வாக்கியங்களில் நான், நீ, அவன் என்ற பெயர்ச்சொற்கள் வருகின்றன.

நான் - பேசுபவனைக் குறிக்கிறது - **தன்னிடம்**

நீ - கேட்பவனைக் குறிக்கிறது - **முன்னிடம்**

அவன் - பேசப்படும் மூன்றாவது ஆளைக் குறிக்கிறது - **படர்க்கை**

எனவே நாம் பேசும் போது மூன்று இடங்கள் அமைகின்றன.

தன் மதிப்பீடு : 3

பயிற்சி :

1. கீழே கண்ட சொற்களின் திணை, பால், எண், இடம் கூறுக. அவற்றின் விகுதிகளையும் எடுத்துக்காட்டுக.

சொற்கள்	திணை	பால்	எண்	இடம்	விகுதி
வளவன்					
நிலம்					
நான்					
நீர்					
தின்றான்					
எழுந்தது					
ஆடின					

கீழே உள்ள வாக்கிய மாற்றங்களைப் பார்க்கவும். இடப்பெயரும் வினையும் மாறுவதைக் கவனிக்கவும்:

'நான் நாளை வந்து உங்களைப் பார்க்கிறேன்' என்றாள் ஆண்டாள்.
ஆண்டாள் நாளை வந்து தான் அவரைப் பார்ப்பதாகக்கூறினாள்.

'இனிமேல் குடிக்க மாட்டேன்' என்றான் சொக்கன்.
சொக்கன் இனிமேல் தான் குடிப்பதில்லை என்றான்.

நினைவிற் கொள்க:

நான் + நீ -	நாம்	நீ + நான் -	நாம்
நான் + அவன், அவள், அது, அவை	நாங்கள்	நீ + அவன், அவள், அது, அவை	நீங்கள்

2.4. பெயர்ச்சொற்கள்

பெயர்ச்சொற்கள் இன்றியமையாதவை. அவை மனிதர், பொருள்கள் இவை போன்றவற்றின் குறியீடுகளாக வழங்குகின்றன.

2.4.1 பெயர்ச்சொற்களின் பாகுபாடு

பெயரை உணர்த்தும் சொற்கள் பெயர்ச்சொற்கள் என்று முன்பு பார்த்தோம். பெயர்ச்சொற்களை நாம் பலவாறாகப் பிரிக்கலாம். கீழே யுள்ள படம் அதை விளக்கும்.

பெயர்கள்

பொருள் | இடம் | காலம் | சினை | பண்பு | தொழில்

இவற்றை எடுத்துக்காட்டுகளுடன் தரலாம்:

1. பொருட்பெயர் - பொருளைக் குறிப்பவை
   முருகன், மாடு, கிளி
2. இடப்பெயர் - இடத்தைக் குறிப்பவை
   வீடு, பள்ளி, சென்னை
3. காலப்பெயர் - காலத்தைக் குறிப்பவை
   காலை, நிமிடம், மணி, புதன், சித்திரை
4. சினைப்பெயர் - உறுப்புக்களைக் குறிப்பவை
   கண், கால், தலை, வால், கிளை, பூ, வேர்
5. பண்புப்பெயர் - பண்பைக் குறிப்பவை
   சிவப்பு, நீளம், நன்மை, அன்பு, பெருமை, வட்டம் இவற்றில் 'மை' - இறுதியைப் பெற்ற பெயர்கள் பல உண்டு.
6. தொழிற்பெயர் - தொழிலைக் குறிப்பவை
   இத் தொழிற் பெயர்கள் எல்லாம் ஒரு வினைச்சொல்லிலிருந்து பலவித ஈறுகள் சேர்ந்து வருபவையாம்.

ஓடு	+	அம்	=	ஓட்டம்
படி	+	பு	=	படிப்பு
நட	+	ஐ	=	நடை
வா	+	கை	=	வருகை

இச்சொற்களில் வரும் அம், ஐ, பு, கை முதலியவற்றைத் தொழிற்பெயர் விகுதிகள் என்பர்.

சில இடங்களில் வினைச்சொல்லின் அடியே நின்று பெயராக வரும்.

எ-டு : சோறு கொதி வந்தது

கொதி = கொதிப்பு என்று பெயராக வருகிறது.

இது முதல்நிலைத் தொழிற்பெயராகும்.

எதிர்மறைத் தொழிற்பெயர்

உண்ணாமை, கேளாமை, கொல்லாமை - போன்ற சொற்கள் எதிர்மறைப் பொருளில் வரும் தொழிற்பெயர்களாகும்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

இரவில் மழை பெய்ததா? **பெய்ததே** எனக்குத் தெரியாது - இங்குப் ***'பெய்தது'*** மழை பெய்த செயலைக் கூறுகிறது. இதுவும் தொழிற்பெயரே. 'ஓதுவது ஒழியேல்'. ஓதுவது என்பது தொழிற்பெயர்.

வினையாலணையும் பெயர்

ஒரு வினைச்சொல் பெயராக நின்று தொழில் முதலியவற்றைக் குறிப்பது தொழிற்பெயர்; வினைச்சொல் தொழில் செய்கிறவனைச் சுட்டுவது **வினையாலணையும் பெயராகும்.** அங்கே **நிற்பது** கூடாது. இதில் நிற்பது தொழிற்பெயர். அங்கே நிற்பது நம் வீட்டுப்பசு. இதில் நிற்பது வினையாலணையும் பெயர். முதலிலுள்ளது நிற்றலாகிய செயலையே குறிக்கும். பின்வரும் நிற்பது என்பது பசுவைச் சுட்டலால் வினையாலணையும் பெயர்.

படித்தவன்
படிக்காதவன்
பாடுபவர்
கேட்டவர்
படைத்தவன்

தொழிற்பெயர் - வினைச்சொல்லின் முதற்பகுதியுடன் விகுதிகள் சேர்ந்தமையும், வினையாலணையும் பெயர் வினைமுற்றிலிருந்து தோன்று வதாகும். அதனால் அதை **வினைமுற்றுப்பெயர்** என்றும் கூறுவர்.

தொழிற்பெயர்	**வினையாலணையும் பெயர்**
1. தொழில், செயப்படு பொருள் முதலியவற்றைக் குறிக்கும்.	1. தொழில் செய்கிற முதலைக் குறிக்கும்.
2. வினைச்சொல்லின் முதல் பகுதியுடன் விகுதிகள் சேர்ந்து அமையும். (செய்தது போன்றவை விலக்கு)	2. வினைமுற்றுக்களிலிருந்து தோன்றும்.
3. பெரும்பாலும் காலம் காட்டாது. (செய்தது போன்றவை விலக்கு)	3. காலம் காட்டும்.

தன் மதிப்பீடு : 4

பயிற்சி

கீழே உள்ள வினைச்சொற்களில் தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்கள் தருக (எடுத்துக்காட்டு நோக்கிச் செய்க)

வினைச்சொல்	**தொழிற்பெயர்**	**வினையாலணையும் பெயர்**
வா	வரவு	வந்தவன்
போ		
நடு		
குழம்பு		
கிளர்		
அள		
வளர்		

எண்ணுப்பெயர்கள்

ஒன்று, இரண்டு முதலிய எண்களைச் சுட்டும் பெயர்கள் எண்ணுப்பெயர்கள் ஆகும்.

2.4.2 பெயர்ச்சொற்களின் அமைப்பு

கூனன் - கூன் + அன்

கூனி - கூன் + இ

மண்வெட்டி - மண்வெட்டு + இ

இப்பெயர்ச்சொற்களைப் பிரிக்கும் போது - கூன், மண்வெட்டு என்ற இரண்டு சொற்களுடன் அன், இ ஈறுகள் அமைந்துள்ளது தெரிகிறது. முதலில் உள்ள சொற்களைப் பகுதி என்றும் சேரும் ஈறுகளை விகுதி என்றும் சொல்வர்.

கீழே உள்ள சொல்லைப் பாருங்கள்

அறிஞன் - அறி+ஞ்+அன்

இதில் இடையில் உள்ள 'ஞ்' பெயரிடை நிலை எனப்படும்.

பயிற்சி:

கீழே உள்ள சொற்களைப் பிரித்துப் பார்க்கவும்:

கலைஞர், அனுப்புநர், தொழிலாளி, வாக்காளர், உறுப்பினர்.

2.4.3. பெயர்ச்சொற்களின் இயல்பு

பெயர்ச்சொல் காலம் காட்டாது.

வேலன் வந்தான்

என்று கூறும் போது வந்தான் என்பது நேற்று வந்த செயலைக் குறிக்கிறது. ஆனால் வேலன் என்ற பெயரில் இது போன்று காலம் இல்லை. அவன் எப்போதும் வேலன்தான். எனவே பெயர்ச்சொல் காலம் காட்டாது என முடிவு செய்யலாம்.

பெயர்ச்சொல் வேற்றுமை உருபு ஏற்கும்.

மாலவன் வேலவனைப் பார்த்தான்.

வேலவன் என்ற சொல்லுடன் 'ஐ' என்ற வேற்றுமை உருபு சேர்ந்துள்ளது. பார்த்தான் என்ற வினைச்சொல்லுடன் 'ஐ' உருபு சேர்ந்து வராது. எனவே பெயர்கள் **வேற்றுமை உருபை** ஏற்கும் என்று முடிவு செய்யலாம்.

ஆகுபெயர்

1. சிவனப்பன் நல்ல வெள்ளைச் சட்டை உடுத்திருக்கிறான்.
2. சிவனப்பன் நல்ல வெள்ளை உடுத்திருக்கிறான்.

முதல் வாக்கியத்தில் 'வெள்ளை' நிறத்தைக் குறிக்கிறது. இரண்டாம் வாக்கியத்தில் 'வெள்ளை' சட்டையைக் குறிக்கிறது. இங்கு வெள்ளை என்பது சட்டையை உணர்த்துகிறது என்பதை உடுத்திருக்கிறான் என்ற வினைச்சொல்லால் உணருகிறோம்.

மங்கை சுவருக்கு வெள்ளை அடித்தாள் - என்ற வாக்கியத்தில் 'அடித்தாள்' என்ற வினையை வைத்து 'வெள்ளை' - சுண்ணாம்பு என்று அறிகிறோம். இவ்வாறு சில சமயம் விரைவு, சிக்கனம் (வெள்ளைச் சட்டைக்குப் பதில் வெள்ளை), பொருள்களுக்கிடையே உள்ள தொடர்பு (வெள்ளை - சுண்ணாம்பு) கருதி **ஒரு பெயர், தொடர்புடைய வேறொரு பெயருக்கு ஆகிவரும். இதுவே ஆகுபெயர்.** ஆன சொல்லுக்கும் ஆகிவந்த சொல்லுக்கும் உள்ள தொடர்பு கருதி அவற்றைப் பலவாறாகப் பிரிப்பர். இங்கு வெள்ளை பண்பாகுபெயர். 'இதோ, புலி வருகிறான்' என்னும்போது புலிபோன்ற வீரன் எனப் பொருள்படுவதால் அதனை **உவமையாகு பெயர்** என்பர்.

நாம் நாள்தோறும் பல ஆகுபெயர்களைப் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் அவை ஆகுபெயர் என நமக்குத் தெரியாமலே உள்ளன.

கீழே சிலவற்றைப் பாருங்கள் :

1. அவர் லாட்டரிக்கடையில் **ஹரியானா** வாங்கினார் - லாட்டரி டிக்கெட்டு - இடப்பெயர் பொருளுக்கு **ஆகிவந்தது** - இடவாகுபெயர்.
2. அதோ **ஏழு** வருகிறது - பஸ், பேருந்து - எண்ணுப்பெயர் பொருளுக்கு ஆகிவந்தது - எண்ணாகுபெயர்
3. நெற்றியில் **சிவப்பு** வைத்துக் கொண்டாள் - குங்குமம் - பண்பாகுபெயர்.

2.4.4. பதிற்பெயர்கள் (விளியேலாப் பெயர்கள்)

பாண்டியன் மதுரைக்கு வந்தான்; **அவன் அங்கு** ஒரு புத்தகம் வாங்கினான். இங்கு **அவன்** - பாண்டியனுக்குப் பதிலாகவும், **அங்கு** - மதுரைக்குப் பதிலாகவும் வருகின்றன அல்லவா? ஒரு பெயர் தனக்கு முன்வரும் இயற்பெயருக்குப் பதிலாக வருவது பதிற்பெயராகும். இவைகளை 'பாண்டியா' என்று விளிப்பது போன்று விளிக்க இயலாது; எனவே இவை **விளியேலாப் பெயர்கள்** எனவும் கூறப்படும்.

பதிற்பெயர்கள்:	**1. மூவிடப்பெயர்கள்**	**- நான், நீ, அவன்**
	2. வினாப்பெயர்கள்	**- யார், எவன், எது**
	3. சுட்டுப்பெயர்கள்	**- அ, இ, அது, இது**
	4. எண்ணுப்பெயர்கள்	**- ஒன்று, இரண்டு**

எனப் பலவகைப்படும்.

2.5 வினைச்சொற்கள்

வினை என்பது செயல் அல்லது தொழில். ஒரு பெயர் அல்லது பொருளின் இயக்கத்தைக் குறிக்க வரும் சொல் வினைச்சொல்லாகும்.

2.5.1 வினைச்சொல்லின் இயல்பு

தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப் பார்த்தோம்.

பாடினாள்-

என்ற வினைச் சொல்லைக் கேட்டதும் பாடுவது என்ற **தொழிலை** உணர்கிறோம். அது மட்டுமா? பாடின**காலம்** நேற்று என்பதும் தெரிகிறது.

எனவே வினைச்சொல்

1. தொழிலைக் குறிப்பதோடு
2. காலத்தையும் காட்டும்

என்பதை உணரலாம். அது மட்டுமன்று - பாடி**ளாள்** - என்பதால் அந்தச் செயலைச் செய்தவர் ஒரு பெண் என்று அவ்வினையின் வினைமுதலையும் (எழுவாயையும்) உணருகிறோம். காலம் - இறந்த காலம் (சென்று போன காலம்), நிகழ்காலம் (நடக்கும் காலம்), எதிர்காலம் (வரும்காலம்) என மூவகைப்படும்.

பாடினாள் - பாடுகிறாள் - பாடுவாள்

2.5.2 வினைகளின் வகைகள்

நீ பாடு

நீ பாடாதே!

நீ பாடுக!

அவள் பாடுகிறாள்

அவள் பாடிய பாட்டு

அவள் பாடி நிறுத்தினாள்

பாடு, பாடாதே - ஒருவரை ஏவுவதாக அமைகிறது - வினை, முற்றுப் பெற்றது.

பாடுக - ஒருவரை வேண்டுவதாக அமைகிறது - வினை, முற்றுப் பெற்றது.

பாடுகிறாள் - ஒருவர் செய்த செயலை எடுத்துரைக்கிறது - வினை, முற்றுப்பெற்றது.

பாடிய - பாட்டை விளக்கும் அடையாக வருகிறது. ஏனெனில் பாடாத பாட்டும் உண்டல்லவா?

பாடி - செயல் முற்றுப்பெறவில்லை.

மேலே கண்டவற்றிலிருந்து வினைகளை 1. தொழில் முற்றுப்பெற்ற வினைகள் 2. தொழில் முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் எச்சவினைகள் எனப் பிரிக்கலாம் என்று பார்க்கிறோம். முற்று வினைகளை **வினைமுற்று** என்பர். எச்சவினைகளைப் **பெயரெச்சம், வினையெச்சம்** என்பர்.

வினைகள்

வினைமுற்று — எச்ச வினைகள்

வினைமுற்று

மேலே கண்ட சொற்களில்

பாடு
பாடாதே
பாடுக
பாடுகிறாள்

இவை எல்லாம் வினைமுற்றுக்களாகும்.

பாடு என்று உடன்படுவதால் இது **உடன்பாட்டு முற்று**.
ஏவுவதால் ஏவல் வினைமுற்று.

பாடாதே என்று உடன்படாமல் எதிர்ப்புக் காட்டுவதால்
எதிர்மறை ஏவல் வினைமுற்று.

பாடுக - வேண்டுவதால் **வியங்கோள் வினைமுற்று**.

பாடுகிறாள் என்பது **செப்பு வினைமுற்று** (செய்தி நடந்ததைச் செப்புவதால் செப்பு ஆகிறது).

எச்சவினைகள்

எச்சவினைகளை அவை கொண்டுமுடியும் சொற்களை வைத்து 1. பெயரெச்சம் 2. வினையெச்சம் என இரண்டாகப் பிரிக்கலாம்.

பெயரெச்சம்

ஒரு வினைச்சொல் பெயரைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சமாகும்.

1	2	3
பாடின பெண்	பாடுகிற பெண்	பாடும் பெண்
பாடின பாட்டு	பாடுகிற பாட்டு	பாடும் பாட்டு
பாடின மெட்டு	பாடுகிற மெட்டு	பாடும் மெட்டு

முதலில் உள்ளதை இறந்தகாலப்பெயரெச்சம் என்றும் இரண்டாவது உள்ளதை நிகழ்காலப் பெயரெச்சம் என்றும் மூன்றாவது உள்ளதை எதிர்காலப் பெயரெச்சம் என்றும் கூறுவர்.

பெயரெச்சத்தைக் கண்டுபிடிக்கும் வழி

1. பெயரெச்சம் ஒரு வினையைக் குறிக்கும்.
2. அது குறிக்கும் வினையின் நிகழ்ச்சி ஒரு பெயரைக் கொண்டு முடியும்.
3. அ, உம் (செய்த, செய்கிற, செய்யும்) என்ற அமைப்பில் இருக்கும்.

பெயரெச்சம் எதிர்மறையாக வரும்போது அஃது **எதிர்மறைப் பெயரெச்சம்**.

பாடாத பாட்டு

இது சில வேளைகளில் 'பாடாப்பாட்டு' என 'த' ஈறுகெட்டு வரும்.

இதை **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** என்பர்.

வினையெச்சம்

இந்தப் பாடத்தைப் படித்து முடி.

இதைப் **படித்துப்பார்த்து** உன் கருத்தைச் **சொல்லுவாய்**.

இங்கே படித்து, பார்த்து என்ற சொற்கள் செயல்முடிவு பெறாமல் இருப்பதைக் காட்டுகின்றன.

படித்து **முடி** – என மீண்டும் முடி என்ற வினைச்சொல் வந்துதான் பொருள் முடிவு பெறுகிறது.

அதுபோன்றே

படித்துப் பார்த்து .... சொல்லுவாய்

படித்து என முடிவு பெறாத சொல் **பார்த்து** என்ற வினையைக் கொண்டு முடிய, **பார்த்து என்று முடியாமல் நிற்கும் சொல்லும் சொல்லுவாய்** என்ற வினைச்சொல்லைக் கொண்டு பொருள் முடிவு பெறுகிறது. பார்த்து **உன்** என்று இதற்குப்பின் பெயர்ச்சொல் இருந்தாலும் பொருள் முடிவது சொல்லுவாய் என்ற வினை கொண்டுதான். இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் வினைச்சொல் **வினையெச்சம்** ஆகும்.

இவ்வாறு வரும் வினையெச்சம் பலவகைப்படும்.

1. செய வாய்பாட்டு வினையெச்சம்
   மாதவி **ஆட** வந்தாள்.
2. செய்து வாய்பாட்டு வினையெச்சம்
   மாதவி **ஆடி** மகிழ்ந்தாள்.
   கோவலன் **கண்டு** மகிழ்ந்தான்.

அவன் **உண்ணாமல்/உண்ணாது** இருந்தான் – எதிர்மறை ஆடி – என்பது இ என முடிந்தாலும் அது செய்து என்பதன்கீழ் அமையும்.

3. செய்தால் வாய்பாட்டு வினையெச்சம்
   நன்கு **படித்தால்** வெற்றி **பெறு**வாய் – உடன்பாடு
   நன்கு **படிக்காவிட்டால்** வெற்றி**பெற**மாட்டாய் – எதிர்மறை
4. செய்வதற்கு வாய்பாட்டு வினையெச்சம்
   கோவலன் சிலம்பை **விற்பதற்குப் புறப்**பட்டான்.
5. செய்தபின் வாய்பாட்டு வினையெச்சம்
   அவர் ஜெபம் **செய்தபின்** உறங்கினார்.
   நீ **படித்தபின்** விளக்கை நிறுத்து.

2.5.3. வினைச்சொற்களின் அமைப்பு (பகுபத இலக்கணம்)

செய்கிறான்
செய்தான்
செய்வான்

இந்த மூன்று வினைச்சொற்களையும் ஒப்பிடும்போது இவற்றை இன்னும் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கலாம் என்று தோன்றுகிறது.

செய் – கிறு – ஆன்
செய் – த் – ஆன்
செய் – வ் – ஆன்

இவ்வாறு சொற்களைப் பிரித்து எத்தனை உறுப்புகள் உள்ளன, அவை என்ன பொருளைத் தருகின்றன என்று பார்க்கலாம். இவ்வாறு பகுத்துப் பார்ப்பதைப் **பகுபத இலக்கணம்** என்று கூறுவர்.

பகுபத உறுப்புகள் – பகுக்கப்படும் சொல் என்று பொருள்.

பகுக்கப்படும் வினைச்சொற்களின் உறுப்புக்களாகக் கீழ்க்கண்ட **ஆறினைக்** குறிப்பிடுவர்.

1 பகுதி	(விகாரம்) 2 – சந்தி	3 – இடைநிலை	4 – சாரியை	5 – விகுதி
நட வா (வ)	– த் (ந்) – த் (ந்)	– (த்) – (த்)	– அன் – அன்	

1. பகுதி (முதனிலை)

வினைச்சொல்லை ஏவலாகக் கூறும்போது அமையும் வடிவமே வினைப்பகுதியாக வரும்.

செய் – த் – ஆன்

எனவே வினைப்பகுதி கண்டுபிடிக்க அதன் ஏவல் வடிவத்தைக் கண்டுபிடித்தால் போதும்

		பகுதி
எ-டு:	நின்றான்	– நில்
	கொண்டான்	– கொள்
	சொன்னான்	– சொல்

வினைப்பகுதிகளின் பாகுபாடு

வினைப்பகுதிகளின் கால இடைநிலைகள் ஏற்றுத் திரிந்து வருவதை ஒட்டிக் கீழ்க்கண்ட 13 ஆகப் பாகுபடுத்துவதுண்டு:

1. செய் 2. ஆள் (ஆளு) 3. கொல் (கொல்லு) 4. அறி 5. ஆக்கு 6. நடு 7. உண் (உண்ணு) 8. தின் (தின்னு) 9. கேள் 10. கல் 11. தீர் 18. நட 13. தா, சா, காண் போன்று திரிந்து வேறுபடுபவை.

2. விகுதி

பகுபதத்தின் இறுதியில் நிற்பது விகுதி.

செய் – த் – **ஆன்** – படர்க்கை ஆண்பால் விகுதி
செய் – த் – **அ** – பெயரெச்ச விகுதி
செய் – த் – **உ** – வினையெச்ச விகுதி
செய் – **அ** – வினையெச்ச விகுதி
செல் – **க** – வியங்கோள் விகுதி

3. இடைநிலை

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது. வினைச்சொற்களில் இடைநிலைகள் காலம் காட்டும்.

அழு – **த்** – ஆன்	த்	இறந்தகால இடைநிலை
உண் – **ட்** – ஆள்	ட்	
சென் – **ற்** – அது	ற்	
ஆடு – **இன்** – ஆள்	இ(ன்)	
வரு – **கின்று** – ஆன்	கின்று	நிகழ்கால இடைநிலை
போ – **கிறு** – ஆன்	கிறு	
எழுது – **வ்** – ஆர்	வ்	எதிர்கால இடைநிலை
காண் – **ப்** – ஆர்	ப்	

4. சாரியை

வினைச் சொற்களில் வரும் சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் இணைப்புக் கூறுவதாகும்.

நட + ந் + த் + **அன்** + அன் – அன் – சாரியை

(பெயரில் வரும் சாரியை பெயர்ச்சொல்லுக்கும் வேற்றுமை உருபுக்கும் இடையில் வரும்: பாட்டினுடைய – 'இன்' சாரியை. இது பற்றி வேற்றுமை உருபுகள் பகுதியில் காண்க).

5. சந்தி

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது.

படி + **த்** + த் + அன் + அன் – 'த்' சந்தி

6. விகாரம்

விகாரம் என்றால் வேறுபாடு என்று பொருள். பொதுவாகப் பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் விகாரம் எனப்படும். அவை புணர்ச்சி விகாரம் போல்பவையே. பகுதி, சந்தி முதலியவற்றில் ஏற்படும் விகாரத்திற்கு இங்கு எடுத்துக்காட்டுக் காண்க:

வந்தனன் என்பதில்

வா(வ) + **த்(ந்)** + த் + அன் + அன் உள. வா–வ; த்–ந் இரண்டும் விகாரமாகும். உண்மையில் பகுபத உறுப்புகள் ஐந்துதான். அவை சேரும்போது ஏற்படும் புணர்ச்சி தொடர்பான மாற்றங்கள் சந்திகள் – விகாரம் எனப்பட்டன.

தன் மதிப்பீடு : 5

பயிற்சி

கீழே கொடுத்துள்ள வினைகளுக்குப் பகுபத இலக்கணம் கூறுக. (மாதிரிக்கு ஒன்று காட்டப்பட்டுள்ளது).

1. கண்டான் 2. செத்தது 3. கொடுத்தேன் 4. ஆட்டினேன் 5. நட்டான் 6. பெய்த 7. கொய்ய 8. ஓடி 9. வீசினான் 10. ஓங்குக.

சொல்	விகாரம் – பகுதி	விகாரம் – விகுதி	இடைநிலை	சாரியை	விகுதி
கண்டான்	காண்(கண்)	ட்			ஆன்

2.5.4 ஏனைய வினை வகைகள்

தன்வினை – பிறவினை

நான் கடவுளைக் **கண்டேன்;** உனக்கும் **காண்பிக்கிறேன்.**

கண்டேன் என்பது தன்வினை

காண்பிக்கிறேன் – என்பது இன்னொருவரைக் காணச்செய்வதால் பிறவினை.

மேலும் காண்க.

தமிழ்ப் பாடத்தை நானே **கற்கிறேன்**; எனக்கு யாரும் **கற்பிப்பதில்லை.**

பி – பிறவினையை உணர்த்துகிறது. நான் செய்தியை இப்பொழுது தான் **அறிந்தேன்.** உனக்கு யார் இதை **அறிவித்தார்கள்.**

வி – பிறவினையை உணர்த்துகிறது.

இன்றைய தமிழில் நாம் செய், வை போன்றவற்றை முதல் வினையுடன் சேர்த்துச் சொல்வதன் மூலம் பிறவினையை ஆக்குகிறோம்.

தாய் குளிக்கிறாள்
தாய் குழந்தையைக் குளிக்க வைத்தாள் / குளிப்பாட்டினாள்
தாய் குழந்தையை எழுதச் செய்தாள் / எழுத வைத்தாள்

இதையே குளிப்பித்தாள், எழுதுவித்தாள் என்றும் கூறலாம். மேலும் ஓடு-ஓட்டு; மயங்கு-மயக்கு என்று பகுதி திரிந்தும் பிறவினை உணர்த்தப்படும்.

செயப்படு பொருள் குன்றாவினை –
செயப்படு பொருள் குன்றிய வினை

அண்ணன் புல்லைப் பறிக்கிறான்
தம்பி! மாட்டை அடிக்காதே
குழந்தை பழம் தின்றது

இங்குள்ள வினைகளுக்கெல்லாம் புல், மாடு, பழம் என்பவை செயப்படு பொருளாக வருகின்றன (இது பற்றிய விளக்கம் வேற்றுமை, தொடர்கள் என்ற பகுதிகளில் காண்க). இத்தகைய வினைகளைச் செயப்படுபொருள் குன்றா வினைகள் என்பர்.

மழை பெய்தது
குழந்தை உறங்குகிறது
மரம் ஆடியது

இவ்வாக்கியங்களிலுள்ள வினைகளுக்குச் செயப்படுபொருள் இல்லை. இத்தகைய வினைச்சொற்களைச் செயப்படுபொருள் குன்றிய வினைகள் என்பர்.

தன் மதிப்பீடு : 6

பயிற்சி

செய்யப்படுபொருள் **குன்றா வினை, குன்றிய வினைகளைச்** சுட்டுக.

1. வணங்கினான்
2. இறங்கினான்
3. முளைத்தது
4. வருந்தினான்
5. நீட்டினான்

செய்வினை, செயப்பாட்டுவினை

வீடு வாடகைக்கு விடப்படும்
கொள்ளையர்கள் பிடிபட்டனர்

போன்ற வாக்கியங்களை நீங்கள் படித்திருப்பீர்கள். இதை முழுவதுமாக எழுதினால் கீழே உள்ளவாறு அமையும்.

எங்களால் வீடு வாடகைக்கு விடப்படும்.

போலீசால் / மக்களால் > கொள்ளையர்கள் பிடிபட்டனர்

இதையே நேராகச் சொன்னால்

நாங்கள் வீட்டை வாடகைக்கு விடுகிறோம்

போலீசார் > கொள்ளையர்களைப் பிடித்தனர்
மக்கள்

இவ்வாறு எழுவாயே (நாங்கள், போலீஸ்) செயலைச் செய்ததாகக் கூறுவது செய்வினை. செயப்படுபொருளை (வீடு, கொள்ளையர்கள்) வைத்துச் சொல்வது செயப்பாட்டுவினை. செய்வினை செயப்பாட்டு வினையாக மாறும்போது எழுவாயுடன் ஆல் சேருவதையும் வினைச்சொல் செய் + படு என்றும் அமைவதைக் கவனியுங்கள்.

இத்தகைய செயப்பாட்டுவினை பேச்சில் வராது. பெரும்பாலும் செய்தித் தாள்களில் இதைப் பார்க்கலாம். சில வேளை எழுவாய் யாரென்று தெரியாதபோது இவ்வாறு கூறுவோம்.

இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் (ஏனெனில் யார் சுட்டுக் கொன்றார்கள் என்று தெரியாது). பேச்சில் இந்திராகாந்தியைச் சுட்டுக் கொன்று விட்டனர் என்று எழுவாயைச் சுட்டாது கூறுவோம்.

பெரும்பாலும் இத்தகைய செயப்பாட்டுவினை அமைப்பைத் தவிர்க்கலாம். மேலும் பார்க்க:

அரசன் கோயில் கட்டினான்
கோயில் அரசனால் கட்டப்பட்டது

மக்கள் கவிஞருக்கு ஒரு மணிமண்டபம் கட்டினர்
கவிஞருக்கு மணிமண்டபம் ஒன்று (மக்களால்) கட்டப்பட்டது.

தமிழில் செயப்பாட்டுவினையைச் செய்வினையாகக் கூறுவதே பெருவழக்கு.

இந்தப் பாடம் நான் வாசித்தது (என்னால் பாடம் வாசிக்கப்பட்டது)
இந்தக் கிளி நான் வளர்த்தது. (கிளி என்னால் வளர்க்கப்பட்டது)
கட்டிடம் முடிந்தது (கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது)

தெரிநிலை வினை, குறிப்பு வினை

வேலப்பன் எழுதுகிறான்
வேலப்பன் பழனிக்காரன்

முதல் வாக்கியத்தில் எழுதுகிறான் என்ற வினைமுற்று பயனிலையாக வருகிறது; நிகழ்காலத்தை உணர்த்துகிறது. இரண்டாம் வாக்கியத்தில் பழனிக்காரன் என்பது, பயனிலையாக நிற்கிறது; ஆனால் இது குறிக்கும் காலம் பற்றி வெளிப்படையாக ஒன்றும் சொல்ல இயலாது.

இவ்வாறு பெயர்கள் பயனிலையாக வரும் போது அவை குறிப்பு வினைமுற்று எனப்படும். எழுதுகிறான் – தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

கண்ணன்	உண்டு
	இல்லை
	வேறு

இங்கு வரும் மூன்று சொற்களும் காலத்தைச் சுட்டுவதில்லை. இவைகளும் குறிப்புவினை முற்றுகளாகும்.

2.6 வேற்றுமைப் பொருள், உருபுகள், சாரியைகள்

பெயரும் வேற்றுமையும்

பெயர்ச் சொற்கள், வினைச்சொற்கள் சேர்ந்து வரும்போது **எழுவாய், செயப்படுபொருள்** முதலிய வேறு வேறு பொருள்களில் வரும். இவை பற்றிய விளக்கத்தினைத் 'தொடர்கள்' பகுதியில் காணலாம். அவ்வாறு பெயர்ச்சொற்கள் ஏனைய பெயர் வினைகளோடு கொள்ளும் உறவையே **வேற்றுமை** என்கிறோம். அங்ஙனம் வேற்றுமைப் பொருள்களில் வரும்போது அதற்கு உருபுகள் வரும். அவற்றை **வேற்றுமை உருபுகள்** என்பர்.

வேற்றுமை எட்டாகும்.

2.6.1 வேற்றுமைகள்

முதல் வேற்றுமை : எழுவாய் வேற்றுமை

கண்ணகி கோவலனை மணந்தாள். கண்ணகி என்ற பெயர் வாக்கியத்தின் **எழுவாயாக** வரும். இதற்கு வேற்றுமை உருபு இல்லை.

இரண்டாம் வேற்றுமை : செயப்படுபொருள் வேற்றுமை

கண்ணகி கோவல**னை** மணந்தாள்

குழந்தை பழம் சாப்பிட்டது.

கோவலன், பழம் ஆகியவை செயப்படுபொருளாக வருகின்றன. ஐ-வேற்றுமை உருபாகும். இது 'பழம்' போன்ற சொற்களில் மறைந்து (தொக்கி) வரும்.

மூன்றாம் வேற்றுமை : *இது 1. கருவி 2. கருத்தா 3. உடனிகழ்ச்சி என மூன்று பொருளில் வரும்.*

1. கருவிப்பொருள்

முருகன் **கத்தியால்** வெட்டினான்

கத்தி – கருவியாக அமைகிறது. ஆல் – இதன் உருபு. வழக்கில் 'கத்தி கொண்டு வெட்டினான்' எனவரும். கொண்டு – வேற்றுமைச் **சொல்லுருபு** *ஆகும்.*

2. கருத்தாப் பொருள்

கோயில் ***தச்சனால்*** *கட்டப்பட்டது.*

தச்சன் கோயிலைக் கட்டினான் என்ற செய்வினை வாக்கியம் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாறும்போது தச்சன் என்ற கருத்தா *(எழுவாய்) தச்சனால் என மூன்றாம் வேற்றுமையில் வருகிறது.*

3. உடனிகழ்ச்சிப் பொருள்

கண்ணகி கோவல**னோடு** மதுரைக்குப் போனாள்.

இங்கு கோவலனோடு என்பது கூடநிகழ்தல் என்ற பொருளில் வருகிறதல்லவா? இதற்கு உருபு **ஓடு**. வழக்கில் உடன், கூட என்பவை வரும். கண்ணகி கோவலனுடன்/கூடச்/சென்றாள் – என வரும்.

நான்காம் வேற்றுமை : கொடைப்பொருள் முதலியன.

வள்ளி குழந்தைக்குப் பால் கொடுத்தாள்.

இங்குவரும் **கு** கொடுத்தல் பொருளில் வருவதைப் பார்க்கிறோம்.

கண்ணகி கணவனுக்கு உணவு சமைத்தாள்.
இங்கு 'கு' **பொருட்டுப்** பொருளில் வருகிறது.
கோவலன் மதுரைக்குப் புறப்பட்டான்.

இங்கு 'கு' ஓர் இடப்பொருளை – திசைப்பொருளை உணர்த்துகிறது. இன்னும் 'கு' **உறவுப்பொருளிலும்** வரலாம்.

முருகனுக்கு மகன் அழகன்.

இங்கு ஆக, பொருட்டு, வேண்டி என்பவை சொல்லுருபாக வரலாம்.

எ-டு: முருகன் வள்ளிக்**காக** ஒரு சேலை வாங்கினான்
வள்ளி**பொருட்டு**
வள்ளிக்கு **வேண்டி**

ஐந்தாம் வேற்றுமை: நீங்கல் பொருள்

இராமன் **ஊரிலிருந்து** புறப்பட்டான். **வீட்டிலிருந்து** வந்தான்.
இதிலிருந்து – ஒன்றிலிருந்து நீங்குகிற பொருளைச் சுட்டுகிறது.

ஆறாம் வேற்றுமை : உடைமைப் பொருள்

வள்ளியி**னுடைய** கணவன் வேலன்
வள்ளியி**னது** வீடு

இங்கு உடைய, அது – என்ற உருபுகள் உடைமைப்பொருளை (ஒன்றுக் கொன்று உள்ள தொடர்பை) உணர்த்துகின்றன. சில வேளை **'வள்ளியின் வீடு'** என்பது போல இன் சாரியை மட்டுமே நின்று இப்பொருளைத் தரும்.

ஏழாம் வேற்றுமை: இடப்பொருள்

குழந்தை தொட்டி**லில்** தூங்குகிறது.

'இல்' என்ற உருபு இடப்பொருளைத் தருகிறது. இன்னும் உள், கண் என்பனவும் இப்பொருளில் வரும்.

வள்ளி வீட்டுக்**குள் போனாள்.**
சீதை காட்டின்கண் இருந்தாள்.

எட்டாம் வேற்றுமை: விளிவேற்றுமை

பெயர்களைக் கூப்பிடும்போது *கந்தா! கடம்பா! வேலா! கதிர்வேலாயுதனே!* என்று நீட்டிக் கூறுவதெல்லாம் விளிவேற்றுமையே. இதற்குத் தனியாக உருபு இல்லை.

நினைவிற் கொள்க:

வேற்றுமைப் பொருளும் உருபுகளும்

வேற்றுமை எண்	**பொருள்**	**உருபு**	**சொல்லுருபு**
முதலாம் வேற்றுமை	எழுவாய்	–	–
இரண்டாம் வேற்றுமை	செயப்படு பொருள்	ஐ	–
மூன்றாம் வேற்றுமை	கருவி கருத்தா உடனிகழ்ச்சி	ஆல் ஆல் ஒடு/உடன்	– – கூட
நான்காம் வேற்றுமை	கொடை பொருட்டு திசை உறவு	கு	பொருட்டு ஆக
ஐந்தாம் வேற்றுமை	நீங்கல்	இலிருந்து	–
ஆறாம் வேற்றுமை	உடைமை	அது, உடைய	–
ஏழாம் வேற்றுமை	இடப் பொருள் கண்	இல், உள்,	வைத்து
எட்டாம் வேற்றுமை	விளி	பலவித மாக மாறி வருதல்	

2.6.2 வேற்றுமை மயக்கம்

வேற்றுமை உருபுகள், பொருள்கள் தம்முள் மயங்கி வருவது **வேற்றுமை மயக்கம்** எனப்படும்.

அறிவி**ற்** சிறந்தவர் – இன் – ஐந்தாம் வேற்றுமை உருபு (ஏதுப் பொருள்)

அறி**வால்** சிறந்தவர் – மூன்றாம் வேற்றுமை உருபு (ஏதுப் பொருள்)

அம்மா எனக்குப் பணம் தந்தாள் – நான்காம் வேற்றுமை உருபு (கொடைப் பொருள்)

அம்மா என்னிடம் பணம் தந்தாள் – ஏழாம் வேற்றுமை உருபு (கொடைப் பொருள்)

இது தமிழில் ஒரு கருத்தைப் பொருள் மாறுபடாமல் வேறு வேறு வகை வாக்கியங்களில் கூறலாம் என்பதைக் காட்டுகிறது.

அவர் ஊரிலிருந்து புறப்பட்டார்.

அவர் ஊரைவிட்டுப் புறப்பட்டார்.

அவர் ஊருக்குப் புறப்பட்டார்.

அவர் ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

2.6.3 பெயர்கள் வேற்றுமை உருபேற்கும் முறைகளும் சாரியைகளும்:

பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்றுவரும் போது சிலவேளை திரியாமலும் சிலவேளை திரிந்தும் வரும்.

வள்ளி முருகனைப் பார்த்தாள்.

இங்கு முருகன் + ஐ = முருகனை என்று திரிபின்றி வந்துள்ளது.

வள்ளி பழத்தைச் சாப்பிட்டாள்.

பழம் + ஐ = பழ + **அத்து** + ஐ

இங்கு 'அத்து' என்ற கூறு வந்து, பெயரையும் வேற்றுமை உருபுகளையும் சார்ந்து இணைக்கின்றது. இத்தகைய கூறுகள் சாரியைகள் எனப்படும்.

அத்து போல இன், அன், அற்று என்பவை சாரியையாக வரும்.

இன் - வள்ளியினுடைய

அன் - அதன்

வற்று - பலவற்றையும்

வேற்றுமை உருபு ஏற்கும்போது மூவிடப் பெயர்கள் திரிபடையும். அவற்றின் திரிபடையாத பெயர் வடிவம் - திரிபடைந்த வேற்றுமை வடிவங்கள் சிலவற்றைக் கீழே பார்க்கலாம்.

பெயர் வடிவம்	**வேற்றுமை ஏற்ற வடிவம்**
நான்	என் - என்னை
நாம்	நம்/எம் - நம்மை, எம்மை
நாங்கள்	எங்கள் - எங்களை
நீ	உன் - உன்னை
நீர்	உம் - உம்மை
பெயர் வடிவம்	**வேற்றுமை ஏற்ற வடிவம்**
நீங்கள்	உங்கள் - உங்களை
தான்	தன் - தன்னை
தாம்	தம் - தம்மை
அது	அத் - அதனை
அவை	அவ் - அவற்றை

2.7 மேலும் படிக்க

இலக்கணச் செய்திகள் பற்றி மேலும் தெரிந்து கொள்ளக் கீழே கண்ட நூல்களைப் பார்க்கலாம்.

1. **தமிழ் இலக்கணம் - 8, 9, 10 வகுப்புகள்**, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடுகள்.
2. **இலக்கணச்சுருக்கம்**, ஆறுமுகநாவலர், ஆறுமுகநாவலர் பள்ளி, சிதம்பரம்.
3. **நன்னூல் - காண்டிகை உரை**

தன் மதிப்பீடு : 7 பயிற்சி

1. கீழே உள்ள வாக்கியங்களிலுள்ள வேற்றுமை, உருபு, வேற்றுமைப் பொருள்களைக் குறிப்பிடுக.

   1. குயில் கூவுகிறது.
   2. மனத்தில் உறுதி வேண்டும்.
   3. வீட்டுக்கு வீடு வாசல்படி.
   4. நீ திடீரென்று எங்கிருந்து முளைத்தாய்.
   5. தாயோடு அறுசுவை போகும்.
   6. கண்ணீரால் வளர்த்தோம் இப்பயிரை.
   7. குரங்கின் கைப்பூமாலை.

2. கீழே அடிக்கோடிட்ட சொற்களின் பெயர் சூட்டுக:

   1. ஆற்றங்கரை**யினிலே**.
   2. **என்** கடன் பணி செய்து கிடப்**பதே**.
   3. உழைப்**பின் வாரா** உறுதிகள் **உளவோ**?
   4. பாடத்**தைப்** படி.
   5. **எங்களுக்கு உன்**னிடம் நம்பிக்கை உண்டு.

3. கீழே கண்ட வாக்கியங்களிலுள்ள வேற்றுமை உருபுகளுக்கு வேறு வேற்றுமை உருபுகளை வைத்து அமைக்கவும்:

   1. கூண்டோடு கைலாசம்
      ____________ கைலாசம்
   2. மழையில் விளைந்த பயிர்
      ____________ விளைந்த பயிர்
   3. கண்ணகி சேர நாட்டை நோக்கிப் போனாள்
      கண்ணகி ____________ போனாள்
   4. நகுதல் பொருட்டன்று நட்டல்
      ____________ அன்று நட்டல்.
   5. எனக்காக ஓர் உதவி செய்
      ____________ ஓர் உதவி செய்.

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

தன்மதிப்பீடு : விடைகள்

1. அ. காக்கா, விகடகவி எனப்பல கண்டுபிடிக்கலாம். ஆ. தா, ஈ, பூ, மா, வா, ஏ (அம்பு), தீ, ஆ (பசு), கா (சோலை).
   நீங்களே சிந்தித்துத் தேடுங்கள்.

2. அ.

பெயர்	வினை	இடை	உரி
எறும்பு	ஊர்ந்து விரைவாய் செல்கிறது		நனி
அன்பரசன் காலை	எழுந்து படிக்கிறான்	இல்	
பூங்கொடி இரவு பகல்	உழைக்கிறாள்	அம், உம்	
தொழில் தெய்வம்	செய்யும்	ஏ	
பசி			உறு
இல்லாதது	(வினையால் அளவிடும்		
நாடு	பெயர்)		

2. அ. பெயர் வினையை இடமாகக் கொண்டு, அவற்றைச் சார்ந்து வழங்குவன இடைச்சொற்கள் எனப்படும். ஆ. அடையாக, பண்பை உணர்த்தி, பெரிதும் செய்யுளுள் வந்து வழங்குவன உரிச்சொல் எனப்படும்.

3. வளவன் - உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, அன் நிலம் - அஃறினை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை, அம்
நான் - விரவுத்திணை, ஒருமை, தன்மை
நீர் - உயர்திணை, பலர்பால், பன்மை, முன்னிலை
தின்றான் - உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, ஆன்
எழுந்தது - அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை, து
ஆடின - அஃறிணை, பலவின்பால், பன்மை, படர்க்கை, அ

4. போ - போதல், போனவன்
நடு - நடுதல், நட்டவன்
குழம்பு - குழம்புதல், குழம்பியவன்
கிளர் - கிளர்ச்சி, கிளர்த்தவன்
அள - அளவு, அளந்தவன்
வளர் - வளர்ச்சி, வளர்ந்தவன்

பகுதி	(வி)	சந்தி	இடை	சாரியை–	செத்த-து	-	சா
கொடுத்தேன்	கொடு		த்	த்			ஏன்
ஆட்டினே-ன்							

பாடப்பகுதி (Unit) 3
சொற்சேர்க்கையும் சந்தி விதிகளும்

படிப்பு நோக்கம்

★ தமிழின் இயல்பாகவுள்ள சொற்களின் சேர்க்கை பற்றி விளங்கிக் கொள்ளுதல்

★ பிரித்தெழுதுதலும் சேர்த்தெழுதுதலும் – இடமறிந்து பயன்படுத்துதல்.

★ தமிழை நன்கு எழுதப் பழகிக் கொள்ளுதல்.

★ புணர்ச்சி, சந்திகளின் இன்றியமையாமையைக் கற்றல்.

★ வல்லெழுத்து மிகுமிடம், மிகா இடங்களை அறிந்து பழகிக் கொள்ளுதல்

பாடக் கருத்தலகுகள்

3.0 பாட முன்னுரை

3.1 தனிச்சொல்லும் தொடரும் – உருபு சாரியை சந்தி

3.2 பிரித்தெழுதுதலும் சேர்த்தெழுதுதலும் – இடமறிந்து ஆளுதல்

3.3 சொற்களின் சந்திப்பும் சந்தி வேறுபாடுகளும்

3.4 சில முக்கியமான புணர்ச்சி விதிகள்

3.5 வல்லெழுத்து மிகுதல் ஏன்? ஒலிப்பு வேறுபாடும் பொருள் வேறுபாடும்

3.6 தொகுப்புரை

3.7 மேலும் கற்றற்குரியவை

3.8 **தன்மதிப்பீடு – விடைகள்**

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

3.0 முன்னுரை

தமிழ்ச் சொற்களின் அமைப்பைப் பற்றி அறிந்து கொண்ட பின் அச்சொற்கள் தமிழில் சேர்ந்து நிற்கும் முறைகளை நீங்கள் பழகிப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இது தமிழுக்கேயுள்ள தனித்தன்மைகளைக் கொண்டது. இதை நீங்கள் கவனமுடன் படித்தால், மிக எளிதாக இவற்றை விளங்கிக் கொண்டு விட முடியும்.

ஒரு மொழியைப் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் அதை நன்றாக, திருத்தமாகக் கையாள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகிறது. பிறரை விட நன்கு எழுத வேண்டும், எல்லோரையும்விடச் சிறப்பாகப் பேச வேண்டும் என்று நம் மனம் முந்துகிறது. நாம் சொல்வதும் எழுதுவதும் பிறர்க்கு விளங்க வேண்டும்; நம் கருத்துக்குப் பிறரை வசப்படுத்திவிட வேண்டும்; அதற்கு ஏற்ப ஆற்றலோடு, திறமையோடு எழுத வேண்டும் என்றெல்லாம் நாம் ஆர்வம் கொள்கிறோம். அது போலவே பிறர் எழுதுவது என்ன என்பதை விளங்கிக் கொள்ளவும் விரும்புகிறோம். இதற்காக நாம் பல மொழி பற்றிய பல வழக்காறுகளைத் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது. அதனால்தான் ஔவையார் 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்றார்.

நாப் பழக்கமும் மனப்பழக்கமும் மொழியோடு பழகப்பழகவே வாய்க்கும். மொழியோடு உறவு கொண்டால்தான் அது தக்க சமயத்தில் நமக்குக் கைகொடுத்து உதவும்.

தமிழில் எழுதும் பொழுதும் அடிக்கடி வருகிற சந்தேகம் ஒன்று உண்டு. 'இந்த இடத்தில் ஒற்று மிகுமா? மிகாதா?' என்ற கேள்வி தான் அது.

எண்ணெய் கடையா? எண்ணெய்க் கடையா?
வார பத்திரிகையா? வாரப்பத்திரிகையா?
சங்க காலமா? சங்கக் காலமா?
எத்தனை பழங்களா? எத்தனைப் பழங்களா?

கதை படிக்கும் என் நண்பர் ஒருவர் 'கருணை கொலையா?' அல்லது 'கருணைக் கொலையா?' என்று கேட்டார். கருணை கொலை செய்யப் பட்டதேல், கருணை கொலை என்றெழுத வேண்டும்; கருணையால் செய்யப்படும் கொலையென்றால் கருணைக்கொலை என்று வல்லெழுத்தை மிகுவித்தே எழுத வேண்டும் என்றேன். இடமறிந்து, பொருளுக்கேற்பப் பயன்படுத்த வேண்டும். கடினம் என்று விட்டு விடலாமா? ஆங்கிலத்தில் உச்சரிப்புத் தொல்லை எவ்வளவு உளது? கடினம் என்று விட்டு விடுகிறோமா? எல்லாம் பழகினால் எளிதாக வந்து விடும்.

அது போலவே எண்ணெய்க்கடை என்பது எண்ணெய் விற்கும் கடையைக் குறிக்கும். எண்ணெய் கடை என்று சந்தியை விட்டு விட்டால் எண்ணெயைக் கடை என்று பொருள் படும். வார - நம் வீட்டுக்கு வருகிற பத்திரிகைதான் வார பத்திரிகை; வாரந்தோறும் வருவது வாரப் பத்திரிகைதான்!

சங்கம் இருந்த காலம் சங்ககாலம்தான்; க் ஒற்றுத் தேவையில்லை. 'எத்தனை பழங்கள்' என்பதே சரி; ப் வராது. நமக்கு முன்புள்ளவர்கள் எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்று பார்க்க வேண்டும். அது போன்ற தொடர்களைச் சொல்லிப் பார்க்க வேண்டும். பொருள் வேறுபடுகின்றதா என்று சொல்லிச் சொல்லிப் பார்க்க வேண்டும்.

இவற்றையெல்லாம் எப்படித் தெரிந்து கொள்வது? இதற்கென்று உள்ள இலக்கண நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்வது ஒரு முறை.

மொழியைப் படித்தும் பயன்படுத்தியும் பழகித் தெரிந்து கொள்வது பிறிதொரு முறை. பின்னைய முறையே சிறந்த முறையாகும்.

நாமும் ஒரு சிறிதாவது அறிமுகம் செய்து கொள்வோமா? நெருங்கிப் பழகிக் கொள்வோமா? செந்தமிழும் ஒரு வகையில் மனப்பழக்கம் தானே?

3.1 தனிச்சொல்லும் தொடரும் - உருபு சாரியை சந்தி

தமிழில் ஒரு தொடரில் சொற்கள் சங்கிலித் தொடர்போல் நிற்கும் நிலையை ஆங்கிலத்துடன் ஒப்பிட்டால் தமிழின் இயல்பு விளங்கும்.

I go to Madras to study

இதில் சொற்கள், உருபுகள் எல்லாம் தனித்தனியே ஒட்டாமல் நிற்கின்றன. ஆங்கிலத்தில் போலவே தமிழில் எழுதினால் எவ்வாறிருக்கும்?

நான் சென்னை கு படிப்பது கு போகிறேன்

தமிழில் இவ்வாறு யாரும் எழுதுவதில்லை. 'நான் படிப்பதற்காகச் சென்னைக்குப் போகிறேன்' என்றுதான் எழுதுவோம்.

நான் படிப்பது அன் கு ஆகச் சென்னை க் குப் போகிறேன். தமிழில் இத்தனை ஒட்டுக்கள் உள்ளன. கு நான்காம் வேற்றுமை உருபு. அன் சாரியை, ஆக துணைவினை, ச் க் ப் சந்திகள். இவை சொற்களைத் தொடர்புபடுத்திப் பிணைத்து நிற்கின்றன.

மரம் என்பதுடன் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்தால் மரமை என்று வராது, மரத்தை என்றுதான் வரும். மரம் அத்து ஐ. இதில் 'அத்து' சாரியை எனப்படும். 'மரத்தைப் பார்'. மரம் அத்து ஐ ப் பார். இதில் மரம், பார் என்பன இணையும் சொற்கள்; ஐ வேற்றுமை உருபு. இவை இன்றியமையாதன. பிறகு அத்து, ப் என்பன ஏன்? இவை முற்கூறிய சொற்களையும் உருபையும் இணைக்கவே வருகின்றன. இவற்றில் 'அத்து' சாரியை என்பர்; அஃது இங்ஙனம் சொற்களை இணைக்க இடையில் வருவதால் இடைச்சொல் வகையைச் சேரும். ப் என்பது புணர்ச்சியால் வரும் சந்தி எழுத்து. அதை விட்டு விட்டு மரத்தை பார் என்று எழுதுவது தமிழில் வழக்கமில்லை. இங்ஙனம் சொற்பொருளை வேறுபடுத்த வேற்றுமை உருபும் அந்த உருபை இணைக்கச் சாரியையும் சாரியை வரும் சொல்லோடு பொருத்தச் சந்தியும் வருகின்றன.

தலையை எண்ணுக : தலை ய் ஐ-ய் என்பது சந்தி (உடம்படு மெய்), ஐ உருபு எண் உ க: உ சாரியை, க வியங்கோள் வினைமுற்று விகுதி

எல்லாம் உம் = எல்லாமும் என்று வரும். அதனோடு ஐ உருபு சேர்ந்தால் அதை ஒட்டவைக்க வற்று சாரியை வந்துவிடும் – எல்லாவற்றையும் உலகவழக்கில் எல்லாத்தையும் என்பர். அங்கு அத்து சாரியை வருகிறது. எல்லாம் ஐ உம் என்று சொல்லும் உருபும் மட்டும் சேர்த்துச் சொல்லிப் பாருங்கள். எல்லாமையும் – பொருள் விளங்காது; ஆகவே அவ்வாறு வரவே வராது.

எனவே ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். சொற்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிச் சேர்த்து வருவது! தமிழ்மரபு. சொல்லுக்குப் பிறகு வேற்றுமை உருபு வந்தால், சாரியையும் சந்தி எழுத்தும் கூடவே வருவது பெருவழக்காகும்.

தலை + க் + கு = தலைக்கு. க் சந்தி மட்டும்.

தலை + ய் + இன் + உ + க் + கு = தலை-சொல், கு உருபு.

(தலையினுக்கு: இன் சாரியை, முன்னுள்ள ய் உடம்படு மெய் - சந்தி உ மற்றொரு சாரியை, க் சந்தி.)

இங்ஙனம் சந்தி மட்டும் வருவன; சாரியையும் சந்தியும் வருவன என இவற்றை இடம்நோக்கிப் பிரித்தறியலாம்.

தன்மதிப்பீடு : 1

நினைவூட்டும் பயிற்சிகள்

கீழ்வரும் தொடர்களையும் சொற்களையும் பிரித்து, அவற்றிலுள்ள சாரியைகளையும் சந்தி வேறுபாடுகளையும் சந்தி எழுத்துக்களையும் குறிப்பிடுக:

(முதலில் ஓர் உதாரணம் உளது.)

நாவினுக்கு : நா + வ் + இன் + உ + க் + கு
இன், உ – சாரியைகள்
வ், க் – சந்திகள்
நா, கு – வேற்றுமை உருபு
நா – பகுதி
குடத்தை
கரையின்கண்
கற்பனையினது
பாவினால்

3.2. பிரித்தெழுதுதலும் சேர்த்தெழுதுதலும் – இடமறிந்து ஆளுதல்

ஆங்கிலத்தில் 'கண்டக்ட்' (Conduct) என்றால் ஒன்றை நடத்து என்று வினையாகவும் அதையே 'காண்டக்ட்' (Conduct) என ஒலித்தால் பெயராகி ஒழுக்கம், நடத்தை என்றும் பொருள் வேறுபடுகிறது. ஒரேசொல் இங்ஙனம் ஒலிப்பால் பொருள் வேறுபடுவதை அங்கு பல இடங்களில் காணலாம்.

இங்கு தமிழில் சொற்சேர்க்கையும் சொற்பிரிப்பும் பொருள் வேறுபாட்டுக்குக் காரணமாகின்றன. அப்பாவி என்று சேர்த்துச் சொல்லும் பொழுது ஒரு பொருளும் அப் பாவி எனப் பிரித்துச் சொல்லும்பொழுது ஒரு பொருளும் என வேறுபட்டமை காண்கிறோம். எழுந்திருந்தான் என்பது ஒரு பொருள்; அதையே எழுந்து இருந்தான் என்று பிரித்து, நிறுத்திச் சொன்னால் வேறு பொருள். 'இனிப்பாகிவிட்டது' என்றால் ஒரே இனிப்பாகிவிட்டதைக் குறிக்கும்; இனிப்பு என நிறுத்தி ஆகிவிட்ட தென்றால் தீர்ந்துவிட்டது என்றல்லவா பொருள்படும்?

நாம் நம் நண்பரோடு பழகுவதுபோல, மொழியோடும் பழக வேண்டும். முதலில் அங்ஙனம் பழகவேண்டும் என்ற ஆர்வம் வரவேண்டும். அவ்வளவே!

நினைவுபடுத்திச் சொல்லிப்பாருங்கள்

சொற்களை எடுத்தும் படுத்தும் இடைவிட்டும் ஒலிப்பதால் பொருள் வேறுபாடு அடைவதைக் கீழ்வரும் தொடர்களில் கண்டு விளக்குக:

பிழையை உணர்ந்துவிடுதலேபெருமை
அப்பத்தைஎடுத்துக்கொண்டு
படித்தேன்என்றாலேஇனிது
முருகன்தன் சம்பளத்தைத்தானேசெலவழித்தான்
அண்டாவின்மேல்மூடி இருக்கிறதா?

3.3 சொற்களின் சந்திப்பும் சந்தி வேறுபாடும்

சொல்லும் சொல்லும் சந்திக்கும்போது, எவ்வித மாற்றமுமின்றி நிற்பது 'இயல்பு' எனப்படும். பல இடங்களில் இவ்வாறு இயல்பாக அமைவதைக் காண்கிறோம்.

மழைபெய்கிறது
மண்கரைகிறது
மலர்மணக்கிறது
குவளை மலர்
பனிவிளையாட்டு
படித்தபையன்
பொன்மலை
ஒளிமணி
பால்வண்ணம்
எழுச்சி பெறுக
வலைவீசினான்

இத்தகைய இயல்பு அல்லாதன விகாரம் எனப்படும். அவை தோன்றல், திரிதல், கெடுதல் என்பனவாம்.

சொல்லும் சொல்லும் ஒரு வாக்கியத்தில் குறிப்பிட்ட பொருளை உணர்த்துவதற்காகத் தொடர்ந்து நின்று சந்திக்கும்போது ஏற்படும் இவ்வியல்பும் விகாரமுமே இங்கு சந்திவிதிகள் எனப்படுகின்றன.

தமிழில் எழுத்துக்கள் இருவகை – உயிர், மெய். இவை நின்ற சொல்லின் ஈறாகவும், வரும் சொல்லின் முதலாகவும் சந்திக்கும்போது நான்குவகைச் சந்திப்புகள் ஏற்படும்.

உயிர் + உயிர்
மெய் + உயிர்
மெய் + மெய்
உயிர் + மெய்

இவை தவிர வேறுவகைச் சந்திக்கு இடமில்லை. அங்ஙனமாயின் இவற்றை இன்றைய நிலைக்கேற்ப மிக எளிமையாகத் தெரிந்துகொண்டு விடலாமே? பழைய இலக்கணத்தைப் படிப்பதுதான் கடினமே தவிர, இன்றைய மொழியைப் பழகிக் கொள்வது கடினமே அன்று.

(1) உயிர் – உயிர்

பனிரண்டு உயிரும் ஏதேனும் ஒருவகையில் மொழிக்கு இறுதியில் வரும்; அதுபோல அவை பனிரண்டும் முதலிலும் வரும். எனவே இவை அனைத்தும் ஒன்றையொன்று சந்தித்துக்கொள்ளும். உயிர்கள் சந்திக்கும்போது ஒருயிர் மறைவதும் உடம்படுமெய் தோன்றி உயிர்களை இணைப்பதும் உண்டு.

மரம் அத்து ஐ. மர என நின்று, 'ம்' கெடும். மர அத்து என நிற்கும். ஈற்றிலும் அ, வருவதும் அ. இவற்றில் வருவது கெட்டு மரத்தை என ஆகும். இல்லையென்றால் 'மரஅத்தை' என்றல்லவா ஆகிவிடும்?

ய், வ் என்பன இன்றைய நிலையில் அரையுயிர்கள் எனப்படும். இவை இரண்டில் ஒன்று தோன்றி உயிர்களை இணைப்பதே தமிழில் பெருவழக்காகும்.

கூலி(இ) + ஆள் – கூலியாள் – ய் தோன்றி இணைத்தது
வேலை(ஐ) + ஆள் – வேலையாள் – ய் தோன்றி இணைத்தது
கோ(ஓ) + இல் – கோவில் – வ் தோன்றி இணைத்தது
மா(ஆ) + இலை – மாவிலை – வ் தோன்றி இணைத்தது.

கோவில், கோயில் என இரண்டும் வழங்குவதும் உண்டு. கடிதம் எழுதவில்லை என்றுதான் எழுதுகிறோம். 'எழுத இல்லை' என்று எழுது வதில்லை. ஆனால் இவையிரண்டில், உயிர்களையிணைப்பதே என்று எழுதாமல் இவை இரண்டில், உயிர்களை இணைப்பதே என இயல்பாக வழங்கினால் நன்கு பொருள் விளங்குமென்று கருதுமிடங்களில் நாம் அவற்றை இணைப்பதில்லை.

(2) மெய் – உயிர்

காதல் + ஆகி = காதலாகி. பொருள் + இல்லை = பொருளில்லை. இவ்வாறு மெய்யுடன் உயிர் சேர்ந்து உயிர்மெய்யாவதால் இதில் வேறு மாற்றங்கட்கு இடமில்லை: இஃது இயல்பெனவே கருதப்படும்.

(3) மெய் – மெய்

நாள் + கூலி = நாட்கூலி. முதலிலுள்ள கூ (க் – ஊ) ஆவதால் முதலில் நிற்பது க்.

கல் + கோயில் = கற்கோயில்

கல் + தரை = கற்றரை

மொழி ஈறாகும் மெய்கள் மொழி முதலாகும் மெய்களைச் சந்திக்கும் போது ஒலிப்பு எளிமையும் பொருள் உணர்ச்சியும் கருதிப் பலவகையான திரிபுமாற்றம் – விகாரங்களை அடைகின்றன. இவற்றுள் இன்று தேவையான அளவு இம்மாற்றங்களை ஏற்றால் போதும்.

4. உயிர்–மெய்

பலா + பழம் = பலாப்பழம். பாக்கு + பொட்டலம் = பாக்குப் பொட்டலம். உயிர்கள் வருமொழி மெய்களோடு கூடும் புணர்ச்சி வேறுபாடுகள்தான் மிகப்பலவாகும். இதில் குற்றியலுகரம் எனப்படும் இறுதியையுடைய சொற்கள் பலவாகும்.

ய, ர, ல, வ, ழ, ள என்ற ஆறு இடையெழுத்துக்களில், ய, வ, இரண்டே மொழிக்கு முதலில் வரும்.

ஞ, ங, ண, ந, ம, ன என்ற ஆறு மெல்லெழுத்துக்களில் ந, ம இரண்டு மட்டுமே மொழிக்கு முதலில் வரும். (ங – ஙனம் என வருவதோடு சரி).

க, ச, ட, த, ப, ற என்ற ஆறு வல்லெழுத்துக்களில் க, ச, த, ப என்ற நான்கு மட்டுமே மொழி முதலாக வரும்.

தமிழில் மொழியிறுதியில் ஒரு வல்லெழுத்துக்கூட வராது.

வருமொழி முதலில் வரும் கசதபக்கள் காரணமாக, வல்லெழுத்து மிகுதலும் மிகாமையும் பற்றிய சந்தி விதிகளே தமிழில் மிக அதிகமாகும்.

இனி, இச் சந்தி விதிகள் ஒவ்வொன்றையும் சற்று விரிவாகக் காண்போம். மெய்யும் உயிரும் சந்திக்கும் இயல்புப் புணர்ச்சி, உலக வழக்கில் எத்தனையோ **நூற்றுக்கணக்கான** *சொற்களில் வழங்கி வருகிறது. தமிழில் உயிர்மெய் என்பது தனி எழுத்தன்று. மெய் எழுத்துடன் உயிர் சேர்ந்தால், இயல்பாகச் சேர்ந்தொலிப்பதால் அதை உயிர்மெய் என்றார்கள்.*

க் + அ = க. ச் + அ = ச. த் + இ = தி. இவ்வாறு வரும் புணர்ச்சியைக் கீழ்வரும் சொற்களில் காணலாம்:

கடல் + அலை – கடலலை
ஆல் + இலை – ஆலிலை
தொழில் + ஆளி – தொழிலாளி
முதல் + ஆளி – முதலாளி
பால் + ஆடை – பாலாடை

இங்ஙனம் 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவன' (மெய்யும் உயிரும் சேர்ந்து உயிர்மெய்யாவன) யாவும் இயல்பு எனவே படும்.

பட்டு + துணி = பட்டுத்துணி

பூ + கொடி = பூங்கொடி

மா + பிள்ளை = மாப்பிள்ளை

கவி + அரங்கம் = கவியரங்கம்

இங்கெல்லாம் சொற்கள் சந்திக்குமிடத்தில் **ஒரெழுத்துத் தோன்றி** சொற்களை இணைப்பதைக் காணலாம்.

மரம் + வேர் = மரவேர்

அரசன் + வள்ளல் = அரசவள்ளல்

கபிலர் + பரணர் = கபிலபரணர்

மனம் + மாற்றம் = மனமாற்றம்

இறுதியிலுள்ள எழுத்துக் கெடுவதால் இதனைக் **'கெடுதல்'** என்பர். 'கெடுதல்' என்பது ஒரு எழுத்துக் கெட்டுப்போதல்; மறைந்துபோதலாகும்.

நாள் + கூலி = நாட்கூலி

பால் + குடம் = பாற்குடம்

அருள் + செல்வம் = அருட்செல்வம்

கால் + புள்ளி = காற்புள்ளி

கண் + நீர் = கண்ணீர்

எள் + நெய் = எண்ணெய்

இவை ஒரெழுத்து மற்றொன்றாகத் திரியும் **'திரி'பா**கும். நின்ற சொல்லும் வரும் சொல்லும் சேரும்போது, முதலிலுள்ளதன் இறுதி எழுத்தோ, வருமொழி முதலெழுத்தோ அல்லது இரண்டுமோ மாறும்.

எனவே எங்கு பிரித்தெழுதவேண்டும்? எங்கு சேர்த்தெழுத வேண்டும்? என்று வினவி வினவி உண்மையறிந்து, பொருள் விளங்குமாறு எழுத வேண்டும். சிற்றிடை, சேவடி, ஒண்ணுதல், ஆண்டகை போல்வன பண்புத் தொகைகள். இவற்றைப் பிரித்தல் கூடாது. பேரணி, காரிருள் என்பனவும் அவ்வாறே மண்ணுலகம், விண்ணுலகம், புள்ளினம், வண்டினம் என்பனவும் பிரிக்கக் கூடாதன. ஈரிரண்டு, எண்ணான்கு, ஐயிரண்டு, ஆறிரு என்ற எண்ணுப் பெயர்கள் போல்வனவும் பிரிக்கக்கூடாதன.

ஆனால் சில இடங்களில் பிரித்தெழுதினால்தான் பொருள் தெளிவாக விளங்கும். வாட்டடங்கண், கற்றரை, முட்டாட்டாமரை போல்வன பிரித்து எழுதப்படவேண்டும். வாள்தடங்கண், கல்தரை, முள்தாள் தாமரை என்றால் எளிதில் பொருள் விளங்கும். எண்டிசை என்பதைவிட எண்திசை என்பது நன்கு விளங்கும். மண் குடம் (மட்குடம்), நாள் மலர் (நான்மலர்), கோள் மீன் (கோண்மீன்) என்பன பிரித்து எழுதுவதால் எளிதில் பொருள் விளங்குவனவாகும்.

மக்கட்செல்வம், நாட்கூலி, கூலியாள், முதற்பதிப்பு என்பன பிரிக்காது வழங்கும்போதுதான் எளிதில் பொருள் விளங்கும். மக்கள் செல்வம் என்றால் மக்கள் வேறு செல்வம் வேறாகிவிடக்கூடும்.

அருட்செல்வம் செல்வத்துட்செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

இத்திருக்குறளில் அருள் செல்வம், பொருள் செல்வம் எனப் பிரித்துக் கூறிப் பாருங்கள். பொருள் தெளிவுபடாது போய்விடும்.

தன் மதிப்பீடு : 2 பயிற்சியும் வினாக்களும்

கீழ்வரும் பயிற்சிகளை செய்து பார்த்து, உங்கள் முன்னேற்றத்தை அறிந்துகொள்ளுங்கள்:

1. (அ) இயல்புப் புணர்ச்சிக்கு ஐந்து சான்றுகள் தருக.
   (ஆ) தோன்றல் புணர்ச்சிக்கு ஐந்து காட்டுகள் தருக.
   (இ) கெடுதல் புணர்ச்சிக்கு ஐந்து உதாரணங்கள் தருக.
   (ஈ) திரிதல்விகாரப் புணர்ச்சிக்கு ஐந்து எடுத்துக்காட்டுகள் தருக.
2. கீழ்வருவனவற்றுள் எவையெவை என்ன புணர்ச்சி (இயல்பு, தோன்றல், கெடுதல், திரிதல்) என்று கூறுக. ஒன்றில் இரண்டு வரினும் குறிப்பிடுக.

   மடைப்பள்ளி, படையெடுப்பு, மட்குடம், படத்திறப்பு, நடைதிறப்பு, படிப்பில்லை, கிணற்றுத்தவளை.
3. கீழ்வரும் கடினமான புணர்ச்சிகளை இக்காலத்திற்கேற்ப எவ்வாறு பிரித்தெழுதவேண்டும்?

   புற்றரை, கொழுநற்றொழுதெழுவாள்,
   முஃடீது, நாடுரி, எட்டுணையும், கட்டீது.

3.4. சில முக்கியமான புணர்ச்சி விதிகள்

சொற்சேர்க்கையால் ஏற்படும் சந்தி விதிகள் பிறர்க்குத் தெளிவாகக் கருத்தைத் தெரிவிக்க, ஐயமின்றித் தெரிவிக்க உதவுகின்றன. இல்லையென்றால் இவற்றை நாம் ஏன் சுமக்க வேண்டும். தேவையில்லை என்று விட்டுவிடலாமே? நாம் இயல்பாக வழங்குவதைத்தான் மீண்டும் நினைத்துப் பார்க்கிறோம்.

அங்கே பறவை கூடுகண்டேன்

இதில் பறவையையும் கூட்டையும் கண்டதாக ஆகும்.

அங்கே பறவைக்கூடு கண்டேன்

என்றால் பறவையினது கூட்டைக் கண்டதாக ஆகும். மேலே கண்ட இரண்டு வாக்கியங்களிலும் உள்ள பொருள் வேறுபாட்டைப் பார்த்தால், தெளிவாகப் பேச, எழுதச் சந்திவிதிகள் வேண்டும் என்றல்லவா தோன்றுகின்றது.

கூடு இன் உள் ஏ முட்டை உளது
கூட்டினுள்ளே முட்டையுளது.

அச்சு எந்திரம் வந்துவிட்டதால் எந்தச் சொல்லையும் தனித்தனியே எழுதலாம். ஆனால் தமிழில் சேர்த்தெழுதும் இயல்பை மாற்றிவிட முடியுமா? அச்சு இயந்திரத்தால் ஏற்பட்டுள்ள மாற்றம் பல உள. ஆயினும் இம்மாற்றங்கள் பொருளை விளங்கிக்கொள்ளத் தடையாகும் அளவுக்கு ஏற்படவில்லை. முட்டையுளது என்பதை முட்டை உளது என எழுதுகிறோம். ஆனால் 'கூட்டினுள்ளே' என்பதை இனியும் கூடு இன் உள் ஏ எனப் பிரித்து எழுதுவோமா?

தமிழ் கவிதை மொழியாதலின் அதில் வரும் அசை, சீர், தளைகட்கேற்பத் தமிழில் கடும் புணர்ச்சி விதிகள் பல தோன்றின. இன்று உரைநடைக் காலமாதலின் அவற்றுள் பல தவிர்க்கப்படுகின்றன. இன்று வழக்கத்தில் உள்ளவுமான அடிக்கடி பயன்படுகிற விதிகளை மட்டும் பார்த்துப் பார்த்துச் சொல்லிச் சொல்லிப் பழகிக்கொள்வது நல்லது.

(1) தனிக்குறில் முன்பு வரும் மெய்

மண் + எண்ணெய் - மண்ணெண்ணெய் என்றே ஆகும். நன்கு கவனித்துச் சேர்த்து ஒலித்துப்பாருங்கள். நாமோ மண்ணெண்ணெய் என்கிறோம். மண்ண் – எண்ணெய் என முன்புள்ள மெய் இரட்டிக்கிறது.

கல் + இல் = கலில் நாம் கல்லில் என்றே உச்சரிக்கிறோம்.
விண் + இல் = விண்ணில்
கள் + உண்டான் = கள்ளுண்டான்
எண் + அம் = எண்ணம்

இவை எல்லாம் இதைப்போல் ஆனவை.

ஒரு வேறுபாடு பாருங்கள்: *கால் + ஐ = காலை;*
வேல் + ஐ = வேலை ஆகின்றன.

ஆனால் *கல் + ஐ = கல்லை* என ஆகின்றது ஏன்? தமிழில் ஒலிப்பை எளிமையாக்கவும், இனிமையாக்கவும் மனிதன் உள்ளுணர்வால் கொண்ட ஆர்வ முயற்சிகளே இம்மாற்றங்களை விளைவித்துள்ளன. பின்னர் பொருளை வேறுபடுத்துமளவு அவை வளர்ந்துவிட்டன. காலப்போக்கில் இவை இரண்டுமே சந்திகளுக்கு அடிப்படைக் காரணமாகிவிட்டன எனலாம்.

செல் + அரித்தது = செல்லரித்தது
புல் + அரித்தது = புல்லரித்தது
வில் + ஐ = வில்லை

'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் எதிரே வரும்.' சொல் முதலில் உயிரெழுத்து வந்தால், தனிக்குறிலின் பின்வரும் மெய்யெழுத்து (கல், செல், வில், கண், புண், தின் என்பன போன்றவை) இரட்டிக்கும். முன் + ஒற்று = முனொற்று என்றே, ஆகும். ஆனால் முன்ன் என்று ஒற்று இரட்டித்துப் பின்வரும் ஒற்றுடன் சேர்த்து 'முன்னொற்று' என்றாதல் காண்க.

(2) உடம்படு மெய்

நிலைமொழியின் இறுதியிலும் உயிரே நின்று, வருஞ்சொல்லின் முதலிலும் உயிரே வந்தால் – உயிரும் உயிரும் சந்தித்தால் வரும் சந்திதான் ய் அல்லது வ் என்ற உடம்படுமெய். இதுமுன்பே ஒருமுறை விளக்கப் பட்டது. உயிர்களை உடம்படுத்துவதற்கு வருகிற மெய் இது. மெய்யில் உயிர் சேருமேயன்றி, உயிரில் உயிர் சேராது. அங்ஙனம் சேரவேண்டுமேல் இடையில் ஒரு மெய் வரவேண்டும் என்பது உலகத் தத்துவம்போல் இருக்கிறது.

வேலையாள்: வேலை – இறுதியிலிருப்பது உயிர் ஐ: ஆள் முதலிலிருப்பது உயிர் ஆ. வேலையாள் இடையில் 'ய்' சந்திவந்து இவற்றை இணைக்கிறது.

வேலைஆள் என்றால் பொருள் மயங்கும்; வேலையாள் என்று உடம்படுமெய் சேர்ந்தால்தான் தெளிவுபெறும்.

பூவரசு = பூ – ப் + ஊ. எதிரே அரசு. உயிரையும் உயிரையும் இணைக்க 'வ்' வருகிறது.

மாவிலை, கோயில், வாவென்றான், சிலையெழுது, எழுதவில்லை, தலையெழுத்து என்பன போன்ற பல சொற்களில் உடம்படுமெய் வந்திருப்பதைக் கவனியுங்கள், சொற்களைப் பிரித்து, இடையில்வரும் ய், வ் எழுத்துக்களைக் குறிப்பாக நோக்குங்கள்.

(3) குற்றியலுகரமும், உமிரும் சந்தித்தால் ஏற்படும் மாற்றம்.

தமிழில் நாடு, பயறு, சுக்கு, பங்கு, சார்பு, எஃகு என வருவன குற்றியலுகரங்கள்.

சொல்லின் இறுதியில் மெல்லெழுத்து வரும்; இடையெழுத்து வரும்; மண், தின், மரம் முதலியன மெல்லினம் இறுதியில் வந்தன. பாய், கார், தாள், வால் முதலியன இடையினம் கடைசியில் வந்தன. க், ச், ட், த், ப், ற் என்ற வல்லெழுத்து வந்த ஒரு சொல்லையாவது தமிழில் காட்ட முடியாது. பிற மொழிகளில் உண்டு. ரோட், ராக்கெட், கார்க், பாத், பீச் என்றுவரும். அவற்றை நாம் ரோடு, ராக்கட்டு, பீச்சு என்று மாற்றிவிடுவதுண்டு. நம் ஒலிப்புமுறை அப்படி.

இவ்வாறு வல்லெழுத்தோடு வரும் உகரங்களே குற்றியலுகரங்கள். அவை எதிரே உயிர்வரின் கெட்டுவிடும். இதுவும் மிகுதியான அழுத்தமான ஒரு சந்தி வேறுபாடு.

குறிப்பு + இல்லை = குறிப்பில்லை
குறிப்பு + ஏடு = குறிப்பேடு
நாடு + அல்ல = நாடல்ல
பதிப்பு + ஆசிரியர் = பதிப்பாசிரியர்
வயிறென்று ஒன்றிருக்கிறது.
கணக்கில்லை வழக்கில்லை

படிப்பில்லாத பையனுக்கு **அழகில்லாத** பெண்ணைக் கட்டி வைத்தால் **அன்பில்லாத** வாழ்வே அமையும்.

கோடிட்ட சொற்களில் எல்லாம் குற்றியலுகரம் கெட்டுப்போயுள்ளது காண்க.

(4) குற்றியலுகரம் இரட்டித்தல்

நாடு, காடு, வீடு முதலிய 'டு' குற்றியலுகரமும் வயிறு, ஆறு, பெரியாறு, பாலாறு முதலிய 'று' குற்றியலுகரமும் நெடில் தொடர்க்குற்றியலுகரமாகவோ உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகவோ மேற்காட்டியதுபோல் வருகின்றன என்று வைத்துக்கொள்வோம். வேற்றுமைத் தொடராக வரும்போதும் சிலபோதும் அல்வழியினும் அவை ஒற்று இரட்டிப்பது தமிழில் உள்ள தனிவழக்கம்.

நாடு + புறம் = நாட்டுப்புறம் (நாடு – நாட்டு)
காடு + அரண் = காட்டரண். (காடு – காட்டு)

தனிக்குறில் முன் ஒற்று இரட்டிப்பது போன்றது இவ்விரட்டிப்பு.

வயிறு + பசி = வயிற்றுப்பசி
சேயாறு + பாலம் = சேயாற்றுப்பாலம்
பெரியாறு + நீர்த்தேக்கம் = பெரியாற்று நீர்த்தேக்கம்
ஓடு + பரப்பு = ஓட்டுப்பரப்பு
முகடு + மேலே = முகட்டுமேலே

'தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம்' என்று வரலாமா? 'தமிழ்நாடு சட்டமன்றம்' என்று வருமா? தமிழ்நாட்டுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாட்டுச் சட்டமன்றம் என்று வரவேண்டும். சிலசமயம் 'நாடு கிழவோன்' (நாட்டுக்கிழவோன்), காடகம் (காட்டகம்) என்ற செய்யுளில் இரட்டாமலும் வந்திருப்பதால் 'தமிழ்நாடு' என்று குழூஉம் போன்ற பெயர்களில் ஆளப்படுவதும் ஏற்புடையதேயாம். அங்ஙனம் பார்த்தால் முன் குறித்தவை இரண்டும் தவறல்ல.

(5) இனமான மெல்லினம் மிகுதல்

பெரும்பாலும் வல்லினம் மிகுவதுதான் அடிக்கடி காணப்படுவது. சில இடங்களில் வல்லெழுத்து மிகவேண்டிய இடத்தில், அதற்குப் பதிலாக அதன் இனமான மெல்லெழுத்து மிகும்.

மா + கனி = மாக்கனி அன்று; மாங்கனி என்றே ஆகும்.
விள + காய் = விளக்காய் ஆகாமல் விளங்காய் ஆகும்.
புளி + கறி = புளிக்கறி எனலாம்; புளிங்கறி எனலும் உண்டு.
புளிஞ்சோறு – புளியஞ்சோறு என்பதுமுண்டு.
பூ + கொடி = பூக்கொடி அன்று; பூங்கொடியேயாம்.
பூ + சோலை = பூச்சோலை அன்று; பூஞ்சோலையே.
பூ + கணை = பூக்கணை ஆகாமல் பூங்கணை ஆதலுண்டு.

(6) பண்புப்பெயரும் பண்புகொள் பெயரும்

வெண்மை, செம்மை, கருமை முதலிய பண்புச்சொற்கள், மை விகுதி கெட்டு, பல்வேறு வகையாகத் திரிந்து வருஞ்சொல்லோடு சேரும்.

வெண்மை + திங்கள் = வெண்திங்கள் (முன்பு வெண்டிங்கள்).
செம்மை + தமிழ் = செந்தமிழ்
கருமை + மேகம் = கருமேகம்
பெருமை + இன்பம் = பேரின்பம்
அருமை + அணங்கு = ஆரணங்கு
சிறுமை + அடி = சீறடி

பெருமை, அருமை, சிறுமை என்பன எதிரே ‘உயிர்’ எழுத்து வந்தால் பேர், ஆர், சீற் என மாறிவிடுகின்றன. இதுபோல் ஐந்து பண்புச்சொற்கள் வந்து புணரும் தொடர்களைத் தேடித் தொகுத்து எழுதிப் பாருங்கள். அவை சேரும் இயல்பு விளங்கிவிடும்.

(7) சுட்டு, வினா எழுத்துக்களின் புணர்ச்சி

அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களும் எ என்ற வினாவெழுத்தும் எவ்வாறு வருஞ்சொற்களோடு கூடும்?

அ + யானை = அவ்யானை
இ + ஏடு = இவ்வேடு
எ + அருவி = எவ்வருவி

வருஞ்சொல் உயிர் அல்லது ய வந்தால் ‘வ்’ தோன்றுதல் காணலாம். பிற இடங்களில் வந்த சொல்லின் மெய்யே மிகும்.

அ + தீ = அத்தீ
எ + துணை = எத்துணை
இ + செடி = இச்செடி
அ + குளம் = அக்குளம்
எ + பாட்டு = எப்பாட்டு
இ + காலம் = இக்காலம்

‘உ’ கரச் சுட்டு இன்று வழங்கவில்லை. உவ்விடம், உம்மனிதன் என்பன முன்னைய வழக்குகள்

மேலும் சில சந்திகள் மிகக் கடினமானவை. அஃதாவது அவை எவ்வாறு உருமாறின என்று எளிதில் சொல்ல இயலாதபடி மாறிவிட்டன.

அ + இடை = ஆயிடை
பத்து + பத்து = பதிற்றுப்பத்து
ஒன்பது + நூறு = தொண்ணூறு
தென்னை + காய் = தேங்காய்

இப்படிப் பல உள. இவ்வாறு இன்று வழக்கிலுள்ள சொற்களை யெல்லாம் பிரிக்கவும் சேர்க்கவும் சந்தி என்ன என்று அறியவும் வேண்டும். அதற்கு நாம் பேசும்போதும், படிக்கும்போதும், எழுதும்போதும் தேவையான அளவு பழக்கம் இருந்தால் இயல்பாக வந்துவிடுகிறது. நிரம்பச் சொற்களைச் சொல்லிச்சொல்லிப் பாருங்கள். நீங்களே கண்டுபிடித்து விளக்கம் சொல்ல ஆரம்பித்து விடுவீர்கள் !

தன் மதிப்பீடு : 3 வினாக்கள்

1. தனிக்குறில் முன்வரும் மெய்யெழுத்து இரட்டிப்பதைச் சான்றுகாட்டி விளக்குக.
2. உயிரெழுத்தும் உயிரெழுத்தும் சந்திக்கும்போது ஏற்படும் மாற்றங்கள் யாவை?
3. குற்றியலுகரமும், உயிரும் சந்திக்கும்போது ஏற்படும் மாற்றம் என்ன?
4. டு, று குற்றியலுகர விகுதிகள் எச்சொற்களில் இரட்டிக்கின்றன?

3.5. வல்லெழுத்து மிகுதல் ஏன்? ஒலிப்பு வேறுபாடும் பொருள் வேறுபாடும்

ஓசையை இணைத்து உச்சரிப்பை எளிமைப்படுத்த வல்லெழுத்து சொற்களின் இடையில் வருவது வழக்கம். தமிழ் எளிமை நோக்கிய மொழி. தொன்றுதொட்டு எளிமையாக ஒலிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

நாட்டை காக்கும், பார்த்து சிரித்தாள், பட்டு புடவை என்றால் பொருள் மிகவும் விளங்காமல் போவதில்லை. எனினும் இவற்றையே அவ்வாறு ஒற்றுவிட்டு எழுதினாலும் ஒலிக்கும்போது நாட்டைக்காக்கும், பார்த்துச் சிரித்தாள், பட்டுப்புடவை என்றுதான் கூறுகிறோம். பிறகு ஏன் ஒற்றை எழுதக்கூடாது.

சந்தி எழுத்து மிகுவதாலும், மிகாமையாலும் பொருள் வேறுபடுமிடங்கள் பலவாகும். பட்டு தெறித்தது என்றால் சிதைந்தது என்றாகும்; பட்டுத் தெறித்தது என்றால் ஒன்றிலொன்று பட்டுத்தெறித்ததாகும். ‘கடலைச் சாப்பிட்டார்’ என்று ச் எழுத்தை விட்டுவிட்டால், பொறிகடலை சாப்பிடார் என்றுதான் பொருள்படும். ‘அகத்தியர் கடலை சாப்பிட்டார்’ என்றால் நகைச்சுவைதானே? முன்பு காட்டியதுபோல் தலைச்சுமை என்றால் தலையிலுள்ள சுமையைக் குறிக்கும்; தலைசுமை என்றால் தலையே சுமையாகிவிடாதா? எண்ணிப்பாருங்கள்.

சொல்லும் சொல்லும் சந்திக்கும்போது இடையே வல்லெழுத்து (க ச த ப) மிகுவதால், ஒலிக்குப் பயன்படுவதை நினைத்துப் பாருங்கள். அதனால் பொருள் வேறுபடுவதையும் சற்றே எண்ணிப்பாருங்கள். அதன் இன்றி யமையாமை மனத்திற்குப் புலனாகும்.

எடுத்துக்காட்டிற்குக் கீழ்வரும் **இரண்டிரண்டு** சொற்களைக் கவனியுங்கள். ஒற்று மிகுவதால் பொருள் வேறுபடுவதை உணருங்கள்.

வாய்பாடு	– முன்மாதிரி
வாய்ப்பாடு	– பானையின் மேல்வாய்
கைபிடி	– கையைப்பிடி
கைப்பிடி	– ஒரு கருவி
வேலைதேடு	– வேலை கிடைக்குமா என்று தேடு
வேலைத்தேடு	– வேல் என்ற ஆயுதத்தைத் தேடு
பிட்டுதின்றான்	– பிட்டு உணவைத் தின்றான்
பிட்டுத்தின்றான்	– சிறிதுசிறிதாகப் பிட்டுத் தின்றான்
கைகுட்டை	– கைகுட்டையாக உளது
கைக்குட்டை	– சிறுதுண்டு
மலர்கை	– மலர்தல்
மலர்க்கை	– மலர்போன்ற கை
தயிர்கடை	– தயிரைக்கடை
தயிர்க்கடை	– தயிர் விற்கும் கடை
படிதேன்	– ஒருபடி தேன்
படித்தேன்	– கற்றேன்
திருடி பார்த்தேன்	– ஒரு திருடியைப் பார்த்தேன்
திருடிப் பார்த்தேன்	– களவு செய்து பார்த்தேன்
கதைபடி	– கதையைப்படி
கதைப்படி	– இந்தக் கதையின்படி

எனவே இவ்வாறு மெய்யெழுத்து மிகுவதால் ஓசை கெடுவதேயல்லாமல், பொருளும் வேறுபடுவது தெரிகிறது. பிறிதொரு காட்டும் பார்ப்போம்.

அல்வழியில் எழுவாய்த் தொடராக வரும்பொழுது ஒற்று மிகுவதில்லை. மழை குறைந்தது என்றால் இயல்பாகவுள்ளது. இதையே மழைக்குறை என்றால், மழையினது குறை என்றாகி வேற்றுமைத் தொடராய் ஒற்று மிகுகிறது. இதுபோன்ற தொடர்களை முன்வரும் பக்கத்தில் பார்த்தோம். அல்லவா?

மழை தூறியது	–	மழைத்தூறல்
மரம் குறைந்தது	–	மரக்குறை
வழி தடுமாறுகிறது	–	வழித்தடுமாற்றம்
பாட்டி கதை சொன்னாள்	–	பாட்டிசொன்னகதை

கீரை, கறி என உம்மைத்தொகையில் (கீரையும் கறியும்) மிகாதது, கீரைக்கறி என இருபெயரொட்டில் (கீரையாகிய கறி) மிகுகிறது. வல்லெழுத்து மிகுவதாலும் மிகாமையாலும் பொருள் வேறுபடுவது உறுதி. அதை நாம் குழப்பினால், காலப்போக்கில் பொருள் தடுமாறி ஒருவருக்கொருவர் விளங்காமல் இடர்ப்பட நேரிடும்.

தன் மதிப்பீடு : 4

நடைமுறைப்பயிற்சி

(அ) ஒரு நாளிதழ்ப் பத்திரிகையை எடுத்துவைத்துக்கொண்டு அதிலுள்ள தலைப்புக்களையெல்லாம் படியுங்கள். பிறகு அவற்றில் ஒற்று மிக வேண்டிய இடத்தில் மிகுந்துள்ளனவா என்று கண்டுபிடியுங்கள். அப்படி மிகவேண்டிய இடங்களில் மிகாமல் அச்சேற்றியிருந்தால், அதனால் பொருள்வேறுபடுமா, படாதா என்று சொல்லிச் சொல்லிப் பாருங்கள். ஒரு தாளை எடுத்து அத்தலைப்புக்களை எழுதிப்பாருங்கள்.

(ஆ) கீழ்வரும் பகுதியில் ஒற்றுக்கள் இடப்பட்டுள்ள அல்லது விடப் பட்டுள்ள விதத்தைப் படித்துச் சிந்தியுங்கள். பிறகு முறைப்படி அதை மாற்றி எழுதுங்கள். கருத்தை எளிதில் விளங்கவைக்க எது பயன்படும் என வேறுபடுத்தி எண்ணிப்பாருங்கள்.

''இடைகால குழுதலைவராக ஒரு பிரதிநிதி பிறகு நியமிக்க படுவார். நிர்வாக குழு நாடுக்கு கேடு விளைவிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க படும். இவ்வாறு குடியரசு தலைவர்க் கூறினார்.''

3.6. தொகுப்புரை

ஆங்கிலத்தில் உச்சரிப்புக்குத் தனி இடம் இருப்பதுபோல் தமிழில் சந்தி வேறுபாடுகளுக்கு முக்கிய இடமிருப்பதைத் தெரிந்துகொண்டோம். தமிழ் கவிதை மொழியாகவே வளர்ந்ததால், முன்பு கடுமையான புணர்ச்சிகள் தோன்றின. அச்சு வந்தபிறகு யாவும் எளிமைப்படுத்தப்படுதல் வளர்ச்சி நிலையாகிவிட்டது. அதில் இன்று தேவையானவற்றை நாம் நினைவு படுத்திக் கொண்டோம்.

தொடர்களாக இணையும்போது, பொருள்புலப்பாட்டிற்காகச் சந்திகள் மாறுகின்றன. ஒலி, எளிமை, ஒலிப்பு இனிமை கருதியும் அவை இன்று போற்றப்படுகின்றன.

சில சந்திகளை எந்தவிதத்திலும் விட்டுவிடமுடியாதபடி அவை தமிழ் மொழியில் படிந்துள்ளன. பெயரும், வினையுமே தமிழில் அடிப்படைச் சொற்கள். அவை சேரும்போது உருபுகள், சாரியைகள் வருகின்றன. அவை இடைச்சொற்கள் எனப்படுகின்றன. பெயர், வினை, உருபு, சாரியைகளை – மேலும் இணைக்கும் அல்லது 'ஒட்டும்' போக்கை இச்சந்திகள் வெளிப்படுத்துகின்றன.

3.7. மேலும் கற்றற்குரியவை

கீழ்க்காணும் நூற்பட்டியலில் ஒன்றிரண்டு நூல்களையேனும் பெற்றுப் பார்த்துப்படித்துப் பழகுவோர்க்கு மேலும் நல்ல பயிற்சி ஏற்படும்.

1. அறிவியல் இலக்கியக் கழக வெளியீடு, **தமிழ் வழக்கில் சில தவறுகள்**, பயிலரங்க நிகழ்ச்சித் தொகுப்பு, தொகுப்பாசிரியர் : வா. செ. குழந்தைச்சாமி, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 600 025.
2. இராசமாணிக்கம், வீ., **எப்படி எழுதுவது?**, தேன்தமிழ்ப்பதிப்பகம், 85, சுப்பிரமணியபிள்ளைத் தெரு, சேலம் - 636 001.
3. இளையபெருமாள், கோ., **தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?** வானதி பதிப்பகம், 13 தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை - 600 017.
4. சண்முகதாஸ், அ., **தமிழ்மொழி இலக்கண இயல்புகள்**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.
5. தமிழண்ணல், **இனிய தமிழ்மொழியின் இயல்புகள்**, 1, 2, 3 பகுதிகள், மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக்கோபுரத் தெரு, மதுரை - 625 001.
6. பரந்தாமனார், அ.கி., **நல்ல தமிழ் எழுதவேண்டுமா?**, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 600 108.
7. முத்து. கண்ணப்பன், தி., **தமிழில் தவறுகளைத் தவிர்ப்போம்**, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 600 108.

தன்மதிப்பீடு அறிதல் : 5 பயிற்சி

பாரதியார் பாடல் ஒன்று தரப்பட்டுள்ளது. அதில் அடிக்கோடிட்ட/ எடுத்தெழுதப்பட்ட தொடர்களைப் பாடத்தில்வரும் அவற்றோடு ஒப்புமை யுடைய சந்திபெற்ற பகுதிகளுடன் சேர்த்துக் குறிப்பிட்டு விளக்குக.

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் **ஒலியி லிருப்பாள்**
கொள்ளை **இன்பங் குலவு கவிதை**
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளமாம் பொருள் **தேடி யுணர்ந்தே**
ஓதும் வேதத்தின் **உள்நின் றொளிர்வாள்**
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் **துட்பொரு ளாவாள்**

வெள்ளைத் தாமரை
தாமரைப் பூ
பூவிலிருப்பாள்
ஒலியிலிருப்பாள், இன்பங்குலவு
குலவு கவிதை, கூறுபாவலர்.
உள்ளத்திருப்பாள், தேடி-
யுணர்ந்தே. நின்றொளிர்வாள்
கள்ளமற்ற, உட்பொருள்,
பொருளாவாள்.

மதிப்பீடு : விடைகள்

1. குடத்தை – குடம் அத்து + ஐ அத்து சாரியை (ஐ உருபு)
2. கரையின்கள் – கறை + ப் + இன் + கள் இன் சாரியை (கண் உருபு)

3. கற்பனையினது – கற்பனை + ய் + இன் + அது இன் சாரியை ய் சந்தி (அது உருபு)

பாவினா – பா + இன் + ஆல் இன் சாரியை வ் சந்தி (ஆல் உருபு)

2. 1. அ. ஒலி கேட்கிறது, சிரித்த பெண், மணி விளக்கு, பனை மரம், பால் கொடு.

ஆ. மாங்கனி, இயற்கையழகு, சட்டைத்துணி, கூட்டுக்கறி, ஒட்டுச்செடி.

இ. மர நடுவிழா, அரச வீரன், மூல நாள், கணக்கில்லை, வாக்குண்டாம்.

ஈ. வேற்கண், பொருட்செலவு, நூற்பொருள், பற்பொடி, கட்குடி

2. மடைப்பள்ளி – தோன்றல்
படையெடுப்பு – தோன்றல்
கிணற்றுத்தவளை – தோன்றல்
மட்குடம் – திரிதல்
படத்திறப்பு – கெடுதல், தோன்றல்
படிப்பில்லை – கெடுதல்
நடைதிறப்பு – இயல்பு

3. புல்தரை, கொழுநன் தொழுது எழுவாள், முள்தீது, நாழிஉரி, எள்துணையும், கள்தீது.

3. அ. முள் + ஐ = முள்ளை எடு 'ள்' இரட்டித்தது காண்க. இன்றேல் முள் + ஐ = முளை ஆகும்.

ஆ. உயிரும் உயிரும் சந்திக்கும் போது இடையில் ய் அல்லது வ் என்ற உடம்படுமெய் தோன்றும். புகை + இலை = புகையிலை. மா + இலை = மாவிலை.

இ. குற்றியலுகரத்தின் முன் உயிர் எழுத்து வந்தால், அவ்வுகரம் கெட்டு விடும். காசு + இல்லை = காசில்லை. காற்று + இல்லை = காற்றில்லை.

ஈ. நெடில், உயிர்த்தொடராக வரும் டு, று குற்றியலுகரங்கள் பெரிதும் இரட்டிக்கும். ஆடு + குட்டி = ஆட்டுக்குட்டி; வயிறு + பசி = வயிற்றுப்பசி.

4. அ. ''இடைக்காலக் குழுத்தலைவராக ஒரு பிரதிநிதி பிறகு நியமிக்கப் படுவார். நிர்வாகக் குழு நாட்டுக்குக்கேடு விளைவிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.'' இவ்வாறு குடியரசுத்தலைவர் கூறினார்!

5. அ. வெள்ளைத்தாமரை ஒற்று தோன்றியது
தாமரைப்பூ
பூவிலிருப்பாள்
ஒலியிலிருப்பாள்
பொருளாவாள்
கள்ளமற்ற
கூறுபாவலர் இயல்புப்புணர்ச்சி
குலவு கவிதை
இன்பங்குலவு 'ம்' திரிந்தது
உள்ளத்திருப்பாள் - உள்ளம் + அத்து + இருப்பாள் (அத்து சாரியை)
நின்று + ஒளிர்வாள் = (இற்றுகரம் கெட்டது)
உள் + பொருள் = உட்பொருள் (ள் திரிந்தது)

பாடப்பகுதி (Unit) 4
வாக்கிய அமைப்பும் வகைகளும்

படிப்பு நோக்கம்

★ தமிழ் வாக்கிய அமைப்புக்களை விளங்கிக் கொள்ளுதல்

★ எழுவாய் பயனிலை செயப்படுபொருளைக் கண்டறிதல்

★ தமிழ்மொழியின்கண் சிறப்பாகவுள்ள வேற்றுமை, அல்வழித் தொடர்களையும் தொகைநிலை, தொகாநிலைத் தொடர்களையும் நன்கு அறிந்து கொள்ளுதல்.

★ ஆங்கிலத்திற்போன்ற வாக்கிய அமைப்புக்களையும் புரிந்து கொள்ளுதல்.

★ ஆளுமையோடு, திறம்பட எழுதும் ஆற்றல் பெறுதல்.

பாடக் கருத்தலகுகள்

4.0 பாட முன்னுரை

4.1 வாக்கியம்

4.2 இயைபு

4.3 எச்சங்கள்

4.4 வேற்றுமைத் தொடர்கள்

4.5 அல்வழித் தொடர்கள்

4.6 தொகைநிலைத் தொடர்கள்

4.7 தொகாநிலைத் தொடர்கள்

4.8 வாக்கியம் : வகைகள்

4.9 பாடத்தொகுப்புரை

4.10 தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

4.11 **தன்மதிப்பீடு – விடைகள்**

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

4.0 பாட முன்னுரை

தமிழில் வாக்கிய அமைப்பு எளிமையானது. சொல், தொடர், வாக்கியம் எனத் தமிழில் வகைப்படுத்தலாம். தொடர்கள் தம்மளவில் வாக்கியமாக நிற்பனவும், மேலும் தொடர்ந்து நின்று வாக்கியமாவனவும் உள. 'கண்ணா வா' என்பது விளித்தொடர்; அதுவே வாக்கியமெனவும் கூறலாம். 'மற்றொன்று' என்பது இடைச்சொல்தொடர். இதனை 'மற்றொன்று தந்தான்' என்றால்தான் வாக்கியமாகும். 'சேவடி' என்பது பண்புத்தொகை நிலைத்தொடர். 'சேவடி காப்பு' என்றால் வாக்கியமாகும். தமிழ் வாக்கிய அமைப்புகளை, இன்றைய புதிய பார்வைகளில் வகைப்படுத்துவதும் தெளிவு பெற உதவுகிறது. நன்கு திறம்பட எழுத வேண்டுமென்றால், மிகுதியாகப் பயிற்சிகளைச் செய்து பார்த்து ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

4.1 வாக்கியம்

சொல் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து நின்று, ஒரு பொருளைத் தருவது என்று முன்னமே நீங்கள் படித்திருக்கிறீர்கள்.

'தலை' என்பது இரண்டு எழுத்துக்களால் ஆகி உடம்பில் 'கழுத்துக்கு மேல் உள்ள பகுதி' என்ற பொருளைக் குறிப்பதால் **சொல்** எனப்படும்.

அவ்வாறே ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து நின்று ஒரு முடிந்த பொருளைச் சுட்டுவதுண்டு.

கண்ணன் வந்தான்

இங்கே இரண்டு சொற்கள் சேர்ந்து நின்று, கண்ணன் வருதலாகிய தொழிலைச் செய்தான் என்று ஒரு கருத்தைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. இவ்வாறு இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து பொருள் முற்றுப் பெற நிற்கும் போது **அச்சொற்றொடரை** வாக்கியம் என்கிறோம்.

4.2 இயைபு

வாக்கியத்தில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் ஒருவகைப் பொருத்தம் உள்ளதை அறிவீர்கள். இவ்வகையான பொருத்தத்திற்கு 'இயைபு' என்று பெயர்.

அவன் வந்தா**ன்**

என்று கூறுவோம். ஆனால்,

அவன் வந்தது

என்று கூற மாட்டோம். அப்படியே நண்பர்கள் யாராவது கூறினாலும் அவர்கள் பேச்சைக் கேட்டு எள்ளி நகைப்போம். எழுதும் போதும் கவனமாக எழுதினால்தான் மொழி என்ற கருவி பழுதுபடாமல் இருக்கும்.

'மாடு வந்தது' என்று கூறுவோம்; மாறாக 'மாடு வந்தார்' என்று கூறமாட்டோம்.

ஏனெனில் 'அவர்' என்பது எழுவாயாக வருமானால் 'வந்தார்' (வா-ந்-த்-ஆர்) என்ற வினைமுற்று 'ஆர்' விகுதிபெற்று முடிவதைக் காண்கிறோம். 'அவன்' என்று உயர்திணை ஒருமை ஆண்பால் எழுவாயாக

வரும்போது வினைமுற்றிலும் 'ஆன்' என்ற உயர்திணை ஒருமை ஆண்பால் விகுதி வருகிறது. இதுவே இயைபு எனப்படும்.

மீனா(ள்) வந்தாள்

இவ்வாக்கியத்தில் 'மீனாள்' என்னும் பெண்பாற் சொல் 'வந்தாள்' என்றும் பெண்பாலுக்கு உரிய வினைமுற்றையே கொண்டு முடிகிறது. ஆகவே, அதனைப் **பால் இயைபு** எனக் கூறுவர்.

நான் படித்தேன்

இங்கு 'நான்' என்னும் தன்மைப் பெயர் படித்தேன் என்னும் தன்மை வினைமுற்றையே கொண்டு முடிவதால் இது **'இட இயைபு'** எனப்படும்.

மாடு வந்தது

இங்கு 'மாடு' என்னும் அஃறிணை ஒருமை 'வந்தது' என்னும் அஃறிணை ஒருமை வினைமுற்றோடு 'இயைந்து வருவதால் இஃது **எண் இயைபு**' ஆகும்.

மாடுகள் வந்தது
பறவைகள் பறக்கிறது

என்று அஃறிணையில் பன்மைக்கு ஒருமை விகுதி கொடுப்பது இன்று பரவலாகி விட்டது என்றாலும் பன்மை முடிவு கொடுப்பதே தெளிவுபடும் எனலாம்.

நரி நடந்தார்.

இவ்வாக்கியத்தில் 'நரி' என்னும் அஃறிணைப்பெயர் 'நடந்தார்' என்னும் உயர்திணை வினைமுற்றைக் கொண்டு முடிதலின் இது **'திணை இயைபு'** பெறாமல் அமைகிறது. ஆகவே இவ்வாக்கியம் சரியான வாக்கியம் ஆக வேண்டுமெனில், 'நரி நடந்தது' என்றே இருக்க வேண்டும்.

அவள் எழுந்தான்

இவ்வாக்கியத்தில் 'அவள்' என்னும் பெண்பாற் சொல் 'எழுந்தான்' என்னும் ஆண்பால் வினைமுற்றைக் கொண்டு முடிதலின் இது **'பால் இயைபு'** பெறாமல் அமைகிறது. இவ்வாக்கியம் இலக்கணம் உடையதாக இருக்க வேண்டுமெனில், 'அவள்' என்ற எழுவாய்க்கு ஏற்ற 'எழுந்தாள்' என்னும் வினைமுற்றைக் கொண்டு, 'அவள் எழுந்தாள்' என அமைய வேண்டும்.

அவன் பார்த்தேன்

இவ்வாக்கியத்தில் 'அவன்' என்னும் படர்க்கைக்கு உரிய சொல் 'பார்த்தேன்' என்னும் தன்மை வினைமுற்றைக் கொண்டு முடிவதால் இஃது **'இயைபு'** பெறாது அமைகின்றது.

ஆனால் 'அவன் பார்த்தான்' என்று அமையும்போது 'இட இயைபு' பெற்று இலக்கணமுடையதாக உள்ளதைக் காணலாம்.

எளிதாகப் புரிந்து கொள்வதற்காகக் கீழே கட்டங்கள் மூலம் விளக்கப் பட்டுள்ளன.

1. **எடுத்துக்காட்டு** **இயைபின் பெயர்** **சரியான வாக்கியம்**

நான் வந்தோம்	இட இயைபு இல்லை	நான்வந்தேன்
பாலன் வந்தாள்	பால் இயைபு இல்லை	பாலன் வந்தான்
யானை வந்தன	எண் இயைபு இல்லை	யானை வந்தது
நீ தூங்கினான்	இட இயைபு இல்லை	நீ தூங்கினாய்
அவள் நடந்தான்	பால் இயைபு இல்லை	அவள் நடந்தாள்
ஆடு ஓடினான்	திணை இயைபு இல்லை	ஆடு ஓடியது

2.

எழுவாய்	விகுதி	எடுத்துக்காட்டு
தன்மை + முன்னிலை	ஓம்	நானும் நீயும் போவோம்
தன்மை + படர்க்கை	ஓம்	நானும் அவனும் போவோம்
முன்னிலை + படர்க்கை	உங்கள்	நீயும் அவனும் பாருங்கள்
(படர்க்கை) உயர்திணை + அஃறிணை	ஆர்கள்	அவனும் குதிரையும் வந்தார்கள்

நினைவுபடுத்திக் கொள்க

1. எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ள தொடர்புக்கு இயைபு என்று பெயர்.
2. 'நான், வந்தேன்' என்று கூறலாம்; ஆனால் 'நான் வந்தார்' என்று கூறுவதில்லை.
3. 'நாம் வந்தோம்' என்று கூறலாம்; ஆனால் 'நாம் வந்தேன்' என்று கூறுவதில்லை,
4. ஒருமை எழுவாயெனில் வினைமுற்றிலும் ஒருமை விகுதி வரும்.
5. திணை, பால், எண், இடம் நான்கும் இயைபுடன் அமைய வேண்டும்.

புறனடை

சிலசமயம் மரியாதை கருதி 'காமராசர் வந்தார்', 'இந்திரா காந்தி பார்வையிட்டார்', 'அண்ணா பேசினார்' என்பதுண்டு. இங்கு ஒருமை, பன்மை போலக் கூறப்படுகிறது. இதனை மரியாதைப் பன்மை என்பர். சிறுவர்க்குக் கதை கூறும்போது 'நரியார் வந்தார்', 'யானையார் பிளிறினர்' என்பன இவ்வாறே **அஃறிணையை** உயர்திணையாக்கிக் கூறுவன. இவை 'புறனடை' எனப்படும். சிலசமயம் விதிகளுக்குப் புறமாகவும் இவை நடைமுறைக்கு வருவன (புறன் + நடை).

தன் மதிப்பீடு : 1

வினாக்கள்

1. வாக்கியத்தில் முன்னிலையும் தன்மையும் எழுவாயாக வரும்போது வினைமுற்றின் விகுதி என்ன?
2. 'மாடு வந்தாள்' என்று ஏன் கூறுவதில்லை?
3. 'ஆர்' என முடியும் விகுதி கொண்ட வினைமுற்றிற்கு எழுவாய் கூறுக.

பயிற்சி

கோடிட்ட இடத்தைச் சரியான எழுவாய், விகுதிகளைக்கொண்டு நிரப்புக.

1. குதிரையும் நாயும் ஓடி ....
2. அவள் நேற்று விழுந்து விட்...........
3. .... அவரை இன்றுவரை மறந்து விட்டேன்.
4. நாங்கள் நன்றாகப் படிக்கி...........
5. .... ஏன் வந்தான்?
6. .... அங்கே நிற்கும்?

4.3 எச்சங்கள்

எச்சங்கள் என்றால் என்னவென்று முற்பகுதியிலேயே பார்த்திருக்கிறீர்கள்.

வந்த பையன் - பெயரெச்சம்

வந்து போனான் - வினையெச்சம்

இவ்வாறு வினைமுற்றில் விகுதி கெட்டு, எஞ்சி நிற்கும் பகுதி பெயரைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம் என்றும், வினையைக் கொண்டு முடிந்தால் வினையெச்சம் என்றும் பெயர் பெறும்.

வினைமுற்று - கருத்தாலும் அமைப்பாலும் முற்றுப்பெற்றது.

எச்சம் - கருத்தாலும் அமைப்பாலும் முற்றுப்பெறாதது.

எச்சம்

பெயரெச்சம் — பெயர் கொண்டு முடியும்

வினையெச்சம் — வினை கொண்டு முடியும்

பெயரெச்சம்

1. ***ஓடிய பையன்*** *விழுந்து விட்டான்*
2. *ஓடாத* ***பையன்*** *விழுந்து விட்டான்*

மேலே காட்டிய சான்றுகளைக் காண்க. வினைமுற்றின் விகுதி கெட்டு எஞ்சிய பகுதிகளுடன் ***'அ'*** என்னும் **பெயரெச்ச** விகுதி பெற்று, பெயர் கொண்டு முடிவது பெயரெச்சமாகும். அஃது உடன்பாட்டுப் பொருளையும் எதிர்மறைப் பொருளையும் உணர்த்தி நிற்கும். முதல் வாக்கியத்தில் ***'ஓடிய'*** என்பது **உடன்பாடு;** இரண்டாவது வாக்கியத்தில் உள்ள ***'ஓடாத'*** என்பது எதிர்மறை. இவ்விரண்டுமே பெயர் கொண்டு முடிவதைக் காணுங்கள்.

பெயரெச்சம்

உடன்பாடு — எடுக்கும் குழந்தை

எதிர்மறை — எடுக்காத குழந்தை

வினையெச்சம்

அவள் ***பாடி ஆடினாள்***

இவ்வாக்கியத்தில் 'பாடி' என்ற வினையெச்சம், ஆடினாள் என்ற வினைச்சொல் கொண்டு முடிகிறது. இவ்வாறு, வினைமுற்றிலுள்ள விகுதி கெட்டு, எஞ்சியுள்ள பகுதிகளோடு வினைச் சொல்லைக்கொண்டு முடிவது வினையெச்சம் ஆகும். வினையெச்சமும் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரண்டு பொருள்களிலும் வரும்.

வினையெச்சம்

உடன்பாடு — எடுத்துக் கொடுத்தால்

எதிர்மறை — எடுக்காமல் நின்றால்

1. ***படித்து வருபவர்*** *பயன் பெறுவர்*

இங்கு ***'படித்து'*** என்ற வினையெச்சம் 'வருபவர்' என்ற வினையாலணையும் பெயரைத் தழுவி நிற்கிறது.

2. அவள் அவனைத் ***தேடி ஓடினாள்.***

இவ்வாக்கியத்தில் 'தேடி' என்னும் வினையெச்சம், 'ஓடினாள்' என்னும் வினைமுற்றைத் தழுவி வந்துள்ளது.

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

3. **திருடிக் கிடைத்த பணம்** நீண்ட நாள் நிலைக்காது.

இந்த வாக்கியத்தில் வினையெச்சமான **'திருடி'** என்ற சொல் **'கிடைத்த'** என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிகிறது.

4. **ஆடிப்பாடி** மகிழ்ந்தாள்.

இந்த வாக்கியத்தில் **'ஆடி'** என்ற வினையெச்சம் **'பாடி'** என்ற மற்றொரு வினையெச்சத்தைத் தழுவி வந்துள்ளது.

இவ்வாறு வினையெச்சமானது வினையாலணையும் பெயர், வினைமுற்று, பெயரெச்சம், மற்றொரு வினையெச்சம் முதலிய அனைத்து வினை வடிவங்களையும் தழுவி வரும்.

வினையெச்சத்திற்குப்பின்

வினையாலனையும் பெயர் | வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம்

நினைவு படுத்திக் கொள்க

1. பெயரெச்சம் என்பது பெயருக்கு முன் வரும்.
2. வினையெச்சம் என்பது வினைக்கு முன் வரும்.
3. பெயரெச்சம், வினையெச்சம் இரண்டும் உடன்பாடு, எதிர்மறை என்னும் இருபொருள்களிலும் வரும்.

தன் மதிப்பீடு : 2

வினாக்கள்

1. எச்சங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. எச்சம் வினைமுற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
3. பெயரெச்ச விகுதி எது?
4. **அழாமல்** வந்தான்.
   அழாத பையன்.

மேலே கோடிட்ட வார்த்தைகள் இரண்டிற்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்ன?

பயிற்சி

வினையெச்சம், பெயரெச்சம்; இவை கொண்டு முடியும் சொற்கள் ஆகியவற்றைத் தொகுத்தெழுதுக.

1. பழத்தைக் கடித்துத் தின்றான்.
2. அம்மா, அந்திக் கடையில் அழுகின பழம் வாங்கி வந்தாள்.
3. சிரித்துச் சிரித்து வயிறு வலித்தது.
4. இது முட்டையிடாத கோழி.
5. கவைக்கு உதவாப் பேச்சு.

வினையெச்சம்	கொண்டு முடியும் சொல்	பெயரெச்சம்	கொண்டு முடியும் சொல்
கடித்து	தின்றான்	இடாத	கோழி

4.4. வேற்றுமைத் தொடர்கள்

ஒரு தொடரில் முதலில் நிற்கும் மொழி (சொல்) நிலைமொழி ஆகும். அதனை அடுத்து வருவது வருமொழி எனப்படும்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

இவ்வாறு நிலைமொழியும் வருமொழியும் ஒன்று சேர்ந்து இணைவது புணர்ச்சியாகும். இஃது இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

எழுத்து வகையின் அடிப்படையில் உயிர்முன் உயிர், உயிர்முன் மெய், மெய்முன் உயிர், மெய்முன் மெய் எனப் புணர்ச்சி நான்கு வகைப்படும். இவற்றைப் பற்றி முன்பே கண்டோம்.

இனிப் **பொருள்வகையில்** புணர்ச்சி எத்தனை வகைப்படும் என்பதைப் பற்றி இங்கு, விரிவாகக் காண்போம். இவ்வடிப்படையில் இவை தமிழில் வேற்றுமைத் தொடர்கள் எனப்படுகின்றன;

மரம் வெட்டினான்	(ஐ)	இரண்டாம் வேற்றுமை
தலை வணங்கு	(ஆல்)	மூன்றாம் வேற்றுமை
கண்ணன் மகள்	(கு)	நான்காம் வேற்றுமை
மலைவீழ் அருவி	(இன்)	ஐந்தாம் வேற்றுமை
என் கை	(அது)	ஆறாம் வேற்றுமை
நிலம் நடந்தான்	(கண்)	ஏழாம் வேற்றுமை

மேலே உள்ளவற்றை விரித்து நோக்குவோம். அவை: ‘மரத்தை வெட்டினான்’, ‘தலையால் வணங்கு’, ‘கண்ணனுக்கு மகள்’, ‘மலையின் வீழ் அருவி’, ‘எனது கை’, ‘நிலத்தின்கண் நடந்தான்’ என விரிவதைக் காண்கிறோம்.

இவ்வாறு இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை ஆறு வகையான வேற்றுமைப் பொருள்பட நின்று, நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் சேர்ந்து வருவது ‘வேற்றுமைப்புணர்ச்சி’ ஆகும்.

இவ்வாறு ‘ஐ’ முதல் ‘கண்’ வரையுள்ள ஆறு வேற்றுமை உருபுகளுள் ஏதேனும் ஒன்று, இரண்டு சொற்களிடையே மறைந்து வருவது ‘வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்’ அல்லது ‘வேற்றுமைத் தொகை’ என்று வழங்கப்படும்.

முதலாம் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் தனியே உருபுகள் இல்லை. எனவே இவை வேற்றுமைத்தொகையாக வருவதில்லை.

‘ஐ’ முதலிய வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக வந்து, நிலை மொழியும் வருமொழியும் சேர்வது ‘வேற்றுமைத் தொகா நிலைத்தொடர்’ அல்லது ‘வேற்றுமை விரி’ என்று அழைக்கப்படும். ஆகவேதான், வேற்றுமைப் புணர்ச்சியில் தொகைநிலையும் ஆறு (உருபு மறைந்து வருவது), தொகா நிலையும் ஆறு (உருபு வெளிப்படையாகத் தோன்றி வருவது) என்ற நிலை உள்ளது.

4.5 அல்வழித் தொடர்கள்

வேற்றுமைப் பொருள் அல்லாத நிலையில் நிலைமொழியும் வருமொழியும் சேர்வது அல்வழிப்புணர்ச்சி ஆகும் (அல்வழி என்பது வேற்றுமை அல்லாத வழி).

ஊறுகாய்	-	வினைத்தொகை
கொடுங்காற்று	-	பண்புத்தொகை
முத்துப்பல்	-	உவமைத்தொகை
துணிமணி	-	உம்மைத்தொகை
பூங்கொடி வந்தாள்	-	அன்மொழித்தொகை

மேலே கூறியவாறு அல்வழிப்புணர்ச்சியில் வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்து தொகைகள் உள்ளன. இவை பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.

வேற்றுமைப் புணர்ச்சியில் உள்ளதுபோல, அல்வழிப் புணர்ச்சியிலும் 'தொகைநிலை' என்றும் 'தொகாநிலை' என்றும் இரண்டு வகை உண்டு. இவை தமிழில் அல்வழித் தொடர்கள் எனப்படும்.

நினைவுப்படுத்திக் கொள்க.

1. வேற்றுமை உருபு இரண்டு சொற்களுக்கிடையில் மறைந்து வருவது 'வேற்றுமைத் தொகை' ஆகும்.
2. முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் வேற்றுமைத் தொகையாக வருவதில்லை.
3. வேற்றுமை உருபு இரண்டு சொற்களுக்கிடையில் வெளிப்படையாக வருவது 'வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்' என்பதாகும்.
4. வேற்றுமை அல்லாத பிற பொருள் நிலையில் இரண்டு சொற்கள் இணைவது 'அல்வழிப்புணர்ச்சி' எனப்படும்.

தன் மதிப்பீடு : 3

வினாக்கள்

1. 'வேற்றுமைத் தொகை' என்றால் என்ன? சொந்தமாக எடுத்துக்காட்டுத் தருக.
2. வேற்றுமைத் தொகாநிலைத்தொடரைப் பற்றி விளக்குக.
3. அல்வழிப்புணர்ச்சிக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

4.6 தொகைநிலைத் தொடர்

இரண்டு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு, உவமை உருபு முதலிய உருபுகள் தொக்கு நின்று (மறைந்து நின்று) பொருள்தருவது தொகை எனப்படும்.



இவ்வாறு அமைகின்ற தொகைகள் முன்பு காட்டியவாறு வினைத் தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என்பனவற்றுடன் வேற்றுமைத்தொகையையும் சேர்த்து ஆறு ஆகும்.

தொகைகள் :

1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உவமைத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

1. வேற்றுமைத்தொகை

ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகிய ஆறு வேற்றுமை உருபுகளில் ஏதேனும் ஒன்று இடையே மறைந்து நின்று சொற்கள் தொடர்வது வேற்றுமைத்தொகை.

எடு: தேங்காய் உடைத்தார்.
கண்ணன் கை

வேற்றுமைத்தொகை

பூசாரி	தேங்கா	யை	உடைத்தார்
	தேங்காயை உடைத்தார்		

எந்தெந்த வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்கின்றனவோ அந்தந்த வேற்றுமைத்தொகை என்று கூறவேண்டும்.

உருபு மறைந்து வராது வெளிப்படையாக வருமெனில் அது தொகாநிலைத்தொடராகும்.

பார்வதி [க்கு] மகன் - தொகாநிலைத் தொடர்
பார்வதி [ ] மகன் - தொகைநிலைத் தொடர்

அதாவது, தொகைநிலைத் தொடரில் உருபு எப்போதும் மறைந்து வர வேண்டும்.

கோடையிடி
கூலி வேலை
அரிசி கொடுத்தான்
தசரதன் மகன்
} வேற்றுமைத்தொகை

2. வினைத்தொகை

காலம் காட்டும் இடைநிலை மறைந்து நின்று வினையடிச் சொல்லோடு பெயர்ச்சொல் தொடர்வது வினைத்தொகை.

எ-டு: அரிவாள்

	வினைத்தொகை	
அரி	கின்ற	வாள்
	அரிவாள்	

இதனை விரித்துப் பொருள் கொண்டால் ***'அரிகின்றவாள்'*** என்று நிகழ்காலமும் 'அரிந்த வாள்' என்று இறந்த காலமும் 'அரியும் வாள்' என்று எதிர்காலமும் காட்டி நிற்கும்.

வினைத்தொகையின் அமைப்பு
வினையடி - பெயர்

தொங்குதோட்டம்
ஓடுகாலி
மாறுகண்
செய்தொழில்
புளி மாங்காய்
மறைபொருள்
} வினைத்தொகை

3. பண்புத்தொகை

ஆகிய என்னும் உருபு மறைந்து நின்று பண்புச் சொல்லோடு பெயர்ச் சொல் தழுவுவது பண்புத்தொகை. இங்கு பண்பு என்பது வண்ணம், வடிவம், அளவு, சுவை முதலியன அடங்கியவை ஆகும்.

எடு: கருங்குரங்கு

இதனை விரிக்கும் போது **கருமையாகிய** குரங்கு என்று ஆகும். 'கருமை' என்ற பண்புச்சொல்லை அடுத்து 'குரங்கு' என்ற பெயர்ச்சொல் நின்று 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கு நிற்பது பண்புத்தொகையாகும்.

பண்புத் தொகை

செம் | மையாகிய | தாமரை
செம் – தாமரை
செந்தாமரை

பண்புத்தொகையின் அமைப்பு
பெயரடை - பெயர்

வெண்பட்டு
செந்நாய்
செம்பொன்
} பண்புத்தொகை

4. உவமைத்தொகை

போல, அன்ன, ஒப்ப முதலிய உவமை உருபுகள் மறைந்து நின்று உவமானச் சொல்லோடு உவமேயச் சொல் தொடர்வது உவமைத்தொகை.

எ-டு: முட்டைக்கண்

இத்தொடரில் 'முட்டை போன்ற கண்' என்பதன் ***'போன்ற'*** என்னும் உவமை உருபு மறைந்து நின்று, **முட்டை** என்னும் உவமானச் சொல்லுடன் **கண்** என்னும் உவமேயச் சொல் சேர்ந்து நிற்கிறது. இவ்வாறு உவமை உருபு இன்றி, ஒன்றை மற்றொன்றோடு உவமைப்படுத்திக் கூறுவது உவமைத்தொகை.

உவமைத்தொகை

தாமரை | போன்ற / போல / புரைய / ஒப்ப / அன்ன | முகம்
தாமரை முகம்

தேங்காய்த்தலை
மலர்க்கரம்
முத்துப்பல்
குச்சி உடம்பு
} உவமைத்தொகை

5. உம்மைத்தொகை

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்குவகை அளவைகளால் பொருள்களைக் கூறுமிடத்து 'உம்' உருபு இடையிலும் கடையிலும் மறைந்து நின்று ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்வது உம்மைத்தொகை எனப்படும்.

இரவு பகலா வேலை பார்த்தான் - உம்மைத்தொகை

இங்கு **இரவும் பகலும்** என்பது இடையிலுள்ள 'உம்', கடையிலுள்ள 'உம்' ஆகியவை கெட்டு ***'இரவு பகல்'*** என்றாகிறது. இவ்வாறு அமைவதே உம்மைத்தொகை.

உம்மைத் தொகை

வெற்றிலை | உம் | பாக்கு | உம்
வெற்றிலை பாக்கு

நடை | உம் | உடை | உம் | பாவனை | உம்
நடை உடை பாவனை

சேர சோழ பாண்டியர்
அப்பா அம்மா
ஆட்டம் பாட்டம்
இன்ப துன்பம்
காய் கறி
} உம்மைத்தொகை

ignou THE PEOPLE'S UNIVERSITY

6. அன்மொழித்தொகை

வேற்றுமைத்தொகை முதலிய ஐந்து தொகைநிலைத் தொடர்களும் தத்தம் பொருள்பட நின்று, மேலும் புறத்தே சென்று பொருள்படும்படி தொக்குவருவது (மறைந்து வருவது) அன்மொழித்தொகை ஆகும். (தொகுதல் – தொகை, தொகுதல் என்றால் உள்ளே மறைந்து நிற்றல்)

எ-டு: செஞ்சட்டை (வந்தான்)

இது '**செம்மையான** (சிவந்த) சட்டையை அணிந்தவன்' எனப்பொருள்பட்டு, பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகிறது.

அன்மொழித்தொகையின் வகைகள்

1. வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – தண்ணி வண்டி வருகிறான்.
2. வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – மாறுகண் வருகிறாள்.
3. பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – பசும்பொன், மாவட்டம் (ஊர்ப்பெயர்)
4. உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – தேன்மொழி வந்தாள்.
5. உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை – உயிர்மெய் ஆகும்.

நினைவுபடுத்திக்கொள்க

1. வேற்றுமை உருபுகளில் ஒன்று தொக்கு நிற்பது வேற்றுமைத் தொகை
2. உருபோடு வரும் தொடர் தொகாநிலைத்தொடர்
3. உருபில்லாமல் வரும் தொடர் தொகைநிலைத் தொடர்
4. வினைத்தொகையின் அமைப்பில் வினையடியோடு பெயர் வரும்
5. உவமை உருபு மறைந்து வரும் தொடர் உவமைத் தொகை
6. 'உம்' உருபு மறைந்து வரும் தொடர் உம்மைத் தொகை

தன்மதிப்பீடு : 4 வினாக்கள் :

1. வினைத்தொகை என்றால் என்ன?
2. பண்புத்தொகைக்குப் பாடப்பகுதியில் இல்லாத ஓர் உதாரணம் தருக.
3. உவமைத்தொகையில் உவமை உருபு வெளிப்படையாக வருமா? மறைந்து வருமா?
4. உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
5. தொகைகள் எத்தனை வகைப்படும்?
6. தொகைகளின் பெயர்களைக் கூறுக.
7. அன்மொழித்தொகை பிற தொகைகளிலிருந்து எங்ஙனம் வேறுபடுகிறது?

பயிற்சி

1. சேர சோழ பாண்டியர் தங்குமிடம் அமைத்தனர்.
   அ. இவ்வாக்கியத்தில் எத்தனை தொகைகள் உள்ளன?
   ஆ. அவை என்னென்ன?
   இ. ஒவ்வொன்றையும் தனித்தனியே விரித்துக் காட்டுக.
2. கீழே உள்ள சொற்களில் என்னென்ன தொகைகள் உண்டு என்று எடுத்தெழுதுக.

குடிதண்ணீர்	பேய்பிசாசு
கரும்பலகை	ஆயிழை (கேட்டாள்)
தேங்காய்த்தலை	விடிகாலை
தொலைக்காட்சி	நம்நாடு
தேங்காய் பழம்	சுடுமணல்
செங்கண்	கொடி இடை (வந்தாள்)

வேற்றுமைத் தொகை	
வினைத் தொகை	
பண்புத் தொகை	
உவமைத் தொகை	
உம்மைத் தொகை	
அன்மொழித் தொகை	

4.7. தொகாநிலைத் தொடர்

முருகன் ஓடினான்
புலி பாய்ந்தது

இங்கு முதல் தொடரில் 'முருகன்' என்னும் பெயர்ச்சொல்லைத் தொடர்ந்து 'ஓடினான்' என்னும் வினைமுற்று வந்துள்ளது. அதுபோல இரண்டாம் தொடரில் 'புலி' என்னும் பெயர்ச்சொல்லைத் தொடர்ந்து 'பாய்ந்தது' என்னும் வினை முற்று வந்துள்ளது. இச்சொற்கள் ஒரு தொடரில் எவ்வாறு தொடர்கின்றன? 'முருகன்' என்னும் சொல்லும் 'ஓடினான்' என்னும் சொல்லும் தொடர்ந்து நிற்கின்றன. இரப்பினும் நடுவில் வேறு சொல் எதுவும் மறைந்து நிற்கவில்லை. அவ்வாறே 'புலி' என்னும் சொல்லும் 'பாய்ந்தது' என்னும் சொல்லும் வருகின்றன. ஆனால் இங்கும் இடையில் வேறு சொல் மறைந்து நிற்கவில்லை.

இவ்வாறு ஒரு தொடர்மொழியில் இரண்டு சொற்கள் நின்று, இடையில் எந்தவிதச் சொல்லும் மறைந்து வராதிருக்குமானால் அத்தொடரினைத் **'தொகா நிலைத்தொடர்'** என்பர். அஃதாவது எச்சொல்லையும் விரிக்க வேண்டிய அவசியமில்லை; மறைந்து நிற்பதென்றும் எதுவும் இடையில் இல்லை.

தொகைநிலைத் தொடர்களில் வேற்றுமை உருபு முதலியன தொக்கு (மறைந்து) வரும். இவ்வாறு தொக்கு வருவதைத்தான் தொகைநிலைத் தொடர் என்று அழைப்பர். ஆனால் தொகாநிலைத்தொடரில் இரண்டு சொற்களின் நடுவில் வேறு சொல் மறைந்து நிற்காது என்பது தெளிவு.

1. எழுவாய்த்தொடர்

அரசன் தூங்கினான்

இத்தொடரில் இரண்டு சொற்கள் உள்ளன அல்லவா? இவ்விரு சொற்களுக்கும் இடையில் சொல் எதுவும் மறைந்துள்ளதா? இல்லை. எவ்வாறு சொற்கள் தொடர்ந்து நிற்கின்றன ? எழுவாயும் பயனிலையுமாய் நின்று தொடர்மொழியாய் அமைந்துள்ளன.

இவ்வாறு எழுவாய் முதலில் அமைந்து, அதைத்தொடர்ந்து பயனிலையும் நின்று இடையில் சொல் எதுவும் மறையாது வருமாயின் அதனை **'எழுவாய்த்தொடர்'** எனக்கூறலாம்.

2. விளித்தொடர்

வேலா, பார்

'வேலா' என்பது விளி (விளி என்பது அழைப்பது). இத்தொடரின் இடையில் சொல் எதுவும் மறைந்து நிற்கவில்லை. ஆகவே, இதனை விளித்தொடர் என்கிறோம். மேலே காட்டிய இரண்டும் வேற்றுமைகளாயினும் உருபின்மையால் தொகாநிலைத் தொடர்களாகவே வரும்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

3. வினைமுற்றுத்தொடர்

சிரித்தாள் சீதை

இத்தொடரில் 'சிரித்தாள்' என்னும் **வினைமுற்று முதலில் நின்று**, 'சீதை' என்னும் எழுவாய் தொடர்ந்து வந்து பொருள் தருகிறது. இவ்வாறு வருவதை 'வினைமுற்றுத்தொடர்' என்பர்.

4. பெயரெச்சத்தொடர்

கொடுக்கும் கடவுள்

இங்கு 'கொடுக்கும்' என்னும் பெயரெச்சம் 'கடவுள்' என்னும் பெயரைக் கொண்டு முடிகிறது. இவ்வாறு வருவதைப் 'பெயரெச்சத்தொடர்' என்று அழைப்பர்.

5. வினையெச்சத்தொடர்

தங்கிப் போகிறேன்

'தங்கி' என்னும் வினையெச்சம் 'போகிறேன்' என்னும் வினைமுற்றோடு முடிகிறது. இவ்வாறு அமையும் தொடரை 'வினையெச்சத்தொடர்' என்று கூறுவர்.

6. இடைச்சொல் தொடர்

மற்றொன்று

'மற்று' என்னும் இடைச்சொல் 'ஒன்று' என்னும் எண்ணுப்பெயரோடு முடிகிறது. இவ்வாறு அமையும் தொடரை 'இடைச்சொல் தொடர்' என்று அழைப்பர்.

7. உரிச்சொல் தொடர்

நனிபேதை

'நனி' என்பது உரிச்சொல். இது பேதை என்னும் பெயரைத் தொடர்ந்து வருகிறது. எனவே, இதனை 'உரிச்சொல் தொடர்' என வழங்குகிறோம்.

8. அடுக்குத்தொடர்

தீ தீ

தீ என்னும் சொல் அடுக்கி வருவதால் இதனை 'அடுக்குத்தொடர்' என்று உரைப்பர்.

9. வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

தேங்காயை உடைத்தேன்

இங்கு 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக நின்று பொருள் தருவதால் இதனை 'வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்' என்பர்.

இவ்வாறு தொகாநிலைத்தொடர் (1) எழுவாய்த் தொடர், (2) விளித் தொடர், (4) வினைமுற்றுத் தொடர், (4) பெயரெச்சத் தொடர், (5) வினையெச்சத் தொடர், (6) இடைச்சொல் தொடர், (7) உரிச்சொல் தொடர், (8) அடுக்குத்தொடர், (9) வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் என ஒன்பது வகைகள் உண்டு என்பதைப் பார்த்தோம்.

தமிழில் இவ்வாறு சொற்கள் தொடர்ந்து நிற்பனவற்றைத் தொடர்கள் என்கிறோம். இவற்றுள் வாக்கியமாக அமைவனவும் உள. பிற தொடர்ந்து இணைந்து வாக்கியம் உருவாகும்.

நினைவுபடுத்திக் கொள்க

1. எழுவாய் முதலிலும் பயனிலை இரண்டாவதும் நின்று, இடையில் சொற்கள் எதுவும் மறையாமல் வருமாயின், அது 'எழுவாய்த் தொடர்'.
2. வினைமுற்று முதலிலும் எழுவாய் இரண்டாவதும் நின்று, இடையில் சொற்கள் எதுவும் மறையாமல் வருவது 'வினைமுற்றுத் தொடர்'
3. பெயரெச்சம் பெயரைக் கொண்டு முடிவது 'பெயரெச்சத்தொடர்',
4. வினையெச்சம் வினைமுற்றோடு முடிவது 'வினையெச்சத்தொடர்'.
5. இடைச்சொல்லோடு வேறொரு சொல் சேருவது 'இடைச்சொல் தொடர்'.
6. உரிச்சொல்லோடு பெயர் தொடர்வது 'உரிச்சொல் தொடர்'.

தன்மதிப்பீடு : 5

வினாக்கள்

அ. எழுவாய்த் தொடர் என்றால் என்ன?

ஆ. விளித்தொடரை உதாரணங்கள் காட்டி விளக்குக.

இ. பெயரெச்சத் தொடர் என்பது பற்றி விவரிக்க.

ஈ. உரிச்சொல்தொடர் என்றால் என்ன?

உ. அடுக்குத்தொடர் எவ்வாறு அமையும்?

ஊ. வேற்றுமைத்தொடரை உதாரணம் காட்டி விளக்குக.

பயிற்சி

கீழே கட்டத்திற்குள் கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களின் தொடர்ப் பெயர்களை எழுதுக:

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

	1. பார்த்தாள் சீதை 2. நண்பா பேசு 3. நான் படித்தேன் 4. கடிமணம் 5. பழத்தைத் தின்றான்

4.8 வாக்கியம் : வகைகள்

கண்ணன் வந்தான்

மேலே காட்டிய எடுத்துக்காட்டில் ***'கண்ணன்'*** என்ற **எழுவாயும்** ***'வந்தான்'*** என்ற **பயனிலையும்** சேர்ந்து ஒரு முழுமையான பொருளைத் தருகின்றன. ஆதலால் இது **வாக்கியம்** எனப்படுகிறது.

ஒரு வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் இன்றியமையாத உறுப்புகள். ஒரு சில வாக்கியங்களுக்குச் செயப்படுபொருளின் இன்றியமையாமையும் உண்டு.

1. அவன் ஓடினான்
2. அவன் பாடினான்

முதல் வாக்கியத்தில் 'ஓடினான்' என்ற வினைமுற்றுக்குச் செயப்படு பொருளாக எந்தத் தொடரும் அமையாது என்பதை முன்பகுதியில் கண்டோம். ஆனால் 'பாடினான்' போன்ற வினைமுற்றோடு செயப்படு பொருள் சேர்ந்து வரும். இவ்வாறு அமைகின்ற வாக்கியம் மூன்று வகைப்படும்.

அவை:

1. தனி வாக்கியம் (Simple sentence)
2. தொடர்வாக்கியம் (Compound sentence)
3. கலப்பு வாக்கியம் (Complex sentence)

வாக்கியம்

தனிவாக்கியம் | தொடர்வாக்கியம் | கலப்பு வாக்கியம்

1. தனி வாக்கியம்

1. கண்ணன் தூங்குகிறான்
2. பூனை எலியைத் தின்றது.

முதல் வாக்கியத்தில் ***'கண்ணன்'*** என்பது **எழுவாய்**. ***'தூங்குகிறான்'*** என்பது **பயனிலை**.

இரண்டாவது வாக்கியத்தில் ***'பூனை'*** என்பது **எழுவாய்**. ***'தின்றது'*** என்பது **பயனிலை**. ***'எலி'*** என்பது செயப்படு பொருள்.

இவ்வாறு எழுவாய் ஒன்றும் பயனிலை ஒன்றும் அமைந்து செயப்படுபொருள் வந்தோ வராமலோ அமைகின்ற வாக்கியம் **தனிவாக்கியம்** எனப்படும்.

சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நின்று வாக்கியம் அமைவதும் உண்டு. எ-டு: தண்ணீரைக் குடி

எழுவாய் (செயப்படுபொருள்) பயனிலை	தனி வாக்கியம்

2. தொடர் வாக்கியம்

1. இராமு நன்றாகப் படித்தான்; அதனால் வெற்றி பெற்றான்.
2. திருடன் பூட்டை உடைத்தான்; வீட்டிற்குள் நுழைந்தான்; பொருள்களைத் திருடிக் கொண்டிருந்தான்; அப்போது பிடிபட்டான்.

முதல் வாக்கியத்தில் ***'இராமு'*** என்ற ஒரே எழுவாய் 'படித்தான்' 'வெற்றி' பெற்றான் என்ற இரண்டு பயனிலைகளுக்கும் பொதுவாய் உள்ளதைக் காணலாம்.

அவ்வாறே இரண்டாவது வாக்கியத்தில் ***'திருடன்'*** என்ற ஒரே எழுவாய் ***'உடைத்தான்' 'நுழைந்தான்', 'திருடிக்கொண்டிருந்தான்', 'பிடிபட்டான்'*** என்ற நான்கு பயனிலைகளுக்கும் பொதுவாக அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

இவ்வாறு ஒரு வாக்கியம் ஓர் எழுவாயும் ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளையும் கொண்டு, தொடர்புடைய ஒரே கருத்தை விளக்குவது 'தொடர் வாக்கியம்' ஆகும்.

3. கலவை வாக்கியம்

1. ''தினமும் காலையில் எழுந்து படி'' என்று என்னுடைய அப்பா கூறுவார்.
2. ஆசிரியர், ''வீட்டுக்கணக்குப் போட்டுக் கொண்டு வரும்படி'' சொன்னார்.

முதல் வாக்கியத்தில் ''என்னுடைய அப்பா கூறுவார்'' என்பது **முதன்மை வாக்கியம்;** ''தினமும் காலையில் எழுந்துபடி'' என்பது **சார்பு வாக்கியம்;** ***'என்று'*** என்பது இவ்விரு வாக்கியத்தையும் இணைக்கும் சொல்.

இரண்டாவது வாக்கியத்தில் 'ஆசிரியர் சொனனார்' என்பது **முதன்மை வாக்கியம்**. இது ''வீட்டுக்கணக்குப் போட்டுவரும்படி'' என்ற **சார்பு வாக்கியத்தால்** பிரிக்கப்பட்டு ''ஆசிரியர்............. சொன்னார்'' என்று இருக்கிறது.

இவ்வாறு முதன்மை வாக்கியம் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சார்பு வாக்கியங்களுடன் கலந்து வருவது கலவை வாக்கியம் ஆகும்.

இம்மூவகை வாக்கியங்கள் தவிர,

1. உடன்பாட்டு வாக்கியம்
2. எதிர்மறை வாக்கியம்
3. வினா வாக்கியம்
4. கட்டளை வாக்கியம்
5. செய்வினை வாக்கியம்
6. செயப்பாட்டு வினை வாக்கியம்

போன்ற வாக்கியங்களும் உள்ளன.

செய்வினை வாக்கியம்

கரிகாலன் கல்லணையைக் கட்டினான்

'கட்டினான்' என்பது 'கரிகாலன்' என்ற எழுவாய் செய்த செயல் (பயனிலை) ஆகும்.

இவ்வாறு எழுவாய் செய்த வினையைப் பயனிலையாகக் கொண்டு முடியும் வாக்கியம் 'செய்வினை வாக்கியம்' எனப்படும்.

செயப்பாட்டு வினை வாக்கியம்

கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது

செய்வினை வாக்கியத்தில் **செயப்படுபொருளாக** இருந்த **'கல்லணை'** இங்கு **எழுவாயாக** உள்ளது. 'கரிகாலன்' என்பது 'ஆல்' உருபு சேர்ந்து கருத்தாவாக மாறியுள்ளது. பயனிலையில் உள்ள வினைப்பகுதி 'படு' என்னும் துணைவினை பெற்று, எழுவாய்க்குத் தகுந்தாற்போல் விகுதி பெற்று அமைகிறது.

செயப்படுபொருளின் தொழிலை உணர்த்தும் வினையைப் பயனிலை யாக்கிக் கொண்டு முடியும் வாக்கியம் **செயப்பாட்டு வினை வாக்கியம்** ஆகும்.

செய்வினை வாக்கியமும் செயப்பாட்டு வினை வாக்கியமும் ஒரே பொருள்தான் உணர்த்தும்; ஆனால் அமைப்பில் மட்டும் மாற்றம் உண்டு.

செய்வினை	எழுவாய்	செயப்படுபொருள் ஐ		பயனிலை
செயப்பாட்டுவினை	எழுவாய்	கருத்தா	ஆல்	பய... னிலை படு

செயப்பாட்டுவினை வாக்கியத்திற்கு முக்கியமாகச் செயப்படுபொருள் வேண்டும்.

உடன்பாட்டு வாக்கியம்

பால்காரர் வந்தார்

இங்கு 'வந்தார்' என்பது வினைமுற்று. இது 'வருதல்' என்னும் தொழில் நிகழ்ச்சியைத் தெரிவிக்கிறது. இவ்வாறு தொழில் நிகழ்ந்தமையை அறிவிக்கும் வாக்கியம் **உடன்பாட்டு வாக்கியம்** ஆகும்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

எதிர்மறை வாக்கியம்

பால்காரர் வரவில்லை

இவ்வாக்கியத்தில் 'வரவில்லை' என்பது வினைச்சொல். இது 'வருதல்' என்னும் தொழில் நிகழவில்லை என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு தொழில் நிகழாமையை உணர்த்துகின்ற வாக்கியம் **'எதிர்மறை வாக்கியம்'**.

உடன்பாட்டு வாக்கியம் - தொழில் நிகழ்ச்சி
எதிர்மறை வாக்கியம் - தொழில் நிகழாமை

வினா வாக்கியம்

பால்காரர் வந்தாரா? வந்தார் - ஆ

இவ்வாறு, 'வந்தார்' என்ற பயனிலையோடு, 'ஆ' என்னும் வினா உருபு சேர்வதால், இவ்வாக்கியம் வினாவாக்கியமாக மாறுகிறது.

யார் வந்தார்?

இங்கு 'பால்காரர்' என்பதற்குப் பதிலாக 'யார்' என்னும் வினாச் சொல்லை வைத்து **வினா வாக்கியம்** அமைக்கலாம்.

கட்டளை வாக்கியம்

தப்பில்லாமல் எழுது

இவ்வாக்கியம் முன் உள்ள ஒருவனைப் பார்த்துக் கட்டளை இட்டுக் கூறப்படுகிறது. இவ்வாறு ஒரு செயலைச் செய்ய, ஒருவனைப் பார்த்துக் கட்டளையிட்டுக் கூறப்படும் வாக்கியம் **கட்டளை வாக்கியம்** என்று சொல்லப்படும்.

நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்

1. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து ஒரு முழுமையான கருத்தைக் கூறுவது - வாக்கியம்.
2. வாக்கியத்தில் இன்றியமையாத உறுப்புகள் - எழுவாய், பயனிலை.
3. வாக்கியத்தில் எழுவாய் மறைந்து வருவது - தோன்றா எழுவாய்
4. தொடர்புடைய ஒரு கருத்தை விளக்கி எழுவாய் ஒன்றும் பயனிலை ஒன்றுக்கு மேற்பட்டும் அமைகின்ற வாக்கியம் - தொடர் வாக்கியம்
5. கலவை வாக்கியத்துள் - முதன்மை, சார்பு வாக்கியம் என இரண்டு வாக்கியம் அடங்கியிருக்கும்.
6. செயப்பாட்டு வினை வாக்கியத்தில் பயனிலையில் 'படு' என்ற துணைவினை சேர்க்கப்படும்; செய்வினையில் உள்ள செயப்படுபொருள் எழுவாயாக மாறும்; எழுவாயுடன் 'ஆல்' சேர்த்துக் கூறப்படும்.
7. கேள்வியாகக் கேட்கப்படும் வாக்கியம் வினா வாக்கியம்.
8. தொழில் நிகழ்ச்சி — உடன் பாட்டு வாக்கியத்திற்கு
   தொழில் நிகழாமை — எதிர் மறை வாக்கியத்திற்கு

தன் மதிப்பீடு : 6

பயிற்சி

அ. நீ எதற்குப் போனாய்?
ஆ. அவள் அவளைப் பார்க்க முடியாது.
இ. கட்டில் தச்சனால் செய்யப்பட்டது.
ஈ. நாய் பார்த்தது; கடித்து விட்டது.
உ. நீ தொலைக்காட்சி பார்.

மேலே உள்ள வாக்கியங்கள் என்னென்ன என்று கண்டுபிடித்து அவற்றின் பெயர்களை எழுதுக.

அ.

ஆ.

இ.

ஈ.

உ.

4.9 பாடத்தொகுப்புரை

எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகிய மூன்றும் பற்றி நன்றாக விளங்கிக் கொண்டோம். இவற்றிடையே திணை, பால், எண், இட அடிப்படையில் இயைபு முக்கியம். தமிழில் வரவர ஒருமை பன்மை இயைபு குழம்புகிறது. 'பறவைகள் பறக்கிறது', 'மாடுகள் மேய்கிறது' என்று அஃறிணையில் பன்மையை ஒருமையாகவே கருதி எழுதும் பழக்கம் இருக்கிறது. 'கம்பர் தன் நூலைச் சிறப்பாக எழுதியுள்ளார்' என்று எழுதாமல், 'கம்பர் தன் நூலை எழுதினார்' என்றே எழுதி விடுகின்ற பழக்கம் உளது. இவை கற்றறிந்தவர்களிடையேயும் காணப்படுகின்றன.

எழுவாய், பயனிலை காண்பது முக்கியம். 'மரங்களை வெட்டிச் சாய்க்கக் கூடாது' என்பதில் எது எழுவாய்? முன்பு காட்டியபடி 'எது கூடாது?' என்று கேட்டால் 'சாய்க்க' என்று பதில் வரும். இதில் 'சாய்த்தல்' என்ற தொழிற்பெயரே - எச்சமாகி நின்று எழுவாயாகப் பயன்படுகிறது. இத்தகைய நுட்பமான வேறுபாடுகளையும் அறியும் வண்ணம் முன்னர்க் கருத்துக்கள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இக்கால உரை நடை வளர்ச்சிக்கேற்ற, வாக்கிய அமைப்பு மாற்றங்களையும் தெரிந்து கொண்டீர்கள்.

4.10 தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

1. **நன்னூல் காண்டிகையுரை**, சொல்லதிகாரம்.
2. பரந்தாமனார் அ.கி... **'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?'**, பாரிநிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை - 600 108.
4. சண்முகதாஸ் அ., **தமிழ்மொழி இலக்கண இயல்புகள்**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.

தன் மதிப்பீடு : விடைகள்

1. ***வினாக்கள்:*** அ. விகுதி 'ஓம்' ஆகும். ஆ. மாடு அஃறிணை, வந்தார் உயர்திணை, திணை இயைபு இல்லை. இ. **அவர்** வந்தார்

   பயிற்சி: அ. ஓடின ஆ. விழுந்து விட்**டாள்** இ. நான்
   ஈ. படிக்கி**றோம்** உ. அவன் ஊ. வண்டி

2. ***வினாக்கள்:*** அ. எச்சங்கள் இரண்டு வகைப்படும்:
   பெயரெச்சம், வினையெச்சம்

   ஆ. வினைமுற்றின் விகுதி கெட்டு, வினை நிகழ்ச்சி முற்றுப் பெறாமல் நிற்பது எச்சம் எனப்படும்.

   இ. பெயரெச்ச விகுதி 'அ'

   ஈ. அழாமல் - எதிர்மறை வினையெச்சம்
   அழாத - எதிர்மறைப் பெயரெச்சம்

பயிற்சி: அ. அழுகின - பெயரெச்சம், பழம் கொண்டு முடியும் சொல்

வாங்கி - வினையெச்சம், வந்தாள் கொண்டு முடியும் சொல்

ஆ. சிரித்து - வினையெச்சம், சிரித்து கொண்டு முடியும் சொல்

சிரித்து - வினையெச்சம், வலித்தது கொண்டு முடியும் சொல்

இ. உதவா(த) - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், பேச்சு கொண்டு முடியும் சொல்

3. அ. பாடம் படித்தேன்: (பாடத்தைப் படித்தேன்)-வேற்றுமை உருபு மறைந்திருப்பது வேற்றுமைத்தொகை

ஆ. கல்லால் எறிந்தான்: உருபு விரிந்து நிற்பதால் இது வேற்றுமைத் தொகா நிலைத்தொடர்.

இ. தீ தீ : அடுக்குத்தொடர்
முருகன் வந்தான்: எழுவாய்த்தொடர்
இவை அல்வழித் தொடர்கள்

4. **வினாக்கள்:**

1. காலங்காட்டும் இடைநிலை மறைந்து நின்று, பெயருடன் முடிவது வினைத்தொகை. 2. செங்குருதி 3. உவமை உருபு மறைந்து வருவது உவமைத்தொகை 4. காய்கறி சாப்பிடு (காயும் கறியுமாகிய உணவைச் சாப்பிடு) உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 5. தொகைகள் ஆறு வகைப்படும். 6. வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை 7. பிற ஐந்து தொகைகளின் அடிப்படையில், அவற்றுக்கு மேலும் ஒரு கருத்துத் தொக்கு வருவது அன்மொழித்தொகையாகும்.

பயிற்சி:

1. அ. இரண்டு தொகைகள். ஆ. உம்மைத்தொகை, வினைத்தொகை, இ. சேரரும் சோழரும் பாண்டியரும், தங்குகிற இடம்:

ஆ.

குடிதண்ணீர் சுடுமணல் விடிகாலை	வினைத்தொகை
கரும்பலகை செங்கண்	பண்புத்தொகை
தேங்காய்த்தலை	உவமைத்தொகை
தேங்காய் பழம் பேய் பிசாசு	உம்மைத்தொகை
தொலைக்காட்சி நம்நாடு	வேற்றுமைத்தொகை
கொடி இடை (வந்தாள்) ஆயிழை (கேட்டாள்)	அன்மொழித்தொகை

5. **வினாக்கள்:**

எழுவாய் முதலில் நின்று பயனிலையுடன் முடிவது எழுவாய்த் தொடர் ஆகும். ஆ. முருகா வா, நண்பனே கேள் - இங்ஙனம் விளித்துப்

ignou THE PEOPLE'S UNIVERSITY

பயனிலையுடன் முடிவன விளித்தொடர்களாகும். இ. எச்சம் பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சத் தொடர் (வந்த பையன்) ஈ நனிபேதை – இங்ஙனம் உரிச்சொல்லுடன் தொடர்ந்து நிற்பன உரிச்சொல் தொடர்கள் எனப்படும். உ. தீ.தீ. பாம்பு பாம்பு வருக வருக - இவ்வாறு அடுக்கி வரும். ஊ. முருகனைப் பார்த்தேன் - வேற்றுமையுருபுடன் கூடிய பெயருடன் பயனிலை தொடர்ந்து வருவது வேற்றுமைத் தொடர் எனப்படும்.

6. ***பயிற்சி:***

1. வினைமுற்றுத்தொடர், *2.* விளித்தொடர், *3.* எழுவாய்த் தொடர், *4.* உரிச்சொல்தொடர், 5. வேற்றுமைத்தொடர்

6. அ. வினா வாக்கியம்

ஆ. எதிர்மறை வாக்கியம்

இ. செயப்பாட்டு வினை வாக்கியம்

ஈ. செய்வினை வாக்கியம்

உ. கட்டளை வாக்கியம்

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

பாடப்பகுதி (Unit) 5
மொழி நடைக்கூறுகள்

படிப்பு நோக்கம்

- ★ இப்பாடப்பகுதியில் மொழியை நாம் பேசவும் எழுதவும் பயன்படுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய செப்பங்கள், அழகுகள் முதலியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறோம்.
- ★ பிழைகளைத் தவிர்த்துத் திருத்தமாகப் பேசவேண்டும்; எழுத வேண்டும்; சொல்லைப் பொருள் தெரிந்து ஆளவேண்டும் – இவை இங்கு தெளிவுபடுத்தப்படவுள்ளன.
- ★ பேச்சுமொழியில் அழகான, பொருத்தமான நல்ல சொற்களைப் பெய்து பேசவேண்டும்; எழுதும்போதும் அப்படித்தான். இவை மட்டுமன்றி, எழுதும்போது கவனிக்க வேண்டிய நிறுத்தக் குறிகள், எழுதும்முறை முதலியன பற்றியும் நாம் தெரிந்திருக்க வேண்டும். இங்கு அவை வரிசையாகத் தரப்படுகின்றன.

பாடக் கருத்தலகுகள்

5.0 பாட முன்னுரை

5.1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள் முதலியன

5.1.1 மரபுத் தொடர்கள்

5.1.2 இணைமொழிகள்

5.1.3 அடைமொழிகள், உவமைகள், பழமொழிகள்

5.1.4. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், தகுதிவழக்குகள்

5.2 நடைவகை

5.2.1 விளக்கநடை

5.2.2 வினாவிடை நடை

5.2.3 வருணனை நடை

5.2.4 அடுக்குமொழிநடை

5.3 திருத்தமாக எழுதப் பழகுவது எவ்வாறு?

5.4 கலைச்சொல் துறைச்சொல் வழக்கு

5.5 சொல்லும் பொருளும்

5.5.1 சொற்பொருள் மாற்றம்

5.5.2 அகராதிகளின் பயன்

5.5.3 ஒருபொருட் பன்மொழி

5.5.4 பலபொருள் ஒருசொல்

5.6 நிறுத்தக் குறிகள்

5.7 தொடர்ச்சொற்களை எழுதும் முறை

5.8 பாடத் தொகுப்புரை

5.9 **தன்மதிப்பீடு – விடைகள்**

5.0 பாட முன்னுரை

ஒரு மொழியின் எழுத்து, சொல், வாக்கியம், அவை புணர்ந்து அல்லது இணைந்து நிற்றல் போன்ற அடிப்படைகள் முக்கியமானவை. அவற்றைப் பற்றி இதுவரை நீங்கள் தெரிந்து கொண்டு, அவற்றை எடுத்தாளும் ஆற்றலைப் பெற்றுள்ளீர்கள். இப்போது நல்ல மொழி நடையை ஆள்வது எவ்வாறு? ஒருவர் சிறந்த முறையில் எழுதப் பயன்படும் நடைக்கூறுகள் யாவை? இவற்றையும் பார்த்து, நீங்களே வாக்கியங்களில் வைத்து எழுதிப் பழகிக்கொள்ளுங்கள். சிறந்த எழுத்தாளராக, பேச்சாளராக இவை உதவும்.

5.1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள் முதலியன

தமிழில் எத்தனையோ விதமான மரபுத் தொடர்கள் உள்ளன. இணைமொழிகள் எனப்படுபவை தமிழில் புதுமையானவை. பெரும்பாலும் நாம் ஒன்றை வற்புறுத்திக் கூற, காரணம் காட்டும் முறையில் வரும் பழமொழிகளைப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

5.1.1. மரபுத்தொடர்கள்

'அகராதி பிடித்தவன்/படித்தவன்' என்ற தொடரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதற்கு என்ன பொருள்? எதையும் மிகவும் நுணுக்கமாகப் பார்ப்பவர் - என்ற பொருளில் இதைப் பயன்படுத்துகிறோம். சொற்கள் நேர்பொருள் தராமல் வேறு ஒரு குறிப்பான பொருளை இங்கு சுட்டுகின்றன. இதுபோலக் 'கம்பி நீட்டினான்', 'கயிறு திரிக்கிறான்' போன்ற தொடர்களினால் பெறும் பொருள் முற்றிலும் வேறானது. இத்தொடர்கள் தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியில் ஊறியவர்களுக்குச் சூழலை வைத்துத் தெரியும்; சொன்னாலும் புரியும். இத்தகைய தொடர்களை நாம் சுருக்கம், எளிமை, பொருள் விரிவு - இவற்றுக்காகப் பேசுகிறோம். இதனைப்போல, நம் கருத்தை மிகச்சுலபமாக மற்றவர்கள் விரும்பிச் சுவைக்கும்படி பேசவும் எழுதவும் முடியும். இத்தகைய தொடர்கள், மரபாக - பரம்பரையாக வருகின்றன. சான்றாக, கீழே சில மரபுத்தொடர்களைப் பாருங்கள்.

அரங்கேற்றுதல்	–	நூல், நடனம் முதலியவற்றை அவையில் ஏற்கச்செய்தல்
ஆழம்பார்த்தல்	–	ஒருவனுடைய அறிவு முதலியவற்றை ஆராய்தல்
இருதலைக்கொள்ளி	–	இரண்டும் கெட்டான் நிலை
ஈ ஆடவில்லை	–	முகத்தில் மிகுந்த கவலை தோன்றக்காணப்படும் நிலை
உடைப்பிற் போடுதல்	–	தூக்கி எறிதல், களைந்து விடுதல்
குடிமுழுகிப்போதல்	–	முற்றும் அழிதல்
குட்டிச்சுவர்	–	பழுது, பாழ்
பல்லைக்காட்டுதல்	–	கெஞ்சுதல்
விரல் விட்டு எண்ணக்கூடிய	–	சிறுபான்மை, அருகிய

மேலும் பல தொடர்களைக் கீழேகண்ட நூலில் பார்க்கலாம்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

1. **மரபுத்தொடர் அகரவரிசை**, சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், 1980. (இந்நூல் தமிழ்ப்பாதுகாப்பு நூற்றிரட்டு, தமிழ்ப் பாதுகாப்புக்கழகம், 1980 என்ற தொகுப்பு நூலிலும் உள்ளது).
2. **லிப்கோ தமிழ்-தமிழ் அகராதி**, லிப்கோ வெளியீடு, சென்னை, 1978.
3. **தமிழ் பயிற்றும் முறை**, ந. சுப்புரெட்டியார், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1980.
4. **நல்ல தமிழ் எழுத வேண்டுமா?** அ.கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை.
5. தி. முத்துக்கண்ணப்பர், **தமிழில் தவறுகளைத் தவிர்ப்போம்**, பாரிநிலையம், சென்னை.

உங்கள் பாடங்களில் வந்துள்ள மரபுத்தொடர்களைத் தொகுக்கவும். உங்களுக்குத் தெரிந்த மரபுத்தொடர்களையும் தொகுத்து எழுதி வைய்யுங்கள்.

5.1.2 இணைமொழிகள்

மரபுத்தொடர்களைப் போன்றவைதான் இணைமொழிகள். எடுத்துக் காட்டுகளைப் பாருங்கள்.

எதுகை மோனை - உருண்டு திரண்டு
அமளிதுமளி
அல்லும்பகலும்
சட்டதிட்டம்
வெட்ட வெளிச்சம்
கோணல் மாணல்
பிள்ளை குட்டி

பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் இவற்றை நாம் பயன் படுத்துகிறோம்.

சில வேளைப் பேச்சில் பேச்சு கீச்சு, ஓடிக்கீடி என்று எதிரொலிச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால், எழுதும்போது இதைத் தவிர்த்து விடுகிறோம்.

இத்தகைய சொற்களையும் மேலே கண்ட அகரவரிசை முதலிய நூல்களில் பார்க்கலாம்.

5.1.3 அடைமொழிகள், உவமைகள், பழமொழிகள்

அடைமொழிகள்

செஞ்ஞாயிறு செந்தாமரை
வெண்திங்கள் வெண்பட்டு

முதல் தொகுதியில் உள்ள சொற்கள் ஞாயிறு, திங்கள் இவற்றின் பண்பை விளக்குகின்றன. இரண்டாவது தொகுதியில் தாமரையின் ஒரு வகையையும், பட்டின் ஒருவகையையும் குறிக்கின்றன. இவ்வாறு அடைமொழிகளைக் கொடுத்துப் பேசுவது தமிழில் அடிக்கடி காணக் கூடியது. ஆனால், வேண்டாத இடத்தில் அடைகொடுத்துப் பேசும்போது சொற்களுக்குப் பொருள் உணர்த்தும் ஆற்றல் குறைந்து வெறும் ஒலிக் கூச்சலாக மாறிவிடும். எனவே, இவற்றைக் கவனமாகக் கையாள வேண்டும்.

மாபெரும்	மிகச்சிறந்தது	நீண்டநெடும்புருவம்
அரும்பெரும்	நனி சிறந்தது	உயர்ந்தோங்கியமரம்
தனிப்பெரும்	நனிமிகச்சிறந்தது	

இங்கு 'பெரும்' என்பதற்கு மா, அரும், தனி முதலியன அடையாக வருகின்றன. அது போன்றே சிறந்தது என்பதற்கு அடையாளமாக 'மிக', 'நனி' ஆகியவை வருகின்றன. 'நீண்ட நெடும்', 'உயர்ந்தோங்கு' என்ற ஒரே பொருள் தரும் சொற்கள் அடுக்கி வந்து மிகுதியைக் காட்டுகின்றன. இவற்றை எல்லாம் பொருள் பொருத்தம் தெரிந்தே ஆள வேண்டும்.

உவமையைப், பயன்படுத்த ஓர் எடுத்துக்காட்டு

மடியில் பணம், வழியில் கள்ளர் பயம், அடிவயிற்றில் நெருப்பு கட்டிக்கொண்டது போன்றிருந்தது அவனுக்கு.

பழமொழிகள்

உவமைகளைப் போன்றவைதான் பழமொழிகளும். பல பழமொழிகள் உவமைகளாகவும் வழங்குகின்றன.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

இக்கரைக்கு அக்கரை பச்சை.

மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

(இதை மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கின மாதிரி என உவமையாகவும் பேச்சில் பயன்படுத்துவர்)

தன் மதிப்பீடு : 1 பயிற்சி

1. கதை நூல்களைப் படித்து அவற்றில் வந்துள்ள உவமை, உருவகம் முதலியவற்றைத் திரட்டுக.
2. உங்களுக்குத் தெரிந்த உவமை, உருவகங்களை எழுதிக்காட்டுக.
3. வழக்கில் உள்ள பழமொழிகளைத் திரட்டுக. பத்து பழமொழிகளை எழுதி, அவை பயன்படும் விதத்தைக் கண்டறியுங்கள்.

பழமொழித் திரட்டுகளைக் கீழே கண்ட நூல்களில் பார்க்கலாம்.

1. லிப்கோ - தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி – பிற்சேர்க்கை
2. கழகப் பழமொழித்திரட்டு, கழக வெளியீடு.
3. தமிழ்நாட்டுப் பழமொழி அகரவரிசைச் சுருக்கம் (கழக வெளியீடு): தமிழ்ப்பாதுகாப்பு நூற்றிரட்டிலும் உள்ளது.

5.1.4 இரட்டைக்கிளவி

'கலகலவென, கடகடவென, சடசடவென' - இவற்றைப் பிரிக்க இயலாது. இஃது ஒலி முதலியவற்றைக் குறித்து வருவது.

அடுக்குத்தொடர்

வருக வருக, போபோ, தீதீதீ, வாழ்க வாழ்க வாழ்க! - இதைப் பிரித்தாலும் பொருள் தரும். இரண்டுக்கு மேலும் அடுக்கி வரும்.

5.1.5 தகுதிவழக்குகள்

ஒன்றை அதற்குரிய சொல்லால் குறிப்பிடாமல் நாகரிகம் முதலியன கருதி மாற்றிச் சொல்வது தகுதி வழக்காகும். **மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி** என்பன குறிப்பிடற்பாலன.

செத்தவர்களைக் 'காலமானார்', 'சிவலோகப் பதவி அடைந்தார்', 'வைகுந்த பதவி அடைந்தார்' என்பன மங்கல வழக்கு.

'ஒன்றுக்குப்போதல்', 'கொல்லைக்குப் போதல்' என்பன இடக்கரடக்கல். 'தண்ணி போட்டிருக்கிறான்' என்பது குழூஉக்குறி. சிறையை மாமியார் வீடு என்பது பணத்தை வெள்ளையப்பன், வைட்டமின் ப என்பனவும் குழூஉக்குறிகளே.

இவை தகுதி வழக்குகளாகும். மொழியில் பயன்படும் இத்தகைய வழக்குகளைக் கவனியுங்கள்.

5.2 நடைவகை

நாம் ஒவ்வொருவரும், எவ்வாறு – கையை, காலை வீசி நடப்பதை நடை என்கிறோமோ அதுபோல நாம் மொழியில் சொற்களைக் கையாண்டு அமைக்கும் வாக்கிய அமைப்பின் தன்மையை நடை என்கிறோம். நடை என்பது ஒவ்வொருவரின் இயல்புக்கு ஏற்ப மாறுபட்டிருக்கும். எனினும், நடையை

1. விளக்கநடை
2. வினாநடை
3. வருணனைநடை
4. அடுக்குமொழி நடை

என்றெல்லாம் வகைப்படுத்திக் காட்டலாம்.

நல்ல நடை

நல்ல நடையை நாம் எவ்வாறு எழுதப் பழகுவது? பொதுவாகச் சொன்னால் சில விதிகளை வகுத்து இதற்கு விளக்கம் காட்ட முடியாது. இருப்பினும் சில முறைகளை நாம் பின்பற்றலாம்.

முதலில், எளிய இனிய சொற்களைக் கையாண்டு சிறு வாக்கியங்களாக அமைத்துக் கொள்ளவும்; கூறுவதை முடிந்தவரை நேரடியாகக் கூற முயலவும்; நல்லநடை தானாக வந்துவிடும்.

எழுதப்புகுமுன் எழுதவேண்டிய கருத்தை நன்கு சிந்தித்து வரிசைப் படுத்திக் கொண்டு எழுத வேண்டும். நல்ல உரைநடை எழுத்தாளர்களின் நூல்களைத் திரும்பத் திரும்பப் படித்தால் நல்லநடை தானாக வரும். ஔவையார் சொல்வது போல் 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்பதை மறவாதீர்கள். சிந்திப்பதைத் திரும்பத் திரும்ப எழுதி எழுதிப் பார்க்க வேண்டும். நாள்தோறும் நாட்குறிப்பு எழுதுவது ஒரு நல்லவிதமான பயிற்சியாகும்.

நீங்கள் நாட்குறிப்பு எழுதுவதுண்டா? இதுவரை எழுதும் பழக்கம் இல்லை என்றால் அதை இன்றே தொடங்குங்கள். நாள்தோறும் ஒரு பக்கமாவது எழுதுவது என்று வைத்துக் கொள்ளுங்கள். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது உங்களுக்குத் தெரிந்த செய்திதானே!

நடை என்பது, நாம் என்ன பொருள்பற்றி எழுதுகிறோமோ அதைப் பொறுத்து மாறுபடும். யாருக்கு எழுதுகிறோமோ – அதைப் பொறுத்தும் நடை மாறுபடும். இது உங்கள் நினைவில் நிற்க வேண்டிய ஒரு செய்தி ஆகும்.

5.2.1 விளக்கநடை

ஒரு கருத்தை விளக்கிக்கூறும் நடையை விளக்க நடை எனலாம். அறிவியல் கருத்துக்கள், மற்றும் எல்லாவிதமான அறிவுத்துறை நூல்களிலும் இந்நடையை நாம் பார்க்கலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகளைப் படித்துச் சிந்தித்துப் பாருங்கள்:

(எ-டு) 1

நெல் கருவண்டு (Rice hispa: Dicladispa armigera)

''இது பயிருக்குக் 'கொக்கு நோய்' உண்டாக்குகிறது. இந்த வண்டுகள் தோகையின் பச்சைச் சத்தை அரித்து உண்பதினால் தோகைகளில் வெண்கோடுகள் காணப்படும். இப்பூச்சியின் 'கிரப்' புழுக்கள் தோகை களைச் சுரண்டி உண்பதின் மூலம் தோகைகள் பசுமையற்ற பழுப்பு நிறமாகி, வாடிச் சருகாகிவிடும். பி.எச்.சி.10 சதத் தூள் தூவி இதை அழிக்கலாம். பாரத்தியான், பெனிட்ரோத்தியான் கலந்து தெளிக்கலாம்.

(எஸ்.எஸ். நாகராஜன், **நெல்சாகுபடி,** ப.92)

(எ-டு) 2

''தமிழில் அமைந்துள்ள செய்திகளைக் கணிப்பொறியில் ஆய்வு செய்யும் பொருட்டு அவை முழுவதும் ரோமன் எழுத்துகளைக் கொண்டு ஒலி பெயர்ப்பு செய்யப்பட்டுக் கணிப்பொறிக்கு உள்ளீடாக அளிக்கப்பட்டன. தமிழ் வரி வடிவத்தின் ஒலி அமைப்பினைக் குறிப்பிடுவதற்கு ஏற்ற ரோமன் வரி வடிவங்களைக் கொண்ட ஓர் அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையைப் பயன்படுத்தி ஆங்கிலத் தட்டச்சுப் பலகையைக் கொண்டு செய்திகளைப் பதிவு செய்பவர்கள் அவற்றை ரோமன் எழுத்தில் மாற்றித் தட்டச்சு செய்கின்றனர். இவ்வாறு தட்டச்சு செய்யப்பட்ட ரோமன் வரிவடிவங்களில் அமைந்த தமிழிலான செய்திகள் கணிப்பொறியில் ஆய்வு (தெரிவு செய்தல், அகரமுதலி வரிசையாக்கல், பகுத்து வகைப்படுத்துல் முதலியன) செய்யப்படுகின்றன.

*(கா.செ. செல்லமுத்து, **'கணிப்பொறியில் மொழிகளின்... தமிழ்கலை',** மார்ச்சு, சூன் 1986, ப.17).*

5.2.2 வினாவிடை நடை

கட்டுரை ஆசிரியர் தாமே சில வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடை பகரும் நோக்கில் கட்டுரையை அமைத்துச் செல்வார். இவ்வகை நடைக்கு வினா விடை நடை என்று பெயர். தருக்க முறையிலான பாங்கு இதில் வெளிப்படும்.

மாணவர்களே நீங்கள், திரு. வி.க. அவர்களின் நூல்களைப் படித்திருப்பீர்கள் அல்லவா? அந்த நூல்களில் வினாவிடை நடையைக் கவனித்திருப்பீர்கள். இல்லையென்றால் இனி திரு.வி.கவின் நூல்கள் உங்கள் கைகளில் அகப்படும்போது முன் சொன்னதை நினைவில் கொண்டு அவர் நடையை உற்று நோக்குங்கள்.

இனி, வினாவிடை நடைக்கு ஓர் எடுத்துக்காட்டைக் காண்போம்.

''ஆன்மா என ஒன்றில்லை; உடலின் இயல்புதான் அது; உடலின் குணமே அது. அதாவது, உடல்குணி; உணர்வு குணம் என்று கூறில், குணம் பிரிந்து தனியே நின்று குணியை உணரமாட்டாது; ஆனால், ஆன்மா உடலைத் தன் உடல் என உணர்கிறது; இதிலிருந்தே ஆன்மா உடலின் குணம் அல்ல; பிறிதான ஒன்றென்பது தெளிவாகின்றதல்லவா?

வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு சேர அச்சேர்க்கையில் தோன்றும் சிவப்பு நிறம் போலப் பூதங்களின் சேர்க்கையால் உணர்வு தோன்றுமெனக் கூறும் உலகாயதர், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும் தாமாகக் கூடுவதில்லை; கூட்டுவானுளன்; அதுபோலப் பூதங்களைக் கூட்டுவானும் ஒருவன் உளன் என்பதை மறுப்பது எங்ஙனம் பொருந்தும்?''

*(கி. லக்ஷ்மணன், **இந்தியத் தத்துவ ஞானம்**, ப. 85)*

இப்போது வினாவிடை நடையைப் பற்றி நாம் தெரிந்து கொண்டோம். இனி, வருணனை நடையைப் பற்றிச் சிந்திப்போம்.

5.2.3. வருணனை நடை

ஆராய்ச்சி, அறிவியல் துறைகளைத் தவிரப் பெரும்பாலும் இலக்கிய நூல்கள் அனைத்திலும் வருணனை நடை இடம்பெற்று வரும். உவமைகளையும், உருவகங்களையும், சொல்லடுக்குகளையும் நாம் வருணனையின் உட்பிரிவில் அடக்கலாம்.

பொதுவாக 'எழுத்தோவியம்' என்று சொன்னால் அது பெரும்பாலும் வருணனையைக் குறித்து நிற்பதாகச் சொல்லலாம்;

மாணவர்களே, வருணனைப் பற்றிப் பின்வரும் எடுத்துக்காட்டைக் கவனியுங்கள்.

''அப்புலவர் பெருமான் வரும்போதே அவருடைய தோற்றம் என் கண்ணைக் கவர்ந்தது. ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதைப்போல் அவர் வந்தார். நல்ல வளர்ச்சி அடைந்த தோற்றமும், இளந்தொந்தியும், முழங்கால் வரை நீண்ட கைகளும், பரந்த நெற்றியும், பின்புறத்து தள்ள சிறிய குடுமியும், இடையில் உடுத்திருந்த தூய வெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வரென்று தோன்றச் செய்தன. ஆயினும் அவர் முகத்திலே செல்வர்களுக்குள்ள பூரிப்பு இல்லை; ஆழ்ந்த பரந்த சமுத்திரம் அலையடங்கி நிற்பது போன்ற அமைதியே தோன்றியது. கண்களில் எதையும் ஊடுருவிப் பார்க்கும் பார்வை இல்லை; அலட்சியமான பார்வையும் இல்லை; தம் முன்னே உள்ள பொருள்களில் மெல்ல மெல்லக் குளிர்ச்சியோடு செல்லும் பார்வைதான் இருந்தது''.

*(உ.வே.சாமிநாதையர், **'என் சரித்திரம்'**, ப. 159)*

5.2.4 அடுக்கு மொழிநடை

ஒரு நிகழ்ச்சியை அல்லது கருத்தை விளக்குவதற்கு அதுபோன்ற - அதோடு தொடர்புடைய செய்திகளை ஒன்றன்பின் ஒன்றாக நிரல்படுத்தி எதுகை மோனை நயம்படச் சொல்வது அடுக்குமொழி நடையாகும்.

அடுக்குமொழிக்குப் பெயர் போன பெரியவர்கள் ரா.பி. சேதுப்பிள்ளை, அறிஞர் அண்ணாதுரை ஆவர்; அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகளிலிருந்து எடுத்த ஓர் எடுத்துக்காட்டைக் கீழே பாருங்கள்:

''இயற்கை தன் அழகை வாரி வழங்குகிறது - கவனிப்பாரற்று கிடக்கிறது - எழில்மிக்க இளம் விதவையைப் போல.

நீர்வீழ்ச்சி - சித்திரச்சோலை - ஆறு உற்பத்தியாகும் இடம் மலை. உச்சி - சந்தனக்காடு - சிந்துபாடும் சிற்றாறு - பறவை இனங்களின் பாட்டு மொழி - புள்ளிமான்கள் துள்ளியோடும் காட்சி - யானைக் கன்றை அழைத்துச் செல்லும் கனவு, தேசிங்கு கோட்டை, சேர்வராயன் மலை ......''

*(**அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள்,** ப. 88)*

இவ்வாறு அமைவதே அடுக்கு மொழி நடை. பொதுவாக அடுக்கு மொழிகளை மேடைப்பேச்சுகளில் கேட்கலாம்.

அடுக்கு மொழிக்கு ஒரு சிறப்பான தன்மை உண்டு. அதாவது, கேட்பவரின் உள்ளத்தை ஈர்த்து, அவர்களையும் அவ்வாறு அடுக்குமொழி சொல்லும்படி தூண்டிவிடும்.

நடைமுறைப் பயிற்சி

1. திரு. வி.க.வின் 'முருகன் அல்லது அழகு' என்ற நூலிலிருந்து வினாவிடையில் அமைந்த ஒரு பத்தியை எழுதிக்கொள்க.
2. நீங்கள் சொந்தமாக ஒரு மரத்தைப் பற்றிய வருணனையை எழுதுக.
3. ஓர் அழகிய சொற்பொழிவாளரின் அடுக்குமொழிகளைத் திரும்பச் சொல்லிப்பாருங்கள்.

5.3 திருத்தமாக எழுதப் பழகுவது எவ்வாறு?

நாம் மொழியைக் கையாளும்போது, சொல்லும் தொடரும் திருத்தமாய் அமைய வேண்டும்; அப்போதுதான் அதில் அழகிருக்கும்; நம் கருத்தையும் பிறர் ஏற்றுக்கொள்வார்கள். இந்தப் பகுதியில் நாம் தவிர்க்க வேண்டிய சில பிழைகளைப் பற்றிப் பார்க்கலாம்.

பெரும்பாலும் கொச்சை வடிவங்களைத் தவிர்க்க வேண்டும்; இயன்றவரை எல்லோருக்கும் தெரிந்த நல்ல இனிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

3. ஒவ்வொரு

'ஒவ்வொரு மரமும் உயரமாய் இருக்கிறது!' ஒவ்வொரு என்ற சொல்லைத் தொடர்ந்து ஒருமைச் சொல்தான் வரவேண்டும்.

'ஒவ்வொரு வீடுகளிலும்' என்று எழுதுவது பிழை 'ஒவ்வொரு வீட்டிலும்' என்று எழுதவேண்டும்.

2. பல பெயரெச்சங்கள் வரும்போது காலப்பொருத்தம் வேண்டும்.

நாய் குலைக்கிற வீட்டில் திருட்டுப்போனது - பிழை

நாய் குலைத்த வீட்டில் திருட்டுப்போனது - சரி

3. பெயரெச்சங்களுக்கு இடையே இடைப் பிறழாமல் எழுதுவது நல்லது

'காலொடிந்த தாத்தாவின் நாற்காலி'

என்று எழுதுவது நாம் நினைக்காத பொருளைத் தந்து விடும்; எனவே, நேர் பொருளைத் தரும்படியாக,

'தாத்தாவின் காலொடிந்த நாற்காலி'

என்று எழுத வேண்டும்.

4. இடையில் சொற்களை விடுவதால் ஐயப்பாடுகள் ஏற்படுகின்றன

''மகாகவியின் தாயார் இளமையிலேயே இறந்து போனார்''

இங்கு, 'மகாகவியின் தாயார், மகாகவியின் இளமையிலேயே இறந்து போனார்' என்றோ, மகாகவியின் இளமைப்பருவத்திலேயே அவர் தாயார் இறந்து போனார் என்றோ தெளிவாக மாற்றி எழுத வேண்டும்.

5. உடைப்பதா, ஒடிப்பதா?

சண்டையில் பெண்ணின் கையை உடைத்ததாகப் புகார் - பிழை

சண்டையில் பெண்ணின் கையை ஒடித்ததாகப் புகார் - சரி

6. செருப்பு ஒன்றா? இரண்டா?

'குழந்தைக்குக் காலில் அணியச் செருப்புகள் வேண்டும்' என்று எழுதுவதைவிட,

'குழந்தைக்குக் காலில் அணியச் செருப்பு வேண்டும்' என்று எழுதுவது சரியாக அமையும்.

7. **கண் தெரியாத குருடன்** - என்று சிலர் பேசுவதையும் எழுதுவதையும் கேட்டிருப்பீர்கள். இங்கு கண் தெரியும் குருடன் உண்டா என்ற வினா தோன்றுகிறது. குருடன் என்றாலே கண்தெரியாதவன்தானே! 'கண் தெரியாத' என்ற அடைமொழி இங்குத் தேவையில்லை அல்லவா?

8. சில வேளைகளின் பத்திரிகைகளிலும், பிற இடங்களிலும், செயப்பாட்டு வினை அமைப்பைப் பயன்படுத்துவது நடை அழகைக் குறைப்பதாக அமைகிறது.

'படகு கவிழ்ந்து நூறு பேர் கொல்லப்பட்டனர்'

'ரயில் விபத்தில் ஐம்பது பேர் கொல்லப்பட்டனர்'

ஆங்கிலத்தை மொழி பெயர்க்கும் போது, தவறாக, வாக்கியங்களைச் செயப்பாட்டு வினையாக, மொழிப்பெயர்ப்பதால் வருகின்ற கோளாறுகள் இவை. கொல்வதற்காகவே கவிழ்ந்தது போன்ற கருத்துத் தோன்றவில்லையா? இவற்றை

'படகு கவிழ்ந்து நூறு பேர் செத்தனர்/மாண்டனர்/மரணமடைந்தனர்' என்றும்

'ரயில் விபத்தில் ஐம்பது பேர் செத்தனர்/மாண்டனர்/மரணமடைந்தனர்' என்றும் நேரடியாக எழுதலாம்.

இதுபோல் திருத்தமாகச் செவ்விய முறையில் எழுதும் பழக்கங்களைக் கற்க வேண்டும்.

பிழை-திருத்தம் பற்றித் தெளிவுக்குப் பார்க்க வேண்டிய நூல்கள்

1. **தமிழ்ச்சொற்களைப் பிழைநீக்கி எழுதுமுறை,** கழக வெளியீடு, 1981, இது **தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு** என்ற நூலிலும் உள்ளது.
2. லிப்கோ - தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி (1978) பிற்சேர்க்கை.

5.4 கலைச்சொல், துறைச்சொல் வழக்கு

நாம் வழக்கில் பொதுப்பொருளில் பயன்படுத்தும் சொற்கள் சில குறிப்பிட்ட பொருளைப் பற்றிப் பேசும்போது வேறு பொருள்படுவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.

உயிர் என்பது மனிதன் விலங்கு முதலியவற்றைக் குறிக்கும். உயிர் என்ற இலக்கணத்தில் வரும்போது உயிர் எழுத்துக்களைக் குறிக்கும். ஒரு துறைக்குரியதாகையால் இதைத் துறைச்சொல் என்றும் சுட்டலாம்.

'தேள்' என்பது ஒரு நச்சு உயிர் - இது பொது வழக்கு. சோதிடர்கள் தேள் என்பதை 'விருச்சிக ராசி' என்ற பொருளில் பயன்படுத்துவார்கள். அதுபோன்றே 'முல்லை' என்றால் 'பூ' என்பது பொதுப்பொருள். ஆனால், பழைய இலக்கணத்தில் முல்லை என்பது நிலத்தையும், தலைவி தலைவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அந்நிலத்திற்குரிய ஒழுக்கத்தையும் குறிக்கும். இவ்வாறு வரையறுத்த பொருளில் வழங்கும் சொற்களைத்தான் நாம் கலைச்சொல் என்கிறோம்.

'தொகுதி' என்றால் 'தொகுப்பு' என்று பொருள். 'சட்டப்பேரவைத் தொகுதி' என்னும் போது ஒரு குறிப்பிட்ட தேர்தல் களத்தைக் குறிக்கிறது.

இன்று வளர்ந்து வரும் பல அறிவுத்துறைகளிலும் இத்தகைய கலைச் சொற்கள் பெருகி வருவதை நீங்கள் அறிவீர்கள். மொழியில் வழங்கும் பொதுச்சொல் ஒரு துறையைச் சார்ந்து வழங்கும் போது சிறப்புப் பொருளில் வழங்குகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட துறையைப் பற்றிப் பேசும்போது அதற்கென்றுள்ள கலைச்சொற்களின் தன்மையை நாம் உணர்ந்திருக்க வேண்டும். இத்தகைய சொற்களை நீங்கள் பொருளறிந்து பயன்படுத்தத் தெரிந்து கொள்ளுங்கள். இங்கு அத்தகைய கலைச்சொற்களைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளலாம்.

அரசியல்

நாடாளுமன்றம், குடியரசு, செயலர்.

இயற்பியல்

குவியாடி, குழியாடி, மின்கலம், காந்தம்

வணிகவியல்

முதலீடு, ஐந்தொகை, சந்தை, கொள்முதல், பற்று, வரவு, ரொக்கம்

உடலியல்

தமனி, பித்தப்பை, சிறுநீரகம், நுரையீரல், கல்லீரல்

இவற்றைப் பற்றிப் பழகிக்கொள்ளவும், நினைவுப்படுத்திக்கொள்ளவும் முயலுங்கள். உங்களுக்குத் தெரிந்த சில கலைச்சொற்களை வகைபிரித்து அட்டவணைப்படுத்துங்கள். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள 9, 10ஆம் வகுப்புத் தமிழ் இலக்கண நூல்களையும், பிற கலைச்சொல் அகராதிகளையும் பாருங்கள்.

5.5 சொல்லும் பொருளும்

ஒரு மொழியைச் செம்மையாகக் கையாள வேண்டுமென்றால் மொழியிலுள்ள சொற்களையும் அவற்றின் பொருளையும் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

5.5.1 சொற்பொருள் மாற்றம்

தாய்மொழி பேசுபவர்களுக்கு அம்மொழியிலுள்ள அடிப்படையான சொற்களும் பொருளும் தெரியும். ஆனால் எழுத்து மொழியிலும் மேடைப்பேச்சுகளிலும் இலக்கியப் பாங்கான நடையிலும் நாம் நாள்தோறும் பயன்படுத்தாத சொற்கள் வழங்கி வருவது உண்டு.

பொன்மலர் நாற்றம் உடையது போல - என்ற பழமொழியை நாம் கேட்டிருப்போம். இங்கு நாற்றம் என்பது, ‘கெட்ட மணம்’ என்ற இக்காலப் பொருளிலா வழங்குகிறது? பொதுவாக ‘மணம்’, ‘நல்ல மணம்’ என்ற பொருளில் அல்லவா வழங்குகிறது?

‘மணிமேகலை மலர்வனம் புக்காள்’ என்ற வாக்கியத்தில் புக்காள் - புகுந்தாள் என்ற பொருளில் வழங்குகிறது. இந்தச்சொல் இன்று வழக்கில் இல்லை.

மழையில் நனைந்து அவனுக்குத் தடுமல் - இவ்வாக்கியத்திலுள்ள தடுமல் என்ற சொல்லுக்கு வடதமிழ் நாட்டிலுள்ளவர்களுக்குப் பொருள் புரியாது. இதற்குச் ‘சளி’ என்று அவர்கள் கூறுவார்கள்.

எனவே, மேலே கண்ட சொற்களுக்குப் பொருளை எவ்வாறு தெரிந்து கொள்வது? ‘உடனே அகராதியைப் புரட்ட வேண்டியதுதான்!’ என்று விடை கூறுவீர்கள். ஆமாம்! தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு எல்லாச் சொற்களுக்கும் பொருள் தெரிந்திருக்கும் என்று கொள்ள முடியாது என்பது தெளிவாகிறதல்லவா? எனவே, நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது தமிழை நல்ல முறையில் கற்பதற்கு அகராதி ஒன்றைத் தேடிக்கொள்வதாகும். உங்கள் கையில் தமிழ் அகராதி ஒன்று இருந்தால், தமிழைக் கற்பது எளிதாகும்.

5.5.2 அகராதிகளின் பயன்

அகராதி கையிலிருந்தால்,

1. சொல்லுக்குப் பொருள் தெரிந்து கொள்ளலாம்.
2. சொல்லின் எழுத்தில் ஏதாவது ஐயமிருந்தால் அகற்றிக் கொள்ளலாம்.
3. இன்னும் தொடர்புடைய செய்திகள் பலவற்றையும் தெரிந்து அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

எனவே, இன்றே தமிழ் அகராதி ஒன்றை எப்படியாவது தேடிவைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது கடைகளில் கிடைக்கக்கூடிய அகராதிகள் சிலவற்றின் விவரங்களைத் தருகிறோம்; தவறாமல் வாங்கிக் கொள்ளுங்கள்; பயன்படுத்தவும் பழகிக் கொள்ளுங்கள்.

1. **லிப்கோ தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி**, லிப்கோ, சென்னை, 1978. விலை 13.00, பக். 672 - 84
2. **தமிழ் மொழி அகராதி** (கதிரைவேற் பிள்ளை) (தமிழ்-தமிழ்) ஏசியன் எடுகேஷனல் சர்வீஸ், புதுதில்லி, 1981, விலை ரூ. 100, பக். 1336 - 368
3. **கழகத் தமிழ் அகராதி**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969, பக். 881.

முற்காலத்தில் அகராதிகள் வருவதற்கு முன் நிகண்டுகள் என்பவை வழக்கில் இருந்தன. இவற்றை மாணவர் இளம்பருவத்திலேயே மனப்பாடம் செய்து கொள்வர். இவ்வாறே மாணவர்கள் சொற்களின் பொருளை அன்று அறிந்து கொண்டனர். ஆனால், இன்று அவ்வளவு முயற்சி வேண்டாம். அகராதியை எடுத்துப் புரட்டினால் சொல்லுக்குப் பொருள் உடனே வெட்ட வெளிச்சம் ஆகிவிடும். இஃது எவ்வளவு எளிதானது, பார்த்தீர்களா?

உங்களுக்குத் தமிழ் அகராதியில் சொற்களைக் கண்டுபிடிக்கத் தெரியுமா? மீண்டும் தமிழ் எழுத்துக்களின் அகர வரிசையை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

சொல்லும் பொருளும் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஓரிரு செய்திகள் உள்ளன: அவற்றைப் பார்ப்போம்.

5.5.3 ஒருபொருட் பன்மொழி

ஒரே பொருள் தரும் பல சொற்களை இவ்வாறு அழைக்கின்றோம். ஆங்கிலத்தில் Synonyms என்றும் வடமொழியில் பரியாயம் என்றும் கூறுவர்.

மகன்
மதலை
புத்திரன்
பிள்ளை
தனையன்

மேலே கண்ட பெயர்ச்சொற்கள் எல்லாம் ஒரே பொருளை உணர்த்துகின்றன. இவற்றையே நாம் ஒருபொருட் பன்மொழி என்கிறோம்.

5.5.4 பல பொருள் ஒரு சொல்

ஒரு பொருள் பன்மொழி போன்று, இன்னொருவகைச் சொல் **பலபொருள் ஒரு சொல்**. அதாவது ஒரு சொல் பல பொருளில் வழங்குவது - பலபொருள் ஒரு சொல் ஆகும். இதனை 'நானார்த்தபதம்' என்று வடமொழியிலும் 'homonyms' என்று ஆங்கிலத்திலும் வழங்குவர். கலை - கலைகள், கலைமான், கலைந்து போ எனப் பல பொருள் தரக் காணலாம்.

மாலை - 1. பூமாலை
2. சாயுங்காலம்

சுட்டான் - 1. தீயினால் வேகவைத்தல்
2. துப்பாக்கியால் வேட்டு எழுப்புதல்

தன் மதிப்பீடு : 2

வினாக்கள்

1. அகராதியின் பயன்கள் யாவை?
2. ஒருபொருட் பன்மொழி, பல பொருள் ஒரு சொல்-விளக்குக.

பயிற்சி

கீழே கண்ட சொற்களுக்கு அகராதியில் பொருள் பார்த்து எழுதுக.

மாசு, குறுகு, மறுகு, வரை, மல்கு.

5.6 நிறுத்தக்குறிகள்

அதோ நிற்பது யார்?

அந்தோ என்ன கொடுமை!

பொன்னும், வெள்ளியும் விலை உயர்ந்த உலோகங்கள்.

இந்த வாக்கியங்களைக் கவனியுங்கள். இதில் வெவ்வேறு விதமான கருத்துக்களை உணர்த்துவதற்கு, வெவ்வேறு விதமான குறிகள் பயன் படுத்தப்பட்டிருப்பதை நோக்குங்கள்.

முதல் வாக்கியம் கேள்வியாக அமைகிறது. இதை உணர்த்த ? என்ற வினாக்குறியைப் பயன்படுத்துகிறோம். இரண்டாவதில் உணர்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது. இதைக்குறிப்பிட ! என்ற உணர்ச்சிக்குறி பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவதில் பொருள் முற்றுப்பெற்று வந்ததைக் குறிக்க (.) என்று குறி (முற்றுப்புள்ளி) பயன்படுத்தப்படுகிறது. இடையில் காற்புள்ளி (,) இடம் பெறுகிறது.

பேச்சு மொழியில் சூழ்நிலைக்கேற்ப அழுத்தம் கொடுத்தும், நிறுத்த வேண்டிய இடத்தில் தேவைக்கேற்ப நிறுத்தியும் பேசுகிறோம். ஆனால் மொழியை எழுதும்போது அந்த வேறுபாடுகளை எவ்வாறு காட்டுவது? அதற்காகவே நிறுத்தக் குறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, ''மொழியைச் சரியாகப் படிப்பதற்கும், தவறில்லாமல் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்துகின்ற குறிகளுக்கு நிறுத்தக்குறிகள் என்று பெயர்''.

இனி, இந்த நிறுத்தக் குறிகளின் வகைகளையும் வாக்கியங்களில் அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் இப்பகுதியில் காண்போம்.

நிறுத்தக் குறிகளின் வகைகள்

நிறுத்தக்குறிகள் பல வகைப்படும். அவற்றைப் பின்வருமாறு காண்போம்.

1. முற்றுப்புள்ளி
2. முக்காற்புள்ளி
3. அரைப்புள்ளி
4. காற்புள்ளி
5. வினாக்குறி
6. உணர்ச்சிக்குறி
7. மேற்கோட்குறி (ஒற்றை மேற்கோட்குறி, இரட்டை மேற்கோட்குறி)
8. அடைப்புக்குறி (பிறைக்குறி, சதுர அடைப்பு)
9. இடைப்பிறவைப்புக்குறி (தொடர் புள்ளிகள், விடுகோடு)

என்பனவாகும். இவற்றை இனி விளக்கமாகக் காண்போம்.

1. முற்றுப்புள்ளி (.)

இராமன் பள்ளிக்குச் சென்றான்.

இவ்வாக்கியம் முடிந்த அல்லது முற்றுப்பெற்ற பொருளைத் தருகிறது. எனவே, வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இடம்பெறுகிறது.

இவ்வாறு முடிந்த பொருளை உணர்த்தும் நிலையிலுள்ள வாக்கியங்கள் இறுதியில் ஒரு புள்ளியைப் பெற்றிருக்கும். இந்தப் புள்ளிக்கு முற்றுப்புள்ளி என்று பெயர்.

இனி, சுருக்கப் பெயர்களின் இடையிலும் புள்ளி இடம் பெற்று வரும்.

தமிழரசன் எம்.ஏ.
அருளரசன் பி.ஏ.
மு.வ.
திரு. வி.க.

இவை முற்றுப்பெற்ற பொருள்களை உணர்த்துவன அல்ல; சுருக்கப்பட்ட வடிவங்களைக் குறிக்கின்றன என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஊர்ப்பெயர்கள் முதலியவற்றைச் சுருக்கி எழுதும்போதும் புள்ளி வைத்துக் காட்ட வேண்டும்.

(எ-டு) க.கு. மாவட்டம் (கன்னியாகுமரி மாவட்டம்)
பாளை (பாளையங்கோட்டை)

2. முக்காற்புள்ளி (:)

நான்கு திசைகளாவன: கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

இவ்வாக்கியத்தில் 'திசைகளாவன' என்பதன் பின் (:) என்ற ஒரு குறி இடப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு வாக்கியத்தின் செய்திகள் இனிமேல் தெரிவிக்க வேண்டிய இடத்து முக்காற்புள்ளி பயன்படுத்தப்படும்.

3. அரைப்புள்ளி (;)

முருகன் காலையில் எழுந்தான்; பாடம் படித்தான்; பள்ளிக்குச் சென்றான்.

இவ்வாக்கியத்தில் 'முருகன்' என்னும் சொல் எழுந்தான்; படித்தான்; சென்றான் என்று பல பயனிலைகளைப் பெற்றிருப்பதைக் காண்கிறீர்கள். இவ்வாறு ஓர் எழுவாயைத் தொடர்ந்து பல பயனிலைகள் வருமாயின், அவ்விடத்து அரைப்புள்ளி இடம்பெற்று வரும்.

4. காற்புள்ளி (,)

மாலா, இங்கே வா.

இவ்வாக்கியத்தில் பெயருக்குப்பின் (,) என்ற ஒருவித குறி இடம் பெற்றுள்ளது.

செடிகளும், கொடிகளும் பூத்தன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலம் ஐந்து வகைப்படும்.

இவ்வாக்கியங்களின் இடையில் (,) என்ற ஒரு குறி இடம் பெற்றிருப்பதைக் கவனித்திருப்பீர்கள்.

இவ்வாறு, கூப்பிடப்படும் பெயருக்குப்பின்பும், பல பெயர்ச்சொற்கள் முதலியன வரிசையாக வருமிடத்தும் பயன்படுத்தப்படும் குறிக்குக் (,) காற்புள்ளி என்று பெயர்.

5. வினாக்குறி (?)

எங்கே போனாய்?

உன் பெயர் என்ன?

இவ்வாக்கியங்களைத் திரும்பப் படியுங்கள். அவற்றின் இறுதியில் ஏதோ தலைகவிழ்ந்த வடிவில் ஒரு குறி இடம் பெற்றிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். அதுபோல அவ்வாக்கியங்கள் உணர்த்துகின்ற பொருளையும் கவனித்திருப்பீர்கள்.

இவ்வாக்கியங்கள் பிறரிடமிருந்து இன்னொன்றைத் தெரிந்து கொள்ளும் முறையில் அமைந்துள்ளன. இவ்வாறு நிற்கும் வாக்கியங்கள் வினா வாக்கியங்கள் என்றும், அவற்றை அடுத்து இடம் பெற்று வரும் குறி வினாக்குறி என்றும் (?) அழைக்கப்படும்.

6. உணர்ச்சிக்குறி (!)

ஐயோ! அவன் எங்கே?

அந்தோ! இஃது என்ன புதுமை!

ஆகா! எவ்வளவு இனிமை!

இந்த வாக்கியங்களை நிறுத்தி ஒருமுறை கூடப் படியுங்கள். இப்போது ஏதோ ஒன்று மனத்தைத் தொட்டது போன்ற பொருளை உணர்கிறீர்கள் அல்லவா? இந்த வாக்கியங்களினூடே இடம் பெற்றுள்ள குறியைக் கவனித்தீர்களா?

இவ்வாறு வாக்கியங்கள் இழப்பு, மகிழ்ச்சி முதலிய பொருள்களை உணர்த்துமானால் அவற்றின்பின் உணர்ச்சிக்குறி (ஆச்சரியக்குறி) இடம் பெற்று வரும். இவ்வுணர்ச்சிக்குறி (!) என்ற வடிவைப் பெற்றிருக்கும்.

7. மேற்கோட்குறி

'பூ' என்பது ஒரு பொருளின் பெயர்

'கை' என்பது சினை ஆகும்.

'கற்க கசடற' என்று வள்ளுவர் கூறினார்.

''மாணவர்களே, 'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி சொன்னது உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா?'' என்று ஆசிரியர் கூறினார்.

இவ்வாக்கியங்களைக் கவனித்தீர்களா? அவற்றில் '' '' ' ' என்ற குறிகள் இடம் பெற்று வருகின்றன அல்லவா?

இவ்வாறு, எழுத்தோ சொல்லோ தன்னைச் சுட்டும்போது (' ') என்ற குறி பயன்படுத்தப்படுகிறது. இது **ஒற்றை மேற்கோட்குறி** எனப்படும்.

(எ-டு) 'தீ' என்பது ஓரெழுத்து ஒரு மொழி.

முன்னோர் ஒருவரின் கருத்தைச் சுட்டும் போது ('' '') என்ற குறி பயன்படுத்தப்படும். இந்தக்குறி **இரட்டை மேற்கோட்குறி** எனப்படும்.

(எ-டு) ''அடக்கம் ஆயிரம் பொன் தரும்'' என்பது ஆன்றோர் வாக்கு. இரண்டும் வருமிடங்களில் ஒற்றை மேற்கோட்குறி உட்பகுதியிலும் இரட்டை மேற்கோட்குறி வெளியிலும் இடம்பெறும்.

8. அடைப்புக்குறி ( )

பூக்களில் அல்லி மிகவும் மணமானது.

மின்னொளி மிகவும் அழகானது. (இரவில்)

இவ்வாறு மொழிப்பெயர்ப்பு, ஒன்றை நிலைநாட்டிச் சொல்லுதல், ஒன்றை விலக்கிச் சொல்லுதல், முதலிய இடங்களில் அடைப்புக்குறி பயன்படுத்தப்படும். இவ்விடங்களில் 'பிறைகோட்டு அடைப்புக்குறி' ( ) பயன்படுத்தப்படுகிறது.

சதுர அடைப்புக்குறி என்ற ஒரு வகை அடைப்புக்குறியும் [ ] உண்டு.

(எ-டு) பாரதியும் வள்ளத்தோளும் [ஒப்பியல் பார்வை] என்பது பி.எச்.டி. பட்ட ஆய்வேடாகும்.

இவ்வாறு இரு வகையில் பயன்படுத்தப்படுகின்ற அடைப்புக் குறிகளைக் கொண்ட வாக்கியங்களை உமது குறிப்பேட்டில் எழுதி வைக்கவும்.

தற்காலத்தில் கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் பயன்படுத்துகின்ற இவ்வகை அடைப்புக்குறியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா?

9. இடைப்பிற வைப்புக்குறி

இடைப்பிற வைப்புக்குறி என்ற உடனே உங்களுக்கு ஏதோ தடுமாற்றம் தோன்றுகிறதோ? அது நீங்கள் எதையும்கடினமாய் எண்ணும் விளைவால் ஏற்படுத்துவதாகும்.

ஆனால் இந்தப் பெயரை ஒரு நகைச்சுவைக் கூற்றாகவும் வைத்துக் கொள்ளலாம் அல்லவா? அவ்வாறு வைத்துப் பாருங்கள். அது இப்பிறவியில் மறக்கவே மறக்காது.

இந்த 'இடைப்பிற வைப்புக்குறி'யில் இரு வகைகள் உண்டு.

1. தொடர்புள்ளிகள்
2. விடுகோடு

என் நண்பன் இப்போது இருந்தால்......

இவ்வாக்கியத்தில், ஏதோ எச்சப்பொருள் புலப்படுகிறது. எனவே, இவ்விடத்தில் .... இவ்வகைக்குறி இடம் பெற்று வரும்.

சொல்லோ தொடரோ முற்றுப் பெறாத போதும் இதைக் கையாளலாம்.

(எ-டு) ''அன்பும் அறனும் .....''

இவ்வாறு வருவது **தொடர்புள்ளிகள்** எனப்படும். பொதுவாக மூன்று புள்ளிகள் இட்டு எஞ்சி நிற்பதைச் சுட்டுவது மரபு.

வாக்கியங்களில் தொடர்ச்சியாக வித்தியாசமான பொருள்களை அமைக்கும் போது விடுகோடு (-) இடம் பெற்று வரும்.

(எ-டு) ''நேரு குழந்தைகளின் நண்பர் - நம் பிரதமர் - இந்த நாட்டின், ஏன்- இந்த உலகத்துக்குக்கூட தலைவர் என்று சொன்னால், அவரைத் தவிர வேறு யாருளர்?''

இந்த வாக்கியத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தன் மதிப்பீடு : 3

பயிற்சி

பின்வரும் பகுதியைப் படித்து, தேவையான நிறுத்தக் குறிகளை அமைத்து வாக்கியத்தைச் சரிப்படுத்திக் கொள்க.

1. ஐயகோ இது என்ன கொடுமையிலும் கொடுமை இதைக்கேட்க யாருக்கும் வாயில்லையா பார்க்கக் கண் இல்லையா நடுவீதியில் இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்தால்...இம் யார் தான் சகிப்பார்களோ.
2. மணம் என்றால் என்ன மணம் என்ற சொல்லுக்கு வாசனை என்று பொருளானால் திருமணம் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன மணம் என்ற சொல் திரு என்ற அடை எடுத்து வருவதுதானே திருமணம்

5.7 தொடர்ச்சொற்களை எழுதும் முறை

சொற்களைப் பிரித்து எழுதுதலும் சேர்த்து எழுதுதலும் பின்வரும் தொடர்களைக் கவனியுங்கள்.

பெருங்குடி வணிகன்
பெருங் குடிவணிகன்

பிராமணர்கள் சாப்பிடும் இடம்
பிராமணர் கள்சாப்பிடும் இடம்

குடிமக்கள் காப்பியம்
குடி மக்கள்காப்பியம்

உத்தர சாமிமலை
உத்தரசாமி மலை

இத்தொடர்களில் பொருள் மாறுபாடு தோன்றுகிறதல்லவா? அதற்குரிய காரணம் என்ன? சொற்களைச் சரியாகப் பிரித்து எழுதாமையாலும் தேவை யற்ற இடங்களில் பிரித்து எழுதினமையாலும் ஏற்பட்ட விளைவாகும்.

பொதுவாக அனைவராலும் விரும்பப்படுவது தெளிவான மொழி நடையாகும். எனவே, சொற்களைப் பிரிக்க வேண்டிய இடத்தில் பிரித்தும் சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்தும் எழுத வேண்டும்.

'உத்தர சாமிமலை' என்பது ஓர் இடத்தின் பெயர். இதை 'உத்தரசாமி மலை' என்று எழுதினால் 'உத்தரசாமி' என்பது ஒரு நபரைக் குறிப்பதாகின்றது.

'அறிவில் லாதவன்' என்று இத்தொடரைப் பிரித்து எழுதினால் 'அறிவில் ஆதவன்' என அமைந்து அறிவு மிக்கவன் என்ற பொருளைத் தருகின்றது. அறி வில்லாதவன் என்று பிரித்தால் பொருள் தெரியும் உங்களுக்கு.

கவனிக்க வேண்டியன

தொகைச் சொற்கள் ஒரு சொல்லாகும் தன்மை உடையன. எனவே பிரித்து எழுதக்கூடாது.

(எ-டு) ஊறுகாய், பவளக்கொடி

வேற்றுமை உருபுகளைப் பிரித்து இடம் விட்டு எழுதக்கூடாது.

(எடு) வேலனுடன், வேலனது.

இடைச்சொற்கள், துணைவினை, உடம்படுமெய் ஆகியவை சேர்த்து எழுதப்பட வேண்டும்.

(எ-டு) விழாவையொட்டி, பார்த்துக்கொள், வரவில்லை.

பயிற்சி

வேறுபாடுகளைக் குறிப்பிடுங்கள்

பழங்கள் விற்கப்படும்
பழம் கள் விற்கப்படும்
எழுந்திருந்தான்
எழுந்து இருந்தான்
அப்பாவி
அப் பாவி

வீ. இராசமாணிக்கம், **எப்படி எழுதுவது?** (தேன் தமிழ்ப்பதிப்பகம், சுப்ரமணியம் பிள்ளைத்தெரு, சேலம்-1) என்ற நூலைப் படியுங்கள்.

5.8 தொகுப்புரை

இந்தப் பாடப்பகுதியில் தமிழ்மொழியைத் திருத்தமாகவும் செப்பமாகவும் அழகுடனும் கையாள்வதற்குத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளைப் பார்த்தோம். தவறுகளைத் தவிர்க்க உதவுவனவற்றையும் அறிந்தோம். அவற்றை மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்வோம்:

முதற்பகுதியில் நாம் மொழியில் பயன்படுத்தும் மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள் முதலியவற்றைப் பற்றிச் சில செய்திகளைக் குறிப்பிட்டோம்.

இரண்டாம் பகுதியில் உரைநடையில் காணப்படும் அடிப்படையான நடை வகைகள் சிலவற்றை எடுத்துக்காட்டுகளுடன் பார்த்தோம்.

மூன்றாம் பகுதியில் அடிப்படையான சில பிழைகளை மட்டுமே எடுத்துக் காட்டினோம். ஆனால் பிழைகளோ எண்ணற்றவை. அவற்றை எடுத்து விளக்கினால் முடிவே இல்லை. பிழைகளைத் தவிர்ப்பதற்குத் திருத்தமானது - பிழையற்றது எது என்ற வரையறையுடன் தெரிந்து கொண்டு அதைப் பின்பற்றினால் போதும்.

நான்காம் பகுதியில் கலைச்சொல் துறைச்சொல் வழக்கு பற்றிக் குறிப்பிட்டோம். இன்று எல்லாத் துறைகளிலும் இதன் ஆட்சியை நீங்கள் அறிவீர்கள். இதையும் கற்றறிந்து பயன்படுத்தும் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

ஐந்தாம் பகுதி சொற்களின் பொருளை நன்கு தெரிந்து கொள்ளச் சொற்பொருள் வகையை விளக்கி அகராதிகளைப் பயன்படுத்துவதின் தேவையை வலியுறுத்துகிறது.

ஆறாம் பகுதியும் ஏழாம் பகுதியும் எழுதும்போது பின்பற்ற வேண்டிய நிறுத்தக்குறிகள், எழுதும் முறைகள் முதலியவற்றை விளக்குகின்றன.

செய்திகளை முழுமையாகத் தருவது நம் நோக்கமன்று. அவற்றையும் அவற்றின் வகையையும் சுட்டிக்காட்டி வகைப்படுத்துவதே இங்கு நம் நோக்கம், இவற்றைக் கற்று இவைபோல் வருவனவற்றை நன்கு அறிந்து விலக்க வேண்டியவற்றை விலக்கிப் போற்ற வேண்டியதைப் போற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் இவற்றைக் கவனத்தோடு நூல்களில் கண்டு அவற்றைக் கையாளவும் பயிற்சிகள் செய்து பாருங்கள். பாடப் பகுதியிலுள்ள பயிற்சிகள் மட்டும் போதா. அவற்றை ஒத்த பயிற்சிகளை நீங்களே உருவாக்கிச் செய்து பார்க்கலாம் அல்லவா?

செய்முறைப் பயிற்சி

ஏதேனும் ஒரு பொருள் பற்றி மூன்றுபக்க அளவில் ஒரு சிறு கட்டுரை எழுதிப்பாருங்கள். இயற்கையழகு, கடற்கரை, குண்டூசியின் பயன், கோபுரத்தின் சிற்பத்திறன், நட்பு, சுற்றுப்புறத் தூய்மை, மரம் நடுவிழா என ஏதேனும் ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு எழுதுங்கள்.

ஒரு பக்கம், அரைப்பக்கத்தில் நிகழ்ச்சிக் குறிப்பு, நகைச்சுவைத் துணுக்கு, சிறப்புச்செய்தி போன்றவற்றை எழுதிப்பாருங்கள்.

அவற்றில் முன்னே விளக்கிக் காட்டிய மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள், பலவகை நடைகளை எழுதிப் பழகுங்கள். நிறுத்தக் குறிகளை முறைப்படி இட்டு எழுதுங்கள். பிரித்தும் சேர்த்தும் எழுதும் முறைகள் உட்பட அனைத்தையும் கடைப்பிடித்து எழுதிப்பாருங்கள். ஒருமுறை, இருமுறை எழுதிப்பழகினால் இவை உங்களை விட்டுப் போகமாட்டா. 'வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்பது ஔவையின் வாக்கு. மறவாதீர்கள்!

தன் மதிப்பீடு : விடைகள்

1. 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்ற நிலையில் நான் இருந்தேன். இவ்வாறு வருவன பலவும் உவமைகளாம். அவள் மெல்லப் பேசினாள். என் செவிகளில் தேன் பொழிந்தது, இங்கு 'தேன்' உருவகமாகிறது. இவ்வாறு தேடி உவமை, உருவகங்களைக் காணப் பழகுங்கள்.

2. 1) சொல்லின் பொருள், வடிவம், தொடர்புடைய செய்தி - இவற்றை அகராதி மூலம் தெரிந்து கொள்ளலாம். 2) ஒரு பொருளைத் தரும் பல சொற்கள் உள. இவற்றில் பொருள் ஒன்று - சொற்கள் பல. மிகவும் என்ற ஒரே பொருளை சால, உறு, தவ, நனி, கழி என்ற ஐந்து உரிச்சொற்களும் தரும். ஒரு சொல் பல பொருளைத் தருவது 'பல பொருள் ஒரு சொல்'லாகும். இவற்றில் சொல் ஒன்று - பொருள் பல. 'கடி' என்ற உரிச்சொல் மணம்; கூர்மை, ஒளி, சிறப்பு முதலிய பல பொருள்களைத் தரும்.

கட்டு - ‘இதைக்கட்டு’ எனலாம், ‘எத்தனைக் கட்டு உள’ எனக் கேட்கலாம். ‘வீட்டில் இது முதல் கட்டு’ என்பதுண்டு. பல பொருள் ஒரு சொல்.

சேய், குழவி, மகவு, பிள்ளை என்பன ஒரு பொருட்பின் மொழிகளாகும்.

பயிற்சி

மாசு - குற்றம், குறுகு – அணுகுண இங்ஙனம் இவற்றிற்கு அகராதியில் குறிப்பிட்டுள்ள பொருள்களைத் தேடிக் குறியுங்கள்.

3. பயிற்சி

1. ‘‘ஐயகோ! இது என்ன? கொடுமையிலும் கொடுமை! இதைக் கேட்க யாருக்கும் வாயில்லையா? பார்க்கக் கண்கள் இல்லையா? நடுவீதியில் இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்தால்... இம், யார் தான்சகிப்பார்களோ?

2. ‘‘மணம் என்றால் என்ன? ‘மணம்’ என்ற சொல்லுக்கு ‘வாசனை என்று பொருளானால், ‘திருமணம்’ என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? ‘மணம்’ என்ற சொல், ‘திரு’ என்ற அடை அடுத்து வருவதுதானே திருமணம்!’’

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

பாடப்பகுதி (Unit) 6
சட்டத்துறையில் தமிழ்மொழி (Law)

படிப்பு நோக்கம் (Objectives)

★ நடைமுறை வாழ்விற்குப் பயன்படும் பல்வேறு அறிவித்துறைகளின் வழி தமிழ் எவ்வாறு வளர்ந்து வருகிறது என்று அறிமுகம் செய்து கொள்ளுதல்.

★ நீதித்துறையில் பயன்படுத்தப்படும் சட்டத்தமிழின் மொழிப் பயன்பாட்டை அறிந்து, பயிற்சி பெறுதல்.

★ சட்டத்தமிழில் பயன்படுத்தப்படும் சொற்களின் நுட்பம், பொருள் வரையறை, சொற்றொடர்களின் இறுக்கமான நடையமைப்பு ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்.

★ சட்டத்தமிழில் பயன்படுத்தப்பட்டு வரும் சில புதிய கலைச் சொற்களைத் தெறிந்து கொள்ளுதல்.

பாடக்கருத்தலகுகள் (Structure)

6.0 பாட முன்னுரை

6.1 சட்டத்தமிழ் நுட்பம்

6.1.1 நடத்தை

6.1.2 குற்றம்

6.2 பாடத்தொகுப்புரை

6.3 கலைச்சொற்கள்

6.4 தொடர்ந்து படிப்பதற்குரிய துணைநூல்கள்

6.0 பாட முன்னுரை

நாம் இன்று குடியரசு நாட்டில் வாழ்கிறோம். ''மக்களை மக்களே ஆட்சி'' என்று அழைப்பது உண்டு. குடியரசு நாட்டின் அரசு நிர்வாகம், கட்டமைப்பு அதிகாரங்கள் ஆகியவற்றை அந்நாட்டின் அரசியலமைப்பு வரைவுச்சட்டம் உருவாக்கித் தருகிறது. இதற்குக் கட்டுப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மாநில மற்றும் தேசிய ஆட்சிச் சபைகளில் பல வகையான விதிகளையும், சட்டங்களையும் இயற்று கிறார்கள். தனி மனித நலனுக்காகவும், சமூகத்தின் நலனுக்காகவும் இயற்றப்படும் இத்தகைய சட்டங்களைச் செயல்படுத்துவதில் காவல் துறை, நீதிமன்றம், அரசுத்துறைகள் போன்றவை ஈடுபடுகின்றன. அரசு ஆணைகள், விதிகள், சட்டங்கள் ஆகிய இவையனைத்தும் தமிழில் எழுதப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பிற அறிவியல் துறைகளைப் போல அறிவு வளர்ச்சிக்கான கருத்துப் பரிமாற்றம் மட்டும் இங்கே நடைபெறுவதில்லை. மாறாக, ஓர் அரசியலமைப்புச் சட்டத்தில், ஒரு குறிப்பட்ட சமூக ஒழுங்கில், மனிதரை வரையறையுடன் இயக்கும் முயற்சி நடைபெறுகிறது. விதி விளக்கங்களிலும் சட்டங் களிலும் ஒரு சொல் மாறினால் கூடப் பொருள் மாறிவிடும்; சிறிய அளவு தெளிவின்மை ஏற்பட்டால் கூடக் கருத்து மாறிவிடும்; நல்லவர் துயர் அடையவும், தீயவர் தப்பி விடவும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். மிக நுட்பமான பொருள் வரையறை, சொல்லுக்குக் கற்பனைக்கிடமில்லாத நேரடிப்பொருள், சுருக்கமான சொற்றொடர், விளக்கம், கருத்துத்தெளிவு, இருபொருள் இல்லாமை போன்றவை எல்லாம் சட்டத்தமிழின் சிறப்பியல்புகள் ஆகும்.

6.1 சட்டத்தமிழ் நுட்பம்

ஒருவனை நல்ல நடத்தை உடையவன் என்றும், தீய நடத்தை உடையவன் என்றும் நடைமுறை வாழ்க்கையில் நாம் பேசுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். நல்ல நடத்தை என்பது பொதுவாக நல்ல ஒழுக்கம், நல்ல பண்புகள், பிறருக்குத் தீங்கு செய்யாமை போன்ற பல சிறந்த பண்புகளை உடையது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். நடைமுறை வாழ்க்கையில், 'நடத்தை' என்பது ஒரு பொதுவான சொல். ஆனால் சட்டத்தமிழில் 'நடத்தை' என்பதற்கு இன்னும் நுட்பமான, விளக்கமான கருத்துக்கள் உள்ளன. அதேபோலச் 'செயல்' என்பது நடைமுறைத் தமிழில் 'செய்கை' என்பதைக் குறிக்கும். செய்யப்படுவது செயல். ஆனால் சட்டத்தமிழில் செயல் என்பது இன்னும் நுட்பமாகவும், குறிப்பிட்ட வரையறையோடும் ஆளப்படுகிறது. நடத்தை, செயல் ஆகியவை சட்டத்துறையில் எவ்வாறு விளக்கப்படுகின்றன என்பதை, திரு, மா. சண்முக சுப்பிரமணியம் எழுதியுள்ள 'குறள் கூறும் சட்ட நெறி' என்ற நூலிலிருந்து காண்போம்.

6.1.1 நடத்தை

ஒருவருடைய நடத்தையாலேயே அவருக்கு உரிமை (Right), கடமை (Duty), பொறுப்பு (Liability) இவை எழுகின்றன.

ஒருவர் ஒரு நிலத்தை விலைக்கு வாங்குகிறார். இந்த நடத்தையால் வாங்கிய நிலத்தின் மீது அவருக்கு உரிமை (Right) ஏற்படுகிறது. ஒருவர் அடுத்தவரிடமிருந்து கடன் பெறுகின்றார். இந்த நடத்தையால் பெற்ற கடனை அவர் திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற கடமை (Duty) எழுகிறது. ஒருவர் மற்றொருவருக்கு வேண்டுமென்றே காயத்தை

விளைக்கிறார். இந்த நடத்தையால் காயத்தை விளைத்தவர் மீது குற்றப்பொறுப்பு (Liability) ஏற்படுகிறது. அதன் பயனாக அவர் தண்டனை பெறுகின்றார். இவ்வாறு, உரிமை, கடமை, பொறுப்பு இவைகளைத் தோற்றும் ''நடத்தை''யை ஆங்கிலத்தில் Conduct என்பார்கள்.

நடத்தை (Conduct) என்று எதைச் சொல்லுகிறோம்? நான் ஒருவரிடம் கடன் வாங்குகிறேன். இது என்னுடைய நடத்தை. அந்தக் கடனைக் குறித்த தவணைக்குள் நான் திருப்பிச் செலுத்தத் தவறி விடுகிறேன். இதுவும் என்னுடைய நடத்தைதான். கடனை வாங்கியதும் நடத்தை, கடனைச் செலுத்தத் தவறியதும் நடத்தை. கடனை வாங்கியது ஒரு செயல் (act); கடனைத் திருப்பிக் கொடுக்காதிருந்தது செய்யாமை, அஃதாவது செய்யத் தவறியது (Omission) ஆகும். ஒருவர் நடுத்தெருவில் நடந்து செல்லுகின்றார், அவருக்கு எதிராக ஒரு வண்டி வேகமாக வருகிறது. அவர் தெருவின் ஓரமாக விலகுகிறார். இப்படி அவர் விலகியது ''இயங்கும் செயல்'' (act of commission or Positive act). அவர் அவ்வாறு விலகிச் செல்லவில்லையானால், அதுவும் ஒரு செயல்தான். அது ''இயங்காச்செயல்'' (act of omission or negative act). இவ்வாறு 'செயல்' என்பதில், 'இயங்கும் செயல்', 'இயங்காச் செயல்' இரண்டும் அடங்குகின்றன.

செயல் என்பதில் 'செய்தலும்' 'செய்யாமையும்' அடங்கும்:

எந்த ஒரு நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சியின்மை நமது இச்சைக்கு அடங்கியுள்ளதோ, அந்த நிகழ்ச்சியையும் நிகழ்ச்சியின்மையையும் நமது ''செயல்'' என்கிறோம். ஒன்றைச் செய்தல் நமது இச்சைக்கடங்கியிருந்தால், அதைச் செய்யாதிருப்பதும் நமது இச்சைக்கு அடங்குவதேயாகும்... எனவே, அந்த ஒன்றைச் ''செய்தல்'' ''செய்யாதிருத்தல்'' இரண்டுமே நம் செயல்களாகின்றன. இவ்வாறு ''செய்தல்'' ''செய்யாதிருத்தல்'' இரண்டையும் ''செயல்'' என்ற சொல் குறித்து நிற்கின்றது! ஆதலால், சட்டத்தில், ''செயல்'' (act) என்ற சொல்லிற்குச் ''செய்தல்'' (Commission) ''செய்யாமை'' (Omission) என்ற இரண்டு பொருள்களும் உண்டு. இது சட்டஇயலில் (Jurisprudence) ஓர் அடிப்படைக் கோட்பாடாகும்.

'செயல்' என்ற சொல்லிற்குச் சட்டம் கூறும் இலக்கணம்:

இந்தியக் குற்றத் தொகுப்புச் சட்டத்தின் 32-பிரிவு (Sec.32 of Indian Penal Code) இந்தக் கொள்கையைத் தெளிவுபடுத்திக் கூறுகிறது.

''மாறுபட்ட கருத்து ஏதாவது கட்டங்களில் குறிக்கப்பட்டால் ஒழிய, இச்சட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும், செயல்களைக் குறிக்கும் சொற்கள் அனைத்தும், சட்ட முரணுள்ள செய்யாமைகளையும் குறித்து நிற்கின்றன''.

(In every part of this code, except where a contrary intention appears from the contect, words which refer to acts done extend also to illegal omissions - Sec.32 Indian Penal Code.)

ஒரு குழந்தையைக் கொல்லுவது என்றால் அதன் கழுத்தை நெரித்தும் கொல்லலாம்; அதற்கு உணவு கொடுக்காமல் விட்டுவைத்தும் கொல்லலாம். குழந்தையின் கழுத்தை நெரிப்பது ஒரு செயல் (act) குழந்தைக்கு உணவு கொடுக்காமல் இருப்பது செய்யாமை (Ommission) தம் குழந்தைக்கு உணவு கொடுக்க வேண்டிய கடமை ஒருவருக்கு உண்டு. அந்தக் கடமையில் தவறி உணவு கொடுக்காமல் இருப்பது, செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமையாகும்; சட்ட முரணான செய்யாமையாகும்.

செய்தக்க அல்ல செய்தலும், செய்தக்க செய்யாமையும்

கழுத்தை நெரித்துக் கொல்லுவதும் கொலைச் செயல்; உணவளிக்காமல் விட்டுவைத்துக் கொல்லுவதும் கொலைச் செயல்தான். இரு செயல்களும் கொலைக்குற்றமாகின்றன.

''ஒரு குற்றத்தையோ, தீங்கையோ குறிக்கும் ''செயல்'' என்ற சொல் தொடர்ந்து நிகழும் செயல்களையும் குறிக்கும்; மேலும், செயல்களைக் குறிக்கும் சொற்கள் சட்ட முரணுள்ள செய்யாமைகளையும் குறிப்பனவாம்''.

("act" used with reference to an offence or a civil wrong, shall include a series of acts; and words which refer to acts done extend also to illegal omissions).

ஒன்றைச் செய்தலாலும், செய்யாதிருத்தலாலும் ஒரு குற்றம் விளைவது போன்றே 'தீங்கும்' (Civil wrong) விளையலாம்.

மொழிப்பயன்பாட்டுக் குறிப்புக்கள்

'நடத்தை' என்பது உரிமை (Rights), கடமை (Duty), பொறுப்பு (Liability) ஆகிய மூன்றும் உள்ளடக்கிய ஒன்று என்பதை இப்பாடப்பகுதியில் நீங்கள் அறிந்திருப்பீர்கள். சட்டத்தின் முக்கிய குறிக்கோள் மனிதனின் நடத்தையை ஒழுங்குபடுத்துவது என்பதை அறிவோம். இந்த இடத்தில் 'நடத்தை' என்ற சொல் உரிமை, கடமை, பொறுப்பு ஆகிய மூன்றையும் சேர்த்துக் குறிப்பிடும் ஒரு சொல்லாகவே, நாம் சட்டத்தமிழ் படிக்கும்போது எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டத்தமிழின் குறிப்பிட்ட சிறப்புத்தன்மை, இவ்வாறு ஒவ்வொரு குறிப்பிட்ட சொல்லும் ஒவ்வொரு குறிப்பிட்ட பொருள் வரையறையைக் கொண்டிருப்பதாகும்.

அதேபோல, செயல் என்பது எவ்வாறு விளக்கப் பெற்றிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். முதலில் செயல் என்றால் மனித இச்சைக்குக் கட்டுப்பட்டு நடைபெறும் நிகழ்ச்சிகளே செயல்கள் என்று வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. Act என்பது செயல் என்றும்; Event என்பது நிகழ்ச்சி என்றும் இங்கே குறிப்பிட்ட பொருள் வரையோடு எடுத்தாளப் படுவதைக் கவனியுங்கள். மனித இச்சைக்குக் கட்டுப்படாமல் நடப்பவை, நிகழ்ச்சிகள் என்ற சொல்லால் அழைக்கப்படுகின்றன. நடைமுறை வழக்குத் தமிழில் செயல் என்பதையும்; நிகழ்ச்சி என்பதையும் இத்தகைய வேறுபாடின்றி மாற்றி மாற்றிப் பயன்படுத்திவருகிறோம். ஆனால் சட்டத்தமிழில் இந்த வேறுபாடு மிக முக்கியமானதாகக் கருதப்படும்.

அது மட்டுமன்று, செயல் என்பதைச் செய்யப்படுவது என்ற பொருளிலேயே நாம் நடைமுறையில் புரிந்து கொள்ளுகிறோம். ஆனால் சட்டத்தமிழில் ஒரு செயலைச் செய்யாதிருத்தல் - அதாவது, 'செய்யாமை' என்பது கூடச் 'செயல்' என்ற சொல்லினாலேயே குறிக்கப்படும்.

இவ்வாறு சட்டத்தமிழில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சொல்லுக்கும் குறிப்பிட்ட பொருள் வரையறையும் சட்டத்தால் கொடுக்கப்பட்டுள்ள பொருள் விளக்கங்களும் பொருந்தி இருக்கும். அதனால்தான் சட்ட விதிகளைத் தமிழில் மொழியாக்கம் செய்து எழுதும் போது சரியான சொற்களைப் பயன்படுத்துவதில் மிகுதியான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. 'Commission' என்பது 'செய்தல்' என்றும் 'Ommission' என்பது 'செய்யாமை' என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மொழியாக்கம் ஓர் அழகிய தமிழ்க்கலைச்சொல் ஆக்கமாக எவ்வாறு மலர்ந்தது என்பதை எண்ணிப்பாருங்கள். 'Act of Commission' என்பது 'Positive Act' என்ற பொருளில், உணரப்பட்டு, 'இயங்கும் செயல்' எனவும்; 'Act of Ommission' என்பது 'Negative Act' என்று புரிந்து கொள்ளப்பட்டு 'இயங்காச் செயல்' எனவும் கருதப்பட்டன. அதனால் நம்முடைய தமிழ் மரபில் பயன்படுத்தப்பட்டு வந்த 'செய்யாமை' என்ற சொல்லால்

இயங்காச் செயல் குறிக்கப்பட்டது. 'இயங்காச் செயல்' 'செய்யாமை' என்று குறிக்கப்பட்டதற்கு இணையாக 'இயங்கும் செயல்' 'செயல்' என்ற சொல்லாலேயே குறிக்கப்படுகிறது. சட்டத்தமிழாக்க முயற்சியில் இவ்வாறு சொற்களைச் சுருக்கமாகவும், நுட்பமாகவும் குறிப்பது மிக முக்கியமான தாகும். சொல்லின் பொருள் வேறுபாடுகளைத் தவிர அச்சொல்லின் பொருள் எந்தெந்தக் கருத்துக்களையும் உள்ளடக்கியிருக்கின்றது என்ற வரையறையும் முக்கியமானவையாகும். 'ஒரு குற்றத்தையோ, தீங்கையோ குறிக்கும் செயல் என்ற சொல் தொடர்ந்து நிகழும் செயல்களையும் குறிக்கும்; மேலும் 'செயல்களைக் குறிக்கும் சொற்கள் சட்ட முரண் உள்ள செய்யாமைகளையும் குறிப்பனவாம்' என்ற தொடரே தொடர்ந்து நிகழும் செயல்களை உள்ளடக்கிக் காட்டுவதும், சட்ட முரணுள்ள செய்யாமை என்று, செய்யாமைக்குத் தரப்பட்டிருக்கும் அடைமொழியும், சட்டத்தமிழில் சொல்லின் வரையறையைச் சுட்டிக்காட்டும் சொற்றொடருக்குச் சான்றாகக் காட்டத்தக்கனவாம்.

தன் மதிப்பீடு : 1

பயிற்சி

I சட்டத்தமிழில் கீழ்க்காணும் சொற்கள் எவ்வாறு விளக்கப்படுகின்றன?

(அ) உரிமை, (ஆ) கடமை, (இ பொறுப்பு, (ஈ) செயல், (உ) நடத்தை.

II கோடிட்ட இடத்தை நிரப்புக:

அ. வேகமாக எதிரில், வண்டி வரும் போது, ஒருவர் விலகி ஒதுங்குவது .... செயல்; அவர் விலகாமல் நிற்பது .... செயல்.

ஆ. குழந்தையின் கழுத்தை நெரிப்பது. ஒரு .... குழந்தைக்கு உணவு கொடுக்காமல் இருப்பது .... இரண்டுமே குற்றம் ஆகும்.

இ. ஒரு குற்றத்தையோ தீங்கையோ குறிக்கும் 'செயல்' என்ற சொல் .... செயல்களையும் குறிக்கும்.

6.1.2. குற்றம்

ஒரு தவறான செயலை ஒருவன் செய்துவிட்டால், 'அவன் தவறு செய்துவிட்டான், அவள் தீமை செய்து விட்டான், அவன் பிழை செய்துவிட்டான், அவன் குற்றம் செய்துவிட்டான், என்றெல்லாம் பல சொற்களால் நாம் நடைமுறை வாழ்க்கையில் பேசிக் கொள்கிறோம்; ஆனால் நீதி மன்றத்தில் இப்படிப் பேச முடியுமா? பேச முடியாது. பேசினாலும் அதன் அடிப்படையில் நீதி வழங்கப்படமாட்டாது. ஏனென்றால் ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனியான வரையறைகள் உண்டு. ஆழ்ந்த நுட்பமான கருத்து விளக்கங்கள் உண்டு; சட்ட விதிகள் எழுதப்படும் பொழுது ஒவ்வொரு சொல்லும் இத்தகைய கருத்து நுட்பத்துடன் எடுத்து ஆளப்படுகிறது. இவ்வாறு அமைவதனால் தான் சட்டத் தமிழில் வெறும் அடைமொழிகளும், அலங்காரச் சொற்களும் அறவே விலக்கப்படுகின்றன. ஒரு சொல் எத்தகைய கருத்து நுட்பத்துடன் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் 'குற்றம்' என்பதைப் பற்றி விளக்கும் பின்வரும் பாடப்பகுதியில் காணலாம். இதுவும் திரு. மா. சண்முகசுப்பிரமணியம் எழுதியுள்ள 'குறள் கூறும் சட்டநெறி' என்ற நூலிலுள்ளதாகும்.

ஒரு செயலைக் குற்றமெனத் தீர்மானிப்பதற்குமுன் அச்செயல் தீய எண்ணத்தோடு செய்யப்பட்டதா என்பதைச் சட்டம் ஆராய்கின்றது. தீய எண்ணத்தால் செய்த செயலையே குற்றமெனச் சட்டம் கொள்ளுகின்றது.

குற்றமனம்:

அத்தீய எண்ணத்தைச் சட்ட நூல் ''குற்றமனம்'' என்று குறிக்கின்றது. ''குற்றமனம்'' என்பதை ஆங்கிலத்தில் 'Guilty mind' என்றும், இலத்தீன் மொழியில் 'Mens rea' என்றும் கூறுவார்கள். பொதுவாக, ''குற்றமனம்'' இன்றி ஒருவர் செய்த செயலைக், ''குற்றம்'' எனச் சட்டம் கொள்ளவதில்லை. ''புறச் செயலை மட்டும் வைத்து ஒன்றைக் ''குற்றம்'' எனக் கூறுவதில்லை; அது குற்றமனத்தோடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்'', என்று சால்மண்ட் என்ற அறிஞர் கூறுகின்றார். (The act alone does not amount to guilt; it must be accompanied by a guilty mind. - Salmond). பொதுவாக, ஒருவரைக் குற்றவாளியென்று தீர்மானிப்பதற்கு முன், அவர் குற்ற மனத்துடன் தீங்கான செயலைச் செய்தாரா என்பதை ஆராய்தல் வேண்டும். குற்றமனம் இல்லாதவரைக் குற்றவாளியெனச் கொண்டு தண்டித்தல் கூடாது.

ஒரு குற்றத்திற்கு இரு கூறுகள் உண்டு. ஒன்று அகநிகழ்வான குற்ற எண்ணம் (mens rea) மற்றொன்று புறநிகழ்வான, விலக்கப்பட்ட தீய செயல் (acutus reus) இவ்விரண்டும் ஒன்றும் பொழுது தான் ஒருவரைக் குற்றவாளியெனச் சட்டம் தண்டிக்கிறது. இவ்வாறு ''கென்னி'' என்ற குற்ற இயல் சட்ட வல்லுநர் விளக்குகிறார்.

பலதிறப்பட்ட குற்றங்களையும் விவரித்து அவற்றின் இலக்கணத்தைக் கூறுவது ''இந்தியக் குற்றத் தொகுப்புச் சட்ட மாகும்.'' (Indian Penal Code) அச்சட்டத்தில், ஒவ்வொரு குற்றத்தின் இலக்கணத்தைக் கூறும் பிரிவிலும் அக்குற்றத்திற்கான குற்ற மனநிலையும் கூறப்பட்டிருக்கிறது. 'கருதி' (Intentionally) 'தெரிந்து' (Knowingly) 'மனம் இசைந்து' (Voluntarily) 'வஞ்ச மனத்துடன்' (Fraudulently) 'நேர்மையின்றி' (Dishonestly) என்ற சொற்கள் அந்தந்தக் குற்றத்திற்கு வேண்டிய 'குற்ற மனத்தினைக்' காட்டி நிற்கின்றன; நேர்மையில்லா எண்ணத்துடன் பிறர்பொருளை எடுப்பதுதான் திருட்டுக் (Theft) குற்றமாகிறது. வஞ்சமனத்துடன் பிறர் பொருளை அபகரித்தலே 'ஏமாற்றுதல்' (Cheating) என்ற குற்றமாகும். பிறர் உடலுக்கு ஊறுவிளைவிக்க வேண்டுமென்ற கருத்தோடு பிறருக்குக் காயம் விளைக்கும் செயலே 'காயம் விளைத்தல்' (Causing hurt). அந்தக் குற்ற மனத்தோடு குற்றச் செயலைச் செய்தனரா என்பதை நீதிமன்றம் ஆராய்கின்றது. குற்ற மனம் இன்றிச் செயல் புரிந்தவர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து தண்டிப்பது இல்லை. ''குற்ற மனத்துடன் செய்யப்படாத செயல் குற்றம் ஆவதில்லை'' என்ற கொள்கையை இலத்தீன் மொழியில் "Actus non facit reum, nisi mens sit rea'' என்று கூறுவார்கள். ''குற்றமனம் இன்றிக் குற்றம் இல்லை'' என்ற இந்த விதி மொழி (maxim) குற்றவியல் சட்டத்தின் அடிப்படை நெறியாகும்.

சிந்தனை இன்றிச் செயல் இல்லை. கருத்தில் விளைவதே கருமமாகிறது. செயல்களுக்கு மூலமாகச் சிந்தனை அமைவதால் புறச் செயல்களைவிட அச் செயல்களுக்குக் காரணமான மனநிலையையே முக்கியமாகச் சட்டம் கொள்ளுகின்றது. இவ்வாறு, ஒருவரைக் குற்றவாளியென்று தீர்மானிப்பதற்கு முன் அவர் அக்குற்றமான செயலைச் செய்தபொழுது அவருடைய மனநிலை என்ன என்பதைச் சட்டம் ஆராய்கிறது.

ignou THE PEOPLE'S UNIVERSITY

மொழி பயன்பாட்டுக் குறிப்புகள்

ஒரு செயல் குற்றம் என்று தீர்மானிக்கப்படுவதற்கு உரிய வரையறைகள் இப்பாடப் பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதை நீங்கள் அறிந்தீர்கள். ஒரு செயல் தீய எண்ணத்தால் செய்யப்படும்போதே அது குற்றமாகிறது. குற்றமுடையது, தவறுடையது, பிழையுடையது என்றெல்லாம் பொதுவாகச் சொல்லப்படும் சொற்கள் சட்டத்தமிழில் பயன்படுத்தப்படுவதில்லை. ஒவ்வொரு சொல்லுக்கும் தெளிந்த திட்டமிடப்பட்ட வரையறை உண்டு. Mensrea என்ற லெத்தீன் மொழிச் சொல் 'குற்றமனம்' என்று மொழி யாக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு தீய செயலைச் செய்வதற்கான தீய எண்ணம். தீய எண்ணம் என்பது வழக்குத் தமிழ் மரபு. குற்றமனம் என்பது சட்டத் தமிழ் மரபு.

குற்றம் என்பது சட்டத்தமிழில் ஒரு கருத்தைச் சுட்டும் பொதுச் சொல்லாக மட்டும் நிற்கவில்லை. அகநிகழ்வான குற்ற எண்ணமும் புறநிகழ்வான தீயசெயலும் ஒன்றியிணையும் போதுதான் ஒரு செயல் குற்றமாகிறது என்று விளக்கப்படுகிறது. அதேபோலக் குற்றம் என்ற ஒரு பொதுச் சொல் பல பிரிவுகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு குறிப்பிட்ட கலைச் சொல் அக்குறிப்பிட்ட வகையில் இலக்கணமாக விளங்குகிறது. கருதி, தெரிந்து, மனமிசைந்து, வஞ்ச மனத்துடன், நேர்மை யின்றி ஆகிய சொற்கள் குற்றமனத்தின் தன்மைகளைச் சுட்டிச்காட்டும் சொற்கள் என்பதைப் பாடப்பகுதியில் பார்த்தீர்கள். சட்டத்தமிழில் இத்தகைய சொற்கள் பயன்படுத்தப்படும்போது அவற்றை வெறும் அடைமொழிச் சொற்களாக மட்டும் புரிந்து கொள்ளாமல் ஒவ்வொரு சொல்லுக்கும் நுட்பமான, சட்ட, கருத்து வரையறைகள் உண்டு என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். இது சட்டத்தமிழுக்கே உரிய ஒரு தனியான மொழிநடை அமைப்பாகும்.

சட்டவிதிகள் பெரும்பாலும் இலத்தீன் மொழிச் சொற்களைக் கொண்டே ஆங்கிலத்திலும் விளக்கப்படுகின்றன. Maxim என்ற விதிமுறைகள் பெரும்பாலும் இலத்தீன் மொழியில் அமைகின்றன. அவற்றுக்கான விளக்கங்கள் ஆங்கிலத்தில் தரப்படுகின்றன. தமிழில் அத்தகைய இலத்தீன் மொழிச் சொற்களை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதிவிட்டு அதற்கான விளக்கங்கள் மட்டும் தமிழில் எடுத்துத் தரப்படுகின்றன.

தன் மதிப்பீடு : 2

பயிற்சியும் வினாக்களும்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக

   அ. ஒரு செயலைக் குற்றமெனத் தீர்மானிப்பதற்கு முன் இச்செயல் .... செய்யப்பட்டதா என்பதைச் சட்டம் ஆராய்கின்றது.

   ஆ. .... பிறர் பொருளை அபகரித்தலே ஏமாற்றுதல்' என்ற குற்றம் ஆகிறது.

   இ. பலதிறப்பட்ட குற்றங்களையும் விவரித்து, அவற்றின் இலக்கணத்தைக் கூறுவது ''இந்திய ....'' ஆகும்.

2. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   அ. குற்ற மனத்தின் இருகூறுகளைச் சட்டம் எவ்வாறு விளக்குகிறது?

   ஆ. சட்டத்தமிழில் குற்றத்தின் தன்மையைச் சுட்டிக் குற்றமனத்தைக் காட்டும் சொற்கள் ஐந்தினை எழுதுக.

   இ. எதிர்பாராமல், தவறுதலாகப் பிறர் உடலுக்குக் காயம் விளைவித்து விடுவது குற்றம் ஆகுமா? என்ன காரணம்?

6.2. பாடத்தொகுப்புரை

இப்பாடப்பகுதியில் சட்டம் பற்றிய சில பகுதிகளைப் படித்தீர்கள். இத்துறையில் எழுதப்படும் கட்டுரைகளில் தமிழ் எவ்வாறு ஒரு வழங்கு மொழியாகப் பயன்படுகிறது என்பது குறித்த சில செய்திகள் உணர்த்தப் பட்டன. வழக்கிலுள்ள ஒரு சொல், ஒரு குறிப்பிட்ட துறையில் பயன்படும் போது, எவ்வாறு அமைகிறது என்றும் தெரிந்து கொண்டிருந்திருப்பீர்கள். இப்பகுதிகள் அறிமுகப்பகுதிகளே. இவற்றில் இன்னும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றையும் படித்துப் பயன்பெற முயலுங்கள் துறைதோறும் தமிழை வளர்ப்பதாகக் கூறுவது ஒரு மனநிலை. உண்மையில் அவ்வத்துறை தோறும் தமிழர்களாகிய நாம் திட்பமும், நுட்பமும் பெற்று வளர இம்முயற்சி உதவும். எதிர்காலத்தில் நம் குழந்தைகள் தாய்மொழி வழியாக எல்லாக் கலைகளையும் எளிதில் கற்று மேன்மையடைவார்கள். பிற உலகப்பகுதியினர் ஏற்குமளவு ஆழமான கருத்துக்களை எழுதி, அவர்கள் சிந்தனையில் வளரவும் இம்முறையே உதவுவதாகும். பிறமொழியின் வழி எவ்வளவு கற்றாலும், கற்றதை வெளிப்படுத்துமளவு வளரலாமே தவிரச் சிந்தனையாளராக உயர முடியாது.

6.3. கலைச்சொற்கள்

அ. 1. நடத்தை (Conduct)
2. உரிமை (Right)
3. கடமை (Duty)
4. பொறுப்பு (Liability)
5. செயல் (act)
6. இயங்கும் செயல் (Positive act)
7. இயங்காச் செயல் (Negative act)
8. செய்தல் (Commission)
9. செய்யாமை (Ommission)
10. சட்ட இயல் (Jurisprudence)
11. இந்தியக் குற்றத் தொகுப்புச் சட்டம் (Indian Penal Code)

ஆ. 1. குற்றம் (Crime)
2. குற்றமனம் (Guilty mind)
3. குற்ற எண்ணம் (mens rea)
4. தீய செயல் (acutus reus)
5. அகநிகழ்வு
6. புறநிகழ்வு
7. கருதி (intentionally)
8. தெரிந்து (Knowingly)
9. மனம் இசைந்து (Voluntarily)
10. நேர்மையின்றி (Dishonestly)
11. வஞ்ச மனத்துடன் (Fraudulently)
12. விதிமொழிகள் (Maxim)

6.4 தொடர்ந்து படிப்பதற்குரிய துணை நூல்கள்

சட்டம் தொடர்பான கட்டுரைகள் அவ்வப்போது நாளிதழ்களிலும், பருவ இதழ்களிலும் வெளிவருகின்றன. அவற்றில் தமிழ்மொழிப் பயன்பாடு எங்ஙனம் அமைகிறது என்பதை எண்ணிப் பாருங்கள். 'தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்' பல நூல்களை வெளியிட்டுள்ளது. கீழ்க்காணும் நூல்களை நீங்கள் படித்துப் பார்க்கலாம். சைவ சித்தாந்தக் கழக வெளியீட்டு நூல்களிலிருந்தே பாடப் பகுதிகள் தரப்பட்டுள்ளன. இவற்றின் பிற பகுதிகளும் பயனுடையன. படிக்க முயலுங்கள்.

1. ***குறள் கூறும் சட்டநெறி :*** *(1967) மா. சண்முக சுப்பிரமணியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரகாசம் சாலை, சென்னை - 108.*
2. **அமைச்சரவை ஆட்சி இயல்:** *(1973)* நல்முருகேச முதலியார், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

தன்மதிப்பீடு : விடைகள்

1. I. அ. *நிலத்தை விலைக்கு வாங்கும் நடத்தையால் ஏற்படுவது* **உரிமை.**

   ஆ. *கடனை வாங்கிய நடத்தையால் விளைவது திரும்பக் கொடுக்கும்* **கடமை**

   இ. *காயத்தை உண்டாக்கியவர் மீது ஏற்படுவது குற்றப்* **பொறுப்பு**

   ஈ. *செயல் என்பது செய்வது - உடன்பாட்டுப் பொருள்*

   உ. *நடத்தை என்பதில் செயல், செய்யாமை இரண்டும் அடங்கும்.*

   II. அ. *இயங்கும் செயல், இயங்காச் செயல்*

   ஆ. *செயல் - செய்யாமை*

   இ. *செயல்கள் சட்டமுரணுள்ள செய்யாமைகள் ஆகிய இரண்டு.*

2. *1. (அ) தீய எண்ணத்துடன் (ஆ) வஞ்சமனத்துடன் (இ) குற்றத் தொகுப்புச் சட்டம்.*

   2. அகநிகழ்வான குற்ற எண்ணம், புற நிகழ்வான குற்றச் செயல் - இவை குற்ற மனத்தின் இருகூறுகள் எனச் சட்டம் விளக்குகிறது.

   ஆ. குற்றத்தின் தன்மையைச் சுட்டி, குற்றமனதைக் காட்டும் ஐந்து தமிழ்ச்சொற்கள் வருமாறு: கருதி, தெரிந்து, மனமிசைந்து, வஞ்ச மனத்துடன், நேர்மையின்றி.

   இ. குற்றம் ஆகாது. குற்ற மனத்துடன் செய்யப்படாத செயல் சட்டப்படி குற்றம் ஆகாது.

பாடப்பகுதி (Unit) 7
இயற்பியல்துறையில் தமிழ்மொழி (Physics)

படிப்பு நோக்கம்

- ★ அறிவியல் துறைகளின் வழியாகத் தமிழ் எவ்வாறு வளர்ந்து வருகிறது என்று அறிமுகம் செய்து கொள்ளுதல்.
- ★ இயற்பியல் துறையில் தமிழ் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளுதல்.
- ★ தமிழ்மொழி இலக்கண மரபிற்குப் பிறழ்ந்துவரும் சொல்லாக்கம், நடையமைப்பு ஆகியவற்றை இனங்கண்டறிதல்.

பாடக்கருத்தலகுகள்

7.0 பாட முன்னுரை

7.1 லேசர்

7.2 எரிசக்தி

7.3 சத்தம்

7.4 பாடத்தொகுப்புரை

7.5 அறிவியல் கலைச்சொற்கள்

7.6 தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

7.0 பாட முன்னுரை

இன்றைய நம்முடைய வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருப்பன அறிவியல் ஆராய்ச்சிகள் ஆகும். அறிவியல் ஆராய்ச்சிகளின் விளைவாக அறியப்படும் உண்மைகள் புதிய புதிய வசதிகளையும், கருவிகளையும் உருவாக்கித் தருகின்றன; ஒரு துறையில் அறியப்படும் உண்மைகள் வேறுதுறைகளிலும் ஏற்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. அறிவியல் துறைகளில் அடிப்படையான கருத்தியல் ஆய்வுகள் நடைபெறும் சில துறைகளை **'அடிப்படை அறிவியல் துறைகள்'** என்று அழைக்கும் வழக்கம் உண்டு. இத்தகைய துறைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள், பிற துறைகளிலும் நடைமுறைப் பயன்பாட்டை உருவாக்கும் ஆய்வுகளுக்கு மிகுந்த துணையாக இருக்கும். இத்தகைய துறைகளில் குறிப்பிடத் தக்கவை **கணிதவியல், இயல்பியல், வேதியல்** ஆகியனவாகும்.

இவை போன்ற அறிவியல் துறைகளில் செய்யப்படும் ஆய்வுகளையும், அவற்றின் வழி கிடைக்கும் முடிவுகளையும் விளக்கமாகத் தமிழில் எழுதி வெளியிடுவதில் பல சிக்கல்கள் உள்ளன. அவ்வப்போது உருவாகும் புதிய சொற்களை எவ்வாறு தமிழ்ப்படுத்துவது? குறியீடுகளையும் சமன்பாடு களையும் எவ்வாறு எழுதுவது? தமிழ்மொழியில் இல்லாத ஒலிகளில் அமையும் வேற்றுமொழி ஒலிகளை எவ்வாறு ஒலிப்பது? பிற மொழிச் சொற்களை ஒலி பெயர்த்து எழுதும் போது, தமிழ் இலக்கண மரபுப்படி எவ்வாறு எழுதுவது? – என்பது போன்ற பல சிக்கல்கள் அறிவியல் தமிழில் தோன்றுவதுண்டு. அறிஞர்கள் இந்த சிக்கல்களை உணர்ந்து ஓரளவு செப்பமுற மொழியில் எழுதி வருகிறார்கள். காலப்போக்கில் அறிவியலில் தமிழ் மொழிப் பயன்பாடு பெருகப் பெருக, புதிய, பொருத்தமான தமிழ்க் கலைச்சொற்களைக் கண்டுபிடித்தல், வழக்கில் உள்ள தமிழ்க் கலைச்சொற்களைத் தரப்படுத்துதல், மொழிநடையில் கற்பனையும் ஆரவாரமும் நிறைந்த தன்மைகளை ஒதுக்கி விட்டுச் சுருக்கமான, தெளிவான அறிவியலுக்கேற்ற நடையைப் பயன்படுத்துதல் போன்ற சிறப்புக்கள் தாமே வந்தமையும்.

இப்பாடத் தொகுப்பில் இயற்பியல் துறையைச் சேர்ந்த மூன்று பாட அலகுகள் இடம் பெற்றுள்ளதைக் காண்பீர்கள். இப்பாட அலகுகளின் வழி எடுத்துரைக்கப்படும் செய்திகளை அறிந்து கொள்ளும் அதே நேரத்தில், இப்பாடப்பகுதிகளில் பயன்படுத்தப்படும் மொழிப்பயன்பாட்டையும் அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். கலைச் சொற்கள் எவ்வாறு ஆக்கப்பட்டுள்ளன; கருத்து விளக்கம் தமிழ் இலக்கண மரபுக்கு ஒத்த வகையில், எத்தகைய மொழி நடையில் எழுதப்பட்டுள்ளது; இத்துறைகளுக்கிடையே மொழிப் பயன்பாட்டில் வேறுபாடுகள் காணப்படுகின்றனவா என்பதையெல்லாம் கூர்ந்து நோக்குங்கள். இதன் மூலம் உங்கள் மொழித்திறனை நன்கு வளர்த்துக் கொள்ளுங்கள்!

கதிர்வீச்சு

'கதிர்வீச்சு' என்பது அண்மைக்காலத்தில் மிகப் பரவலாக மானுட இனத்தை ஆளுமை செய்து வரும் ஒரு சொல். இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் இயற்பியல் துறையில் மிக ஆர்வத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அணுக்கதிர் வீச்சினால், எத்துணை அழிவுகள் இரண்டாம் உலகப் போரின் முடிவில் நேரிட்டன என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கதிர்வீச்சின் அழிவுத்தன்மைகளை அடக்கி, அதை ஆக்கபூர்வமான செயல்களுக்கு எவ்வாறு உருவாக்கிப் பயன்படுத்துவது என்பது அறிஞர்கள் மேற்கொண்டிருந்த ஆர்வ மிகுந்த ஆய்வாகும். இந்த ஆய்வு மருத்துவத்துறை, பொறியியல் துறை, வேதியில்துறை, வானியல்துறை போன்ற பலதுறைகளில் பயன்படும் சிறந்த முடிவுகளைத் தந்துள்ளது.

இதைப் பற்றிய செய்திகளை 'லேசர்' என்ற கட்டுரையில் டாக்டர் சா.கே. நாராயண தாஸ் விளக்குவதைப் பார்க்கலாம்.

7.1 'லேசர்'

''தூண்டப்பெற்ற கதிர்வீச்சு வெளியிட்டால் ஒளியைப் பெருக்குதல் என்பது தான் லேசர். இதை Light - Amplication by Stimulated Emission of Radiation என்று கூறுகின்றனர். பருப்பொருளின் மீது கதிர்வீச்சுகள் படுவதால் ஏற்படும் நிகழ்ச்சிகளை ஆராயப்புகுந்த அய்ன்ஸ்டீன் குவாண்டம் எந்திரவியலின் அடிப்படையில் 1917-ஆம் ஆண்டே இவ்விளைவுகளை விளக்கியுள்ளார். பொதுவாக, இதன் வளர்ச்சி 1960-ஆம் ஆண்டு உருவாக்கப் பெற்ற செயற்கை மாணிக்க அல்லது ரூபி லேசர் கண்டுபிடிப்பிற்குப் பின்னர்தான் எனலாம்.

ஒவ்வொரு பொருளுக்கும் ஆற்றல் மட்டங்கள் உண்டு. எல்லாப் பொருள்களுமே லேசர் பொருளாக முடியாது. லேசர் பொருளின் அணுக்கள் அல்லது அயனிகள் அல்லது மூலக்கூறுகள் ஏற்றும் முறையால் (Pumping methods) உயர் ஆற்றல் மட்டத்திற்குச் செலுத்தப்பெற்று அதில் ஒரு தொகை தலைகீழாக்கத்தை (Population inversion) உண்டு பண்ண வேண்டும். இந்தக் கிளர்ச்சி நிலையில் உள்ள அணுக்கள், அயனிகள் கீழ் ஆற்றல் மட்டத்திற்கு வரும்பொழுது பல்வேறு வகையான அலைநீளம் கொண்ட லேசர் ஒளிக்கற்றையை உமிழ்கின்றன. இந்தச் செய்கை தன்னிச்சையாகவோ அல்லது தூண்டப்பெற்றதாகவோ இருக்கும். ஒவ்வொரு வகை லேசரிலும் அதன் கிளர்ச்சி நிலை வேறுபடுகின்றது. லேசர்களில் ஒளியியலாக ஏற்றப்பட்ட லேசர்கள், வாயு மின்னிறக்க லேசர்கள், துடிப்புவாயு லேசர்கள், ஒளிப்பிரிகை லேசர்கள், குறை கடத்தி லேசர்கள், அணுக்கரு லேசர்கள், கட்டற்ற எலெக்ட்ரான் லேசர்கள், உயர் ஆற்றல் குறைந்த துடிப்பு லேசர்கள் என்ற பல்வேறு பிரிவுகள் இருப்பினும் பொதுவாக இவையெல்லாம் திடநிலை லேசர், வாயு லேசர், குறை கடத்தி லேசர், வேதியியல் லேசர், திரவ லேசர் என்ற அய்ந்து அடிப்படை வகைக்குள் அடங்கும்.

புறப்பரப்பின் மீது லேசர் கதிர்வீச்சு பாயும் பொழுது இதன் திறனை வாட்டுகளில் அளப்பது வழக்கம். துடிப்பு லேசரின் ஆற்றல் வெளிப்பாடு ஒரு துடிப்பிற்கு இத்துணை ஜூல்கள் எனவும், தொடர்ச்சியாகச் செயல்படும் லேசரின் வெளிப்பாட்டுத் திறனை ஒரு விநாடிக்கு இத்துணை ஜூல்கள் அல்லது வாட்டுகள் எனவும் அளக்கப்படும். லேசரின் ஆற்றல் மில்லி வாட்டுகளிலிருந்து இலட்சக்கணக்கான மெகாவாட்டு வரையிலும் இருக்கும்.

தனிச்சிறப்புகள் வாய்ந்த மின்காந்த கதிர்வீச்சுகளைத் தோற்றுவிக்கும் ஆற்றல் படைத்த இந்த லேசர்கள் வெளிவிடும் ஒளி அலைகள் சிறந்த விசைப் பண்புடையவை; செறிவு மிக்கவை; ஓரியல் தன்மை உடையவை. இப்பண்புகள் காரணமாக லேசர்களைப் பல்வேறு வழிகளில் நடைமுறைச் செயல்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். ஹீலியம் - நியான் லேசர், நியோடியம்-யாக்லேசர், நியோடியம் - க்ளேஸ்லேசர், கேல்லியம் ஆர்சனைடு லேசர், ரூபிலேசர், கார்பன்டை ஆக்சைடு லேசர், நைட்ரஜன் லேசர், ஆர்கான் அயனி லேசர், சாயலேசர் போன்ற லேசர்கள் செயல்முறையில் வெகுவாகப் பயன்பட்டு வருகின்றன. முதல் லேசர் உருவாக்கப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆயினவென்றாலும், இவை பயன்படுத்தப் பெறும் துறைகள் எண்ணற்றவை. எடுத்துக்காட்டாக, செய்தித் தொடர்பு, ஒளிப்படவியல், மருத்துவத்துறை, தொழிற்துறை, வாணியல், வானிலையியல், அளவுகளியல், இயற்பியல், வேதியியல் என இது பயன்படும் துறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

செய்தித் தொடர்பிற்குத் தொலைபேசி எந்த அளவினுக்குப் பயன்பட்டு வருகிறதென்பதை நாம் அனைவரும் அறிவோம். அதேபோல் மைக்ரோ

அலைகளும் செய்தித் தொடர்பிற்குப் பெருமளவில் பயன்படுகின்றன. இதன் அதிர்வெண் 1000 மெகா ஹெர்ட்சிலிருந்து 10,000 மெகா ஹெர்ட்ஸ் வரை இருக்கும். இன்று அறிவியலில் முன்னேற்றம் பெற்ற அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் வளர்ந்து வரும் செய்தித் தொடர்புத்துறை ஒளியிழைத் தொடர்புத்துறை (Optical-Fibre Communication) ஆகும். இதன் மூலமாக ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் ஒரு மிகச் சிறிய கண்ணாடி இழை வழியே கேட்கவும், பேசவும் முடியும். இவ்வகை செய்தித் தொடர்ப்பில் லேசர் ஒளி செய்தி ஏந்தியாகப் பயன்படுகிறது.

சாதாரண ஒளிப்படவியலில் நிறப்பிழற்சியினால் (Chromatic Obberation) பிம்பங்கள் தெளிவில்லாமல் விழும். உயர்வேக ஒளிப்படவியலில் இது ஒரு பிரச்சனையாகும். லேசர் ஓர் ஒற்றை நிற ஒளியானதால் அதனைப் பயன்படுத்தி இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம். வினாடிக்கு 200 மீட்டர் வேகத்தில் பாய்ந்து செல்லும் குண்டினைப் படமெடுக்கவும், ஒலியைக் காட்டிலும் வேகமாகச் செல்லும் காற்றுப் புழல்களில் (Hypersonic wind sonnels) ஏற்படும் அதிர்ச்சி அலை அமைப்புகளை (Shock wave patterns) ஆராயவும் ரூபிலேசர் ஒளி மூலங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. லேசர் கற்றைகள் உயர்செறிவுடையவாதலால், இவை நுண் ஒளிப்படவியலிலும் (Photomicro graphy) பயன்படுத்தப்படுகின்றது. மேலும் முப்பரிமாணப் படங்களை (Three dimensional pictures) எடுக்கவும், மீட்டுருவாக்கவும் வல்ல ஒரு துறை உருவாகியுள்ளது. இது ஹோலோகிராபி எனப்படும். இந்த புதிய உத்தியில் லேசர் கற்றைகள் சிறந்த வகையில் செயலாற்றுகின்றன.

மருத்துவத்துறையில் லேசர்கள் மிகச்சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. உதாரணமாக, ரூபி லேசரிலிருந்து வரும் ஒளியினைக் கொண்டு ஆயிரக்கணக்கான பேர்களுக்குக் கண்ணில் அறுவை மருத்துவம் செய்யப்படுகின்றனது. ஆர்கான் அயனி லேசரிலிருந்து வரும் ஒளியானது பல்வேறு அறுவை மருத்துவங்களுக்குப் பயன்படுகின்றது. உண்மையில் சொல்லப்போனால், வேறு துறைகளை விட மருத்துவத்துறையில் லேசர்கள் நன்றாகப் பயன்பட்டு வருகின்றன.

லேசர்கள் வலியின்றிப் பல்லில் சிதைவுற்ற பகுதிகளை அழிப்பதற்குப் பயன்படுகின்றது. ஒரு வினாடிக்குக் குறைந்த நேரத்திலேயே இச்சிகிச்சை முடியும். பல் சொத்தை யாவதையும் லேசர்கள் தடுக்க முடியும்.

வானிலையை அவ்வப்போது கண்டறிவதற்கென லேசரைப் பயன்படுத்தும் புதிய கருவியின் பெயர் லிடார். (Light Detection and Ranging) லிடாரைப் பயன்படுத்தி மேகங்களைப் பற்றிய ஆய்வு நடத்தப்படுகிறது. குறிப்பாக, முகில்களின் உயரங்களும், அளவுகளும் இதன் உதவி கொண்டு அளக்கப் படுகின்றது. நிலவின் தூரத்தை அளக்கப் பயன்படுகின்றது.

லேசர்கள் துளையிடுதல், வெட்டுதல், செதுக்குதல், உருக்கி இணைத்தல் போன்ற வேலைகளுக்குப் பயன்படுகின்றது. இப்பணிக்களுக்கென வழக்கமான கருவிகள், உத்திகள் இருந்தாலும் லேசரின் உயர்ந்த உச்சத்திறன், அதன் திசைப்பண்பு, அதன் ஆற்றல் ஆகியன கதிர்வீச்சு வடிவத்தில் உள்ளன. இது வசதியாக இருக்கின்றது. சில நுணுக்கமான வெட்டுதல், பற்ற வைத்தல் போன்ற வேலைகளுக்கு லேசர் மிகவும் உகந்தது. சாதாரணமான வேலைகளுக்கு மற்றபடி வழக்கமான முறைகளே சிறந்தவைகளாகும்.

கம்ப்யூட்டர்களில் இருக்கும் பெருந்திறமையுடைய நினைவுகள் (Large capacity memories) அனேகமாக ஒளிப்பட வகையினைச் சார்ந்தவை.

இயற்பியலில் மென்படலங்களை (Thin films) உருவாக்க லேசர் ஆவியாதல் முறையும், அந்தப் படலங்களில் உள்ள குறைகளைப் (defects) போக்க லேசர்கள் துணையால் கட்டுப்பாட்டுடன் சூடாக்கி ஆறவிடும் (loser anncaling) முறைகளும் இன்று பின்பற்றப்படுகின்றன.'' (கலைக்கதிர்)

மொழிபயன்பாட்டுக் குறிப்புகள்

இப்பாடப்பகுதியில் 'லேசர்' என்ற ஒரு சொல்லைக் கண்டிருப்பீர்கள். இதைத் தமிழாக்கி எழுத முடியமா? முடியாது. ஏனென்றால் இது ஐந்து ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களை மட்டும் இணைத்து எழுதப் பட்ட ஒரு குறியீடு (L.A.S.E.R.) இதை தமிழாக்க வேண்டுமென்றால் அந்த ஐந்து சொற்களையும் தமிழாக்கி அந்தக் கருத்தின் அடிப்படையில் ஒரு புதிய சொல்லை ஆக்குதல் வேண்டும். இஃது இன்றைய நிலையில் அவ்வளவு இன்றியமையாத ஒன்றாக அறிஞர்கள் கருதுவதில்லை. 'லேசர்' என்ற சொல் உலகம் முழுவதும் பரவியுள்ள ஒரு சொல். ஆதலால் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள். தமிழ் இலக்கண மரபுப்படி எழுத வேண்டும் என்றால் இதை 'இலேசர்' என்றும் எழுதலாம். அறிவியல் கட்டுரைகளில் ஒலியாக்கச் சொற்களில் இத்தகைய விதிகளை மிக வற்புறுத்துவது தேவையில்லை. அதிலும் பெயர்ச்சொற்களில், அவற்றை மாற்றுவது பொருள் விளங்காமற் போகும் என்பதால் இம்மாற்றங்கள் இன்று ஏற்கப்படுகின்றன.

'லேசர்' என்ற சொல்லைப் போலவே 'லிடார்' என்ற முதல் எழுத்து ஒட்டுக் குறியீட்டுச் சொல்லும் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். ஆனால் இம்முறையை பிற தமிழாக்கக்கூடிய சொற்களுக்குப் பின்பற்ற வேண்டியதில்லை. 'மைக்ரோ' அலைகள் என்பதை 'நுண் அலைகள்' என்று மொழியாக்க இயலும். அதே போல 'வேகமாகச் செல்லும் காற்றுப்புழல்' என்பதை 'விரைவுக் காற்றுப்புழல்' என்று சுருக்கமாக எழுதலாம். கலைச் சொற்களைச் சுருக்கி எழுதுவது சிறப்பு.

இப்பாடப் பகுதியில் சில அழகான பொருத்தமான தமிழ்க் கலைச் சொல்லாக்கங்கள் உருவாக்கப்பட்டிருப்பதை நினைத்துப் பாருங்கள். ஒரு தொகை தலைகீழ் ஆக்கம், ஒளி இழை தொடப்புத்துறை, ஒளிப்படவியல் நிறப்பிறழ்ச்சி, அதிர்ச்சி அலை அமைப்பு, நுண்ஒளிப்படவியல், பெருந் திறமை நினைவுகள், மென்படலம், சூடாக்கி ஆறவிடுதல் ஆகிய சொற்கள் குறிப்பிடத்தக்கவை. இச்சொற்கள் இயற்பியற் துறையில் சில குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. தனித்தனியாக மிக இயல்பாகப் புழக்கத்தில் இருக்கும் சொற்கள் ஒரு குறிப்பிட்ட அமைப்பில் இணையும் போது அவை துறையின் கலைச் சொற்களாக உருவாகின்றன. சான்றாக, ஒளி, இழை, தொடர்பு என்ற மூன்றும் ஒன்றாக இணைந்து ஒரு புதிய இயற்பியற்துறைக் கலைச்சொல்லாக உருவாகியுள்ளன.

லேசரின் பல்வகை அமைப்புகளை இப்பகுதியில் விளக்கும் போது வாயு மின்னிறக்க லேசர், ஒளிப்பிரிகை லேசர், குறை கடத்திலேசர், அணுக்கரு லேசர் போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். இத்தகைய கலைச்சொற்கள் கூடியவரை அவற்றின் கருத்துக்களை அல்லது தன்மைகளை விளக்கும்படியாக அமைந்திருப்பது சிறப்புக்கு உரியதாகும். சொல்லுக்குச் சொல்லான மொழிபெயர்ப்பாக அல்லாமல் கருத்தையும் ஓரளவு சுட்டிக்காட்டும் வகையில் அமைவது கலைச்சொற்களுக்குச் சிறப்பைத் தருவதாக இருக்கும்.

தன் மதிப்பீடு : 1

பயிற்சியும் வினாக்களும்

I *1.* 1. குவாண்டம் எந்திரவியலின் அடிப்படையில் 1917-ஆம் ஆண்டில் கதிர்வீச்சின் விளைவுகளை............................ எனும் அறிஞர் முதன்முதலில் வெளியிட்டார்.

2. சாதாரண ஒளிப்படவியலில்.................................. பிம்பங்கள் தெளிவில்லாமல் விழும்.

3. .... லேசரிலிருந்து வரும் ஒளியினைக் கொண்டு கண்ணில் அறுவை மருத்துவம் செய்யப்படுகிறது.
4. லிடார் என்பது .... ஆராயப் பயன்படுகிறது.
5. கணிப்பொறியில் உள்ள .... ஒளிப்பட வகையினைச் சார்ந்தது.

II பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

1. லேசர் என்றால் என்ன?
2. லேசரின் அடிப்படை வகைகள் யாவை?
3. ஒளியிழைத் தொடர்பு என்றால் என்ன?

7.2 எரிசக்தி

மனித வாழ்க்கையில் எரிபொருள் பல நிலைகளிலும் தேவைப்படுகிறது. கற்காலத்தில் கற்களைத் தேய்த்து நெருப்புமூட்டி எரிசக்தியைத் தன்னுடைய தேவைக்குப் பயன்படுத்தத் தொடங்கியதில் இருந்து எரிசக்தியைப் பல பொருள்களின் வழியாக மனிதன் உருவாக்கிக் கொண்டிருக்கிறான். விறகுகளை எரிப்பதன் மூலம் சாதாரண மனிதன் தன்னுடைய தனிப்பட்ட தேவைகளுக்குகேற்ற எரிசக்தியை உருவாக்கிக் கொள்கிறான். பெட்ரோலிய எண்ணெய், வாயு, நிலக்கரி, யுரேனியம் போன்ற பல பொருள்களும் எரிசக்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் மக்கள் தொகைப் பெருக்கத்தினால், நாளுக்கு நாள் அதிக அளவில் ஆயிரக்கணக்கான ஆண்டு களாக இந்த எரிசக்தி மூலங்கள் அழிக்கப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் மனிதனுக்கு எரிசக்தி கிடைப்பதில் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அறிவியல் அறிஞர்களிடையே தோன்றியுள்ளது. வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த எரிசக்தி மூலங்களைத் தவிர வேறு புதிய மூலங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றார்கள். இதைப்பற்றிய கருத்துக்களை ''எரிசக்தி'' என்ற தலைப்பில் டாக்டர் வெ. செல்வராசன் பின்வருமாறு விளக்குகிறார்.

> ''வெப்பத்திற்கும் ஒளிக்கும் இயந்திரங்களை இயக்குவதற்கும் நமக்குத் தேவையான சக்தியை நாம் எரிசக்தி என்கின்றோம். மனித சமுதாயத்தின் வளமான வாழ்க்கைக்கு எரிசக்தியின் பங்கு மிகவும் முக்கியமாகும். இப்புவியில் உள்ள புதையுண்ட எரிபொருள்களின் (Fossil fuels) அளவு நிர்ணயமானது. ஆனால், வருடந்தோறும் நம் எரிசக்தித் தேவைகளோ அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றன. எனவே, சிக்கலான சூழ்நிலை எவ்வாறு எதிர்கொள்வது என்பதே இன்று நம்மிடையே உள்ள மாபெரும் பிரச்சினை ஆகும். 1970-ல் நாம் பயன்படுத்திய மொத்த எரிசக்தியின் அளவு 240 குவாட்கள் (1 quad = 1.05 X 10^8 Joules) ஆகும். இதுவே 2000-இல் 2000 குவாட்களாகவும், 2050-இல் 4000 குவாட்களாகவும் அதிகரிக்கும். நாம் மிகுதியும் பயன்படுத்தும் எரிசக்திப் பொருள்கள் எண்ணெய், வாயு, நிலக்கரி, யுரேனியம், மற்றும் நீர் ஆகும். நம் பெருகிவரும் தேவைக்கு இந்த எரிசக்தி மூலங்கள் ஈடு கொடுக்க முடியுமா என்று ஆராய வேண்டி உள்ளது.
>
> நிலக்கரியை இன்னும் அதிக அளவில் பயன்படுத்தி, வேண்டிய எரிசக்தி தயாரித்தால் என்ன என்ற கேள்வி எழுகின்றது. ஆயின் அதிலும் சிக்கல் உள்ளது. நிலக்கரி வெப்ப மின்நிலையங்களில் இயந்திர லாபம் 30 சதவீதம் மட்டுமே. இந்த விரயம் சுற்றுப்புறச் சீர்கேட்டை விளைவிக்கின்றது. நிலக்கிரியிலிருந்து மின்சக்தி எடுக்கும்போது ஏற்படும் விரயத்தைத் தடுக்க முடியுமானால் மூலப்பொருளும் நீண்ட காலத்திற்கு வரும்; சுற்றுப்புறச்சூழலும் அழியாமல் இருக்கும்.

இதற்கான ஒருபெரும், முயற்சியே எம்.எச்.டி. ஜெனரேட்டர் (M.H.D. Generator) ஆகும். இந்த முறையில் நிலக்கரி அல்லது வாயுவின் வெப்ப சக்தியைப் பயன்படுத்தி ஒரு பிளாஸ்மாவை உற்பத்தி செய்து அதனை ஒரு காந்தப் புலத்தின் குறுக்கே செலுத்தும் போது மின்சக்தி கிடைக்கின்றது. இதில் இயந்திர லாபம் 65 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரை இருக்கும். எனவே சுற்றுப்புறத்திற்கும் சீர்கேடு குறைவு. உலகின் முதல் எம்.எச்.டி. நிலையம் சோவியத்து யூனியனில் ரையாஜன் என்னுமிடத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையம் 50 MW திறன்கொண்டதாகும். உலகின் பல இடங்களில், நம் இந்தியாவில் திருச்சி உட்பட இதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, அடுத்த நூற்றாண்டின் எரிசக்தி உற்பத்தியில் எம்.எச்.டி. ஜெனரேட்டர் முக்கிய பங்கு ஆற்றும் என்று எதிர்பார்க்கலாம்.

புதிய எரிசக்தி வளங்கள் கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகம் தள்ளப்பட்டு இருக்கின்றது. இவ்வகையில் காற்று, கடல் அலை மற்றும் வெப்பம், புவியின் வெப்பம், குப்பை கூளங்கள், உயிரினப் பொருள்கள், சூரிய ஒளி, அணுப்பிளவு, அணுச்சேர்க்கை போன்றவை நாம் ஆராய வேண்டியவை ஆகும். நம்மைச்சுற்றி எப்போதும் காற்று வீசிக்கொண்டே இருக்கின்றது. அதுவும் ஒரு சக்திதானே. அதிலிருந்தும் நாம் எரிசக்தி எடுக்கலாம். காற்று புதுப்பிக்கப்படும் மாசற்ற பாதுகாப்பான ஒரு எரிசக்தி மூலம் ஆகும். உலகக்காற்றின் வருட எரிசக்தி மதிப்பீடு 3900 குவாட்கள் ஆகும். இது நாம் இப்போது செலவழிக்கும் மொத்த எரிசக்தியைப் போல் சுமார் பத்து மடங்கு அதிகமாகும். எனவே காற்றுச் சக்தியானது இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் ஒரு மாற்று எரிசக்தியாகக் கருதப்படுகின்றது.

கடலில் நம் தேவையை நிறைவு செய்யும் அளவிற்கு அலைகளாகவும், வெப்பமாகவும் சக்தி மண்டிக்கிடக்கின்றது. ஒரு சதுர மீட்டர் பரப்பில் ஓர் ஆண்டுக்குக் கடல் அலைகளிலிருந்து கிடைக்கும் சக்தி 86 கிலோ வாட் மணிகளாகும்.

வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் வீணாகும் குப்பைகள் குறிப்பாக மரம், இரப்பர், தோல், அரிசி உமி, பிளாஸ்டிக், தேங்காய் மட்டைகள், பஸ் மற்றும் கார் டயர்கள் நாள்தோறும் குவிந்து கொண்டே இருக்கின்றன. இவைகளால் சுற்றுப்புறச் சுகாதாரமும் கெடுகின்றது. இவற்றையே எரிசக்தி உற்பத்தி செய்யப் பயன்படுத்தினால் பெரும் நன்மை விளையும். இரண்டு டன் குப்பை ஒரு டன் நிலக்கரிக்குச் சமம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

உயிரினக் கழிவுகள், விறகு, இலை, புல் போன்ற பொருள்களிலிருந்தும் எரிசக்தி எடுக்கலாம். ஆனால் இவற்றில் சக்தியின் அடர்வு மிகவும் குறைவு. எனவே இவற்றை வாயுவாக மாற்றிப் பின் எரிசக்தியாகப் பயன்படுத்தலாம். 1990-இல் மொத்த எரிசக்தியில் உயிர் பொருட்களின் பங்கு 1 சதவீதம் முதல் 4 சதவீதம் வரை இருக்கலாம்.

அடுத்து மிக முக்கியமான மாற்று எரிசக்திகளாக நமக்கு நம்பிக்கையளிப்பன சூரிய, அணுப்பிளவு மற்றும் அணுச்சேர்க்கை சக்திகள் மட்டுமேயாகும். பூமிக்குக் கிடைக்கும் சூரிய சக்தியின் மதிப்பீடு சுமார் 17,000 கோடி மெகாவாட் ஆகும். இப்போதைய உலகின் மொத்த எரிசக்தி உற்பத்தியை விட இது பல மடங்கு அதிகமாகும். இது சுற்றுப்புறத்தைக் கெடுக்காத சுத்தமான எரிசக்தி மூலம் ஆகும். இன்று சிறு அளவுகளில் சமைப்பதற்கும் விளக்குகள் எரிப்பதற்கும் அலுவலகங்களைச் சூடுபடுத்துவதற்கும், சூரிய சக்தி பயன்படுத்தப்படுகின்றது. உலகின் மொத்த எரிசக்தி உற்பத்தியில் சூரிய சக்தியின் பங்கு 1 சதவீதத்தை விட மிகக்குறைவு ஆகும்.

வியாபார அடிப்படையில் சூரிய சக்தியிலிருந்து எரிசக்தி எடுப்பது லாபகரமாக இருக்காது என்று எரிசக்தி நிபுணர்கள் கருதுகின்றனர்.

இன்று உலகின் மொத்த எரிசக்தியில் அணுப்பிளவு உலைகளில் இருந்து கிடைப்பது 12 சதவீதத்துக்கும் அதிகம். இதுவே கி.பி. 2000-இல் 25 சதவீதத்துக்குக் கூடும். அணுப்பிளவு உலைகளின் எரிபொருள் யுரேனியம் என்ற கனிப்பொருள் ஆகும். இதன் அணுக்கரு ஒரு நியூட்ரான் மோதுவதால் உடைந்து இருசிறு அணுக்கருக்களாகப் பிரியும். இந்த மாற்றத்தில் சக்தி கிடைக்கின்றது. இதையே அணுசக்தி என்கின்றோம். என்றாலும் இப்போது மற்றுமொரு முறையில் அணுசக்தி கிடைப்பதால் இதனை அணுப்பிளவு சக்தி என்று குறிப்பிடலே பொருந்தும். இப்போதைய வேக அணு உலைகளில் (Fast Breed Reactor) புளோடோனியம் என்ற புதிய எரிபொருள் உற்பத்தியாகின்றது. இப்புவியில் உள்ள யுரேனியம் ஒரு நூற்றாண்டிற்கு மேல் நம் எரிசக்தித் தேவையைப் பெரிதும் நிறைவு செய்யப் போதுமானது. ஆனால் அணுப்பிளவு எரிசக்தி நிலையங்களினால் சுற்றுப்புறக் கேடு வராமல் தடுக்க மிகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அணு உலைகளில் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் மற்றும் பிளவுபட்ட அணுக்களின் கதிர்வீச்சு ஒரு நூற்றாண்டு காலத்திற்கு அபாயகரமானது. கதிர்வீச்சுக் குப்பைகளை (கழிவு)ப் பாதுகாப்பாகச் சேமிப்பது என்பது அணுப்பிளவு எரிசக்தி நிலையங்களுக்கு மிகப்பெரிய சவாலாகும்.

இரண்டு சிறு அணுக்கருக்கள் சேர்ந்து ஒரு பெரிய அணுக்கரு உருவானால் அதனை அணுச்சேர்க்கை என்கின்றோம். இந்த மாற்றத்தில் சக்தி வெளிப்படுகின்றது. இதனை எரிசக்தியாக மாற்றலாம். மிக மிக உயர்ந்த வெப்பநிலையில் உள்ள பிளாஸ்மாவில்தான் இத்தகைய அணுச்சேர்க்கை நடக்கும். இதுபோன்ற அணுச்சேர்க்கை நடக்கும் உலையைக் கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப அணுச்சேர்க்கை உலை எனலாம். இந்த அணுச்சேர்க்கை உலைக்குத் தேவையான எரிபொருள் கடல்நீரில் ஏராளமாக உள்ளது. எனவே இந்த முறையில் எரிசக்தி உற்பத்தி செய்தால் பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு உலகின் மொத்த எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

முடிவாகச் சொல்லப்போனால் அணுச்சேர்க்கை, எம்.எச்.டி. ஜெனரேட்டர் மற்றும் காற்று முதலியன எரிசக்தி உற்பத்தியில் பெரும்பங்கு ஆற்றும் என்றும், அணுப்பிளவு, குப்பை கூளங்கள், நீர், உயிர்பொருள்கள் முதலியனவும் ஓரளவுக்குத் தேவையைப் பூர்த்தி செய்யும் எனவும் எதிர்பார்க்கலாம்.''

மொழிப்பயன்பாட்டுக் குறிப்புகள்

பொதுவாகத் தமிழில் அறிவியல் கட்டுரை எழுதும்போது ஏற்படும் ஒரு சிக்கல், அளவுக்குறியீடுகளை எவ்வாறு மொழி பெயர்ப்பது என்பதாகும். ஆங்கிலக் கலைச்சொற்களை ஒலியாக்கம் செய்து தமிழில் எழுதுகிற போது கூடக் கருத்தை ஓரளவு சுட்டிக்காட்ட முடியும். ஆனால் அளவுக் குறியீடுகளில் அது சிக்கலாக இருக்கிறது. சான்றாக ''1970-இல் நாம் பயன்படுத்திய மொத்த எரிசக்தியின் அளவு 240 குவாட்கள் ஆகும்'' என்ற தொடரில் குவாட் என்ற சொல் பயன்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். குவாட் என்பது என்ன? அஃது ஓர் அளவு. அஃது ஆங்கிலத்தில் "1 quard = $1.05X10^{18}$ Joules" என்று வரையறை செய்யப்படுகிறது. இதை எவ்வாறு தமிழில் விளக்குவது? இது இயற்பியலில் அடிப்படையான, நுட்பமான ஓர் அளவை இஃது ஆற்றலை அளக்கப் பயன்படுவது. நுட்பமான இயற்பியல் புலமைக்கு இது தேவைப்படும். ஆனால் அறிவியல் பொதுக்கட்டுரைகளில் இந்த நுட்பங்கள் மிக இன்றியமையாதவை அல்ல. எனவே குவாட் என்பதற்கான நுட்ப விளக்கம் இங்கே தரப்படவில்லை. ஆனால் ''முப்பது ஆண்டுக்குப்பின்

2000 குவாட் எரிசக்தி தேவைப்படும்'' என்று குறிப்பிடும்போது பத்து மடங்கு எரிசக்தி தேவையாகிறது என்னும் தேவைப்பெருக்கத்தின் உண்மையைக் சுட்டுரை வெளிப்படுத்துகிறது. அறிவியல் மொழிநடையில் இஃது ஒரு முக்கியமான கூறு. அறிவியில் பொதுக்கட்டுரைகளில் அதன் பயன்பாட்டு நோக்கம் சிதைவுபட்டுவிடும் வகையில் அறிவியல் நுட்பக் கருத்துக்களின் மிகை வருணனை இடம் பெற்று விடலாகாது.

பொதுவாக அறிவியல் கட்டுரைகளில், அறிவியல் சொற்களுக்கான நேரடிப் பொருள் வரையறை முக்கியமான ஒன்று என்பதை அறிந்திருப்பீர்கள். அதுவும் நடைமுறைப் புழக்கத்திலுள்ள ஒரு சொல்லைக் கலைச்சொல்லாகப் பயன்படுத்தும் போது, பொருட்சிதைவு, பொருள் மாறுபாடு, அல்லது குழப்பம் நேரிட்டுவிடக்கூடாது. சான்றாக, 'எரிசக்தி' என்றால் சாதாரணமாக நமக்கு என்ன தோன்றும்? வெப்பம் நினைவுக்கு வரும். 'ஒளி என்பது கூடத் தோன்றலாம். 'இயந்திரங்களை இயக்குதல்' என்பது நினைவில் தோன்றுமா? பெரும்பாலும் தோன்றாது. எனவே 'எரிசக்தி'யைப் பற்றி எழுதத் தொடங்குவதற்கு முன், 'எரிசக்தியை'ப் பற்றி, அச்சொல் எக்கருத்தை உள்ளடக்கியிருக்கிறது என்று வரையறை செய்து விட்டுத் தொடங்குவது சிறப்பு உடையதாகும். அத்தகைய ஒரு தொடக்கத்தை, அது சுருக்கமாகவும் எளிமையாகவும், நேரடிப்பொருள் விளக்கமாகவும் அமைந்திருப்பதைக் கூர்ந்து நோக்குங்கள்.

ஒரு புதிய கருத்தை, அறிவியல் கோட்பாட்டை, அறிவியல் சொற்களின் வழியாகவே எடுத்து வரையறை செய்வது அறிவியல் கட்டுரைகளில் காணப்படும் இயல்பு ஆகும். சான்றாக 'அணுச்சேர்க்கை' என்ற கொள்கை - இவ்வாறு இப்பாடப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது: ''இரண்டு சிறிய அணுக்கருக்கள் சேர்ந்து ஒரு பெரிய அணுக்கரு உருவானால் அதனை அணுக்கொள்கை என்கிறோம்''. இந்த இடத்தில் அணு என்றால் என்ன, கரு என்றால் என்ன என்பது விளக்கப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. இத்தொடர் அணுச்சேர்க்கை பற்றிய ஒரு பொருள் வரையறை. அது வெற்று, வீண் விளக்கச் சொற்களால் நீட்டப்படாமல், மேலே கண்டவாறு சுருக்கமாக அமைவதே சிறப்பு.

'இவைகளால் சுற்றுப்புறச் சுகாதாரம் கெடுக்கிறது' என்ற தொடரை எண்ணிப்பாருங்கள். 'இவை' என்பதே பன்மை; இதற்கு மேலும் ஒரு 'கள்' என்ற பன்மை விகுதி தேவயா? தேவையில்லை. எனினும் எளிமை கருதி இவ்வாறு எழுதும் முறை பரவலாகக் காணப்படுகிறது. 'இவற்றால்' என்று எழுதலாம்.

தன் மதிப்பீடு : 2

பயிற்சியும் வினாக்களும்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. கி.பி. 2000-த்தில் நமக்குத் தேவையான எரிசக்தி __________ ஆகும்.
2. நாம் தற்சமயம் அதிகம் பயன்படுத்தும் எரிசக்திப் பொருள்கள் ____ ஆகிய ஐந்தும் ஆகும்.
3. எம்.எச்.டி. ஜெனரேட்டர் என்பது __________________________ அல்லது _________________________________ வெப்ப சக்தியைப் பயன்படுத்தி மின்சக்தியை எடுப்பது ஆகும்.
4. எரிசக்தியாக மாற்றத்தகுந்த அணுச்சேர்க்கை, மிக மிக உயர்ந்த வெப்பநிலையில் உள்ள ________________________ தான் நடக்கும்.

2. விடை எழுதிப் பயிற்சி கொள்க

1. காற்று எரிசக்தியாகப் பயன்படும் விதம் பற்றி எழுதுக.
2. புதிய எரிசக்தி வளங்களை எந்த மூலப்பொருள்களில் அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

7.3 சத்தம்

நாள்தோறும் எத்தனை வகையான ஒலிகளை நாம் கேட்க நேரிடுகிறது! சில ஒலிகள் இனியவை; சில ஒலிகள் கொடியவை. சில ஒலிகள் இயற்கையானவை; சில ஒலிகள் செயற்கையானவை. 'ஒலி' என்பது நம் மனநலத்தை, மனச்சூழ்நிலையை மாற்றியமைக்கிற ஆற்றல் பெற்றது; சில சமயங்களில் உடல் நலத்தைக் கூடப் பாதித்து விடக் கூடியது. ஒலி என்பதை வகைகளை வேறுபடுத்திக் காட்டச் சொன்னால் நாம் புல்லாங்குழல் ஒலி, புகைவண்டி ஒலி, அழுகை ஒலி என்றெல்லாம் வகைப்படுத்துவோம். ஆனால் அறிவியல் அறிஞர்கள், ஒலியின் அதிர்வு எண்களை அளவிட்டு ஒலியின் தன்மையை விளக்கிக் காட்டுவார்கள். 'ஒலி' என்பது பற்றிய அறிவியல் சிந்தனைகளை ஆர். நடராசன் என்பவர் 'சத்தம்' என்ற கட்டுரையில் விளக்கும் போது எத்தகைய சிறப்பான மொழித்திறன்களை வெளிப்படுத்துகிறார் என்பதைப் பார்க்கலாம்:

''பூஜ்யம் டிகிரி சென்டிகிரேட் நிலையில் உள்ள காற்றில் ஒலியின் வேகம் மணிக்கு 740 மைல் வெப்பநிலையில் ஏற்படும் மாறுதலுக்குத் தகுந்தவாறு ஒலியின் வேகமும் மாறுபடும். 100 நிலையிலுள்ள காற்றில் ஒலியின் வேகம் மணிக்கு 839 மைல் ஆகும். இரவு நேரங்களில் காற்றின் வெப்பம் பூமியின் பரப்பிலிருந்து மேலே செல்லச் செல்ல அதிகரித்துக் கொண்டே செல்லும். எனவே வெவ்வேறு உயரங்களில் வெவ்வேறு வேகத்தினைக் கொண்டதாய் ஒலியிருக்கும். மேலும் பெரும்பாலான ஒலிக்கதிர்கள் காற்று மண்டலத்தால் பூமியை நோக்கித் திருப்பப்படும். ஆகையால்தான் இரவு நேரங்களில் சத்தம் வெகு துல்லியமாகவும், வெகு தூரம் வரையிலும் கேட்கும். இரவு நேர அமைதியும் மற்றொரு காரணம்.

நம்மால் 20 ஹெர்ட்ஸிலிருந்து 20,000 ஹெர்ட்ஸ் வரையுள்ள ஒலிகளை மட்டுமே கேட்க இயலும். 20 ஹெர்ட்ஸ்க்கு (hertz)க் கீழுள்ள ஒலிகளை 'இன்ஃப்ரா சவுண்டு (Infra sound) என்பர். 20,000 ஹெர்ட்ஸ்க்கு அதிகமுள்ள ஒலிகளை 'அல்ட்ரா சவுண்டு' (Ultra sound) என்பர். வெளவால்களால் 1,50,000 ஹெர்ட்ஸ் அதிர்வுள்ள ஒலிகளையும் கேட்க முடியும்.

சத்தத்தின் அளவை டெசிபல் மீட்டரின் உதவியால் கணக்கிடு கின்றனர். மர இலைகள் சலசலக்கும்போது ஏற்படும் ஒலியின் அளவு 20 டெசிபல். நெருக்கமான சாலைகளில் ஏற்படும் இரைச்சலின் அளவு ஏறத்தாழ 70 டெசிபல். நயோகரா அருவியின் அருகில் கேட்கும் ஒலியின் அளவு ஏறத்தாழ 90 டெசிபல் ஆகும்.

தேவையற்ற தொந்தரவு தரக்கூடிய ஒலியே சத்தமாகும். சூழ்நிலையைப் பொறுத்தும், கேட்போரின் மனநிலையைப் பொறுத்தும் ஒலி இடைஞ்சல் செய்கிறது. நூலகங்களில் ஏற்படும் சிறு ஒலியும், சினிமாப்படம் நடந்து கொண்டிருக்கையில் அருகிலுள்ளவர் பாப்கார்ன் சாப்பிடும் போது ஏற்படும் ஒலியும்கூட எரிச்சல் மூட்டுகின்றன.

சில வேளைகளில் புதிய இசையும் மக்களின் எதிர்ப்பைப் பெறுகின்றது. திரு இகார் ஸ்ட்ரா வின்ஸ்கி 1913-இல் பாரீஸில் 'தி ரைட் ஆஃப் ஸ்பரிங்'கை (The Right of Spring) இசைத்தபோது மக்களின் பயங்கர எதிர்ப்பைப் பெற்றது. ஆனால் அது இன்று பலராலும் விரும்பப்படுகின்றது.

நமக்கு இருகாதுகள் இல்லாது ஒரு காது மட்டும் இருந்தால் ஒலிவரும் திசையை உணரச் சிறிது இடர்ப்படுவோம். ஒலியை உண்டாக்கும் பொருள் நமக்கு இடது பக்கம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொருளில் இருந்து வெளி வரும் ஒலி இடது காதை அடைவதற்கும் வலது காதை அடைவதற்கும் எடுத்துக்கொள்ளும் நேரங்களில் சிறிது வேறுபாடு இருக்கும். மேலும் இருகாதுகளை

அடையும் ஒலியின் அளவுகளும் (Intensity) சிறிது வேறுபடும். இவ்வேறுபாடுகளை மூளை உணர்ந்து, ஒலி வரும் திசையை நமக்குத் தெரிவிக்கின்றது.

ஒருவனை நோக்கி வரும் இரயிலின் ஊதுகுழல் சத்தம் அதிகரித்துக் கொண்டே வருவது போலவும், அவனைக் கடந்து இரயில் சென்றதும் அவ்வோசை குறைந்து கொண்டே செல்வது போலவும் தோன்றும். இதற்கு 'டாப்ளர் விளைவு' (Doffler Effect) என்று பெயர். இரயிலில் பயணம் செய்பவனோ இவ்வாறு உணர்வதில்லை.

சில நிகழ்ச்சிகளில் ஓசையின் பங்கு மிகத் தேவை. கார் ரேஸ், பைக் ரேஸ் போன்றவற்றில் ஓசை இல்லையேல் அப்போட்டிகளில் உந்து வேகம் இராது. ஓசையே இல்லாத சூழ்நிலையும் சிலருக்கு எரிச்சல் ஏற்படுத்தும். எனவேதான் ஓசை ஆய்வியல் துறையைச் சார்ந்த இஞ்சினியர்கள் சில அலுவலகங்களில் குறிப்பிட்ட அளவு ஓசையிருக்குமாறு வைப்பார்கள். இவ்வாறு ஏற்படுத்தப்படும் ஒலி நம்முடைய கவனத்தை மற்றைய ஓசைகளினின்று திருப்புகின்றது. இத்தகை ஒலிக்கு 'வெள்ளைச் சத்தம்' (White noise) என்று பெயர். ப்ளேட், டம்ளர் போன்றவை கழுவப்படும் போது ஏற்படும் ஒலியினின்றும், 'ஓர்ர்...ரு ஸ்பெஷல் சாதா....' போன்ற எரிச்சலூட்டும் சத்தத்திலிருந்தும் நம் கவனத்தைத் திசை திருப்பவே சில ஹோட்டல்களில் வானொலியைப் பாட விட்டுவிடுவர். இதுவும் 'ஒயிட் நாய்ஸ்' தான்.

ஓர் அறையிலுள்ள ஒலியின் அளவை 95 சதவிகிதம் எளிதாகக் குறைக்க முடியும் என்று ஓசை ஆய்வியல் துறையைச் சார்ந்த எஞ்சினியர்கள் கூறுகின்றனர். இதற்கு அவர்கள் திரைச்சீலைகளையும், ஓசைப் புலனைச் சார்ந்த ஒடுகளையும் பயன்படுத்துகின்றனர்.

அதிக அளவு சத்தத்தைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டு இருந்தால் காதுகேளாத்தன்மை (Boiler maker's deafness) உண்டாகும். மேலும் உடல் நலமும் பாதிக்கப்படும்.

விண்வெளிப்பயணிகள் பூமியிலிருந்து இராக்கெட்டில் கிளம்பும் போது தகுந்த பாதுகாப்பு முறைகளைக் கையாளாவிடில் நெஞ்செலும்புக்கூடு அதிர ஆரம்பிப்பதுடன், வலிப்பு, காது கேளாத்தன்மை போன்றவை ஏற்படும். சில நேரங்களில் மரணமும் சம்பவிக்கலாம். விண்வெளி இராக்கெட்டுகள் கிளம்பும்போது ஏற்படும் ஒலியின் அளவு 175 டெசிபல் ஆகும்,

திடீரென்று ஏற்படும் ஒலியால் இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு போன்றவை அதிகரிக்கும்; தசைகள் சுருங்கம்; வியர்த்தல் அதிகப்படும்; அஜீரணம் ஏற்படும்.

85 டெசிபல் அளவிற்கு அதிகமாய்ச் சத்தம் கொண்ட அறைகளில் தொழிலாளர்கள் தகுந்த பாதுகாப்புக் கருவிகள் இல்லாது நாளொன்றுக்கு 5 மணி நேரங்களுக்கு மேல் வேலை செய்தல் மிகக் கெடுதல்.

மிகு அதிர்வொலியைப் (Ultra-sound) பல்லில் துளையிடவும், உலோகப் பொருட்களிலுள்ள குறைகளைக் கண்டுபிடிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

பூகம்பத்தின் போது உண்டாகும் அதிர்வலைகளால் ஏற்படும் ஒலி அகவொலி (Infra sound) ஆகும். அகவொலியைப் பூமிக்கடியில் எண்ணெய் இருப்பைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்துகின்றனர்.

மொழிப்பயன்பாட்டுக் குறிப்புகள்

ஒலியைப் பற்றிய இப்பாடப்பகுதியில் சென்டிகிரேட், ஹெர்ட்ஸ், டெசிபல் போன்ற அளவுக் குறியீட்டுச் சொற்களை நாம் பார்க்கிறோம். சென்டிகிரேட் என்பது தமிழ்ச்சொல் அல்ல என்றாலும் வெப்பத்தை அளப்பதற்குரிய ஒரு குறியீடு என்று பழக்கத்தினால் புரிந்துகொள்கிறோம். ஆனால் ஹெர்ட்ஸ், டெசிபல் ஆகியவை என்னவென்று பொருள் புரிவதில்லை. ஆனால் அவை ஒலியின் அளவை கணக்கிடுவதற்குரிய ஒரு

குறியீடு என்று மட்டும் புரிந்து கொள்கிறோம். அறிவியல் கட்டுரைகளில் இதுபோல சில சிக்கல்கள் ஏற்படுவது இயற்கை. அவ்வத் துறைகளில் புலமை பெறுவோர் மட்டும் இச்சொற்களுக்குரிய நுட்பமான பொருள் வரையறைகளை அறிந்து கொண்டால் போதுமானது. ஆனால் பிற நிலைகளில் இதுபோன்ற அறிவியல் பொதுக் கட்டுரைகளில் இச்சொற்களைப் பற்றிய ஒரு பொதுவான அறிமுகக்கருத்தே போதுமானது. அதாவது இச்சொற்கள் ஒரு வகையான அளவைக் குறிக்கின்றன என்ற அளவில் மட்டுமே இக்கட்டுரையில் ஹெர்ட்ஸ், டெசிபல் ஆகிய சொற்களின் பயன்பாடு அமைகிறது. அறிவியல் மொழிப்பயன்பாட்டில், அளவுக் குறியீடுகள், துல்லியமாக உணர்த்துவதற்காகப் பயன்படுத்துவது ஒரு நிலை. அறிவியல் பாடக்கட்டுரைகளில் இவை விளக்கி எழுதப்படும். ஆனால் அறிவியல் பொதுக்கட்டுரைகளில் துல்லிய அளவு வரையறையைவிடத் தோராயமான மதிப்புக் கருத்துருவாக்கமே முதன்மை பெறும் கூறு ஆகும்.

'சத்தம்' என்ற சொல்லைக் கவனியுங்கள். இது 'சப்தம்' என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் உருவாக்கம். ஒலி என்று பொருள் தருவது; அப்படியானால் 'ஒலி' என்றே எழுதி விடலாம் அல்லவா? எழுதலாம். ஆனால், இக்கட்டுரை ஆசிரியர் 'ஒலி' என்பதிலிருந்து 'சத்தம்' என்பதற்கு ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டைத் தருகிறார். ''தேவையற்ற தொந்தரவு தரக்கூடிய ஒலியே சத்தமாகும்'' என்று பொருள் வரையறை தருகிறார்.

இவ்வாறு ஒரு குறிப்பிட்ட கருத்தில், பொருள் வேறுபாட்டினைச் சுட்டிக் காட்டும்படியான சூழ்நிலைகள் தோன்றும்போது வேறு வேறு சொற்களைப் பயன்படுத்துவது அறிவியல் தமிழுக்குப் பொருந்துவதாகும். அத்துடன் எந்த நோக்கில் அச்சொல் பயன்படுத்தப்படுகிறது என்ற நோக்கையும் பொருள் வரையறை செய்து எழுதுவது அறிவியல் நடைக்குச் சிறப்பைத் தருவதாகும்.

ஒலிக் கதிர்கள், அதிர்வு, வெள்ளைச் சத்தம், காது கேளாத்தன்மை, மிகு அதிர்வொலி, அகவொலி ஆகிய புதிய கலைச்சொற்கள் உருவாக்கப் பட்டிருப்பதை நோக்கி மனத்தில் நிறுத்துங்கள். அறிவியல் கட்டுரைகளில் ஒரு புதிய கலைச்சொல்லை அறிமுகப்படுத்தும்போது எவ்வாறு ஒரு சுருக்கமான குறிப்புடன் எழுதுவது என்பதற்குச் சான்றாக இப்பாடப் பகுதியில் 'பூகம்பத்தின்போது உண்டாகும் அதிர்வலைகளால் ஏற்படும் ஒலி அகவொலி ஆகும்' என்பதைக் காணலாம்.

இப்பாடப்பகுதியில், பரவலாகச் சாதாரணப் பேச்சு வழக்கில் உள்ள பல சொற்கள் இடம் பெற்றுள்ளன. தொந்தரவு, இடைஞ்சல், சினிமா, பயங்கர எதிர்ப்பு, இஞ்சினியர், ஹோட்டல், சம்பவித்தல், பூகம்பம் போன்றவற்றைக் கவனியுங்கள். இடையூறு, திரைப்படம், கடும் எதிர்ப்பு, பொறியாளர், உணவு விடுதி, நேர்தல், பூமி அதிர்வு ஆகிய தமிழ்ச் சொற்களையும் மேற்குறித்த சொற்களுக்கு மாற்றாக எழுதலாம். தமிழ் இதழ்களில் பொதுமக்களைக் கருத்தில் கொண்டு எழுதப்படும் கட்டுரைகளில் பேச்சுவழக்குச் சொற்கள் ஓரளவு இடம் பெற்று விடுவது வழக்கமாக உள்ளது.

இரயில், இராக்கெட் ஆகிய சொற்கள் ரயில், ராக்கெட் என்ற சொற்களின் தமிழ் ஒலியாக்கப்பட்ட வடிவமாகும். 'ர' என்பது தமிழில் முதல் எழுத்தாக வராது என்பதால் 'இ' என்ற எழுத்து - தமிழ் மரபில் ஒலி அமைவதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. நாளடைவில் இச்சொற்களைப் புகைவண்டி, ஏவுகணை என்பன போலத் தமிழாக்கி எழுதவும் முயற்சி செய்யலாம்.

'இன்ஃப்ரா சவுண்ட்' மற்றும் 'அல்ட்ரா சவுண்ட்' ஆகிய சொற்கள் தமிழ் ஒலியாக்கக் கலைச்சொற்கள். இவற்றை எவ்வாறு தமிழ்ப்படுத்துவது? முதலில் இதன் பொருள் என்ன என்று பார்க்க வேண்டும். 'இன்ஃப்ரா சவுண்ட்' என்பது 20 ஹெர்ட்சுக்குக் கீழ் உள்ள ஒலியைக் குறிக்கும். 'குறைந்த அலைவெண் ஒலி' என்று இதைக் குறிப்பிடலாமா? இதைக் கலைச்சொல்லாக்க வேண்டுமானால், இதன் பொருள் வரையறை ''இருபது

ஹெர்ட்சுக்குக் குறைந்த அலைவெண் கொண்ட ஒலி'' என்று ஆகும். இதேபோல ''மிகுந்த அலைவெண் ஒலி'' என்பது 20,000 ஹெர்ட்சுக்கு அதிகமானதைக் குறிப்பதாகப் பொருள் வரையறை செய்யலாம். இவற்றை மேலும் சுருக்கி முறையே 'அகஒலி' என்றும் 'அதிர்வொலி' என்றும், பொருள்வளத்துடன் கையாளப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். தமிழ்க் கலைச்சொல்லாக்கம் இவ்வாறுதான் செம்மையாக்கப்படுகிறது.

தன்மதிப்பீடு : 3

பயிற்சியும் வினாக்களும்

வினாக்கள்

1. வெவ்வேறு உயரங்களில் வெவ்வேறு வேகத்தினைக் கொண்டதாக ஒலி இருக்குமா?
2. நம்மால் 20,000 ஹெர்ட்ஸ் வரையுள்ள ஒலிகளைக் கேட்க இயலுமா?
3. ஒலியின் அளவைக் கணிக்க உதவும் அளவு என்ன?
4. அதிக அளவு சத்தத்தைக் கேட்கும்போது காது கேளாத்தன்மை ஏற்பட வாய்ப்பு உண்டா?
5. பூமி அதிர்ச்சியின் பொழுது ஏற்படும் ஒலி எவ்வகைப்பட்டது?
6. டாப்ளர் விளைவு என்றால் என்ன?
7. வெள்ளைச் சத்தம் என்றால் என்ன?
8. திடீரென்று கேட்க நேரிடும் பெருத்த ஒலியால் உடலில் ஏற்படும் மாறுதல் யாவை?

7.4 பாடத்தொகுப்புரை

இப்பாடப் பகுதியில் இயற்பியல் சார்ந்த சில பாடங்களைக் கற்றுக் கொண்டீர்கள். அப்பாடங்களில் நீங்கள் சில அறிவியற் செய்திகளை அறிந்து கொண்டிருப்பீர்கள். அத்தகைய அறிவியற் செய்திகள் உங்கள் அறிவு வளர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் துணைபுரிவதாக அமையும். அதே நேரத்தில் இப்பாடப் பகுதிகளின் வழி தமிழ் எவ்வாறு அறிவியல் மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் உணர்ந்திருப்பீர்கள் அல்லவா? சில புதிய கலைச்சொற்களைக் கற்று அறிந்திருப்பீர்கள்! எவ்வாறு கலைச்சொற்களை ஆக்க வேண்டுமென்பதையும் அறிந்திருப்பீர்கள். அறிவியல் கட்டுரைகளை எவ்வாறு தமிழ் மரபுக்கேற்ப எழுதுவது என்று நீங்கள் இங்கே பெற்ற பயிற்சியைக் கொண்டு அறிவியற்செய்திகளைத் தமிழில் எழுத முயற்சி செய்யலாம்.

7.5 அறிவியல் கலைச்சொற்கள்

I இயற்பியல்

1) ஏற்றும் முறை (Pumping method)
2) தொகை தலைகீழாக்கம் (Population inversion)
3) ஒளியிழைத்தொடர்புத்துறை (Optical fibre communication)
4) நிறப்பிறழ்ச்சி (Chromatic aboration)
5) பெருந்திறமை நினைவு (Large capacity memory)
6) காற்றுப் புழல் (Wind tunnels)
7) மென்படலம் (Thin Film)

II 1) புதையுண்ட எரிபொருள் (Fossil fuel)
2) வெப்ப மின்நிலையம்
3) அணுப்பிளவு
4) அணுச்சேர்க்கை

5) உயிரினக் கழிவு
6) நியூட்ரான்

III 1) குறைந்த அலைவெண் ஒலி (Infra sound)
2) மிகுந்த அதிர்வொலி (Ultra Sound)
3) ஒலியின் அளவு (Intensity)
4) காது கேளாத்தன்மை (Boiler maker's deafness)

7.6 தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

1) தமிழ்நாட்டுப் பாடநூல் வெளியீட்டு நிறுவனம் ஒவ்வொரு துறையிலும் பட்ட வகுப்புக் கல்விக்கேற்பப் பல நூல்கள் வெளியிட்டுள்ளன. அவற்றைப் படித்துப் பாருங்கள்.

2) கலைக்கதிர், மஞ்சரி போன்ற இதழ்களில் அவ்வப்போது இத்துறை சார்ந்த அறிவியல் பொதுக்கட்டுரைகள் வெளியாகின்றன. அவற்றைப் படித்துப் பாருங்கள்.

தன் மதிப்பீடு - விடைகள்

I. 1. அய்ன்ஸ்டீன், 2. நிறப் பிறழ்ச்சியினால், 3. ரூபி, 4. மேகங்களைப் பற்றியும் நிலவின் தூரத்தை அளக்கவும், 5. பெருந்திறமையுடைய நினைவுகள்.

II. 1. தூண்டப் பெற்ற கதிர் வீச்ச வெளியீட்டால் ஒளியைப் பெருக்குதல் என்பதுதான் லேசர், 2. திட நிலை லேசர், வாயு லேசர், குறை கடத்தி லேசர், வேதியியல் லேசர், திரவ லேசர் என்பன ஐந்து அடிப்படை வகைகளாகும், 3. ஒளியிழைத் தொடர்பு என்பது செய்தித் தொடர்பாகும். இதன் மூலமாக ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் ஒரு மிகச் சிறிய கண்ணாடி இதை வழியே கேட்கவும், பேசவும் முடியும். லேசர்கள் இதற்குப் பயன்படும். மைக்ரோ ஒலி அலைகளை வெளியிட வல்லன.

2. I. 1. 2000 குவாட்கள், 2. எண்ணெய், வாயு, நிலக்கரி, யுரேனியம், நீர், 3. நிலக்கரி (அல்லது) வாயுவின், 4. பிளாஸ்மாவில்

II. 1. காற்று பாதுகாப்பான ஒரு எரிசக்தி மூலம் ஆகும். உலகக்காற்றின் வருட எரிசக்தி மதிப்பீடு 3900 குவாட்கள் ஆகும். 21 ஆம் நூற்றாண்டில் காற்று ஒரு மாற்று எரிசக்தியாகப் பயன்படும், 2. காற்று, கடல் அலை, வெப்பம், புவியின் வெப்பம், குப்பைகூளம், உயிரினப் பொருள்கள், சூரிய ஒளி, அணுப் பிளவு, அணுச் சேர்க்கை போன்ற மூலப் பொருள்களிலிருந்து புதிய எரிசக்தி வளங்களை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. 1. ஆம். வெப்ப நிலை மாறுதலுக்கு ஏற்ப ஒலியின் வேகம் வேறுபடும். 2. கேட்க இயலும், 3. ஒலியின் அளவை டெசிபல் மீட்டரின் உதவியால் கணக்கிடுகின்றனர், 4. அதிக அளவு சத்தத்தைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தால் காது கேளாத்தன்மை உண்டாகும், 5. பூமி அதிர்ச்சியின் பொழுது ஏற்படும் ஒலி அகவொலி (Infra sound) எனப்படும், 6. ஒருவனை நோக்கி வரும் இரயிலின் ஊதுகுழல் சத்தம் அதிகரித்துக் கொண்டே வருவது போலவும் அவனைக் கடந்து இரயில் சென்றதும் அவ்வோசை குறைந்து கொண்டே செல்வது போலவும் தோன்றும். இதற்கு ‘டாப்ளர் விளைவு’ (Doffler effect) என்று பெயர், 7. குறிப்பிட்ட ஒலி நம் கவனத்தைப் பிற ஓசைகளினின்றும் திருப்பப் பயன்படுத்தப்படுமானால் அந்த ஒலிக்கு ‘வெள்ளைச் சத்தம்’ என்று பெயர், 8. திடீரென்று கேட்க நேரிடும் பெருத்த ஒலியால் உடலில் இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு அதிகரிக்கும், தசைகள் சுருங்கும்; வியர்த்தல் அதிகப்படும், அஜீரணம் ஏற்படும்.

இந்திரா காந்தி
தேசியப் பொது நிலைப் பல்கலைக்கழகம்
கலைக்கல்வித்துறை

BTLLA-135
Modern Indian Language : Tamil

தமிழ்
இளநிலைக்கல்வி

தொகுதி

2

இலக்கிய வகைகளில் தமிழின் வளர்ச்சி

பாடப்பகுதி 8
புனைகதை இலக்கியம் *3*

பாடப்பகுதி 9
வாழ்க்கை வரலாறு *13*

பாடப்பகுதி 10
கட்டுரைக்கலை *25*

பாடப்பகுதி 11
நாடகம் *44*

பாடப்பகுதி 12
மரபுக்கவிதை *62*

பாடப்பகுதி 13
மறுமலர்ச்சிக் கவிதைகள் *76*

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

தொகுதி அறிமுகம்
இலக்கிய வகைகளில் தமிழின் வளர்ச்சி

அறிமுகம்

உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இன்று பேசப்பெற்று வருகின்றன. அவற்றுள் பத்திற்கும் குறைவான மொழிகள் தொன்மையான வரலாற்றை உடையனவாக உள்ளன. இந்தச் சில மொழிகளுள் இன்றுவரை பேச்சுவழக்கிலும் எழுத்துவழக்கிலும் பயன்பாட்டில் உள்ள மொழியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது. இடைவெளியற்ற இலக்கண இலக்கிய வரலாற்றை நெடுங்காலமாகப் பெற்றுள்ள மொழியாகவும் தமிழ் மொழி திகழ்கின்றது. இத்தகைய காரணங்களால் செம்மொழி என்றும் அழைக்கப்பெறுகின்றது. இத்தகு பெருமைக்குரிய தமிழ்மொழியின் இயல்புகளை இந்தத் தாளின் முதல் பகுதியில் அறிய இருக்கிறோம். தமிழ்மொழியில் எழுதப்பெற்ற வளமான இலக்கியங்களைக் கற்று அவற்றின்வழி இலக்கியங்கள் படைக்கப்பெறுகின்ற பாங்கை இந்தத் தாளின் இரண்டாவது பகுதிவழி அறிய உள்ளோம்.

பகுதி ஒன்று : தமிழ்மொழியின் சிறப்பியல்புகள்

ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் அந்த மொழிசார்கல்வியின் அடிப்படைகளுள் ஒன்று. இதற்கு மொழியின் சிறப்பியல்புகளை அறிந்துகொள்ளுதல் முதல் பணியாகும். இதன்வழி நாம் பணியாற்றும் பல்வேறு சூழல்களில் மொழியை வலுவாகக் கையாள இயலும். இந்தக் கையாளுகையே ஒருவரது வாழ்க்கையின் வெற்றியைப் பலபோது தீர்மானிக்கும். மொழியைக் கையாளுதல் என்பது, மொழியில் எழுதப் பெற்றுள்ள படைப்புகளைப் புரிந்துகொள்ளுதல் என்ற மற்றொரு நோக்கத்தையும் உள்ளடக்கியது. ஒரு மொழியில் எழுதப்பெற்றுள்ள மக்களின் வாழ்க்கை முறையைப் படம்பிடித்துக்காட்டும் இலக்கியங்களை, இலக்கியம்சார்ந்த எழுத்துரைகளைக் கற்பதன்வழி நாம் நம் வாழ்க்கையைச் செழிப்பாக்கிக்கொள்ள முடியும். இத்தகு இலக்கியம் கற்றலுக்கான வழிமுறைகளை உள்வாங்க இந்தத் தொகுதியின் பாடங்கள் துணைநிற்கும்.

பாடம் 8 புனைகதை இலக்கியம் (Fiction).

பாடம் 9 வாழ்க்கை வரலாறு (Biography).

பாடம் 10 கட்டுரைக்கலை (Art of Essay).

பாடம் 11 நாடகம் (Drama).

பாடம் 12 மரபுக்கவிதை (Traditional Poems).

பாடம் 13 மறுமலர்ச்சிக்கவிதைகள் (Rehaissance Poetry).

பாடப்பகுதி (Unit) 8
புனைகதை இலக்கியம் (Fiction)

படிப்பு நோக்கம்

★ புனைகதைக் கலையின் திறன்களை அறிந்து கொள்ளல்.

★ புனைகதை படைக்கும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்.

★ புனைகதை படைப்பதற்கான மொழித்திறன் பெறுதல்.

பாடக் கருத்தலகுகள்

8.0 பாட முன்னுரை

8.1 புனைகதைக் கூறுகள்

8.1.1 கரு

8.1.2 கதைப் பின்னல்

8.1.3 பாத்திரங்கள்

8.1.4 உத்திகள்

8.1.5 கதை: சர்ஜன் வாசுக்குட்டி

8.1.6 படைப்பு நுட்பங்கள்

8.2 தொகுப்புரை

8.3 தொடர்ந்து படித்தற்குரிய துணைநூல்கள்

ignou THE PEOPLE'S UNIVERSITY

8.0 பாட முன்னுரை

சிறுகதையைப் பற்றி அறிந்து கொள்ளல் ஒன்று. சிறுகதை எழுதுதல் வேறு. சிறுகதை எழுதுவோர்கள் எல்லாம் சிறுகதை பற்றி அறிந்திருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் சிறுகதை எழுதுவோர் அதுபற்றி அறிந்திருத்தல் அவர்தம் திறமையைச் செறிவும் சீர்மையும் உடையதாக்கும் என்பதில் ஐயமில்லை.

உங்களைப் பொறுத்தவரையில் இந்தப் பாடம் கற்பதன் நோக்கம் சிறுகதை எப்படி உருவாகிறது, அதனை எப்படி உருவாக்க வேண்டும் என்று அறிந்து கொள்வதே. அதற்காக இங்கு முதலில் ஒரு சிறுகதை தரப் பெற்றுள்ளது. அக்கதை எப்படி உருவாயிற்று என்பதும் விளக்கப் பெற்றுள்ளது. இத்தகு உருவாக்கத்தில் இடம்பெற்றுள்ள சிறுகதை பற்றிய பல செய்திகளும் சொல்லப் பெற்றுள்ளன. இவற்றை ஒரு முறைக்கு இருமுறை நன்றாகப் படியுங்கள். படித்து உணருங்கள்; உணர்ந்து நீங்களாகவே சிறுகதை எழுத முயன்று பாருங்கள்.

நீங்கள் சிறுகதை எழுதுவதற்கெனச் சில தலைப்புகளும் தரப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு தலைப்புக் குறித்துச் சிறுகதை ஒன்றும் தனியே எழுதிக் காட்டப் பெற்றுள்ளது. அதுபற்றிய விளக்கமும் உளது. இவை உங்கள் படைப்புத் திறமையை வளர்க்கும் நீர்மையுடையன.

8.1 புனைகதைக் கூறுகள்

கரு, கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு, உத்திகள் ஆகியன புனைகதைக் கலையினைக் கற்க விரும்புவோர் அறிந்துகொள்ள வேண்டியனவாகும். முதலில் அவை இங்கு சொல்லப்பெறுகின்றன.

8.1.1 கரு

கதைக்கு அடிப்படை கதைக் கரு; கதை தோன்றக் காரணமாக இருப்பது கதைக் கரு; கதையின் குறிக்கோள் கதைக் கரு; கற்ற பின்னரும் ஒருவர் நெஞ்சில் நெடுநாள் நிற்பது கதைக் கரு; கதையின் வடிவைத் திட்டமிடுவது கதைக் கரு.

கதைக் கரு ஒரு காட்சியைக் காண்பதினாலோ ஒன்றைக் கேட்பதினாலோ மின்னல்போல் நெஞ்சில் பாயும் ஏதேனும் ஓர் உணர்வினாலோ உருக்கொள்ளலாம். இப்படி உருக்கொண்ட கரு அங்கே, அப்போதே சிறுகதையாக வளரவும் வாய்ப்புண்டு; கதைக் கலைஞன் நெஞ்சில் பலநாள் கிடந்து பின்பு வடிவெடுத்தலும் உண்டு.

8.1.2 கதைப்பின்னல்

பின்னல் என்றாலே பின்னிச் செல்வது என்ற கருத்தைத் தரும். பின்னல் கோலாட்டம் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு கையில் கோலாட்டமும் இன்னொரு கையில் தொங்கும் கயிற்றைப் பற்றிக்கொண்டு பாடலுக்கு ஏற்பக் கோலாட்டத்தை அடித்துக்கொண்டு, தாளத்தோடு கால்மாறி ஆடிக்கொண்டே - ஒலி நயத்தில் ஈடுபட்டுக் கொண்டே பல பெண்கள் ஒருவகை நெறியில் முன்னும் பின்னும் சுற்றிச் சுற்றி வருவதால் அந்தக் கயிறுகள் ஒருவாறு பின்னப்பெறும்; பின்பு அதே நெறிமுறையை மாற்றி ஆடுவதால் பின்னிய கயிறுகள் எல்லாம் நெகிழ்ந்து பழைய நிலைக்கு வரும். இத்தகு நிலையே கதைப்பின்னலிலும் நேர்கிறது. கதைக் கருவை ஒருபாலும் கதை வளர்ச்சியை இன்னொருபாலும் நெஞ்சில் நினைத்தவனாய்த்

தன் அனுபவத்திற்கு ஏற்பக் கருவும் கதைவளர்ச்சியும் இயைந்து இறுகிப் போகுமாறு சில உத்திகளுடன் உருப்பெறுவதே கதைப்பின்னல் ஆகும். இத்தகு வளர்ச்சி நிகழ்ச்சி அடிப்படையில் அமையலாம்; பாத்திர அடிப்படையில் அமையலாம். இந்த அடிப்படைக்கு ஏற்ப நிகழ்ச்சிப் பின்னல், பாத்திரப் பின்னல் எனக் கதைப்பின்னலை இருவகைப்படுத்துவர்.

கருவையும் வளர்த்துக் கொண்டும் கால, இட நிலையில் நகர்த்திக் கொண்டும் செல்வதே நிகழ்ச்சிப் பின்னல் ஆகும். அதாவது நிகழ்ச்சியோடு நிகழ்ச்சிகளை இணைப்பது - நிகழ்ச்சியிலிருந்து பொருத்தமாகக் காரணகாரிய முறையில், நிகழ்ச்சிகளை நகர்த்திக் கொண்டும் வளர்த்துக் கொண்டும் கதை சொல்லிச் செல்லுதல் ஆகும். நிகழ்ச்சியோடு நிகழ்ச்சிகள் கூட்டப் பெறும்போது நெகிழ்ச்சிப் பின்னல் அமைகிறது; ஒரு நிகழ்ச்சி யிலிருந்து காரண காரிய நெறியில் இன்னொரு நிகழ்ச்சி என இப்படியே ஒன்றோடு ஒன்று உருவாகும்போது செறிவுப் பின்னல் உருவாகிறது. இவை இரண்டும் சேர்ந்தமையின் கலப்புப் பின்னலாக அஃது உருக்கொள்கிறது.

இத்தகு நிகழ்ச்சிகளை நிகழ்த்துவோரே பாத்திரங்கள். இந்நிகழ்ச்சி களுக்குப் பாத்திர இயக்கங்கள் திட்டமிடுகின்றன; வளர்க்கின்றன; ஆற்றலுடையனவாக்குகின்றன. இத்தகு இயக்கங்களின் தோற்றமும் ஆற்றலும் பாத்திரம் தன்னோடு தான் முரண்படல், சமுதாயத்தோடு முரண்படல் ஆகியவற்றிற்கு ஏற்ப அமையக் காணலாம். சமுதாயத்தோடு தான் முரண்படலை தன்னொத்த மனிதனோடு முரண்படல், தான் வாழும் சமுதாயத்தோடு முரண்படல், தான் வாழும் சமுதாயத்தைச் சூழ்ந்துள்ள இயற்கையோடு போராடல் என மூவகையில் அமைக்கலாம்.

நிகழ்ச்சிகள் எல்லாம் பாத்திரத்தின் இயக்கமே என்றாலும் நிகழ்ச்சிகளுக்கு மேற்பட நிகழ்ச்சிகள் மறந்து போகுமாறும் பாத்திரங்கள் மேலோங்கி ஆட்சிபுரியுமாறும் கதை அமைத்துச் செல்லும்போது பாத்திரப் பின்னல் உருவாகிறது.

8.1.3 பாத்திரங்கள்

நிகழ்ச்சிகளை இயக்கிச் செல்வன பாத்திரங்களே என அறிந்தோம். ஒரு கதையில் பாத்திரம் ஒன்றோ, சிலவோ, பலவோ செயல்புரிகின்றன. அவற்றுள் எந்தப் பாத்திரம் இன்றிக் கதையே இல்லை என்று நாம் உணர்கிறோமோ அந்தப் பாத்திரம் முழுநிலைப் பாத்திரம் (Round) / (Dynamic character) ஆகும். அந்தப் பாத்திரப் படைப்பின் நோக்கம் நன்கு புலப்படத் துணைசெய்வது துணைப்பாத்திரம். இப்பாத்திரம் ஏதோ ஓரியல்பை மட்டும் தாங்கி வரும். இன்னும் ஒருவகைப் பாத்திரமும் சிறுகதைகளில் இடம்பெறும் என்பர். அவை பெயரளவில் இடம் பெறுவன. அத்தகைய பாத்திரங்கள் நிழல் பாத்திரம் (Shadowy character) முழுநிலைப் பாத்திரத்தின் வழியே ஆசிரியனின் கரு உருப்பெற்று இலக்கிய வடிவு ஏற்பதால் அதனை உருவாக்கத் தன் திறனை எல்லாம் (சிறுகதை உத்தி வகைகளை எல்லாம்) கதையாசிரியன் பயன்படுத்துவான். துணைப் பாத்திர உருவாக்கத்தில் ஒருசில உத்திகளே போதும். சிறப்பாகப் பாத்திரப் படைப்பை மட்டும் கருத்தில் கொள்ளின் தான் நெஞ்சில் கொண்ட கருவுக்கு ஏற்ற மாதிரியாகத்தான் தான் உணரும் அல்லது தான் வாழும் உலகம் ஏற்கும்படியான ஒரு பாத்திரத்தைப் பொறுக்கி எடுத்துக் கொள்கிறான். அதற்குப் பெயரொன்று இட்டு மற்ற பாத்திரங்களிலிருந்து பிரித்து அதன் தனிநிலையைப் புலப்படுத்துகின்றான். அதனைச் சரியான இடத்தில், நேரத்தில், வகையில் அறிமுகம் செய்து, வளர்த்து, அதன்வழி கரு முழுநிறைபு பெற்றுக் கதையாகுமாறு நிறைவு செய்கிறான். இந்த நிறைவு நிலை, முடிப்பு நிலை கைவந்தோர்க்கு உரிய தனித்திறனாகும்.

8.1.4 உத்திகள்

சிறுகதை ஒரு கலை. கலை அழகு, ஆற்றல், அருள் ஆகியன அனைத்தும் இயைபு பெற்ற ஒன்று. எனவே இந்தக் கதைக்கலை உருவாக்கத்தில் உத்திகள் இன்றியமையாத இடம்பெறுகின்றன.

கதையின் தொடக்கத்தில், முடிப்பில், அளவில் கற்பார் நெஞ்சைக் கதையாசிரியர் கவர நினைக்கின்றார். எனவே, சில நுட்பத்திறனை அவற்றை உருவாக்கும்போது பயன்படுத்துகின்றனர். அவையே உத்திகள் ஆகின்றன. கதை சொல்லும்போது தானே சொல்வது போலவோ, பிறர் சொல்வது போலவோ, முழுநிலைப் பாத்திரம் சொல்வது போலவோ, துணைநிலைப் பாத்திரம் சொல்வது போலவோ கதையை அமைத்துச் செல்கிறான். தான் கண்டதுபோல, ... அமைத்துச் செல்வதால் அவரவர் நோக்கு நிலைக்கு ஏற்பக் கதை அமைப்பும் மாறுபாடடைகிறது. இதனை 'நோக்குநிலை உத்தி' என்பர். சில சமயம் பாத்திரம் ஒன்று பின்னோக்கி எண்ணுவது போலக் கதையை நடத்திச் செல்வது பின்னோக்கு உத்தி (Flash back) ஆகும். இவையே அன்றி கதைக்கான கால, இடச் சூழ்நிலையைப் பொருத்தமாக அமைத்துச் செல்லும் உத்தி பின்னணி உத்தியாகும். இத்தகு உத்தி பல வெற்றி பெறுவதென்பது கதையாசிரியன் கதையைத் தரும் மொழிநடையால் அமைகிறது. எனவே நடை உத்தியும் இன்றியமையாத ஒன்றாகும்.

தன் மதிப்பீடு 1

1. கதைப் பின்னல் என்றால் என்ன?
2. கதை உத்திகளைக் குறிப்பிட்டு ஏதேனும் இரண்டினை விளக்குக.
3. நிழல் பாத்திரம், துணைப்பாத்திரம் இவற்றை விளக்கி வரைக.
4. சிறுகதையில் சிறப்பான உறுப்பு எது? ஏன்?

8.1.5 சர்ஜன் வாசுக்குட்டி

பக்த சிரோமணியாக ஊரில் பெயரெடுத்த கோபாலையருடைய துக்கம் தாங்கமுடியாத நிலையை அடைந்தது. அதன் காரணம் அவருடைய தெய்வ பக்தியெல்லாம் அடங்காத கோபமாக மாறிவிட்டது. வீட்டிலிருந்த சாமி படங்கள் அத்தனையும் கண்ணாடி - சட்டங்களுடன் சுக்கு நூறாக்கி வீதியில் குப்பைத் தொட்டியில் போட்டார். ''வேண்டாம், வேண்டாம், மகாபாவம்'' என்று மனைவி கதறினாள். ''தெய்வமும் இல்லை, ஒன்றும் இல்லை'' என்று மனைவியை அதட்டிப் பூஜைக்கு வைத்திருந்த சாளக்கிராமத்தைக் கிணற்றில் போட்டார். துக்கம் உன்மத்தமாயிற்று. வெகு நாட்கள் வரையில் பைத்தியமாக நடந்துகொண்டார்.

★ ★ ★

இந்தக் கதையை முதலிலிருந்து சொல்கிறேன். ஆஸ்திக நாஸ்திகவாதங்கள் மிகப் பழைய சமாசாரம். அந்தச் சர்ச்சைக்கு முடிவேயில்லை. இரு தரப்பிலும் உண்மையைக் கண்டவர்கள் இல்லை. உண்மையைக் காணாதவர் இடும் வாதத்துக்கு முடிவு ஏது? அவரவர்கள் அநுபவத்தின் பயனாக உணர்ச்சிகள் உண்டாகின்றன. அந்த உணர்ச்சிகளே வாதங்களாகின்றன. வாதத்துக்கும் முடிவு இல்லை. ஊருக்கும் வழியில்லை.

கோபாலையருக்கு ஆண் குழந்தை பிறக்கவில்லை. ஒரே ஒரு பெண் குழந்தை; மங்களம் என்று அதற்குப் பெயரிட்டு, மிகவும் பிரியமாகத் தகப்பனாரும் தாயாரும் வளர்த்தார்கள். பதினாறு வயதாயிற்று.

''மங்களம்! எனக்கு அந்தச் சாமிநாதனைக் கொஞ்சமும் பிடிக்கவில்லை; ஏதோ இன்ஜினீர் படித்துப் பாஸ் செய்திருக்கிறான் என்று உன் அப்பா

அவனை விரும்புகிறார். கன்னங்கறேலென்று ஒரு மாப்பிள்ளையைப் பிடித்தார் உன்னப்பா. எனக்கு நம் கிருஷ்ணமூர்த்திதான் பிடித்திருக்கிறது. என்ன சொல்கிறாய்? அவனும் கொஞ்சம் படித்துத்தான் இருக்கிறான்; மேலும் படித்து இன்ஜினீயரோ, டாக்டரோ அவனுந்தான் படிப்பான்; லக்ஷணமாய் இருக்கிறான். அவனை விட்டு இந்தக் கருப்பனையா நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்? என்றாள் கமலம்மாள்.

துணி கிழிந்திருந்ததை மங்களம் உட்கார்ந்து தைத்துக் கொண்டிருந்தாள். ''இவனும் வேண்டாம், அவனும் வேண்டாம், அம்மா! என்னைத் தொந்தரவு படுத்தாதே'' என்றாள் மங்களம்.

இவ்வாறு தினமும் மாறி மாறிப் பேச்சும் விவாதமும் நடந்தன. முடிவில் மங்களத்தைச் சாமிநாதனுக்கும் கொடுக்கவில்லை, கிருஷ்ணமூர்த்திக்கும் கொடுக்கவில்லை. கமலம்மாளுக்கு ஓர் அண்ணன்; சொந்த அண்ணன் அல்ல – தகப்பனாரின் முதல் தாரத்து வயிற்றில் பிறந்த மகன். அவனுடைய மகன் வாசு. மங்களத்துடன் குழந்தைப் பருவம்முதல் கூட விளையாடி வந்த பையன். ''வாசுவைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்'' என்று மங்களம் பிடிவாதம் பிடித்தாள். தகப்பனாரும் ஒப்புக்கொண்டார். சோதிடர்களும் இது ரொம்ப நல்ல ஜோடி என்றார்கள்.

மங்களத்தை வாசுதேவனுக்குக் கொடுத்துத் திருப்பதியில் விவாக முகூர்த்தம் சுருக்கமாக நடந்தது.

★ ★ ★

வாசுவும், மங்களமும் ஒரு வருஷம் கோபாலையர் வீட்டிலேயே சந்தோஷமாக வாழ்ந்தார்கள். அடுத்த வருஷம் சித்திரை மாதத்தில், மணலூரில் நடந்த பெரிய ரயில் விபத்தில் வாசு உயிர் நீத்தான். அது காரணமாகத்தான் கோபாலையர் நாஸ்திகராகிவிட்டார்.

''மங்களம் என்று பெயர் வைத்தேனே; விதவையாய்ப் போனாயே!'' என்று தாயார் குழந்தையைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

''நான் செய்த பூஜை எல்லாம் பொய்யாகிவிட்டதே! ஏற்றிய கர்ப்பூரம் பிசாசுக்காயிற்றே! தெய்வமும் இல்லை, தேவியுமில்லை; எல்லாம் பொய்!'' என்றார் கோபாலையர். மூன்று மாதங்கள் முழுப் பைத்தியமாகவே நடந்து கொண்டார்.

விவாகம் ஆனபோது மங்களம் சாதாரணப் படிப்புத்தான் படித்து முடித்திருந்தாள். விபத்துக்குப் பிறகு கோபாலையர் ஓரளவு சாந்தமடைந்தபின் மங்களத்தைப் பள்ளிக்கூடத்தில் மறுபடியும் சேர்த்தார். மங்களம் படிப்பில் நன்றாகத் தேறி வருஷம் தவறாமல் படிப்படியாக விருத்தியடைந்தாள். பத்து ஆண்டுகள் முடிந்து மங்களம் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்துவிட்டாள்.

மங்களத்துக்கு இப்போது இருபத்தைந்து வயது; உயர்தர வகுப்பில் வைத்தியப் பரீட்சை தேறிவிட்டாள். வைத்தியக் கல்லூரியில் கூடப்படித்த பலபேர் அவளை மணந்துகொள்ள ஆசைப்பட்டார்கள். தாயாரும்கூட மறுவிவாகத்துக்கு ஓரளவு சம்மதித்தாள். ''சாஸ்திரமாவது? கடவுளாவது! அவள் இஷ்டம்'' என்றார் தகப்பனார். வாசு இறந்தது முதல் கோபாலையருக்கு எதிலும் நம்பிக்கை இல்லை. மூட நம்பிக்கைகளைப்பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை; ஆனபடியால் மங்களத்தின் மறுவிவாகத்துக்கு முற்றும் சம்மதித்தார்.

''அவள் இஷ்டம்'' என்று தகப்பனார் சொன்னதைக் கேட்டு மங்களம், ''எனக்கு விவாகம் வேண்டாம். பிரஸவ விடுதி வைத்து என் படிப்பைச் சமூகப் பணியாக்கி அந்த விதத்தில் காலங் கழிப்பேன்'' என்றாள்.

''சமூகப் பணியாவது, மடத்தனமாவது! பணம் சம்பாதிக்கப் பார்'' என்றார் கோபாலையர். ''அப்படியே'' என்றாள் மங்களம் சிரித்துக்கொண்டு. ''பிரஸவ விடுதியில் நல்ல பணமும் உண்டு'' என்றாள். தகப்பனாரும் இதற்கு ஒப்புக்கொண்டு வேண்டிய செலவுக்கெல்லாம் தாராளமாகப் பணம் தந்தார்.

இப்போது 'மங்களம் பிரஸவ விடுதி'யில் வருஷம் ஒன்றுக்கு ஐம்பது தாய்மார்கள், குழந்தைகள் பெற்றுச் சொஸ்தமடைந்து சந்தோஷமாகத் தத்தம் வீடுகளுக்குச் செல்கிறார்கள். வியாதியஸ்தர்கள் விடுதியில் முப்பது பேர் வரையில் எப்போதும் இருந்து வந்தார்கள். ''இதுவல்லவோ வாழ்க்கை'' என்றாள் மங்களம்மாள் தன்தாயாரிடம். 'மங்களம்மாள் பிரஸவ விடுதி' பெரிய புகழ்பெற்ற ஸ்தாபனமாகிவிட்டது. விடுதியில் பிறந்த ஒவ்வொரு குழந்தையையும் மங்களம் தன் தாயார் கமலம்மாளிடம் காட்டிச் சந்தோஷப்படுவாள். வருமானமும் எதிர்பார்த்ததற்கு மேலாகவே வர ஆரம்பித்தது.

''நான் விதவையானேன் என்று பகவான் பேரில் கோபீத்தீர்கள்; ஆண்டவன் சங்கற்பத்தை அறியாமல் நாம் என்ன என்னவோ செய்கிறோம்! எனக்கு எத்தனை குழந்தைகள் பார்த்தாயா?'' என்பாள் மங்களம் தாயாரிடம். கமலம்மாளும் சந்தோஷமாகப் பிரசவ விடுதியில் சில்லறை வேலைகள் செய்து வந்தாள்.

கோபாலையர் மறுபடியும் ஸ்வாமி படங்களைச் சம்பாதித்து வீட்டில் சுவரில் மாட்டிப் பூஜை செய்ய ஆரம்பித்தார். திருப்பதி கோவிலுக்கு வருஷம் தவறாமல் மனைவியுடன் போய் வந்தார். ''கோவிந்தா! உன்னைத் திட்டினேன்? கிணற்றில் போட்டேன். நீ சினம் கொள்ளாமல் காத்தாய்'' என்று கூறிப் பிரகாரமும் சுற்றி உருண்டு சேவை செய்து வந்தார். சுந்தரகாண்டம் பாராயணம் செய்யலானார்.

தகப்பன் யார் என்று இல்லாத ஒரு குழந்தை, விடுதியில் பிறந்தது. ஓர் அனாதைப் பெண், விடுதிக்கு வந்து அந்தக் குழந்தையைப் பெற்றாள். ''இந்தக் குஞ்சை நீ எடுத்து வளர்த்துக்கொள், டாக்டர் அம்மா! உனக்குக் குழந்தை இல்லையாமே'' என்றாள் அந்த அனாதை ஸ்திரீ தைரியமாக.

''நான் மூன்று குழந்தைகளைக் கொன்ற பாவி. அந்தப் பாவம் தீரும், அம்மா, நீ இதை வளர்த்தாயானால்'' என்று அந்த அனாதை கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

குழந்தை அழகாக இருந்தது; மங்களத்தின் முகத்தை நோக்கிச் சிரித்தது. ''என்ன சொல்லுகிறாய் அம்மா?'' என்று மங்களம், தன் தாயார் கமலம்மாளைக் கேட்டாள்.

''என்ன ஜாதியோ, என்ன குலமோ, ஒன்றும் தெரியாமல்: இதை எப்படி எடுத்துக்கொள்வது?'' என்றாள்.

அப்போதுதான் கோபாலையர் திருப்பதியிலிருந்து திரும்பி வந்தவர், ''ஜாதியாவது, குலமாவது? கோவிந்தனுக்கு ஒரே குலம். இன்று அவன் எனக்குப் பிரஸன்னமாகி, 'உனக்கு ஒரு பேரனைக் கொடுக்கிறேன்; வைத்து வளர்த்துக் கொள்' என்றான். அவன் சொன்னது நடந்து விட்டது!'' என்று குழந்தையை எடுத்து மகளிடம் தந்தார்.

''இது பிராம்மணக் குழந்தைதான். முகத்தைப் பார்'' என்றாள் கமலம்மாள்.

''எந்தக் குலமானால் என்ன? அப்பா எடுத்துக் கொடுத்தால் போதும்'' என்றாள் மங்களம்.

அந்தக் குழந்தைதான் இப்போது வாசுக்குட்டி என்கிற பெயர்போன ரணசிகிச்சை வைத்தியர்.

8.1.6 படைப்பு நுட்பங்கள்

மனிதன் பார்வை ஓர் எல்லைக்கு உட்பட்டதுதான். அவன் எவ்வளவு பெரிய தொலைநோக்கியால் பார்த்தாலும் அதுவும் ஓர் எல்லைக்கு உட்பட்டதுதான். இப்படியே அவன் செவி முதலியவற்றால் பெறும் அறிவுகளும் எல்லைக்கு உட்பட்டனவே ஆகும். இதற்குக் காரணம் அவன் ஒரு காலத்திற்கு, ஓர் இடத்திற்குக் கட்டுப்பட்டவனாக வாழ்வதே ஆகும். இந்தக் கால, இக்கட்டைக் கடந்தவன் கடவுள். அவனுடைய திட்டங்களும் திருவிளையாடல்களும் கட்டுண்ட மனிதனால் சரியாக, முழுமையாக அறிந்துகொள்ள இயல்வன அல்ல. இந்த அறியாமையினால் கடவுளைப் பழிக்கிறான்; பின்னர் வருந்தித் திருந்தி வாழ்கிறான். இதுதான் சர்ஜன் வாசுக்குட்டி என்னும் கதையின் கரு.

இந்தக் கதையில் அன்பாக வளர்த்து, திருப்பதியில் திருமணம் செய்து கொடுத்த தன் மகள் மங்களம் ஓர் ஆண்டிலேயே விதவையாகி விடுவதால் தந்தை கோபாலய்யர், 'பூசை பொய், தெய்வமில்லை, தேவியில்லை' என்று கூறி, சாமி படங்களையெல்லாம் உடைக்கிறார்; தெய்வச் சிற்பத்தைக் கிணற்றில் எறிகிறார். ஆனால் விதவையான மங்களம் மேலும் தன் படிப்பைத் தொடர்ந்து, படிப்படியாகக் கல்வி கற்று வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து தேறி மங்களம்மாள் மகப்பேறு விடுதி ஒன்றைத் தோற்றுவித்துச் செல்வத்திலும் செல்வாக்கிலும் சிறந்து விளங்குகின்றாள். இந்தப் புகழ் வாழ்வை; செல்வ வாழ்வைக் கண்டு மங்களத்தின் தந்தையும் தாயும் மனமகிழ்வுறுகின்றனர். மங்களமும்,

> 'நான் விதவையானேன் என்று பகவான் பேரில் கோபிக்காதீர்கள்; ஆண்டவன் சங்கற்பத்தை அறியாமல் நாம் என்ன என்னவோ செய்கிறோம். எனக்கு எத்தனைக் குழந்தைகள் பார்த்தாயா?'

என்கிறாள். இவ்வாறு, இறைவனது சங்கற்பத்தை மனிதன் அறியா திருத்தலைக் கருவாகக் கொண்டு கதை வளர்க்கப்படுகிறது.

பாத்திர நிகழ்ச்சிகள்

கதைக்கரு இதில் நிகழ்ச்சிகளால் வளர்க்கப்படுகிறது. மகள் மங்களம் கணவனை இழத்தல், கோபாலையர் சாமிபடங்களை உடைத்தல், மங்களம் மருத்துவப் பட்டப் படிப்பும் பெற்று மருத்துவ விடுதி நடத்தல்; இதனால் தன் இல்வாழ்வில் பெறுதலை விடச் சிறப்பும் செல்வமும் பெறுதல் என இப்படியாக நிகழ்ச்சிகள் பல பாத்திரங்களால் நிகழ்த்தப் பெறுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஒன்றையொன்று தொடர்ந்தும், காரண காரியத்தோடும் அமைந்திருத்தலால் இந்தக் கதையில் செறிவுப் பின்னல் அமைந்திருக்கிறது எனக் கூறலாம்.

பாத்திரங்கள்

இந்தக் கதையில் பல பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. கோபாலையர், அவர் மனைவி, அவர்களுடைய மகள் மங்களம், இன்ஜீனியர் படிப்புப் படித்த சாமிநாதன், குடும்பத்துக்கு உறவினனான கிருஷ்ணமூர்த்தி, மங்களத்தை மணந்து கொண்ட வாசு, மங்களத்தின் வளர்ப்புப் பிள்ளை சர்ஜன் வாசுக்குட்டி முதலியோர் இந்தக் கதையில் இடம்பெறுகின்றனர். இந்தக் கதையின் கரு தொடர்ந்து வளர்ந்து முழுமையாக வடிவெடுக்கக் காரணமாக இருக்கும் கோபாலையர் இந்தக் கதையின் தலைமைப் பாத்திரத்திற்கு உரியவராகிறார். அவர் மனைவி, மகள் மங்களம் இருவரையும் துணைப்பாத்திரங்களாகக் கூறலாம். சாமிநாதன், கிருஷ்ணமூர்த்தி, வாசு, வாசுக்குட்டி ஆகியோர் எல்லாம், நிழற்பாத்திரங்களே.

உத்திகள்

தலைப்பிடுவது ஒருவகை உத்தி. இந்தக் கதைக்கு ‘சர்ஜன் வாசுக்குட்டி’ என்ற தலைப்பு இடப்பட்டிருக்கிறது. வாசுக்குட்டி கதையின் கடைசித் தொடரில்தான் குறிப்பிடப் பெறுகிறான். ஆனால் ஆசிரியருடைய ‘கோவிந்தனுக்கு ஒரே குலம், ஆண்டவன் சங்கற்பத்தை யாரறிவார்’ ஆகிய கருத்துக்கு அடையாளமாக வாசுக்குட்டி இடம்பெறுகிறான். அன்றியும் மங்களத்தின் மாண்டுபோன, கணவன் பெயரும் வாசுதானே. அந்தக் காதலன்பு தாயன்பாக மாறிய குறிப்பும் வாசுக்குட்டி என்ற தலைப்பில் அடங்கியிருக்கக் காணலாம்.

அடுத்ததாக, சிறுகதையின் **தொடக்கம்** விறுவிறுப்பாகவும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அமைத்தலை ஓர் உத்தியாகக் கூறுவர். ‘பக்தி சிரோமணி கோபாலையர், சாமிபடங்களையெல்லாம் சுக்குநூறாக்கி வீதியில் குப்பைத் தொட்டியில் போட்டார்’ என்ற தொடக்கம், ‘பக்தராகிய கோபாலையர் எதற்குச் சாமிபடங்களை உடைத்தார்? என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளது.

இந்தக் கதை ஆசிரியரே சொல்லுகின்ற நோக்குநிலை உத்தி பெற்றது.

தன் மதிப்பீடு: 2

1. *சர்ஜன் வாசுக்குட்டி என்ற சிறுகதையின் தொடக்கம் எந்த வகையைச் சார்ந்தது? அதன் தலைமை பாத்திரம் யார்?*
2. *நடப்பியல் சித்திரிப்பு இந்தக் கதைக்கு எவ்வாறு பின்னணியாக அமைந்துள்ளது?*
3. *இந்தக் கதையின் கரு எது? அது வளர்ச்சியுறுவது எவ்வாறு?*
4. *சிறுகதையின் நடை எவ்வாறு அமைந்துள்ளது?*

8.2 தொகுப்புரை

உரைநடை இலக்கியத்தில் புனைகதை இந்தக் காலத்தில் தலையாய இடம்பெற்றுள்ளது. புனைகதைக் கூறுகளாகக் கரு, கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு உத்திகள் ஆகியன அமைந்துள்ளன. இவற்றின் திட்பநுட்பங்களை அறிந்து கொள்ளல் கதைக் கலையை. விளங்கிக் கொள்வதற்கு உதவிசெய்யும். கதைக் கலையை அறிந்துகொண்டு. நாமும் கதை படைக்கின்ற இலக்கியத் திறன் பெறுதல் மொழியறிவின் ஒரு சிறந்த பகுதியாகும். இதனால் நாம் உணரும் ஓர் உண்மையை/உணர்வை உலகத்தில் உள்ளவர்க்கும் எளிதாக, இனிதாக உணர்த்த முடியும் அல்லவா?

8.3 தொடர்ந்து படிப்பதற்குரிய துணை நூல்கள் (Further Readings)

1. ***கல்கியின் சிறுகதைக்கலை***, *மீனாட்சி முருகரத்தனம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, முதற்பதிப்பு 1978.*
2. ***ஜெயகாந்தனின் முன்னுரைகள்***, *ஜெயகாந்தன், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 625 001, முதற்பதிப்பு 1978.*
3. ***தமிழ் சிறுகதை பிறக்கிறது***, *சி.சு. செல்லப்பா, எழுத்து பிரசுரம், சென்னை, முதற்பதிப்பு 1974.*
4. **Short Story Technique**, John Boland, Forest House Books, England - 1973.

தமிழில் மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளர் எனப் போற்றப்பட்ட புதுமைப்பித்தனின் சிறுகதைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, சென்னை ஐந்திணைப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் படிப்பதும் சிறந்த, பயனுள்ள வழிகாட்டியாகும். 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பார் ஔவையார். சிறுகதையும் படித்துப் பழகியே கைவரப்பெறும் கலையாகும்.

நடைமுறைப் பயிற்சி

கீழ்வரும் தலைப்பில் கதை வளர்ச்சிக்குரிய குறிப்புகள் தரப் பெற்றுள்ளன: இத்தகு குறிப்புகளை வைத்துக்கொண்டும் உங்கள் சொந்த அனுபவத்தைக் கொண்டும் ஒரு கதை எழுத முயலுங்கள்.

படித்தவன் பாவம் பண்ணினால் ...

ரயில் பயணம் - பயணச்சீட்டுப் பரிசோதகர் - சிலரிடம் சீட்டின்மை - அகப்பட்டுக் கொள்ளுதல் - ஆனால் சமுதாயத்தில் எத்தனையோ பேர் உரிமையில்லாமல் பதவி காரணமாக, பட்டம் காரணமாகப் பொதுச் சொத்தை அனுபவித்தல்.

சிறுமி ஒருத்தி பிச்சை கேட்டுக்கொண்டு வருதல் - அதற்கு ஒருவர் உழைத்துப் பிழைக்குமாறு அறிவுரை கூறல் - இன்னொருவர் பிழைப்பவர் எல்லாம் உழைக்கின்றார்களா எனத் தனக்குள் சிரித்துக் கொள்ளல் - அப்போது உழைக்காமல் நியமனமான பதவியில் இருந்துகொண்டே காலந்தள்ளுபவர்கள் மனக்காட்சியில் வருதல்.

பட்டாணி, கடலை விற்பவன் வருகை - குறைத்துத் தருவதாக ஒருவர் திட்டுதல் - இந்தியாவில் எல்லார் செய்யும் எல்லா வியாபாரமும் இப்படி இருத்தலை நினைத்து வருந்துதல் - அதற்குள் தான் இறங்கும் ஊர் வந்துவிடல்.

நிகழ்ச்சிக்கு அல்லது பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சிறந்த தொடக்கமும் முடிப்பும் உடையதாய், முன்கூறிய உத்திகளெல்லாம் அமைய ஒரு சிறுகதை எழுதுங்கள். மேலே காட்டிய தலைப்பில் மட்டுமல்லாமல் நீங்கள் நினைக்கிறபடியும் ஒரு கதை எழுதிப் பாருங்கள்.

தன் மதிப்பீடு : விடைகள்

1. *கதைக் கருவையும் கதை வளர்ச்சியையும் தொடர்புபடுத்தி, அவை இயைந்து இறுகிப் போகுமாறு அகில உத்திகளுடன் உருவாக்கப்படுவதே கதைப்பின்னல் ஆகும். இத்தகு வளர்ச்சி நிகழ்ச்சி அடிப்படையிலோ, பாத்திர அடிப்படையிலோ அமையலாம். எனவே நிகழ்ச்சிப் பின்னல், பாத்திரப்பின்னல் என்று இஃது இரண்டு வகைப்படும்.*

2. *அமைப்பு உத்தி, நோக்குநிலை உத்தி, பின்னோக்கு உத்தி, பின்னணி உத்தி, நடை உத்தி எனக் கதை உத்திகள் பலதிறப்படும். கதையை யார் கூற்றாக அமைக்கிறோமோ, அவர் பார்வைக்கு ஏற்பக் கதைப்போக்கு அமைவதால் அது நோக்குநிலை உத்தி எனப்படும். கதைக்கான கால, இடச்சூழ்நிலைகளைப் பொருத்தமுற அமைத்துக் கதையை நடத்திச் செல்வது பின்னணி உத்தி எனப்படும்.*

3. *ஒரு கதையில் பெயரளவில் இடம்பெறும் பாத்திரம் 'நிழல் பாத்திரம்'. முழுநிலை பாத்திரத்தின் பண்பும் நோக்கமும் நன்கு புலப்படத் துணைசெய்யும் பாத்திரம் துணைப்பாத்திரம் எனப்படும்.*

4. *சிறுகதையின் சிறப்பான உறுப்பு கதைக்கரு. கதைக்கு அடிப்படையும் கதையின் குறிக்கோளும் கதைபடித்த பின்னர் நெஞ்சில் நிற்பதும் கதையின் வடிவைத் திட்டமிடுவதும் அதன் கருவேயாகும்.*

ignou THE PEOPLE'S UNIVERSITY

2

1. 'சர்ஜன் வாசுக்குட்டி' சிறுகதையின் தொடக்கம் **'ஆர்வத்தூண்டுதல்'** செய்யும் வகையைச் சார்ந்தது. அதன் தலைமைப்பாத்திரம் கோபாலையர்.

2. இந்தக் கதையில் நிகழ்ச்சிகள் இயல்பான மனித வாழ்வு பற்றியன. மிகைப் புனைவு, அதீதக் கற்பனை எதுவும் இல்லை. நிகழ்ச்சிகள், பாத்திரங்கள், உரையாடல் யாவும் மிக இயல்பாகப் படைக்கப் பட்டுள்ளன. நடப்பியல் சித்திரிப்பால் கதையின் அவலம் உள்ளத்தைத் தொடுகிறது. (மேலும் கதையை மேற்கோள்காட்டி இதை விளக்க முயல்க.)

3. கடவுளின் திருவிளையாடல்கள் அறியக்கூடியன அல்ல. இதனால் முதலில் கடவுளைப் பழிக்கும் மனிதன் பின்பு உண்மையறிந்து திருந்தி வாழ்கிறான். இதுவே இக்கதையின் கரு. கோபாலையர் சாமி படங்களில் உடைப்பதில் தொடங்கி, ஓர் அனாதைக் குழந்தையைப் பேரக்குழந்தையாக அவர் மகிழ்ச்சியுடன் ஏற்பதில் இக்கதை முடிகிறது. அவரின் மனமாற்றமே கதை வளர்ச்சியாக உருப்பெற்றுள்ளது.

4. சிறுகதை நடை இராஜாஜிக்கே உறிய வகையில், மிகச் சரளமாக, நேரே சொல்வதுபோல் அமைந்துள்ளது. சிறுகதைக்கேற்ற சிறுசிறு வாக்கியங்கள், சிறிய அளவிலான புனைவுகள் கதை சொல்வதுபோல் இனிய நடையில் போவதால், அதன் தரம் வளர்ந்துவிடுகிறது.

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

பாடப்பகுதி (Unit) 9
வாழ்க்கை வரலாறு (Biography)

படிப்பு, நோக்கம்

- ★ பண்போடு வாழ, பெரியவர்களின் அனுபவங்களை அறிதல்
- ★ பயன்தரும் அறிவியல் நெறிமுறை கண்டு பின்பற்றல்
- ★ சமுதாயம், அரசியல், சமயம் முதலியவற்றின் படிநிலைகளை அறியத் துணை செய்தல்
- ★ நாட்குறிப்பு, வாழ்க்கைக்குறிப்பு, வாழ்க்கை வரலாறு எழுதும் திறம் பெறல்.

பாடக் கருத்தலகுகள்

9.0 பாட முன்னுரை

9.1 வகைப்பாடு

9.2 எழுதும் முறை

9.2.1 உ.வே.சா. (தன் வரலாறு)

9.2.2 வ.உ.சி. (தற்சரிதம்)

9.2.3 மு.வ., ‘காந்தியடிகள் அண்ணல்’

9.3 அமைப்பு

9.3.1. தொடங்கும் திறன்

9.3.2 முடிக்கும் திறன்

9.3.3 தலைப்பிடும் திறன்

9.4 பாடத் தொகுப்புரை

9.5 தொடர்ந்து படிப்பதற்குரிய துணைநூல்கள்

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

9.0 பாடமுன்னுரை

இன்று மனிதன் பெற்றுள்ள வளர்ச்சிகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணங்கள் இரண்டு. ஒன்று, அவன் தன் மொழித்திறனை வளர்த்துக் கொண்டது. மற்றொன்று அம்மொழியில் தன் அறிவனுபவங்கள் - அகவுணர்வுகளை அழிந்து போய் விடாமல் எதிர்காலச் சந்ததியினர்க்கு எழுத்துருவில் அவற்றை ஆக்கி அளித்துச் சென்றது. இவ்வகையில் சான்றோர் ஒருவரின் வாழ்க்கை வரலாறானது ஒருவர் வாழ்வில் தெளிவு பெறவும், திட்டமிடவும், உயர்ந்து வெற்றி பெறவும் துணை செய்ய வல்லதாகும்.

பெரும்பாலும் ஒருவர் வாழ்வில் நேரும் சிக்கல் பல, பிறர் வாழ்விலும் நிகழ வாய்ப்பிருத்தலால் அவற்றைத் தாம் பிறர் வாழ்விலிருந்து முன்னரேயே அறிந்துகொண்டு அந்த அனுபவத்தின்வழி தம் வாழ்க்கையைச் செம்மை படுத்திக் கொள்ளலாம்; அறிவியல் அறிஞர்கள் உண்மைகளைக் கண்டறிய மெய்ம்மைகளைக் காணப் பட்டபாடுகளை இட்ட திட்டங்களை, மேற்கொண்ட நெறிமுறைகளை அறிவதன்வழி நம் அறிவியல் சிந்தனை முயற்சிகள் சிறக்க வாய்ப்புண்டாகும்.

இன்னும் ஒரு சிறந்த பயனும் இங்கு உளங்கொளத் தக்கது. பொதுவாகக் கலைகள், மானுட உள்ளத்து உணர்வைத் தூண்டி இயங்கச் செய்யவல்லன. இந்த வல்லமையைப் பன்மடங்கு தரக்கூடிய வாழ்க்கை வரலாறுகளை நாம் கற்பது, அவை நம்போன்ற ஒரு மனிதனின் வாழ்வு ஆனதால், நம்மைப் பலமடங்கு பாதிக்கிறது; அத்தகு அறிஞனைப் போல, சான்றோனைப் போல நாமும் வாழ்வில் உயரக்கூடும் என்ற தன்னம்பிக்கையை நமக்கு வழங்குகிறது. மொழித் திறனை வளர்த்துக் கொள்ளும் போக்கில் வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்ட மூன்று கருத்தலகுகளில் கற்கலாம். அவற்றுள் முதல் கருத்தலகாகிய 'வகைப்பாடு' எழுதுவோர் அடிப்படை, எழுதப்பெறும் பொருள் அடிப்படை, ஏற்கும் வடிவு அடிப்படை, கற்போர் அடிப்படை எனப் பலவாகும். அடுத்து தொடக்கம், பாகுபாடு, முடிவு என்னும் அமைப்பினை அது பெறுகிறது. இறுதியாக உரையாடல் போக்கிலோ, நினைவுக் குறிப்பாகவோ கதைப் போக்கிலோ, காவிய அமைப்பிலோ வாழ்க்கை வரலாறு அமையலாம். இத்தகு எழுத்துத் திறனை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டதே இந்தப் பாடம்.

9.1 வகைப்பாடு

எழுதுவோர் அடிப்படையில் வாழ்க்கை வரலாறு இருவகைப்படும். ஒன்று தன்வாழ்க்கை வரலாறு, மற்றது ஒருவர் வாழ்க்கை வரலாற்றைப் பிறர் ஒருவர் எழுதுவது. முன்னது தன்வரலாறு (Auto-biography) என்றும் பின்னது வாழ்க்கை வரலாறு (Biography) என்றும் பெயர் பெறுகின்றன. தன்வரலாற்றுக்குக் காட்டாக உ.வே. சாமிநாதையரின் 'நினைவு மஞ்சரி' திரு.வி.க.வின் 'வாழ்க்கைக் குறிப்பு', நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையின் 'என்கதை' முதலியவற்றைக் குறிப்பிடலாம். பிறர் வாழ்க்கை வரலாற்றில் சிறந்தன ஊரன் அடிகள் எழுதியுள்ள 'இராமலிங்க அடிகள் வரலாறு', சாவி எழுதியுள்ள 'சிவகாமியின் செல்வன்', தொ.மு பாஸ்கரத் தொண்டைமான் உருவாக்கியுள்ள 'ரஸிகமணி டி.கே.சி' முதலியனவாகும்.

எழுதப்பெறும் பொருள் அடிப்படையில், 'சாகித்திய அகாதமியின்' அறிஞர் வரலாற்று வரிசை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும்,

அறிவியல் அறிஞர், சமயச் சான்றோர், தொழில் வல்லுநர், சமுதாயத் தொண்டர், கலை வல்லுநர், அரசியல் தலைவர் முதலியன சில வாழ்க்கை வரலாற்று இலக்கிய வகைகளாக அமைகின்றன. கா. சு. பிள்ளையின் திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம், எல்லார்வியின் 'மைசூர் சௌடையா வரலாறு', எஸ். இராமகிருஷ்ணனின் 'ஸ்டாலின்' ஆகியன இவற்றுக்கு எடுத்துக் காட்டுகள் அகும். **வடிவ அடிப்படையில்** செய்யுள் நடை, உரைநடை என இருவகைப்படுத்தலாம். முதல் வகைக்கு வ.உ. சிதம்பரம் பிள்ளை தற்சரிதம், பாரதி அறுபத்தாறு முதலியனவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவதான உரைநடையில் தோன்றியுள்ளவை மிகப்பலவாகும்.

இன்னும் வடிவ அடிப்படையில் உரையாடல், கடிதவடிவு, நாடகம், கதைப்போக்கு, காவிய அமைப்பு எனப்பல அமைப்புகளில் காணலாம். **கற்போர் அடிப்படையில்** சிறுவர்க்கு ஏற்றதாக, இளைஞர்க்கு உரியதாக, பெண்களுக்குப் பொருந்துவதாக, அனைவர்க்கும் அமைந்ததாக இவ்வாறு எழுதலாம்.

பூவை அமுதன் எழுதிய 'என் பெருந்தலைவரின் இளமை வரலாறுகள்' என்பதைக் காட்டாக இங்குக் கூறலாம்.

தன் மதிப்பீடு: 1

1. வாழ்க்கை வரலாறு - விளக்கம் தருக.
2. வாழ்க்கை வரலாற்றைக் கற்பதன் பயன்கள் யாவை?
3. வாழ்க்கை வரலாற்று வகைப்பாடுகளை எவ்வெவ் அடிப்படையில் பிரிக்கலாம்?
4. வாழ்க்கை வரலாற்று வகைப்பாடுகளுக்குச் சில நூல்களைக் குறிப்பிடுக.

9.2 எழுதும் முறை

தன்வரலாறு - வாழ்க்கை வரலாறு

தன் வரலாறு - சரிதை, சுயசரிதை, நினைவு மஞ்சரி என்ற பல தலைப்புகளில் தமிழில் எழுதப் பெற்று வந்துள்ளது. நாமும் நம் வரலாற்றை எழுதலாம். நம் வரலாறு என்றவுடன் அந்த அளவுக்குப் பேரும் புகழும் பெற்றுவிட்டோமா எனக் கருதித் தயங்க வேண்டா. பேரும் புகழும் பெறவும் கூடும். அஃது ஒருபுறம் இருக்க, நாட்குறிப்பு எழுதுவதும் நம் வரலாறு எழுதுவதற்கு ஓரளவு ஒப்பானதே. நாள்தோறும் படுப்பதற்கு முன் நினைவில் நிறுத்தவேண்டிய அன்றைய நிகழ்ச்சிகளை, எண்ணங்களை, அனுபவங்களைப் பதிவு செய்து வைத்தல் நாட்குறிப்பு எழுதுவதன் தலையாய நோக்கமாகும். இவ்வாறு முறையாகப் பதிவு செய்து கொண்டோரின் அந்த நாட்குறிப்பு ஏடே ஒருவர் வாழ்க்கையின் வரலாறாக அமைந்துவிடுதல் உண்டு, அல்லது வாழ்க்கை வரலாற்றுக்கு முதன்மைச் சான்றாதாரமாகக் கொள்வதற்குரியதும் அதுவே. இவண் உ.வே.சா., வ.உ.சி., காந்தியடிகள் ஆகியவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து மொழிநயம் சார்ந்த இலக்கிய நயப் பகுதிகள் மாணவர்கள் மனங்கொள்ளுமாறு எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

9.2.1 உ.வே.சா. (தன்வரலாறு)

டாக்டர் உ.வே. சாமிநாதையரின் 'என் சரித்திரம்' என்பதில் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது. இக்கட்டுரை வாயிலாக உ.வே.சா. அவர்களின் மொழித்திறனையும் நடையின் தனித்தன்மையையும் அறியலாம்.

''எனக்கு நிமிஷத்திற்கு நிமிஷம் சந்தோஷத்தினால் படபடப்பு அதிகமாயிற்று. என் தந்தையாருக்கோ வரவரக் கவலையின் அறிகுறி முகத்தில் தோன்றத் தொடங்கியது. பல நாட்களாக நினைந்து நினைந்து எதிர்பார்த்து ஏங்கியிருந்த நான் ஒரு பாக்கியம் கிடைக்கப் போகிறதென்ற எண்ணத்தால் எல்லாவற்றையும் மறந்தேன். அக்காலத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார் மாயுரத்தில் இருந்தார். அச்செய்தியை நான் அறிவேன். வேறு சந்தர்ப்பமாக இருந்தால் மாயுரத்தில் அடி வைத்தேனா இல்லையோ அவரைப்போய்ப் பார்த்திருப்பேன். மாயுரத்தில் உள்ள அழகிய சிவாலயத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்திருப்பேன்; அந்நகரிலும், அதற்கருகிலும் உள்ள காட்சிகளைக் கண்டு மறந்திருப்பேன். அப்போதோ என் கண்ணும் கருத்தும் வேறு ஒரு பொருளிலும் செல்லவில்லை.

தமிழ்நாட்டிலே இணையற்று விளங்கும் ஒரு தமிழாசிரியரிடம் நான் அடைக்கலம் புகுந்து தமிழமுதத்தை வாரி நுகர்ந்து செம்மாந்து நிற்பேன் என்ற நினைவில் முன்பட்ட பாட்டையும், மேலே என்ன செய்வது என்ற யோசனையையும் மறந்தேன். ஓவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. பிள்ளையவர்கள் முன்னே சென்று அவரைக் கண்ணாரக் கண்டு அவர் பேசுவதைக் கேட்டு அவர் வாழ்க்கை மாணாக்கர் கூட்டத்தில் ஒருவனாகச் சேரும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நின்றேன்''.

(உ.வே. சாமிநாதையர், 'எங்கள் ஊர்' என் முன்னோர்கள் ஆசியைப் பெற்றது ப. 84 என் சரித்திரம் - இரண்டாம் பதிப்பு 1978)

இவ்வாறு தன் வரலாறு - வாழ்க்கைக் குறிப்பாக அமைந்திலங்கக் காணலாம்.

வாழ்க்கை வரலாறு

பொதுவாக 'வாழ்க்கை வரலாறு' அதாவது பிறர் வாழ்வு பற்றிய வரலாற்று நூல்கள், எழுதுவோர் இயல்பிற்கு ஏற்ப, நோக்கிற்கு ஏற்பப் பற்பலவாறு எழுதப்பெறுகின்றன. இத்தகு வாழ்க்கை வரலாறு எழுதுவோர் பலர் நேரிடையாக அறிமுகம் ஆகியிருத்தல் கூடும் அல்லது வரலாற்று நாயகருடன் நெருங்கிப் பழகியிருத்தல் கூடும். இந்த வாய்ப்புகள் மட்டும் போதா. யாரைப் பற்றி வாழ்க்கை வரலாறு எழுதப் பெறுகின்றதோ அவர் எழுதிய நூல்கள், அவரைப் பற்றிய நூல்கள், பத்திரிகைச் செய்திகள் முதலிய எழுதப்பெற்ற பதிவுகள் வழித் தரவு திரட்டுதல் வேண்டும். அவரோடு நெருங்கிப் பழகிய நண்பர்கள், பணிபுரிந்த அலுவலகத்தார், உறவினர் முதலானோரையும் நேரில் சந்தித்துச் செய்திகள் சேகரித்தல் வேண்டும். இவற்றின் அடிப்படையில்தான் வாழ்க்கை வரலாறுகள் எழுதப் பெறுகின்றன.

9.2.2 வ.உ.சி. (தற்சரிதம்)

வடிவ அடிப்படையில் முதலாவதாகக் கருதத் தக்கது செய்யுள் வடிவம், உரைநடைவடிவம் என்பன. பெரும்பாலும் வாழ்க்கை வரலாறுகள் உரைநடை வடிவிலேயே எழுதப்பெறுகின்றன என்றாலும் வ.உ.சி., பாரதி முதலான சிலர் தம் வரலாற்றைத் தாமே செய்யுள் வடிவில் வடித்தளித்துள்ளனர். இவ்வாறே சிலர் வாழ்க்கை வரலாறுகளையும் செய்யுளில் எழுதியுள்ளனர். அரங்க சீனிவாசன் அவர்கள் எழுதியுள்ள 'மனித தெய்வம் காந்தி காதை' பெருங்காப்பிய அமைப்பிற்கு ஏற்பச் செய்யுளில் அமைந்திருப்பதைக் காட்டாகக் கொள்ளலாம்.

'வ.உ.சிதம்பரம்பிள்ளை தற்சரிதம்' என்ற செய்யுளில் அமைந்த தன் வரலாற்று நூலில், அவர் திருச்சியில் மாணவர் தம்மை வரவேற்றதையும், கோவைச் சிறையில் தாம் அடைபட்ட நிகழ்ச்சியையும் பின்வருமாறு எழுதுகிறார்.

திருச்சியில் மாணவர் வரவேற்பு:

வண்டியில் ஏறவும் மாணவர் அநேகர்
அண்டிவந் தென்னுடன் அன்பொடு பேசினர்
பதிலுரை கூறிநான் படுத்துநன் றுறங்கிக்
கதியுடன் ஈரோட்டில் கால்சுத்தி செய்து
போதனூரில் புதியன உண்டு
கோதிலாக் கோய முத்தூர் கூடவும்
அனேகர் ஸ்டேஷனில் அவாவியெனை நின்றனர்.

அநேக போலீஸார் அவணின்று வந்தெனை
வண்டியின் மறுபுறம் வாவென் றிறக்கியோர்.
வண்டியில் ஏற்றி வலனொடு சென்றிரல்
சிறைக்குள் சேர்த்தனர் செப்புவன் பின்னர்ச்
சிறைக்குள் நிகழ்ந்தவும் தெரிந்ததும் பின்னே!

இன்னும் வடிவம் என்று எண்ணும்போது. உரைநடை, செய்யுள் ஆகிய யாப்பியல். நோக்கிற்கு அப்பால் உரையாடல் போக்கு, கதைப்போக்கு, காப்பியப் போக்குகளும் உளங்கொளத் தக்கன. மேலும் முன்குறித்தது போல ஒருமுக நோக்காகக் குழந்தைகளுக்கு ஏற்றதாக, இளைஞர்க்கு உகந்ததாக, பெண்களுக்குப் பொருந்துவதாகவும் சில வாழ்க்கை வரலாறுகள் அமைந்துள்ளன.

கதைப் போக்கிற்குச் சிவசங்கரியின் 'இந்திராவின் கதை'யைச் சொல்லலாம். அதன் தொடக்கம் ஒரு சிறு கதைக்கு உரிய எதிர்பார்ப்பு (suspense) உத்தியோடு பின்வருமாறு தொடங்கக் காணலாம்.

> *''சென்ற டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி திருமதி இந்திரா காந்தியின் யுத்த நிறுத்த அறிக்கையைக் கேட்ட வினாடியிலிருந்து என் மனத்தில் ஏதோ ஒரு கொந்தளிப்பு''. (இந்திராவின் கதை பக். 31)*

என்ன கொந்தளிப்பு? ஏன் கொந்தளிப்பு? என்றறியும் எதிர்பார்ப்பு உத்தி இதன்கண் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

நாடு, நகர், கடல் (ஆறு), வளங்கூறிச் செல்லும் காப்பியப் போக்கில் 'மறைமலையடிகள் வரலாற்றை' மறை. திருநாவுக்கரசு எழுதுகிறார்.

> *'தெய்வ மணங்கமழ்வது' சோழநாடு. அந்நாட்டின் கடற்கரை நகராய் இலங்குவது நாகப்பட்டினம். அந்நகரின் சிறப்பினைக் கூறும் திருநாவுக்கரசு நாயனார் கற்றார் பயிலும் நாகை என்றார். இங்ஙனம் கற்றார் வாழ் நாகப்பட்டினத்தினை அடுத்துள்ள அழகிய சிற்றூர்களில் ஒன்று காடம்பாடி. கடலும், கடற்கரையும், அழகிய தூய மணற்பரப்பும், சிறுசிறு பொழில்களும் சூழக் காடம்பாடி அழகிய காட்சி வழங்கும். கடற்காற்று இனிய உணர்வை ஊட்டும் (மறைமலையடிகள் வரலாறு பக். 7).*

இத்தொடக்கப் பகுதியில் சோழநாடு, நாகப்பட்டினம், காடம்பாடி, கடல்நயம் முதலியன காப்பியப் போக்கில் முறையாகக் குறிக்கப் பெற்றிருத்தலைக் காணலாம்.

9.2.3. 'காந்தி அண்ணல்' - மு.வ.

குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு ஏற்றவாறு 'காந்தி அண்ணல்' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலை டாக்டர் மு.வ. எழுதியுள்ளார். அதன் தொடக்கமே இந்த நோக்கத்தைப் புலப்படுத்தும்.

''இதோ இந்தக் கல்லை எறிகிறேன்.
எவ்வளவு உயரத்தில் போகிறது பார்''
''நல்ல வலுவோடு எறிந்தால் அந்தக் கல் திரும்பியே

வராது; அப்படியே உயரத்தில் ஆகாயத்தில்
போய்விடும். நான் எறியட்டுமா?''

அது பொய் நீ எவ்வளவு உயரத்தில் கல் எறிந்தாலும்
அது கட்டாயம் கீழே வந்து விழுந்துவிடும். எதுவும்
மேலே போய் நின்று விடாது.

யார் சொன்னது? நீ பார்த்தது அவ்வளவுதான்.
உனக்கு என்ன தெரியும்?

நீ மட்டும் பார்த்திருக்கிறாயா?
பாண வேடிக்கையில் பார்த்ததில்லையா?
பற்ற வைத்துவிட்டால், சுர்ரென்று
பாணம் மேலே எவ்வளவு உயரத்தில் போய்ச்
சேருகிறது. அது எப்போதாவது திரும்பி வருகிறதா?
விழுகிறதா? இதைப் பார்த்ததில்லையா?

ஆமாம் பார்த்திருக்கிறேன், மெய்தான்.
பாணம் உயரத்தில்தான் போய்ச்சேருகிறது.
மெய்தான்''.

(காந்தி அண்ணல் பக். 5).

இந்த உரையாடல் சின்னஞ்சிறு சிறார் இருவர் பேசுவனபோல் அமைத்திருத்தலைக் காணலாம்.

''மற்ற பெரியோர்களின் வாழ்க்கையை நினைக்கும் போது 'அவர்கள் எங்கே? நாம் எங்கே? நாம் அவர்களைப் போல் ஆகமுடியாது. அவர்களுக்கு இறைவன் அருள் செய்தார். அதனால் அவர்கள் உயர்ந்தார்கள்... அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை நமக்குக் கிட்டாது' என்ற எண்ணங்களே தோன்றும். ஆனால் காந்தியின் வாழ்க்கையில் இதற்கு இடமே இல்லை. நம்மைப்போல் குறைகளோடு பிறந்தார்; முயன்று முயன்று குறைகளைப் போக்கிக் கொண்டார். நம்மைப் போல் புலன்களுக்கு அடிமையாக வாழ்ந்தார்; படிப்படியாக புலன்களை வென்று வென்று வீரரானார். (காந்தி அண்ணல் பக்.9).

எனவரும் தொடர்களும், கருத்துக்களும் சிறுவர்கள் எளிதில் படிக்கத் தக்கனவாக நினைக்கத் தக்கனவாக அமைந்திருக்கக் காணலாம்.

பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு: அ. மறைமலை

'நுண்ணறிவு அன்புடன் இணைந்துவிட்டால், அதனால் அடைய முடியாதது எதுவும் அவனியில் இல்லை' என்றான் செருமானியக் கவிஞன் கதே.

தமிழகத்தைப் பொறுத்தவரைஅவரது வாய் மொழி, வாய்மை மொழியாகவே பலித்துவிட்டது.

இலட்சக் கணக்கான தமிழ் இளைஞர்களின் இருதயக் கோவிலிலே இன்று கடவுளாகக் கோலோச்சும் பேறு பெற்றவர் யார்?

அறிஞர் சி.என். அண்ணாதுரை அவர்கள் அறிவுக்கனல்! அன்புப் புனல்!

தேனைவிட இனிக்கப் பேசும் அந்தச் சீனிக்குன்றை நோக்கி, எண்ணிலடங்கா இளைஞர் படை எறும்புக் கூட்டங்களாக ஏகி வாழ்வானேன். அண்ணா! அண்ணா! எனக் கூவித் தொழுவானேன்!

(பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு பக். 17)

இதனை இளைஞர்களை மனத்திற்கொண்டே திரு அ. மறைமலை எழுதியுள்ளார் என்பது தெளிவு.

9.3 அமைப்பு

வாழ்க்கை வரலாற்று நூல்கள் தொடங்கும் திறனும், முடிக்கும் திறனும் கொண்டு, கற்போரைக் கவர்ந்து தடையின்றிப் படித்து முடிக்க வைப்பனவாக அமைந்துள்ளன. இவ்வாழ்க்கை வரலாற்றிற்குத் தலைப்பிடுத் திறனும் கற்பார்க்குப் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையக் காணலாம்.

9.3.1 தொடங்கும் திறன்

ரசிகமணி டி.கே.சி.யின் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்கும் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் ரசிகத் தன்மையையே தொடக்கமாக அமைக்கிறார்.

> ''பிரான்ஸ் தேசத்திலே ஒரு நிபுணர். ஒயினின் சுவையை நிர்ணயிப்பதில் இவர் பேர் போனவர். ஓயின் பிரான்ஸ் தேசத்தில் அபரிதமாகக் கிடைக்கும் ஒரு பானம் அல்லவா! ஒரு ஓயினுக்கும் மற்றொரு ஓயினுக்கும் சுவையில் எவ்வளவோ பேதாபேதம்''
>
> (ரஸிகமணி டி.கே.சி. ப.1)

என்ற தொடக்கப் பகுதியே அது.

தம் நினைவு மஞ்சரியை உ.வே. சாமிநாதையர் தொடங்கும் விதம்:

> சீவகசிந்தாமணியை நான் முதன்முதலில் 1887 ஆம் வருஷம் பதிப்பித்த போது தமிழிலக்கியங்களில் அபிமானமுடையவர்கள் பலருடைய அன்பும் ஆதரவும் எனக்குக் கிடைக்கலாயின. எதிர்பாராத இடங்களி லிருந்து வாழ்த்துரைகள் பல வந்தன. தமிழுலகத்தில் அந்த நூல் உண்டாக்கிய இன்பக் கிளர்ச்சிக்கு அடையாளமாகப் பல கடிதங்கள் என்னிடம் உள்ளன. அதனால் எனக்குத் தமிழ் நூலாராய்ச்சியால் தீவிரமான ஆர்வம் உண்டாயிற்று''
>
> (நினைவு மஞ்சரி பக்.1)

தம் வாழ்நாள் எந்தக் குறிக்கோளுக்காகப் பயன்பட்டதோ அதனையே தொடக்கமாக அமைத்தது ஒருவகை உத்தியாகும்.

தாம் எழுதிய திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்தைத் தத்துவ ஞானச் சிந்தனை ஒன்றோடு தொடங்குகிறார் கா.சு. பிள்ளை:

> ''தன்னுயிர்போல் மன்னுயிர் பிறவற்றையுங் கருதி
> அவற்றிற்கு நன்மை செய்வதே பேரறமென்று
> பெரியோரால் விதந்தோதப் பெறும். அத்தகைய பேரறம்
> இயற்றவல்லார் எவ்வுயிர்க்கும் இரங்கும் அருட்குண
> முடையவர்களேயாவர். அவர்களே அந்தணராகிய
> அறவோரென்று ஆசிரியர் திருவள்ளுவர் நீத்தார்
> பெருமையுட் குறித்தனர். (திருஞானசம்பந்தர் வரலாறு ப.1)

மைசூர் சௌடையா வரலாறு,

> 'மாண்புமிக்க மைசூர் ராஜ்யத்தில் நகரத்திலிருந்த பதினாறாவது மைலில் திரிமருட க்ஷேத்திரம் என்று ஒரு பேரூர். அது திரிவேணி சங்கமம் ஆகிற இடம். அவ்வூர் மக்களில் பெரும்பாலரும் விவசாயிகள். அங்கு, கங்காணிக்கார கௌடர் என்ற குலத்தில் தோன்றிய அகஸ்தியேசுவரர் நடுத்தரமான செல்வ நிலையில் வாழ்ந்து வந்தார். விவசாயம், சிறு வியாபாரம் இரண்டும் அவருடைய தொழில்கள்; செந்நெறியும் உழைப்பும் தெய்வ வழிபாடும் சிறப்பியல்புகள்'
>
> (மைசூர் சௌடையா வரலாறு ப. 1)

எனப் பண்டைய கதைகூறும் போக்கில் தொடங்குகிறது.

'சிலம்புச் செல்வர் வாழ்க்கையிலே' என்னும் ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாறு, அவர் பற்றி கி.வ.ஜ. பாடிய பாடல் ஒன்றோடு தொடங்குகிறது.

தன்னுடைய முயற்சியாலே
  தாங்கரும் பெருமை ஏணி
மன்னிய படியில் ஏறி
  வயங்குவான்; நேர்மை பண்பு
பின்னிய பக்தி வீரம்
  பிறர் நலம் எண்ணல் ஆதி
துன்னிய குணங்கள் யாவும்
  சூழுறச் சிவஞானங் காண்!

(சிலம்புச் செல்வர் வாழ்க்கையிலே ப. 1)

இன்னும் நாட்டுப்புறப் பாங்கில், உரையாடல் அமைப்பில், வினாவிடை வகையில் தொடங்குகிற வரலாறுகளும் உள.

துன்ப உணர்வு நெஞ்சை அள்ளும் இயல்புடையது. ஆகவே சிலர் துன்ப முடிவை அல்லது துன்பியல் உணர்வைத் தொடக்கமாகக் கொண்டு வாழ்க்கை வரலாற்றைத் தொடங்குதலை இலக்கிய உத்தியாகக் கொண்டுள்ளனர். பேராசிரியர் மு.வ. தம் திரு.வி.க. வாழ்க்கை வரலாற்று நூலைப் பின்வருமாறு தொடங்குகிறார்.

''நீங்கள் இப்போது திரு. நாராயணசாமிக்குச் சொல்லி வரும் புதிய நூல் என்ன? என்று கேட்டேன் - மரணம் என்றார் அவர். உள்ளம் நொந்து வருந்தினேன். இளமை விருந்து, பெண்ணின் பெருமை, தமிழ்த் தென்றல் என்ற பெயர்களைப் பலமுறை கேட்டு மகிழ்ந்த என் செவிகள், முதுமை உளறல் என்று ஒரு நூலின் பெயரைக் கேள்வியுற்ற போதே நொந்தன. இப்போது, அவர் தரும் நூல் என்ன என்று அறிய விழைந்த போது 'மரணம்' என்று ஒரு நூலின் பெயரை எதிர்பார்க்கவில்லை...''

என்று டாக்டர் மு.வ. தம் திரு.வி.க. வாழ்க்கை வரலாற்று நூலைத் தொடங்குகிறார்.

9.3.2 முடிக்கும் திறன்

மேற்குறிப்பட்டது போன்று முடிப்பு உத்திகளும் சில உள. உயர்ந்த பாடல் கூறி முடிப்பது; வரலாற்றுக்கு உரியவர் தம் வாழ்க்கையின் குறிக்கோளைக் குறிப்பிட்டு முடிப்பது; அவர்தம் புகழுரைகளால் முடிப்பது முதலியன குறிப்பிடத்தக்கனவாகும்.

உயர்ந்த பாடல் கூறி முடிப்பதற்குச் சான்றாக மு.வ. வாழ்க்கை வரலாற்றைக் கூறலாம். அது வருமாறு:

''மிகுதியான தேவைகளும் அவற்றிற்கான வாழ்க்கைப் போராட்டங்களும் அறிவியலால் மிகுந்து, உள்ளத்தை மறந்ததால் பொய்யும் ஒழுக்க மின்மையும் தோன்றி வளர்ந்து வரும் இன்றைய சூழலுக்கும் இத்தகைய ஓர் அமைப்பு முறை தேவை. இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட இவ்வமைப்பு முறையே டாக்டர் மு.வ. போற்றுவது. நாம் முன்னேற எண்ணம் கொண்டுள்ளோம் என்பதற்கு அதுதான் அறிகுறி.

''இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்'' (டாக்டர் மு.வ. ப. 100)

அடுத்து வாழ்க்கையின் குறிக்கோளைக் குறிப்பிட்டு முடிப்பது:

''யாரும் முட்டாளாக இருக்கக்கூடாது; யாரும் துன்பப்படக்கூடாது; எல்லோரும் நல்ல முறையிலே வாழ வேண்டும் - இந்த மனோபாவத்தில் ஊறிப் போனவர் சௌடையா. கலைக் கர்வமில்லாது

எளிய பழக்கத்துடன் உபகார உள்ளத்துடன் வாழும் சௌடையா நெடுங்காலம் சுகமுடன் வாழ வேண்டும் என்று எல்லோரும் வாழ்த்துகிறார்கள். இறைவன் திருவருள் புரிவானாக.

(மைசூர் சௌடையா வரலாறு ப. 194)

புகழுரைகளைக் கூறி முடிப்பதை ரஸிகமணி வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பால் அறியலாம்.

பண்புடைமை தமிழருக்கே சிறப்பாய் அமைந்த குணம். தமிழருக்காகவே வாழ்ந்து வருகின்ற டி.கே.சி. இப்பண்புடைமை நிரம்ப வாய்ந்தவர்.

‘அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு’

டி.கே.சி.யின் அன்புடைமையும் ஆன்ற குடிப்பிறப்பும் எல்லோரும் அறிந்தன. அவரது பண்புடைமையை நன்றாக அனுபவித்தவர்களுள் நான் ஒருவன். என்னுடன் போட்டி போட்டு அனுபவித்தவர்களும் பலருண்டு. பலருடைய அனுபவமும் என்னுடைய அனுபவமும் ஒன்றாகவே இருக்கின்றன என்பதில்தான் எனக்குத் திருப்தி.

(ரஸிகமணி டி.கே.சி. ப.174)

9.3.3 தலைப்பிடும் திறன்

தலைப்பிடலிலும் கற்பார் நெஞ்சம் கவருமாறு, தன் வரலாறு எழுதுவோர் கருத்துச் செலுத்துவது உண்டு. இதன் வழியும் சில உத்திகள் உருவாகின்றன. பொதுப்படையாக மறைமலையடிகள் வரலாறு, இராமலிங்க அடிகள் வரலாறு என்று தலைப்பிடுவது ஒரு முறை. வரலாறு எனக் குறிக்காமல், ‘அரசஞ் சண்முகனார்’ ‘ஸ்டாலின்’ என வரலாற்றுக்கு உரியோர் பெயரை மட்டும் தலைப்பாகக் குறிப்பிடும் மரபும் உள்ளது.

வரலாற்றுக்குரியவருடைய தனிச் சிறப்புப் புலப்படுமாறு, அவர்தம் தனித்தன்மையால் பெற்ற பட்டத்தை அடைமொழியாகக் கொண்ட தலைப்புக்களும் தரப்பெற்றுள்ளன. ‘வீரன் நெப்போலியன்’, ‘ரஸிகமணி டி.கே.சி.’ முதலிய தலைப்புகளைக் காட்டாகக் குறிப்பிடலாம்.

கதைப்போக்கில், காவியப் போக்கில் அமைந்தன என்பதைச் சுட்டுவது போல ‘இந்திராவின் கதை’, ‘மனித தெய்வம் காந்தி காதை’ என்றும் தலைப்பிடப்பட்டுள்ளன. வாழ்க்கை வரலாற்று அமைப்புகள் பற்றி மேலும் அறியத் தக்க சில செய்திகள் உள்ளன.

(அ) வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுதிச் செல்வதும் உண்டு. ஆனால் பிரிவும் உட்பகுதிகளுமாய்ச் சிறுசிறு தலைப்பிட்டு அமைவனவே பெரும்பாலானவை. இப்பகுதித் தலைப்புகளும், பகுதிகளின்கீழ் இடப்பெறும் சிறு உட்தலைப்புகளும் ஒருவர் பற்றி அறிய வேண்டிய குறிப்பிட்ட செய்தியை, நிகழ்ச்சியை உடனே அறிந்து படிக்க உதவி செய்வன. இவ்வாறு அமைக்கும் போது முறையாக பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, வாழ்வின் வெற்றி, இறப்பு, இப்படி அமைவன பல. சில சிறுகதை புதின உத்திகள் கொண்டும் அமைகின்றன. தமிழக மக்கள் நன்கு அறிந்த ஒருவருடைய வாழ்க்கை வரலாறு பெரும்பாலும் தோற்றம், வளர்ச்சி, மறைவு என்று அமையாமல் அவர் தமிழக மக்களுக்கு எவ்வாறு அறிமுகமானவர் என்று குறிப்பிடும். அவர்தம் தனிச்சிறப்பை முற்பகுதியில் கூறிப் பின்னர் அவர் வாழ்க்கையைச் சிந்தித்துச் செல்லுதலை எழுத்தாளர் ஓர் உத்தியாகக் கொண்டிருத்தலைக் காணலாம். காட்டாக, மு.வ. எழுதிய நான்கு வாழ்க்கை வரலாற்று நூல்களுள் இரண்டு இந்த உத்தியைக் கொண்டுள்ளன. ஒன்று திரு.வி.க. மற்றொன்று அண்ணல் காந்தி. ஆனால் அவரே எழுதிய அறிஞர் பெர்னாட்ஷா’ என்னும் நூல்.

பிறப்பும் வளப்பும்
தொழில் முயற்சி
எழுத்தாளர் ஆதல்
தாமே கற்றல்
தொண்டு ஆற்றல்

என அமைகிறது. இவற்றுள் பிறப்பும், வளர்ப்பும் என ஷாவின் வாழ்க்கையை எழுதிச் செல்லக் காணலாம். ஆனால் அவரே தம் திரு.வி.க. பற்றிய நூலில் முதல் தலைப்பாகத் 'தமிழகத் தந்தை' என இட்டுள்ளார்; காந்தி அண்ணல் பற்றிய நூலின் தொடக்கத் தலைப்பாகத் 'தூய்மை' என்பதை அமைத்துள்ளார்.

கவிஞர் தாகூர் என்ற நூல் மிக எளிமையாகத் தாகூர் வாழ்வில் நிகழ்ந்த எல்லா நிகழ்ச்சிகளையும் ஒருவர் எளிதில் அறிந்து கொள்ளுமாறு, பற்பல சிறுசிறு தலைப்புகளைக் கொண்டு பின்வருமாறு அமைந்துள்ளது:

''**இளமை**
நாட்டின் புகழ்
பிறப்பும் வளர்ப்பும்
கற்பனை வித்து
இயற்கையில் ஈடுபாடு.....
பள்ளிக்கூட வாழ்க்கை
பாட்டு எழுதுதல்
நாடக எண்ணம்
வெளியுலகம்
இமயமலை
தந்தை கற்பித்தவை
பள்ளிக்கூட விடுதலை''.

(ஆ) வாழ்க்கை வரலாற்றுக்கு இடையிடையே உரையாடல், பழமொழிகள், மேற்கோள்கள் அணிகள் முதலியவற்றை அமைத்து விளக்குவர்; அரிய பாடல்கள், இலக்கிய மேற்கோள்கள் முதலியவற்றை அமைத்து இலக்கியச் சுவையை வளர்த்தலும் ஒருவகை உத்தியே.

காந்தி அடிகள் இங்கிலாந்து சென்றபோது நடனக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள் கேட்டனர். அவர் உடனே சிரித்து

> ''அதற்கென்ன தடை? அப்படியே ஆகட்டும். ஆனால் ஒன்று; நான் நடனமாடுவதானால் எனக்குக் கூட்டாளியாக நடிக்க வேண்டியவர் இவரே என்று சொல்லித் தம் கையில் இருந்த தடியைச் சுட்டிக் காட்டினாராம். அங்கிருந்த ஒவ்வொருவரும் கொல்லெனச் சிரித்தார்களாம்'' *(பக். 83)*

மேலும் பற்பல இடங்களில் திருக்குறள் மேற்கோள் காட்டிச் செல்கிறார்.

> ''கடவுளின் பெயரைச் சொல்வது எளிது. அதைக் கிளிப்பிள்ளைக்கும் கற்றுக் கொடுக்கலாம். அதனால் கிளி பக்தியுடையதாகிவிடுமா? என்று நீதி தர்மத்தில் விளக்கியுள்ளார். ஒருவர் இராமநாமத்தை முணுமுணுத்துக் கொண்டே இருக்கலாம். செபமாலையை உருட்டிக் கொண்டு நாளெல்லாம் கழிக்கலாம். மக்களிடையே உத்தமர்போல் உலவலாம். ஆனால் உள்ளத்தில் தன்னலம் நிறைந்திருந்தால், அவர் ஆசாரக் கள்ளரே ஆவார் என்று அண்ணல் எழுதியதைப் படிக்கும் போது,
>
> ''வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன் நெஞ்சம்
> தானறி குற்றப் படின்''
>
> என்னும் திருவள்ளுவர் வாய்மொழியே நினைவுக்கு வருகின்றது.

(காந்தி அண்ணல் ப. 84)

வாழ்வுக்குரிய கருத்தை எடுத்துத் தருதலுக்கு உதாரணமாக, கவிஞர் தாகூர் வரலாற்றின் இறுதியில் கீதாஞ்சலியிருந்து சில பகுதிகளை டாக்டர் மு.வ. மொழி பெயர்த்துத் தந்திருத்தலைக் காணலாம்.

''எங்கே மனம் அச்சமற்றிருக்கிறதோ
தலை நிமிர்ந்திருக்கிறதோ
எங்கே அறிவு உரிமையுடனிருக்கிறதோ
எங்கே உலகம் குறுகிய குடும்ப எல்லைகளால்
துண்டு துண்டாகப் பிளவு படாதிருக்கிறதோ
எங்கே உண்மையின் ஆழ்ந்த அடிப்படையிலிருந்து
சொற்கள் பிறக்கின்றனவோ
எங்கே சலியாத உழைப்பு விழுமிய நிலையை நோக்கி
நீளுகிறதோ
எங்கே பகுத்தறிவு எனும் தெளிந்த ஓடை மூடப் பழக்க
வழக்கம் என்னும் வறண்ட பாலையில்
சுவறிப் போகாதிருக்கிறதோ
எங்கே என்றும் விரிந்து நோக்கும் எண்ணத்திலும்
செயலிலும் மனத்தை நீ முன்னின்று
அழைத்துச் செல்கிறாயோ
அங்கே அந்த உரிமையுள்ள இன்ப உலகத்தில்
என் தந்தையே என் நாடு விழிப்புறுக. (ப. 73)

இக்கருத்து மனித உயர்வுக்குப் பயன்படுவதாகலின், வரலாற்றில் முடிமணியாகத் தேர்ந்தெடுத்துத் தரப்பெற்றுள்ளது.

தன்மதிப்பீடு: 2

1. சிறுவருக்கு உகந்தவாறு தொடக்கம் அமைந்துள்ள வாழ்க்கை வரலாற்றின் பெயரென்ன?
2. பின்வரும் நூல்களின் தொடக்கம் எவ்வாறு அமைந்துள்ளது?
   (அ) ரசிகமணி டி.கே.சி.
   (ஆ) நினைவு மஞ்சுரி
   (இ) மைசூர் சௌடையா வரலாறு
3. முடிப்பின் வகைகள் யாவை?
4. தலைப்பிடலின் வகைகள் யாவை?

9.4 பாடத் தொகுப்புரை

மொழி இலக்கிய வடிவில் வாழ்க்கை வரலாறு ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இதில் இலக்கியத்திற்கு உரிய உணர்வும். அறிவியலின் அடிப்படையாகிய உண்மையும் இயைந்து இலங்கக் காணலாம். இத்தகு வாழ்க்கை வரலாறுகள் தன்வரலாறு, வாழ்க்கை வரலாறு என எழுதுவோர் அடிப்படையில் இருவகையாகவும் செய்யுள் வடிவு, உரைநடைவடிவு என யாப்பியல் அடிப்படையில் இருவகையாகவும் அமைகின்றன. வாழ்க்கை வரலாறு எழுதுவதற்கெனச் சிறப்பான சில அமைப்பு முறைகளும் இருக்கின்றன. இவற்றை எல்லாம் அறிந்து இத்தகு இலக்கிய வகை எழுதுவதில் திறம் பெறுதல் மொழிப்படிப்பின் ஒரு கூறாகும்.

9.5 தொடர்ந்து படிப்பதற்குரிய துணை நூல்கள்

1. **அறிஞர் பெர்னார்ட்ஷா**, டாக்டர் மு. வரதராசன், பாரிநிலையம் சென்னை, 1966.
2. **உழைப்பால் உயர்ந்த ஜி.டி. நாயுடு**, மெர்வின், முருகன் பதிப்பகம், சென்னை, 1983.

3. **தமிழ் வாழ்க்கை வரலாற்று இலக்கியம்**, ச. சிவகாமி, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1955.

4. **திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்**, திரு.வி.க.கலியாணசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.

5. **மாவீரன் நெப்போலியன்**, அ.லெ. நடராஜன், மணிவாசகர் நூலகம், சென்னை, 1977.

தன்மதிப்பீடு: விடைகள்

1. ஒருவர்தம் அறிவனுபங்களை, அகவுணர்வுகளை அழிந்துபோய் விடாமல் எதிர்காலச் சந்ததியினர்க்கு எழுத்துருவில் அவற்றை ஆக்கி அளித்துச்செல்வதே வாழ்க்கை வரலாறாகும்.

2. நம் வாழ்வைச் செம்மைப்படுத்திக்கொள்ள வழிகாட்டும். திட்டமிட்டுக் கொண்டு சிறக்க வாழலாம். நம் போன்றவரின் வரலாறு ஆதலால் அது நம்மை மிகவும் பாதிக்கும். நாம் படித்த சான்றோனைப்போல், தலைவனைப்போல் நாமும் ஆகமுடியும் என்ற தன்னம்பிக்கையை அது தரும்.

3. தன்வரலாறு, வாழ்க்கைவரலாறு என வகைப்படுத்தலாம். எழுதப் படுவோர் பெயரால் அமைவன ஒருவகை, செய்யுள் வடிவ வரலாறு, உரைநடை வடிவ வரலாறு ஒரு வகைமை, உரையாடல், கதை, கடிதம், நாடகம், காவியம் - என வடிவ வகைகள் மேலும் பிரியும். கற்போர்க்கு ஏற்ப குழந்தைகளுக்கு, இளைஞருக்கு, மகளிருக்கு என எழுதுவதுண்டு.

   எனவே பொருள் அடிப்படை, வடிவ அடிப்படை, கற்போர் அடிப்படை, எழுதுவோர் அடிப்படை என நான்கு அடிப்படைகளில் இது அடங்கும்.

4. தன் வரலாறு - என் சரித்திரம்: உ.வே.சா.
   பிறர் வாழ்க்கை வரலாறு - எங்கள் நேரு.
   தொழில் வல்லுநர், அறிவியல் அறிஞர் - கலைத்தந்தை தியாகராசர், அறிஞர் ஜி.டி. நாயுடு.
   காவிய வடிவம் - பாரதி அறுபத்தாறு, காந்தி மகான் கதை.
   கதை வடிவம் - இந்திராவின் கதை.
   இன்னபிற தேடிக் கண்டு கொள்க.

II

1. மு.வ. எழுதிய ‘காந்தி அண்ணல்’

2. அ. ரசிகமணி டி.கே.சி. என்பதற்கு ஏற்ப ரசிகத்தன்மையே முதலில் விவரிக்கப்படுகிறது.

   ஆ. டாக்டர் உ.வே.சா. தம் வாழ்நாளின் குறிக்கோளையே நினைவுகூர்ந்து பதிப்புப்பணி பற்றி விவரித்துத் தம் ‘நினைவு மஞ்சரி’யைத் தொடங்குகிறார்.

   இ. மைசூர் சௌடையா வரலாறு, பண்டைய கதை கூறும் போக்கில் தொடங்குகிறது.

3. உயர்ந்த பாடல் கூறி முடிப்பது, வரலாற்றுக்குரியவரின் குறிக்கோளைக் கூறி முடிப்பது; அவர்தம் புகழுரை கூறி முடிப்பது என வாழ்க்கை வரலாற்றை முடிக்கும் திறன் பல திறப்படும்.

4. வாழ்க்கை வரலாற்றிற்குத் தலைப்பிடலின் வகைகள்:

   பெயர் சுட்டி வரலாறு எனல், பெயருக்கு அடைமொழி தந்தமைத்தல், கதை காதை எனச் சுட்டல் என இது பல திறப்படும்.

பாடப்பகுதி (Unit) *10*
கட்டுரைக்கலை (Art of Essay)

படிப்பு நோக்கம்

- ★ கட்டுரைத் தமிழை அறிமுகம் செய்து வைத்தல்.
- ★ கட்டுரை வகைகளைச் சுட்டிக் காட்டுதல்.
- ★ கட்டுரை எழுதும் ஆர்வத்தைத் தூண்டுதல்.

பாடக்கருத்தலகுகள்

10.0 பாட முன்னுரை

10.1 கட்டுரை விளக்கம்

10.2 கட்டுரை அமைப்பு

10.2.1 எழுதப்புகும்முன் எழுத்தாளனின் பணி

10.2.2 கட்டுரையமைப்பும் கவனத்திற்குரிய செய்திகளும்

10.3 வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

10.4 மறைமலையடிகளார்

10.5 உ.வே. சாமிநாதையர்

10.6 ரா.பி. சேதுப்பிள்ளை

10.7 பாரதியார்

10.8 திரு. வி. கலியாணசுந்தரனார்

10.9 மு. வரதராசனார்

10.10 பாடத்தொகுப்புரை

10.11 தொடர்ந்து படிப்பதற்குரிய துணைநூல்கள்

ignou THE PEOPLE'S UNIVERSITY

10.0 பாட முன்னுரை

எந்த ஒரு பொருளையும் படிப்போர் மனம் கவரும்வண்ணம் எளிய இனிய உரைநடையில் தருவது கட்டுரைக் கலை. இலக்கிய உலகில் இக்கட்டுரைக் கலை இன்றியமையாத ஒன்று. இலக்கியக் கலையின் உயிர் கவிதைக் கலை; உள்ளம் கட்டுரைக்கலை என்றும் கூறுவர். இத்தகு சிறப்புடையதாகக் கருதப்படும் கட்டுரைக்கலை தமிழ்மொழியில் தழைத்து வளர்ந்துள்ளது.

கட்டுரை என்ற சொல் முன்பு சற்று வேறுபட்ட பொருளில் வழங்கியது. முதன்முதலில் இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் 'கட்டுரை' என்ற சொல்லுக்குப் பொருள் பொதிந்த சொல், விரித்துரைக்கும் உரை, புனைந்துரை என்றெல்லாம் பொருள் கூறியுள்ளனர்.

இலக்கண ஆசிரியர்களும் இலக்கணச் சூத்திரங்களுக்கு உரை எழுதி யுள்ளனர். சிவஞான முனிவர், அரசன் சண்முகனார் போன்ற சான்றோர்கள் இலக்கண உரை விளக்கமும், மறுப்புரையும், அம்மறுப்புக்கு மறுப்பும் எழுதியுள்ளனர்.

இவையெல்லாம் நீண்ட உரைகளாக உள்ளன. 'இறையனார் களவியலுரை' புனைந்துரை என்று கூறுமளவு விரிந்து பரந்து செல்கிறது. தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியுரையும் விரிந்து காணப்படுகின்றது. இவையெல்லாம் நீண்ட உரைநடையமைப்பைப் பெற்றிருந்தன என்பதுண்மையே. ஆனால் இவற்றையெல்லாம் கட்டுரை வகைகளுக்குள் அடக்க முடியாது.

தமிழில் பட்டபடிப்பு, கலைப்படிப்பு தோன்றிய காலத்தில் தமிழ்ச் சான்றோர்கள் இப்படிப்பின் தரத்தை உயர்த்த எண்ணினர்; இப்படிப்பிற்கு உயர்ந்த சிறந்த கட்டுரைகள் எழுதவேண்டும் என்று விழைந்தனர். ஆங்கில இலக்கியக் கட்டுரையமைப்புகளைப் பின்பற்றித் தமிழிலும் கட்டுரை எழுத முயன்றனர். மேலை இலக்கியத் தாக்கத்தினால் கட்டுரை என்ற அமைப்பில் தமிழ் மஞ்சரி, தமிழ் வியாசம், விநோதரச மஞ்சரி என்ற தலைப்பில் கட்டுரை நூல்கள் வெளிவந்தன.

தற்பொழுது குண்டூசி முதல் குமரிமுனை வரை அனைத்துப் பொருளும் கவிதைப் பொருளாகலாம் என்பதுபோல் கட்டுரைக் கலையிலும் அவை அனைத்தும் பற்றி எழுதப்படுகின்றன. கட்டுரை வகைகள் கிளைத்துப் பெருகியுள்ளன. முதலில் ஆங்கிலக் கட்டுரைகள் பல தமிழில். மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டன. பிறகு கட்டுரைக்குரிய வரையறையுடன் தமிழில் கட்டுரைகள் வெளிவந்தன. தமிழ்ப் பேராசிரியர்கள் தத்தமக்குப் பிடித்த பொருள்களில், தத்தமக்குரிய தனித்திறனுடன் கட்டுரைகள் எழுதினர்; கட்டுரைக்கலையைத் தனி எழுத்துக் கலையாக வளர்த்தனர். கட்டுரைகள் நூல் வடிவில் வந்தன. தமிழ் இதழ்கள் சிறு சமுதாயப் பிரச்சினைகளைக் கூட கட்டுரை வடிவில் தாங்கி வெளிவந்தன. தமிழ் இலக்கிய உலகில் கட்டுரைகள் தனி இலக்கிய வகைமையாய்ப் பேரிடத்தைப் பிடித்தன.

கட்டுரை வகைகள்

தமிழில் குறிப்பிட்ட பல பொருள் குறித்துக் கட்டுரைகள் தோன்றின; இலக்கிய நயம் இயம்பப் பல கட்டுரைகள் எழும்பின; தமிழ்ப் பேராசிரியர்களின் நினைவில் நின்ற நிகழ்ச்சிகள் கட்டுரையாயின; சொற்பொழிவுகளும் கட்டுரைகளாக வெளிவந்தன. ஒன்றைப் பற்றி

விமரிசனம் செய்யும் விமரிசனக் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், நகைச்சுவைக் கட்டுரைகள், பேட்டிக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் என்று எண்ணற்ற கட்டுரை வகைகள் பல்கிப் பெருகின.

பரந்து விரிந்த இக்கட்டுரைக் கடலில் முத்துக்கள் என 'தேர்ந்தெடுத்த கட்டுரைகள்' மட்டும் இவண் விளக்கப்படுகின்றன. கட்டுரை வரைவிலக்கணத்தைச் சுருக்கமாகக் கற்போம். நீங்களும் சிறந்த கட்டுரையாளராக வேண்டுமெனில், இப்பயிற்சி பயன்படுமல்லவா?

10.1 கட்டுரை விளக்கம்

ஓர் இலக்கியத்தைப் பற்றி அல்லது அதிலுள்ள ஏதாவது ஒரு கூறு அல்லது வேறு ஏதாவது ஒருபொருள் பற்றிச் சுவையாக உரைநடை யமைப்பில் எழுதுவது கட்டுரை. ஒரேவிதமான அல்லது ஒன்றற்கொன்று இனமான மலர்களை ஒழுங்குபடக் கோத்து ஒரு மாலையாகத் தொடுப்பது போல, ஒரே பொருள் குறித்த செய்திகளை அல்லது கருத்துக்களை ஒருங்கு தொகுத்து அவைகளுக்கு ஓர் இனிய எளிய வடிவம் கொடுப்பதே கட்டுரை.

ஓர் இலக்கியத்தில் அல்லது பல இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களைக் கோவைப்படுத்திச் சொல்லி, படிப்போரின் மனத்தில் கட்டுரையாளன் எழுப்ப விரும்புகின்ற ஓர் உணர்ச்சியை அல்லது சுவையைத் திறம்பட எழுப்புவதே இலக்கியக் கட்டுரை எனலாம். உலகில் நாம் நினைக்கும் எப்பொருள் பற்றியும் கட்டுரை வரையலாம்.

10.2 கட்டுரை அமைப்பு

ஒரு படைப்பாளனை அல்லது ஓர் எழுத்தாளனை இப்படித்தான் எழுத வேண்டும் என்று கட்டுப்படுத்த இயலாது. எனினும் எதற்கும் அளவும் அமைப்பும் இருந்தால் எக்கலையும் அழகு பெறும். கட்டுரை எழுதப் புகும்முன், வேறுவிதமாகச் சொன்னால் - நல்ல கட்டுரை ஒன்றை எழுத ஒருவர் விரும்பினால் பின்வரும் கருத்துக்களை மன நினைவலைகளில் நிறுத்தி வைத்தல் நன்று. கட்டுரை எழுதுவதற்குரிய நெறிமுறைகளை 1. எழுதப்புகும் முன் எழுத்தாளனின் பணி, 2. கட்டுரை அமைப்பும் கவனத்திற்குரிய செய்திகளும் என்ற இரண்டு நிலைகளில் காண்போம்.

10.2.1 எழுதப்புகும் முன் எழுத்தாளனின் பணி

எதில் தனக்கு அதிக ஆர்வமோ அப்பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

எப்பொருள் என்பது குறித்துக் கட்டுரைத் தலைப்பினை மனத்தில் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

இலக்கியக் கட்டுரைகள் அல்லது பொதுக் கட்டுரைகள் என்றாலும், அப்பொருள் தொடர்பான செய்திகள், முன்வந்த நூற்செய்திகள், பெரியோர்களின் கருத்துரைகள் போன்றவற்றைத் தேடிக் கண்டுபிடித்துப் படித்துக் குறிப்பெடுத்துத் தொகுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அங்ஙனம் தொகுத்த செய்திகளை ஒன்றுதிரட்டிக் கட்டுரையில் எதன்பின் எதுவரவேண்டும் என்பதற்கேற்பக் கட்டுரைப் பொருளைச் சிறு சிறு உட்தலைப்புக்களாகப் பிரித்து எழுதி வைத்துக் கொள்ளலாம்.

எழுதவேண்டிய செய்தியை மீண்டும் நினைத்து நினைத்து, தெளிந்த நீரோடை போலக் கட்டுரைக் கருத்துக்களை தகவல் பதியவைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் செய்திகளைச் சரளமாகத் தொடர்புபட எழுதமுடியும்.

கட்டுரையில் நடை மிகவும் இன்றியமையாதது. எடுத்தவுடன் ஒருவருக்குத் திட்பமுள்ள எழுத்துநடை வந்துவிடாது. ஆதலால் சான்றோர்களின் தரம்மிக்க நடைக்கட்டுரைகளைப் பல்கால் பயில வேண்டும். ஏனெனில் சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் என்பதுபோல எதுவும் பலகால் முயன்று, பயின்று பழகியே வர வேண்டும். சொல்லும் பொருளும் பொருத்தமுற அமைய எழுதப்பழகினால்தான் நல்ல நடையினைக் கைக்கொள்ள முடியும்; தெளிவாக எளிய நடையில் எழுதவும் முடியும்.

10.2.2 கட்டுரையமைப்பும் கவனத்திக்குரிய செய்திகளும்

பொதுவாக ஒரு கட்டுரை 1. தலைப்பு, 2. தொடக்கம், 4. கட்டுரைப் பொருளமைப்பு அல்லது உடலமைப்பு 4. முடிவு என்ற பிரிவுகளில் அமையும். இவற்றுடன் ‘நடை’ என்பதும் கட்டுரைப் பொருள்களைச் சிறப்புறுத்தும் முக்கியமான உத்தியாகும்.

தலைப்பு

முன்கூட்டியே தலைப்பினைச் சிந்தித்து வைத்தல் வேண்டும். பொருளுக்கேற்ற தலைப்பினைத் தேர்ந்தெடுத்தல் அவசியம். முதலில் படிப்பவரைக் கவரும் வண்ணம் கட்டுரைத் தலைப்பு அமைதல் நலம். அடுத்து, கட்டுரைத் தலைப்பைச் சொன்னவுடன் பொருள் விளங்க வேண்டும். தலைப்பில் குழப்பம் இருத்தல் கூடாது. பெரிதும் ஒரிரு சொற்களால் தலைப்பு அமைதல் நல்லது. ‘தமிழ் விருந்து’, ‘ஊரும் பேரும்’, ‘அலையும் கலையும்’ என்று சில சொற்களில் எதுகை மோனையுடன் அமையலாம். நீண்ட தலைப்புக்களைத் தவிர்ப்பது நலம். தலைப்பு உள்வரும் பொருளுக்குப் பொருத்தமுடையதாக இருப்பதே மிகமுக்கியம்.

தொடக்கம்

எக்கட்டுரையாயினும் தொடக்கம் உள்ளம் கவரும் வண்ணம் அமைதல் வேண்டும். சுவைபயக்கும் முதற்பத்தி கட்டுரையினை மேலும் படிக்கத் தூண்ட வேண்டும்.

எடுத்தவுடன் கட்டுரைப் பொருளிற்கு, தலைப்பிற்கு வந்துவிட வேண்டும். எடுத்துக்கொண்ட கட்டுரைப் பொருளைச் சொல்லிவிட வேண்டும். எதைப்பற்றி எந்நோக்கில் எழுதப்போகிறோம் என்பதை முதலில் தெரிவிக்க வேண்டும். இன்றேல் படிப்போரின் கவனம் கட்டுரையில் ஒருங்கு குவியாது.

தொடக்கத்திலேயே கட்டுரைத் தலைப்பினை விடுத்து நீண்ட முன்னுரை, மயக்கும் முன் மொழிகள் முதலியவற்றினை அமைத்தல் கூடாது. இவ்வமைப்பு ஒரு சில கட்டுரைகளில் படிப்பவரைக் குழப்பத்தில் ஆழ்த்துவதுடன் சலிப்பையும் கூட்டிவிடும்.

உடலமைப்பு

கட்டுரைப் பொருளுக்குரிய கருத்துக்கள் அனைத்தினையும் உள்ளடக்கிய பகுதி இதுவேயாகும். பொருள் தொடர்புபடக் கருத்துக்களை நிரல்பட அமைத்துக் கூறும்முறை இதன் சிறப்பு அம்சமாகும்.

ஆதலால் செய்திகளைச் சிறு சிறு உட்தலைப்புக்களாகப் பிரித்துக் கூறலாம். அவ்வுட் தலைப்புக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் பெயரிட்டுக் கொள்ளலாம். மு.வ. அவர்கள் இலக்கணமாயினும் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் தலைப்பு இடுவதில் வல்லவர் என்பர்.

மேலும் கட்டுரைச் செய்திகளைச் சிறு சிறு தலைப்புக்களில் பிரித்துக் கொண்டால் கட்டுரைப் பொருளினையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தெளிவுபடச் சொல்ல முடியும். அவை தொடர்புபடவும் வரும். கட்டுரைச் செய்திகளை முழுமையாக ஒன்றையும் விடாது சொல்லிவிடவும் முடியும். கட்டுரைக்கு ஒரு முழுமைத் தன்மையும் தொடர்ந்தமையும் திறனும் கிட்டும்.

இலக்கியக் கட்டுரைகள், பொதுக்கட்டுரைகளில் எளிய மேற்கோளை அளவறிந்து எடுத்தாளலாம். கட்டுரையாளனை இனமறிந்து கொள்ளும்படி. புதுக்கருத்துக்களைச் சுவைபடக் கூறவேண்டும். கட்டுரைப் பொருள் பற்றித் தொடர்ந்து செல்ல வேண்டும். எந்நிலையிலும் கட்டுரையிலிருந்து விலகிச் செல்லுதல் கூடாது. எப்பொருளையும் காரண-காரிய முறையில் நெறிப்படுத்திக் கற்பார் உள்ளம் கொள்ளும் முறையில் எழுதவேண்டும்.

நடை

கேட்போர், படிப்போர் உள்ளத்தை ஈர்க்கும் விதத்தில் பேச்சிலும் எழுத்திலும் பொருத்தமாகச் சொற்களைத் தேர்ந்தெடுத்து ஆளும் கலை நடையாகும்.

நீண்ட வாக்கியம், கலவை வாக்கியங்களை (Complex sentence) அடிக்கடி அமைக்கக்கூடாது. எளிய சொற்களில் சிறு சிறு வாக்கிய அமைப்புக்களைக் கையாளலாம். பொருளுக்கேற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல் வேண்டும். சுருங்கிய வடிவம் என்பதால்தான் திருக்குறள் எல்லோர் நெஞ்சிலும் நிறைந்து நிற்கிறது.

ஒரு பொருளை அல்லது ஒரு நிகழ்ச்சியை ஏதாவது, சான்று காட்டி விளக்கலாம். நகைச்சுவைத் தன்மை கட்டுரையில் இடத்திற்கேற்ப ஆங்காங்கு விரவி வரலாம். ஆனால் அது பிறரைப் பாதிக்கக்கூடாது.

மொழிக் கலப்பைத் தவிர்க்க வேண்டும். மருட்டும் சொற்களைக் கையாளல் கூடாது. பயில்வோர் மனத்தில் கருத்துக்கள் பதியும்வண்ணம் உயிர்ச்செறிவுடன் சொற்கூர்மையுடன் நடை தவழ்ந்து வரவேண்டும். எதுகை, மோனை மற்றும் உவமை நயம் அமையவும் எழுதலாம். வெற்றா வாரம், தேவையற்ற அணிநடை வேண்டாம். சொற்களைத் திறம்படக் கையாளுதல் வேண்டும். ஒன்றைப் படித்தால், அதை முடிக்கும் வரை கீழே வைக்க விடாது, மீண்டும் மீண்டும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் எழுதவேண்டும்.

முடிவுப் பகுதி

கட்டுரைப் பொருளை எழுதிக் கொண்டே வரும்பொழுது திடீரென்று முடிந்து விடக் கூடாது. சொல்லிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறி முடிக்கலாம். கட்டுரையின் முதற்பத்தி படிக்கும் ஆர்வத்தைத் தூண்ட, இறுதிப்பகுதி மனத்திற்குள் கட்டுரைப் பொருளைப் பலமுறை அசைபோட்டு வியக்கும்வண்ணம் செய்ய வேண்டும். சிந்தனையைத் தூண்டும் வண்ணம் அமைத்தல் இன்னும் சிறக்கும்.

சுருங்கக் கூறின் எடுத்த பொருளின் அழகு; பொருட் தொடர்புபடத் தொகுத்த கருத்து முறை; கருத்துக் கட்டமைப்பு; கருத்துக்களைப் பதிய வைக்கும் சொற்கூர்மை முதலியன கட்டுரையில் திறம்பட அமைதல் வேண்டும்.

தன் மதிப்பீடு : 1

கீழ்க்கண்ட வினாக்களுக்குக் குறிப்புத் தருக:

1. கட்டுரை - விளக்கம் தருக?
2. கட்டுரையின் அமைப்பினைச் சுட்டுக.
3. நீவிர் அறிந்த கட்டுரையாசிரியர்களுள்: மூவரைக் குறிப்பிடுக.
4. கட்டுரைத் தலைப்பு எப்படி அமைய வேண்டும்?
5. கட்டுரையின் தொடக்கம் எவ்வகையில் அமைதல் வேண்டும்?
6. கட்டுரை நடை பற்றி விளக்குக.

10.3 வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

தமிழ்ப்பற்றுக்கொண்ட அறிஞர். சூரிய நாராயண சாஸ்திரியார் என்ற தம் பெயரை 'பரிதிமாற் கலைஞர்' என்று தமிழ்ப்படுத்திக் கொண்டவர். இலக்கிய மறுமலர்ச்சியில் ஆர்வம் கொண்டவர். வடமொழிப் புலமை நிரம்பியவர். இச்செம்மல் யாத்துள்ள தமிழ் வியாசங்கள், தமிழ்ப்புலவர் சரித்திரம் ஆகிய நூல்கள் கட்டுரைக் கலை வளர்ச்சிக்கு உதவின. கட்டுரைகளை ஆங்கிலத்திலும் எழுத முயன்றார். ஆங்கிலக் கட்டுரைகளைத் தமிழ்ப்படுத்தியும் எழுதினார். பிறமொழிக் கட்டுரைகளைப் பின்பற்றி எழுதத் பத்தியம் எழுதின அடைப்புக்குள் ஆங்கில விளக்கங்களும் வடமொழிக் கலப்பும் இயல்பாக இவரது கட்டுரைகளில் காணப்படும். தொடக்க காலக்கட்டுரை நடையையும் அமைப்பினையும் இவரது தமிழ் வியாசத்தின் ஒரு பகுதி கொண்டு அறியலாம்.

***தற்காப்பின் இன்றியமையாமை* (Law of self preservation)**

இதுகாறும் மனிதற்குக் கீழ்ப்பட்ட பிராணி சம்பந்தமாகவே கூறிப் போந்தோம். இனி மனித சம்பந்தமாகவே கூறுவோம். கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களெல்லாவற்றினும் ஒருவித ஒழுங்குளது. அவ்வொழுங்கினைத்தான் தற்காலத்திலுள்ள சான்றோர் இயற்கையொழுங் (The order of nature) கென்றுரைப்பர். இவ்வியற்கை யொழுங்கிற் காணப்படும் பிராணிகள் யாவற்றினும் மனிதனே மேதக்கானாயினும் மற்றைப் பிராணிகளைப் போன்றே இவனும் வாழ்க்கை நியமங் (Laws of life) கட்கு உட்பட்டிருத்தல் வேண்டுதலின் இவனுக்குந் தற்காப்பு இன்றியமையாததாகின்றது. அங்ஙனமின்றேல், தமக்கும் பிறர்க்குமின்பம் பயப்பனவாகிய ஏனைய கடமைகளைச் செய்தல் அசாத்தியமாய் விடுமென்க. ''சுயநய விரக்தியுள்ளவன் அன்றே முத்தி யெய்துவான்; அங்ஙனமிருப்ப நீவிர் தற்காப்பு மனிதற்கு இன்றியமையாதென்று கழறுவதென்னையோ?'' என்று சங்கிப்பீரேல் - கூறுவோம். நம் உடலுயிர்களைப் பற்றி ஜாக்கிரதையாயிருக்குமாறும், ஒரு பயனுமின்றி நம்முடலை வருத்தாமலும் நம்முயிரினைப் பலி யிடாமலுமிருக்குமாறும் ஒழுக்கநூல் (Ethics) விதிக்கின்றது. இதனை உதாரண முகத்தால் விளக்குவோம்.

தெய்வபக்தியுடையானொருவன் ஒரு பயனுமின்றிக் கடவுள் முத்தி தந்தருளுவாரென்னுங் கருத்தினனாய் நகங்கள் வளர்ந்து தொளைத்துக்கொண்டு புறங்கைக்கு வருமட்டும் அகங்கையினை விரல்களோடு சேர்த்துமூடிக் கரங்களை வானத்தை நோக்கி நீட்டிக் கொண்டிருப்பானாயின், பயன்கருதிக் கடவுளால் மனிதர்க்குக் கொடுக்கப்பட்ட அங்கங்களிற் கையென்ற மகா அற்புதமான ஒன்றினை நாசப்படுத்துகின்றானாதலின் அவன் பாவியேயாவானென்பதற்கு

ஐயமின்றென்க. இத்தற்காப்புக் கடமையினுஞ் சாலச்சிறந்த கடமைகளு முளவாம். இஃது அவற்றொடு முரணுங்கால் அக்கடமைகளையே செய்தல் வேண்டுமென்பது ஒழுக்கநூல் விதியாம். தனது குடும்ப சம்ரக்ஷணைக்காகத் தலைவன் தன்னுடைய சக்திக்கு அதீதமாயுமுழைத்து வருந்துதல் வேண்டும். நாடு காப்பின் பொருட்டுப் போர்வீரர் யுத்தத்தில் உயிர்துறக்கவும் வேண்டும். இவ்வமயங்களில் அவர் தற்காப்பினைக் கருதி நடப்பாராயின், அவர் குற்றவாளியரே யாவார் என்பதும் ஐயுறற் பாலதோ? ஆகவே ஒரு பயனுமின்றித் தனி உடலுயிர்களை ஒருவன் வருந்துகிற்பாயின், அவன் ஆன்மத் துரோகியென்றழைக்கப்படுவானே யன்றி, ஒரு நாளுந்தான் கருதியவண்ணம் முத்தியெய்தான். தற்கொலை புரிவது மாபாவம் என்ற நந்தமக்கு இது மாத்திரம் பாவச் செயலாகாததேனோ? சாற்றுமின்!

(தமிழ் வியாசங்கள்)

கட்டுரையைச் சிறு சிறு உட்பிரிவுகளாகப் பகுத்து எழுதுகிறார். தற்காப்பு நியமம் என்ற பகுதி, தற்காப்பு நியமத்தின் பொது இயல்பு, தற்காப்பின் இன்றியமையாமை, தற்காப்பினைக் குறித்து ஒழுக்க நூலோர் கொள்கை, தற்காப்பின் தன்மை என்ற பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சில நிகழ்ச்சிகளை விளக்கும்பொழுது பாடல்களை மேற்கோள் காட்டியும் விளக்கும் தன்மை இவரது கட்டுரைகளில் உள்ளது. சொற்கள் மிகவும் செறிவுடையனவாக உள்ளன. ஆதலால் இயல்பான நடையைவிட, திட்டமிட்ட செயற்கைப்பாங்கான செறிவான நடையைக் காணமுடிகிறது. பெரிதும் நீண்ட வாக்கிய அமைப்புள்ளது. மேலை இலக்கியங்களைப் பின்பற்றி இருப்பதால் பிறமொழித் தாக்கம் அதிகம் உள்ளது. தொடக்க நிலையாதலால் வடசொற்களை அதிகம் கையாளுகிறார். நடை கடினமாகவே உள்ளது.

10.4 மறைமலையடிகளார்

கட்டுரைக் கலையை ஆங்கில இலக்கியப் புலமையுடன் புது மெருகு பெறச் செய்த மற்றொரு பெருந்தகை மறைமலையடிகள் ஆவார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் செம்மையாகக் கற்றுணர்ந்தவர். தமிழ்மொழியின் வளமும் சிறப்பும் கருதிப் பற்றுக் கொண்டு, வேற்றுமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து தமிழ் மொழியினைப் பாழ்படுத்தாது ஒரு விழுமிய தனித்தமிழ் நடையில் எழுத வேண்டும் என்பதை நெறியாகக் கொண்டவர். இதன் பயனாய் தனித்தமிழ் இயக்கத் தந்தை என்று போற்றப்பட்டுள்ளார். ஆனால் பிறமொழி மீது சற்றும் வெறுப்புடையவர் அல்லர். ‘அறிவுரைக் கொத்து’, ‘சிறுவர்க்கான செந்தமிழ்’ முதலியவை இவரது கட்டுரைச் செல்வங்களாகும். மேலும், தமிழ்க் கட்டுரைக்கலை சிறக்க ஆங்கிலக் கட்டுரைக் கலை பற்றிய அறிவும்பரவ வேண்டும் என்று கருதி, ‘ஜோசப் அடிசன்’ (Joseph Addison) எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் சிலவற்றைச் ‘சிந்தனைக் கட்டுரைகள்’ என்ற பெயரில் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார். மொழிப்பற்றும் சமயப்பற்றும் நிரம்பியவர். ஆங்கில ஆசிரியர் இப்சன், பாஸ்வெல் போன்றோரின் கடுநடையை இவர்தம் தமிழ்நடைக்கு ஒப்பிட்டுக் கூறுவர். இவரது கட்டுரை நடைக்கு ஒரு சான்று:

‘‘உலக இயற்கையிற் கண் முதலான புலன்களுக்கு விளங்கித் தோன்றும் அழகையெல்லாந் தன்னகத்தே நெருங்கப் பொதிந்து வைத்துப், பின் அவற்றை நம் அறிவினிடத்தே புலப்படும் வண்ணந் தோற்றுவித்துப், பொருள் நிகழ்ச்சியொடு மாறுபடுதல் இல்லா இனிய ஓசையுடன் இணைந்து நடைபெறும் இயல்பினை உடையதுதான்

பாட்டென்று அறிதல் வேண்டும். இன்னும் எங்கெங்கு நம் அறிவைத் தம் வயப்படுத்துகின்ற பேரழகும் பேரொளியும் பெருந்தன்மையும் விளங்கித் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும். இதனை விளக்கிக் காட்டுமிடத்துப், பேரழகாற் சிறந்த ஓர் அரசிதான் மேற்போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப், பின் அதனைச் சுருட்டிக் கீழே எறிந்துவிட்டுத் துயில் ஒழிந்து, ஒளிவிளக்கு தன் நனி முகங்காட்டி எழுந்ததையொப்ப, இருட்கூட்டஞ் சுருண்டு மடங்கி அலைகடலிற் சென்று அடங்கி விடுமாறு இளையஞாயிறு உருக்கித் திரட்டிய பசும்பொற்றிரளைப் போலத் தளதளவெனக் கீழ்த்திசையில் தோன்றவும், அத்திசையின் பரப்பெல்லாம் பொன் உரைத்த கற்போற் பொலிந்து திகழவும், பசுமை பொன்மை நீலம் சிவப்பு வெண்மை முதலான நிறவேறுபாடுள்ள பொன் வெள்ளிகள் உருகி ஓடுகின்ற, நிலம் போல வான் இடமெல்லாம் பலவண்ணமாய் விரிந்து விளங்கவும், கரிய முகில்களெல்லாஞ் செவ்வரக்கு வழித்த அகன்ற திரைச்சீலைகள் போலவும் வெளியே முகில்களெல்லாம் பொற்றட்டுத் துகில் போலவும் ஆங்காங்குச் சொல்லுதற்கரிய பேரொளியொடு திகழவும் உலகமங்கை நகைத்தாற்போலப் புதுமையுற்றுத் தோன்றும் விடியற்கால அழகெல்லாம் பாட்டென்றே அறிதல் வேண்டும். ஆ! இங்ஙனந் தோன்றும் அவ்விடியற்கால அழகினைக்கண்டு வியந்த வண்ணமாய் மீன் வலையொடு கடற்கரையில் நிற்கும் செம்படவனைக் காட்டினுஞ் சிறந்த புலவன் யார்.

அவ்விடியற்காலையிலேயே முல்லை நிலத்து மேய்ப்பர்கள் ஆன் கன்றுகளைத் தொழுவத்திலே தாம்பினாற் கட்டிவைத்து ஆநிரைகளை அடுத்துள்ள மலைச்சாரலிற் கொண்டுபோய்ப் பசிய புல் மேயவிட்டுத், தாம் மரநிழலிற் சாய்ந்திருந்து கொண்டு தமக்கெதிரே பச்சிலைப் போர்வை மேற்கொண்டு கரிய முகில்கள் நெற்றி தழுவிக்கிடப்பப் பெருந்தன்மையொடு வான் அளாவித் தோன்றும் மலையினை அண்ணாந்து பார்த்தவராய் அவர்கள் அச்சமும் மகிழ்ச்சியும் அடையும்போது அங்கும் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும்.

(முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை)

இவரது கட்டுரைகளில் எளிய சிறு சொற்றொடர் அமைப்புக்களைக் காண்டல் அரிது; நீண்டு செல்லும் கலவைவாக்கியங்கள் பலவாகக் காணப்படும். கட்டுரைக் கருத்துக்கள் சொற்செறிவும் பொருட்செறிவும் மிக்கவை. ஆதலால் பொருள் உணர்தல் சற்றுக் கடினம். எடுத்த கருத்தை வாசகர்களுக்கு வற்புறுத்தும் திறனும், கடுமையாகக் காரண-காரியத்துடன் விவாதிக்கும் தன்மையும் இவரது கட்டுரைகளின் இயல்புகளாகும். எந்த ஒரு கருத்தையும் ஆராய்ச்சி நோக்குடனும், ஒரு முடிவை நோக்கியும் வாசகர்களை இழுத்துச் செல்லும் தன்மை இவரது நடையின் சிறப்பு எனலாம். ஆங்கில ஆசிரியர் இப்சன், பாஸ்வெல் போன்றோருடைய கடுமையான நடைத்திறனை இவருடைய நடையுடன் ஒப்பிட்டுக் கூறுவர்.

தன்மதிப்பீடு : 2

விடைக் குறிப்புத் தருக :

1. சூரியநாராயண, சாஸ்திரியின் கட்டுரைச் சிறப்பியல்பு யாது?
2. மறைமலையடிகள் தனித்திறன் யாது?
3. நிரப்புக : ஆங்கில ஆசிரியர்கள்-------- போன்றோரின் கடுமையான நடையுடன் இவரது நடையை ஒப்பிட்டுக் கூறுவர். ஆங்கிலத்தில் --------- எழுதியவற்றை ---------- என்ற பெயரில் இவர் தமிழாக்கம் செய்துள்ளார்.

10.5 உ.வே. சாமிநாதையர்

மாணவர்களே! எந்த ஒரு நிகழ்ச்சியையும் கண்ணால் கண்டதுபோல், கதைசொல்வதுபோல் எளிய இனியதமிழ் நடையில் எழுதவேண்டுமா? இதோ! உ.வே. சாமிநாதையர் அவர்களின் கட்டுரை நடையினைப் படித்துப் பயன் பெறலாம். தமிழ் வளர்த்த சான்றோர் சாமிநாதையரவர்கள் சங்க நூல்களை தேடிக் கொணர்ந்து பதிப்பித்தவர். இவர் சிறந்த பதிப்பாளர் மட்டுமல்லர்; பழுத்த தமிழ்ப் புலமை நிரம்பியவர். சிறந்த ஆராய்ச்சியாளராகவும், கட்டுரையாளராகவும் திகழ்ந்தவர். இவர் எளிய இனிய தமிழ் நடையைக் கையாண்டு கட்டுரைக் கலையைத் தழைத்திடச் செய்தார். சில ஆசிரியர்களின் எழுத்துக்கள் அவரை இனங்காட்டிவிடும் என்பர். உ.வே.சா. அவர்களின் எழுத்துக்களை எளிதில் இனம் கண்டு கொள்ளலாம். எந்த ஒரு செய்தியினையும் கதையாக எடுத்துரைப்பதுபோல் (Narration) இவரது நடை அமைந்திருக்கும். இவர் எழுதியளித்த நினைவு மஞ்சரி, நல்லுரைக்கோவை, புதியதும் பழையதும், நான் கண்டதும் கேட்டதும் போல்வன சிறந்த கட்டுரைத் தொகுதிகளாகும். அப்பெரியோரின் கட்டுரை நடைக்குச் சான்றொன்று காண்போம். ஒரு புலவர், ஜமீன்தார் ஒருவரிடம் சென்று, ''வறுமைப் புலி விரட்டுவதாக''ப் பாட்டிசைத்தார். நிலக்கிழார் கோபங்கொண்டு 'புலியா வழியில் வந்து விரட்டியது' என்று உரத்துக் கேட்கவே, புலவர் பயந்து போனார். தம்மை மன்னிக்கும்படி புலவர் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

> ஜமீன்தார் ''செய்ததைச் செய்துவிட்டுப் பொறுத்தருள வேண்டு மென்றால் முடியுமா? திடீரென்று புலி துரத்துகின்றதென்றால் எல்லோரும் என்ன நினைப்பார்கள்? உமக்குச் சிறிதேனும் சமயோசிதம் தெரியவில்லையே. நமது முன்னிலையில் இன்னபடி பேசவேண்டும் என்பது தெரியாதா?'' என்று கடுமையானகுரலில் கூறிவிட்டு அருகில் நின்ற ஒரு வேலைக்காரனை நோக்கி, ''இந்த மனுஷருடைய மேல் துணியைப் பிடுங்கி என் எதிரே வை'' என்றார். பல தையல்களோடும் முடிப்புக்களோடும் அழுக்கோடும் புலவரது வறுமை நிலையைப் புலப்படுத்திக் கொண்டிருந்த அந்தத் துணியை அவன் வாங்கிச் சுருட்டி எதிரே இருந்த ஒரு மேஜையின் மேல் வைத்தான். மருந்திட்டு வைத்திருந்த துப்பாக்கியொன்றை ஜமீன்தார் கையிலெடுத்துக் கொண்டு, அந்த மனுஷரை இப்படி நேரே கொண்டுவந்து நிறுத்துங்கள்'' என்றார். புலவர் தமக்கு ஆயுட்காலம் முடிந்துவிட்டதென்றெ நிச்சயித்துவிட்டார். இந்த வறுமையினால் துன்புறுவதைக் காட்டிலும் இறந்துபோதல் ஒருவகையில் நல்லதென்றெண்ணினார்; தம் முதிய தாய், தந்தையர்களையும் இளைய மனைவி மக்களையும் பிற உறவினர்களையும் நினைத்துக் கண்ணீர் வடித்தார்.
>
> துப்பாக்கியுடன் இருந்த ஜமீன்தார், ''ஓய்! உம்மை புலியா துரத்துகிறது? அந்தப் புலியை இதோ சுட்டுக் கொன்று விடுகிறேன் பாரும்'' என்று சொல்லிக்கொண்டே, தம் எதிரில் இருந்த கந்தை துணியை நோக்கச் சுட்டார். படீரென்று சத்தம் கேட்டது; துப்பாக்கி யிலிருந்த குண்டு பாய்ந்து அந்தக் கந்தைத் துணி எரிந்துவிட்டது; புலவர் ஒன்றும் தோன்றாமல் சிறிது மயக்கத்தில் ஆழ்ந்தார்.
>
> புலவர் அருகிற்சென்று அவர் முதுகைத் தட்டிக் கொடுத்து, ''இதோ உம்மைத் துரத்திய புலி இறந்துவிட்டது. இனி அந்தப் புலியால் உமக்கு அச்சம் இராது'' என்று சொல்லி ஓர் ஆசனத்தில் இருக்கச் செய்து நல்ல, ஆடைகளை வருவித்து அணிந்து கொள்ளச்

செய்தார். பின்பு அவருடைய உள்ளம் பூரிக்கும்படி உயர்ந்த உபசாரங்களையெல்லாம் செய்தார்.

(நான் கண்டதும் கேட்டதும்)

தன் அனுபவங்களை அப்படியே கட்டுரையாக எழுதுவது ஆங்கில மொழியில் காணப்படும் மரபு. இவரிடம் அதுபோன்ற இயல்பு நிரம்ப உள்ளது. தம் அனுபவங்களை, தாம் வாழ்க்கையில் அன்றாடம் கண்ட செய்திகளை அழகு தமிழில் எளிமைப்படுத்தி எழுதியுள்ளார். நகைச்சுவைத் தன்மை இழையோடக் கதையை விவரிப்பது போல் இவரது நடை அமைந்திருக்கும். வாசகர்களைச் சலிப்படையச் செய்யாது. கட்டுரைச் செய்திகளுடனேயே கைப்பிடித்த அழைத்துச் செல்லும் தன்மை இரவது கட்டுரைகளில் காணப்படும்.

தன்மதிப்பீடு : 3

1. உ.வே. சாமிநாதையர் எழுதிய கட்டுரை நூல்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
2. இவருடைய நடையில் குறிப்பிடத்தக்க சிறப்புச் செய்தி எது?

10.6 ரா.பி. சேதுப்பிள்ளை

செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை; ‘சொல்லின் செல்வர்’ என்று பாராட்டப்படுபவர். அழகிய இனிய தமிழ் நடையில் மக்கள் மனதைக் கவர்ந்தவர். பேசுவதைப் போலவே எழுதவும் வேண்டும் என்ற கொள்கை யுடையவர். இக்கொள்கைப் பொருத்தத்தைக் கட்டுரையாசிரியர்களில் இவரிடமும், திரு.வி.க.விடமும் காணலாம் என்பர். இவரது கட்டுரைகளில் பல மேடைப்பேச்சுக்களாக உள்ளன. இவர் முன்னூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார நூல் நயம், கடற்கரையிலே, தமிழ் இன்பம், தமிழ் விருந்து, தமிழ் வீரம், அலையும் கலையும், வேலும் வில்லும், ஆற்றங்கரையினிலே போன்ற பல நூல்கள் இவரது கட்டுரைச் செல்வங்களாகும்.

கேட்போர் படிப்போர் உள்ளத்தை ஈர்க்கும் விதத்தில் பேச்சிலும். எழுத்திலும் சொற்களைத் தேர்ந்தெடுத்து ஆளுவதில் வல்லவர். அடைமொழியும் அடுக்கு மொழியும் இவருக்கு கை வந்த கலை. இவரது நடை சிந்தனையைத் தூண்டும் வண்ணம் இருக்கும். சான்றிற்கு ஒன்று காண்போம்:

> மனிதர்க்குரிய குணங்களிற் சிறந்தது பொறுமை என்பர். ‘உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினத்தைக் காத்துக் கொள்ளும் குணமே குணம்’ என்றார் ஒரு கவிஞர். வெம்மை விளைவிப்பது கோபம்; செம்மை விளைவிப்பது பொறுமை. இத்தகைய பொறுமை மன உறுதியாலே வரும். பொறுமையின் தன்மையைத் தம் வாழ்க்கையிலே பொருந்தக் காட்டினார் ஏசுநாதர். தீயவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு சீறினார்கள்; கழியால் அடித்தார்கள்; காறியுமிழ்ந்தார்கள்: முள் முடியை தலையிலே வைத்து அழுத்தினார்கள்; கையிலே நெடுஞ்சிலுவையைக் கொடுத்து வீதியின் வழியே நடத்திச் சென்றார்கள். ஏசுநாதர் திருமுகம் சோர்ந்தது; நாவுலர்ந்தது; கண் குழிந்தது. இத்தகைய இளைத்த மேனியில் கயவர்கள் இரும்பாணியை அறைந்தார்கள். அப் பெருந்துயரத்தைப் பொறுத்தார் ஏசுநாதர்; சிலுவையில் அறைந்து துன்புறுத்தியவர் மீது இரக்கம் கொண்டார்; இறைவனை நோக்கி, ‘எந்தையே! இவர் அறியாமல் செய்கின்றார்கள். இவர் பிழையை மன்னிக்கவேண்டும்’ என்று

பிரார்த்தித்தார். இத்தகைய இரும்பொறையையும், பெருங்கருணையையும் அழகாகப் பாடினார், கிருஸ்தவக் கம்பர் என்று புகழ்கின்ற கிருஷ்ணப் பிள்ளை.

''தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்த
பன்னவரிய பலபாடு படும்போதும் பரிந்து எந்தாய்
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை
மன்னியும்என்று எழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல்''

என்ற பாட்டில் தின்மை செய்தார்க்கும் நன்மை செய்த ஏசுநாதரை 'அருள் வள்ளல்' என்று கவிஞர் போற்றியிருப்பது பொருத்தமுடைய தன்றோ? (தமிழ் விருந்து)

இவரது நடையில் சொல்லும் பொருளும் தெளிவும் பொருத்தமும் உடையனவாக இருக்கும். சொற்றிறம் வாய்ந்த கேள்விகளும் இடை மிடைந்துவரும். கருத்துக்கள் மாறுபடாது செல்லும் இவரது செவ்விய நடையை இலக்கிய நடை என்றும் அழைப்பர். எதுகை, மோனை ஆட்சி, இவருக்கு இயல்பாக வரும். பேச்சிலும் எழுத்திலும் கவர்ச்சியையும் இனிமையையும் ஏற்படுத்துவன அடைமொழிகளும் அடுக்குமொழிகளு மாகும். இவை இவருக்குக் கைவந்த கலை. முரணணிகளும், அடுக்கு மொழிகளும் சேர்ந்து இவரது நடைக்கு மேலும் அழகூட்டும் என்பர். ஆதலால் இவரது நடையே அணிநல நடை என்றும், கற்பனைவளநடை என்றும் கூறுவர். தம் எழுத்துத் திறத்தால் கட்டுரை இலக்கிய வகை வளர்ச்சிக்கு ரா.பி. சேதுப்பிள்ளை ஒரு விடிவெள்ளியாக விளங்கினார்.

தன் மதிப்பீடு : 4

பின்வரும் வினாக்களுக்குச் சிறு குறிப்புத் தருக:

1. ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய கட்டுரை நூல்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
2. இவரது கட்டுரை நயம் இரண்டு சுட்டுக.

10.7 பாரதியார்

பாரதியார் தேசியப் பெருங்கவிஞர்; இந்திய மக்களின் சுதந்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய மகா கவிஞர். 'எமக்குத் தொழில் கவிதை' என்று தாமே கூறியவரெனினும் தமிழில் அனைத்துக் கலைகளையும் கொண்டு வரவேண்டும் என்ற தணியாத ஆர்வமுடையவர். சிறுகதைகள், கட்டுரைகளும் எழுதினார். இந்தியா, சுதேசமித்திரன் போன்ற இதழ் களுக்கு ஆசிரியராக இருந்து அனல் பறக்கும் தேசிய விடுதலை இயக்கக் கருத்துக்களைத் தாங்கிய கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவர் காலத்தில் கவிதைகள் மட்டுமின்றி, இவரது கட்டுரைகளும் நாட்டில் சுதந்திர தாகத்தை, தேசியப்பற்றை எழுப்பின. கற்பென்று சொல்லவந்தால் இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம் என்று சமத்துவம் பேசியவர். தமிழர் என்ற இனப்பற்றுடையவர். அதற்குக் கீழ்வரும் கட்டுரை சான்று:

''தமிழா தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகிறது.''

''உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கின்றார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லரசர், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள்.

மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய் பார்.''

''தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.''

''ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ஜாதி இரண்டொழிய வேறில்லை'' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

''பெண்கள் அடிமை என்று கருதாதே. முற்காலத்து தமிழர் மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்''.

''வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டு பயனடைந்துகொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே.''

''தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பெரிய கதைகள் மிதமிஞ்சிவிட்டன உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்துவிட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும், எப்போதும் நேர்மையிருக்க வேண்டும்; உண்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்துமாவின் கண்ணாடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

''தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர்த்து நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. முந்திய சாஸ்திரந்தான் மெய்; பிந்திய சாஸ்திரம் பொய்.' என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டி ருக்கிறதா? 'தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்!' என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

''இன்பம் என்பது, இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு. கூத்து முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்கள் எல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக் களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

(பாரதியார் கட்டுரைகள்)

பாரதியின் சொல்நடை படித்தவுடன் மனத்தைத் தொடும்; மனத்தில் நிறைந்து நிற்கும். எளிய உணர்ச்சி ததும்பிய சொற்களின் கோவைகளாகியது இவரது நடை. சிறு சிறு வாக்கியங்கள் கொண்டது. எக்கருத்திலும் ஓர் உணர்சிக் கொந்தளிப்பும் அணித்தரமாக அறிவுறுத்தும் திறனும் இருக்கும். இவரது ஒரு சில கதைகள் சமுதாய நலிவுகளை எள்ளி நகையாடுவதைப் போல இருக்கும். எனினும் மறைமுகமாகக் கதை ஓட்டத்தில் மக்களுக்குக்

கருத்துக்களைத் திறம்படச் சொல்லி முடிப்பார். கற்பனை மெருகும் கதைகளுக்கு அழகூட்டும். கட்டுரைகளில் இடையிடையே தாம் கேட்ட சொற்பொழிவுகள், கண்ட நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டித் தமது கருத்துகளை அறுதியிட்டு நிறுவுவார். கவிதைகளைவிடக் கட்டுரைகளில் வடசொற்கலப்பு மிகுதியாக இருப்பதற்குத் தொடக்க கால நிலையே காரணமாகும்.

தன்மதிப்பீடு : 5

கீழே உள்ள வினாக்களுக்குச் சிறு குறிப்பு வரைக.

1. பாரதியார் நடைச்சிறப்பை விளக்குக.
2. பாரதியார் ஆசிரியராக இருந்து, எழுத்துப்பணிகள் செய்த இதழ்கள் யாவை?

10.8 திரு. வி. கலியாண சுந்தரனார்

சிறந்த சொற்பொழிவுகள் போன்ற கட்டுரைகளைப் படிக்க வேண்டுமா? சொந்தமாக எழுத வேண்டுமா? 'தமிழ்த் தென்றலாம்' திரு.வி.க.வின் கட்டுரை நடையினைப் படித்துச் சுவையுங்கள்; பயிற்சி செய்யுங்கள். உங்கள் விருப்பம் கைகூடும்.

தமிழில் 'உரை நடை' என்றவுடன் முதலில் நினைவுக்கு வருபவர் இவரே. மறைமலை அடிகளாரைத் தொடர்ந்து இவர் இதழ்களிலும், நூல்களிலும் கட்டுரைக் கலையை வளர்த்துள்ளார். இவருடைய 'தேசபக்தன்' 'நவசக்தி' போன்ற இதழ்கள் குறிப்பிடத்தக்கன. 'முருகன் அல்லது அழகு' 'பெண்ணின் பெருமை' 'இந்தியாவும் விடுதலையும்' 'தமிழ்ச் சோலை', 'பரம்பொருள் அல்லது வாழும் வகை' போன்ற நூற்செய்திகள் நாட்டு மக்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பிடித்தன. தமிழின் அழகையும் ஆற்றலையும் கட்டுரைத் தமிழின் வழி உலகிற்கு அளித்தவர். உரைநடை உலகில் திரு.வி.க.வின் நடை தனிச்சிறப்பு வாய்ந்த, புகழ்பெற்ற நடையாகப் போற்றப்படுகிறது. இவரது 'முருகன் அல்லது அழகு' என்ற நூலிலிருந்து, தமிழ்ச் சிறப்பு நடைக்கு ஓரிரு சான்றுகள் :

> ''கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும், காடும் கடலும், எவர் கையால் ஆக்கப் பட்டன? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப் பட்டன? புனலுக்குத் தண்மை ஈந்தவர் எவர்? நெருப்புக்கு வெம்மை யூட்டிவர் யாவர்? இயல்பாக அறும்பிய இவைகளின் அழகே கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி.
>
> கைபுனைந்தியற்றா இவ்வழகு அழியாத் தன்மையது என்று மேலே தொகையைச் சொல்லப்பட்டது. அதை ஈண்டு வகைப்படுத்திச் சில உரை பகர்தல் நலனெனத் தோன்றுகிறது. அழகு உட்பொருளா அல்லது மக்கள் உள்ளம் இயற்கையில் படியும்போது உருவொளியாத் தோன்றும் இல்பொருளா என்பது ஆராயத்தக்கது.
>
> அழகைப் பற்றி எண்ணாத இடமில்லை; பேசாத இடமில்லை; போற்றாத இடமில்லை; அழகின் மாட்டு உலகங்கொண்டுள்ள பற்றுப் போல வேறெதன் மாட்டும். அஃது அப்பற்றுக் கொண்டில்லை. 'அழகு அழகு' என்றே உலகம் அழகில் உறைந்து நிற்கிறது. இவ்வாறு அழகுடன் வாழும் உலகை நோக்கி, 'அழகு எப்படி இருக்கிறது' என்று வினவின், அதைச் சொல்லால் சொல்ல இயலாது. அது

விழிக்கிறது. புலன்களுக்கும் பொருளாகாத ஒன்றைப் பற்றி என்ன சொல்வது? என்னே அழகின் நுட்பம்.''

''இயற்கை வாயிலாக முருகு என்னும் அழியா அழகை உணர்ந்தவர்பால் என்றும் மணமே கமழ்ந்து கொண்டிருக்கும். அவர்மீது புலால் மணம் கமழாது. அவர் மனத்துக்கென வேறு செயற்கைப் பொருளைத் தேட வேண்டியதில்லை.

வைகறைத் துயிலெழுந்து, காலைக்கடனை ஒழுங்காக முடித்து, தண்புனலாடி, நறுங்காற்றில் மூழ்கி, ஞாயிற்றொளியில் படிந்து, இயற்கை உணவு கொண்டு, புறத்தை அழகு செய்தும், அழுக்காறு, வெகுளி, அவா முதலிய தீய நீர்மைகளைக் களைந்து, அன்பு, அருள், அறம் முதலிய நன்நீர்மைகளை மணந்து, அகத்தை அழகு செய்தும் வாழும் ஒருவன் மீது இயற்கை மணம் கமழும் என்பது ஒருதலை. இவ்வாழ்வு பெறாத சோம்பரின் புறத்திலும் அகத்திலும் அழுகல் நாற்றம் வீசும். இயற்கை வாழ்வு நடாத்தும் ஒருவனது உள்ளும் புறமும் முருகெனும் அழகு கோயில் கொள்கிறது. அழகுள்ள இடத்தில் புலால் முட்டைக்கு இடமேது? அழகில் மணமிருத்தல் இயல்பு.

இயற்கை மணங்கமழப் பெறுவோர் என்றும் இளமையுடையாரா யிருப்பர். இயற்கை மணம் உடல் நலனுக்குக் கேடு சூழாது. மக்களை முதுமையணுகாதவாறு அம்மணங் காத்துவரும். அழகில் மணம் ஒன்றி நிற்றல்போல அதன்கண் இளமையும் ஒன்றி நிற்கிறது. இளமை விரும்பாதார் உலகில் உளரோ? அகவை முதிர்ந்த கிழவனும் மீண்டும் இளமை பெற விரும்புபவன். இளமையில் மக்களுக்குள்ள காதலுக்கோரளவில்லை. இளமை, முருகன் கூறுகளிலொன்று. ஆகவே என்றும் இளமையுடையவராக வாழ விரும்புவோர் எம்பெருமான் முருகனை எப்பொழுதும் நினைத்த வண்ணமாயிருப்பாராக.

(முருகன் அல்லது அழகு)

இவரது நடையின் தன்மை மருட்டாத எளிய தமிழ் சொற்களும் சிறு சிறு வாக்கியங்கள் பயின்று வரலுமாகும். கட்டுரைத் தன்மை சொற்பொழிவு நிகழ்த்துவதுபோல் இருக்கும். சிறு சிறு தலைப்புக்களில் கட்டுரையின் உள்ளுரையைச் சட்டமாகத் தொகுத்து வைத்துப் பிறகு விரித்தெழுதும் பழக்கம் இவர்பால் உண்டு. இதற்கு இவரது 'பெண்ணின் பெருமை' சான்று. இம்முறையைச் சில ஆங்கில நூல்களில் காணலாம். கருத்துக்களைப் பகுத்துக் கொள்வது கட்டுரைக்கு ஓர் உள்ளுறையாகக் காணப்படும். கட்டுரையை முடிக்கும்போது, கருத்துக்களைத் தொகுத்துச் சொல்லி முடிப்பார். இவ்வாறு கருத்துக்களைச் சட்டகப்படுத்தித் தொகுத்துச் சுட்டிப் பின்னர் விரித்துக் கூறுவது மாணவர்களாகிய உங்களுக்குப் பொருந்தும். எளிதில் கற்றுப் பொருள் உணர்ந்து கொள்ளலாம். நீங்களும் இம்முறையில் உங்களுக்குரிய பொதுக்கட்டுரைகளை எழுதப்பழகலாம்.

தன்மதிப்பீடு : 6

பின்வரும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க :

1. திரு.வி.க. நடத்திய இதழ்கள் யாவை?
2. இவரது கட்டுரைச் செல்வங்களுள் நான்கினைக் குறிப்பிடுக?
3. இவரின் கட்டுரை நடையில் குறிப்பிடத் தகுந்த செய்திகள் இரண்டினைக் கூறுக?

10.9 மு. வரதராசனார்

மாணவர்களே! தெளிவுபட, கருத்துப் பிறழாது பிறர் ஏற்குமாறு எழுத மு.வ.வின் நடையினையும் பயிலலாம். 'உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்பர். இதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் மு.வ. ஆவார். தெளிவுபட யாவரும் ஏற்குமாறு எழுதியதே இவருக்கு எழுத்துலகில் கிடைத்த வெற்றி என்பர். **திரு.வி.க.வின்** செல்வாக்கு, இவரிடம் நிரம்ப உண்டு. ஆனால் திரு.வி.க.வையே இவர் முற்றிலும் பின்பற்றவில்லை. தம் தனித்திறனால் முத்திரை பதிய எழுதிய ஆற்றல் மிக்கவர்.

இலக்கிய உலகில் இவர் தொடாத பொருள் எதுவுமில்லை. இலக்கியக் கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், இலக்கணக் கட்டுரைகள், மொழியியல் கட்டுரைகள், 'தம்பிக்கு' 'அன்னைக்கு' என்று எழுதிய கடிதங்கள் என்பன இவர் கட்டுரைத் தமிழுக்குச் செய்த பணி சொல்லில் அடங்காது. தம் வாழ்நாளில் இறுதிவரை எழுத்துக் கலையை மூச்சாகக் கொண்ட சான்றோர் இவர். இவரது நடை எளிமைக்கும் கருத்துத் தெளிவிற்கும் நாட்டுப்பற்று என்ற கட்டுரை நூலிலிருந்து ஒரு சான்று காண்போம்:

> ''என்ன கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்? - இந்த மூன்று கேள்விகளே இன்று எல்லோரையும் அலைத்துவரும் கேள்விகள்.
>
> பணம் கிடைத்தபின், உணவுப் பொருளைத்தேடி அலைய வேண்டியிருக்கிறது. அரிசி, கடலைப்பருப்பு முதலான உணவுப் பொருட்களைத் தேடித் தேடி அலைய வேண்டியிருக்கிறது. என்ன கிடைக்கும், எங்கே கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்று வயிறு பெற்றவர்கள் அலைய வேண்டியிருக்கிறது. அதே நிலையில், கள்ள வாணிகம் செய்யும் வியாபாரிகள், இதே உணவுப் பொருள்களைக் குவித்து வைத்துக்கொண்டு, இவற்றை விற்றுக் கொள்ளை லாபம் பெறுவதற்காக, என்ன லாபம் கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்?'' என்று அலைகிறார்கள். அந்த வேளை உணவுப்பொருளுக்கு அலைந்து வாடுவோர் பலர்; கொள்ளை லாபத்திற்காக ஓயாமல் அலைந்து திரிவோர் சிலர்.
>
> படித்துப் பட்டம் பெற்ற பிறகு, வேலை இல்லையே, எங்கே கிடைக்கும் என்று அலைவோர் பலர்; கிடைத்த வேலை எத்தனை நாள் நீடிக்கும் என்று ஏங்குவோரும் பலர். வேலை கிடைத்து நீடித்தபின், அந்தத் துறையில் என்ன லஞ்சம் கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்று விழிப்போடு அலைவோர் பலர். கிடைத்த லஞ்சத்தைக் கண்ணும் கருத்துமாய்க் காத்துப் பிறர் அறியாமல் பெருஞ்செல்வராகி மாடி வீடுகளும் நன்செய் நிலங்களும் வாங்க அலைவோர் சிலர்.
>
> ஒரு துறையில் தொழிலாளியும் முதலாளியும் நடத்தும் போர். ஒரு துறையில் வயிறு படைத்தவனும், கள்ள வாணிகனும் நடத்தும் போர். மற்றொரு துறையில் வழியற்றவனும், 'லஞ்சம் வாங்கியும் நடத்தும் போர். இவை சிறப்பான துறைகள். இப்படிப்பட்டவை - ஆனால் விளம்பரம் அற்றவை - இன்னும் எத்தனையோ உள்ளன.
>
> நாடு சீர்பெற வேண்டுமானால், இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அதற்கு ஏற்ற முறையில் முயற்சிகள் செய்ய வேண்டும்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

இப்போது நம் நாட்டில் இந்த முயற்சிகள் நடைபெறுகின்றனவா? மேற்போக்காகப் பார்த்தால், ஒரு முயற்சியும் நடைபெறவில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால் அது உண்மையல்ல. கண்ணை மூடிக்கொண்டோ, கையை கட்டிக்கொண்டோ ''எல்லாம் நன்மைக்கே'' என்று சொல்லிக் காலம் கழிக்கும் மக்கள் தொகை வரவரக் குறைந்துவிட்டது என்பது தெளிவு. ''ஏன் இப்படி இருக்க வேண்டும்? இது கொடுமையல்லவா? எத்தனை நாள் இந்த வாழ்வு?'' என்று எண்ணித்துடிக்கும் மக்கள் தொகை படிப்படியாக வளர்ந்து வருகின்றது.

(நாட்டுப்பற்று)

எச்செய்தியாயினும், தாம் சொல்லவரும் கருத்துக்களை அப்படியே வாசகர் மனத்தில் காட்சியாக நிறுத்துபவர் இவர். தலைப்புக்கள் இடுவதிலும் வல்லவர். 'நிற்பது கூடாது' என்பது ஒரு தலைப்பு. சொல் இலக்கணம் பற்றியது. ஆனால் தலைப்பினைப் படித்தவுடன் சிந்தனையைத் தூண்டுகிறது அல்லவா? இவ்வாறு இவரது கட்டுரைத் தலைப்பும் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்கும். சுருங்கக் கூறின், இவரது கட்டுரைகள் எப்பொருள் பற்றி இருப்பினும் அப்பொருள் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் கருத்து நெறி பிறழாது எளிய நடையில் இனிய சொற்களில் தருகின்ற திறனைக் கண்டு மகிழலாம்.

தன் மதிப்பீடு : 7

பின்வரும் வினாக்களுக்கு விடைக் குறிப்பிடுக:

1. மு.வ. எழுதிய கட்டுரை நூல்கள் இரண்டினைக், கூறுக.
2. இவரது கட்டுரைகள் கருத்து விளக்க நடையின் பயன் என்பதை விளக்குக.

10.10 பாடத் தொகுப்புரை

கட்டுரை அமைப்புப் பற்றி விளக்கப்பட்டது. கட்டுரை எழுதுவதற்குரிய முன் குறிப்புக்களை அறிந்தீர்கள். தொடக்க காலக் கட்டுரைத் திறனும், ஆங்கில மொழித் தாக்குதலால் விளைந்த கட்டுரை வளர்ச்சியும், வி.கோ.சூ., மறைமலையடிகள் போன்ற சான்றோர்களில் கட்டுரைகள் கொண்டு சுட்டப்பட்டது. எளிய நடை, நீண்ட வாக்கிய நடை, அடைமொழி கலந்த அடுக்கு நடை, கருத்து விளக்க நடை முதலியன விளக்கப்பட்டன. தமிழ் இலக்கிய உலகில் தங்கள் நடையால் புகழ்பெற்றுத் திகழும் உ.வே.சா., திரு.வி.க., ரா.பி.சேதுப்பிள்ளை, பாரதியார், மு.வ. முதலியவர்களில் கட்டுரைகள் மூலம் தக்க சான்றுகள் காட்டி விளக்கப்பட்டன.

10.11 தொடர்ந்து படிப்பதற்குரிய துணை நூல்கள்

1. **ஆராய்ச்சிக் கட்டுரை (முதல் தொகுதி)**, ந. சஞ்சீவி, பாரி நிலையம், சென்னை, 1970 (மு.ப.).
2. **எழுதுவது எப்படி? (தொகுதி-2)**, மகரம் (தொ.ஆ.), பழனியப்பா பிரதர்ஸ், மதுரை, 1977 (மு.ப.).
3. **சிந்தனைக் கட்டுரைகள்**, மறைமலையடிகள்.
4. **தமிழ் வியாசங்கள்**, வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பாரதி பிரஸ், மதுரை, 1958 (நா.ப.).

5. **தமிழ் விருந்து**, ரா.பி. சேதுப்பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1966 (பத் ப.).

6. **நாட்டுப்பற்று**, மு. வரதராசன் பாரிநிலையம், சென்னை, 1965 (இ.ப.).

7. **நான் கண்டதும் கேட்டதும்**, உ.வே. சாமிநாதையரவர்கள், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1959 (மு.ப.).

8. **பாரதியார் கட்டுரைகள்**, பாரி நிலையம், சென்னை.

9. **முருகன் அல்லது அழகு**, திரு.வி. கல்யாண சுந்தரனார், ஜீவன் பிரஸ், சென்னை, 1982 (பன்னிர. ப.)

10. **முல்லைப்பாட்டு ஆராய்ச்சி**, கழக வெளியீடு, சென்னை, 1903 (மு.ப.).

11. **வளரும் தமிழ்**, (சோம.லெ.), பாரி நிலையம், சென்னை, 1956 (மு.ப.).

களஞ்சியம்

1. கலைக்களஞ்சியம், தொகுதி-3, பக் 42-44

தன் மதிப்பீடு : 1 விடைகள்

1\. 1. ஒரே விதமான அல்லது ஒன்றற்கு ஒன்று இனமான மலர்களை, ஒழுங்குபடக் கோத்து ஒரு மாலையாகத் தொடுப்பது போல், ஒரே பொருள் குறித்த செய்திகளை அல்லது கருத்துக்களை ஒருங்கு தொகுத்து அவைகளுக்கு ஓர் இனிய, எளிய வடிவம் கொடுப்பதே கட்டுரையாகும்.

2. கட்டுரைக்குத் தலைப்பு, தொடக்கம், உடலமைப்பு, (உட்பிரிவுகள், உட்தலைப்புகள்), முடிவுப்பகுதி, நடை என்பன நல்ல அமைப்பைத் தருகின்றன.

3. டாக்டர் மு.வ., ரா.பி. சேதுப்பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் - தமிழில் இன்று கட்டுரையாசிரியர் தொகை கணக்கிலடங்காது. அறிவியல் கட்டுரையாளர், ஆராய்ச்சி கட்டுரையாளர், திறனாய்வுக் கட்டுரையாளர் என்று இவ்வாறும் இனம் பிரித்துப் பெயர் சூட்டலாம்.

4. **கட்டுரைத் தலைப்புகள்:**

   தலைப்பைச் சொன்னதும் பொருள் விளங்க வேண்டும்; நீண்ட தலைப்புகள் வேண்டாம். ‘அலையும் கலையும்’, ‘அணியும் மணியும்’ போல அழகாக அமைக்கலாம். படிப்பவரைக் கவர்வதாக இருக்க வேண்டும். உள்வரும் பொருளுக்குப் பொருத்தமாக அமைய வேண்டும்.

5. கட்டுரையின் தொடக்கம் மேலும் படிக்கத் தூண்டுமாறு சுவையுடன் இருக்க வேண்டும். எடுத்ததும் கட்டுரைப் பொருளுக்கு வந்து விட வேண்டும்.

6. எளிய, இனிய சொற்கள் அமைந்ததாய், கேட்போர் படிப்போர் உள்ளடகத்தை ஈர்ப்பதாய் மொழி நடை அமைத்தல் வேண்டும். கலவை வாக்கியம் போல்வன அடிக்கடி வரக்கூடாது. நகைச்சுவை இழையோடுதல் நன்று. மொழிக் கலப்பைத் தவிர்ப்பது நல்லது. மருட்டும் சொற்கள் வேண்டாம். தேவையற்ற அணி, நடை, அலங்கார நடை வேண்டாம். படிக்கும் தன்மை கூடி, கீழே வைக்காது படிக்கத் தூண்டுமாறு எழுத வேண்டும்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

தன்மதிப்பீடு : 2

2. 1. சூரிய நாராயண சாஸ்திரியாரிடம் ஆங்கிலக் கட்டுரைப் போக்கையும் அதன் செல்வாக்கையும் காணலாம். பிறமொழிச் சொற்கலப்பு மிக்க கடுமையான நடையில், பொருட்செறிவுடன் எழுதினார். தமிழில் ஆங்கில மரபில் கட்டுரைக்கலையைக் கொண்டு வந்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

   2. மறைமலையடிகள் 'தனித்தமிழ் இயக்கத்தந்தை' எனப் போற்றப் படுபவர்: இவரும் கடுமையான நடையில், பொருட்செறிவுடன், ஆங்கிலப் பாணியையும் தமிழ்மரபையும் இணைத்து எழுதினார். கடுமையாக விவாதித்தல், காரணகாரியம் காட்டி எழுதுதல், ஒரு முடிவை நோக்கி வாசகர்களை அழைத்துச்செல்லுதல் போன்ற நடைப் பண்புகள் இவரிடம் காணப்படும்.

   3. ஆங்கில ஆசிரியர்கள் இப்சன், பாஸ்வெல் போன்றோரின் கடுமையான நடையுடன் இவரது நடையை ஒப்பிட்டுக்கூறுவர். ஜோசப் அடிசன் எழுதியவற்றை 'சிந்தனைக் கட்டுரைகள்' என்ற பெயரில் இவர் தமிழாக்கம் செய்தார்.

தன்மதிப்பீடு : 3

3. 1. உ.வே.சா. எழுதிய கட்டுரை நூல்களில் நல்லுரைக் கோவை, நான் கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும் என்பன குறிப்பிடத் தக்கன.

   2. இவருடைய நடை கதையாக எடுத்துரைப்பதுபோல் இருக்கும். ஆங்கில மரபில் காணப்படுவதுபோல், தம் அனுபவங்களை இயல்பாக எடுத்துரைப்பது இவர்தம் இயல்பு. தம் வாழ்க்கையில் அன்றாடம் கண்ட செய்திகளை அழகு தமிழில் எளிமைப்படுத்தி எடுத்துரைப்பார். நகைச்சுவை இழையோடக் கதையை விவரிப்பது போல் நடை அமைந்திருக்கும். வாசகர்களைச் சலிப்படையச் செய்யாது, கட்டுரைச் செய்திகளுடனேயே கைப்பிடித்து அழைத்துச் செல்லும் தன்மை இவரது கட்டுரைகளில் காணப்படும்.

தன்மதிப்பீடு : 4

4. 1. திருவள்ளுவர் நூல் நயம், கடற்கரையிலே தமிழ் இன்பம்,

   2. ரா.பி.சே. அடைமொழியும், அடுக்கு மொழியும் கை வந்த கலைஞர். எதுகை மோனை ஆட்சி இவருக்கு இயல்பாக வரும். கருத்துக்கள் மாறுபடாது செல்லும். இவரது செவ்விய நடையை இலக்கிய நடை என்று அழைப்பர்.

தன்மதிப்பீடு : 5

5. 1. பாரதியார் கட்டுரை மொழிநடை நேர்நின்று பேசுவது போல் இருக்கும். எளிய உணர்ச்சி ததும்பிய சொற்களின் கோவைகளாகியது இவரது நடை. சிறுசிறு வாக்கியங்களாக இருக்கும் ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்பும் ஆணித்தரமாக அறிவுறுத்தும் திறனும் வேகமும் அமைந்திருக்கும்.

   2. பாரதியார் எழுத்துப் பணி செய்த இதழ்கள் இந்தியா, சுதேசமித்திரன் முதலியன.

தன்மதிப்பீடு : 6

6. 1. தேசபக்தன், நவசக்தி

   2. முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து.

   3. மருட்டாத எளிய தமிழ்ச் சொற்களுடன் கூடிய சிறு சிறு வாக்கியங்கள் எதிர்நின்று சொற்பொழிவு நிகழ்த்துவது போல் எழுதிப் போதல்.

தன்மதிப்பீடு : 7

7 1. தம்பிக்கு, மொழியியல் கட்டுரைகள்.

   2. தம் கருத்தைக் காட்சிப்படுத்தும் விளக்க நடை வல்லவர் மு.வ. கட்டுரைத் தலைப்பு; தொடக்கம், முடிப்பு, உடற்பகுதி யாவும் செவ்விய முறையில் அமைந்திருக்கும். இவரது கட்டுரைகள் எப்பொருள் பற்றியனவாயினும், அவற்றைத் தொகுத்து, கருத்து நெறி பிறழாது முறைப்படுத்தி, எளிய நடையில் இனிய சொற் களுடன் காட்சிப்படுத்துமளவு அழுத்தமாகத் தரும் திறனுடையன.

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

பாடப்பகுதி (Unit) 11
நாடகம் (Drama)

படிப்பு நோக்கம்

★ நாடகத்தமிழை அறிமுகப்படுத்துதல்

★ நாடக வகைகளைப் புலப்படுத்துதல். அதன் வழி நாடக வளர்ச்சி யினைக் குறிப்பிட்டுக் காட்டுதல்

★ நாடகத் தமிழ் குறித்த மொழித்திறனை வளர்த்துக் கொள்ள வழிகாட்டுதல்

பாடக்கருத்தலகுகள்

11.0 பாட முன்னுரை

11.1 கீர்த்தனை நாடகங்கள்

11.1.1 நந்தனார் சரித்திரக் கீர்த்தனை

11.2 கவிதை நாடகம்

11.2.1 மனோன்மணீயம்

11.3 மரபுவழி மேடை நாடகம்

11.3.1 சுலோசனா சதி

11.4 மேலை மரபுவழி நாடகம்

11.4.1 சபாபதி

11.5 சமூக நாடகம்

11.6 பாடத் தொகுப்புரை

11.7 தொடர்ந்து படிப்பதற்குரிய துணை நூல்கள்

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

11.0 பாடமுன்னுரை

தமிழ் மொழியானது 'முத்தமிழ்' என்று அழைக்கப்படும் பெருமை யுடையது. அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பனவாகும். உரைநடையால் இயன்றது இயற்றமிழ்; இசைப்பாக்களால் இயன்றது இசைத்தமிழ்; உரையும் செய்யுளுமாகிய இற்றமிழும் இசைத்தமிழ் பாடல்களும் விரவப்பெற்று உள்ளத்துணர்ச்சியைப் புலப்படுத்தும் வண்ணம் நடிப்புடன் இயல்வது நாடகத்தமிழ் என்று நவிலப்படுகிறது. இயல், இசை என்ற இவ்விரண்டின் இயல்பும் இடைமிடைந்து வருவதால் முத்தமிழ் வரிசையில் நாடகத் தமிழ் இறுதியாக இடம் பெற்றுள்ளது என்றும் கூறுவர்.

கலைகளில் மிகவும் விரும்பப்படும் கலை நாடகக் கலை. நடிக்கப் பெறுதலின் நாடகம் என்று விளம்புவர். ஒரே நேரத்தில் கண்டும் கேட்டும் உணர்ந்தும் இன்புறுத்தும் கலை நாடகக்கலை. நாடகம் என்பதனை நாடு + அகம் என்றும் பிரிப்பர்; 'நாடு' எனில் ஒன்றை ஒன்றி, ஊன்றி உணர்தல்; 'அகம்' எனில் உள்ளம். ஆதலில் 'நாடகம்' என்பதற்கு உள்ளத்தால் ஒன்றி உணர்தல் என்று பொருள் கூறுவர். பழங்காலத்தில் பெற்ற கூத்தாகப் பாமர மக்கள் முதலிய அனைவராலும் நடிக்கப் பெற்றதால் இதைப் 'பாமர மக்களின் பல்கலைக்கழகம்' என்பர்.

பண்டைத் தமிழரை மகிழ்வித்த கூத்துக்களே இன்றைய நாடகமாயின. சங்ககாலத்தில் 'கூத்து' என்ற பெயரில் மக்களிடை நாடகம் வழக்கில் இருந்து வந்துள்ளது. சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் என்றும் நாடகக் காப்பியம் என்றும் அழைக்கப் படுகிறது. சிலம்பிலும் வசைச்கூத்து, ஆரியக்கூத்து, தமிழக்கூத்து போன்ற கூத்து வகைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'வால சரித நாடகம்' என்ற ஒரு நாடகப் பெயரினையும் சிலம்பு குறிப்படுகிறது. பழங்காலத்தில் சிலம்புக்கதை நாடகமாக நடிக்கப் பெற்றது. சிலப்பதிகாரக் காலத்திலும் பின்னரும் நாட்டியக்கலை சிறப்பாக வளர்ந்து வந்துள்ளது. பெரிதும் நாட்டியத்திலிருந்து பிறந்ததுதான் நாடகம் என்பர். சிலப்பதிகாரத்திற்குப் பிறகு 16-ஆம் நூற்றாண்டு வரை பல நாடகநூல்கள் கல்வெட்டுச் செய்திகள் மூலம் பெயரளவில் தெரிய வருகின்றன.

17-ஆம் நூற்றாண்டில்தான் நாடக வளர்ச்சி தொடங்குகிறது. பள்ளு, குறம், குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற நாடக வகைகள் எழுந்தன. இவற்றைத் தொடர்ந்து கீர்த்தனை நாடகங்கள் தோன்றின.

இதற்குப் பின்னர் 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் நாடகக்கலை பெரு வளர்ச்சி பெற்றது. தமிழ் மரபு வழியிலும் மேலைநாட்டு நாடக முறைகளைப் பின்பற்றியும் நாடகங்கள் எழுந்தன. பிறமொழி நாடகங்கள் மொழி பெயர்க்கப்பட்டன. கற்பனை வளத்துடன் தரம்மிக்க நாடகங்களை எழுதினர்; நடித்தனர்; நாடகங்கள் அச்சேறின. இதனால் படிப்பதற்குரிய நாடகம், நடிப்பதற்குரிய நாடகம், இரண்டிற்குமுரிய நாடகம் என்ற நிலையில் நாடகங்கள் பெருவழக்குப் பெற்றன.

மேலும் நாடகங்கள் உரைநடை வடிவிலும் கவிதை வடிவிலும் தோன்றின. குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் சமுதாயக் கருத்துக்கள் நாடகக் கதைப் பொருளாயின. இவற்றை அடிப்படையாக வைத்து சமுதாய நாடகம், வரலாற்று நாடகம், புராண நாடகம், அரசியல் நாடகம், இலக்கிய நாடகம் எனவும் மொழி பெயர்ப்பு நாடகம், தழுவல் நாடகம் எனவும் ஓரங்க நாடகம், வானொலி நாடகம் எனவும் பலவகை நாடகங்கள் தோன்றின. நாடகத்தமிழும் சிறப்பு நிலையடைந்தது.

பெரு வளர்ச்சி பெற்றுச் சிறந்துள்ள நாடகத் தமிழினை நீங்களும் அறிந்து கொள்ளலாம்; நாடக இன்பத்தினைச் சுவைக்கலாம்; நாடக வகைகளைக் கற்று உணர்ந்து அறிந்து கொள்ளவும், நாடகச் சுவையினை மனத்திலுணர்ந்து இன்புறவும் இப்பாடம் வழிவகுக்கிறது. இங்குக் கீர்த்தனை நாடகம், கவிதை நாடகம், மரபுவழி மேடை நாடகம், மேலை மரபுவழி நாடகம், சமூக நாடகம் போன்ற ஒரு சில நாடகங்களின் அமைப்பும், அவை நாடகக் கதையினை - நிகழ்ச்சியினை உணர்த்தும் திறனும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

11.1 கீர்த்தனை நாடகங்கள்

கீர்த்தனை என்ற இசைப்பாடல்களின் தொகுதியாலானது கீர்த்தனை நாடகமாகும். கீர்த்தனை என்பது 'புகழ்பாடுதலை'க் குறிக்கும். சிந்து என்ற பாடல் வகையே தமிழில் கீர்த்தனையாக வளர்ச்சி பெற்றது என்பர்.

கீர்த்தனை நாடகங்கள் புராணக் கதைகளைக் கருவாகக் கொண்டமைந்தன. பெரிதும் இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற இதிகாசம், புராணம் முதலியவற்றிலிருந்து தமக்குரிய கதைப்பொருளை இவை மேற்கொண்டன.

ஒரு புராணக் கதையையோ அல்லது சமூகக் கதையையோ இசை உறுப்புக்களின் மூலம் பாடி, அதே நேரம் நாடகமாக்கி நடித்துக் காட்டுவது இசை நாடகமாகும். கீர்த்தனை நாடகங்கள் பெரிதும் இசைப்பாடல்களால் ஆனதால், அவையும் இசை நாடக வகை ஆகும். கீர்த்தனை நாடகங்கள் விருத்தம், தரு, திபதை போன்ற பல இசைக்கூறுகளைக் கொண்டிலங்கும் 'தரு' என்பது கூத்துப்பாடல்களைப் பாடும் முறையை அமைத்துக் காட்டும் ஒருவிதச் சொற்கோவையே ஆகும். தருவில் இராகம், தாளம் இருக்கும். இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மூன்று அமைப்புக்களைப் பெற்றிருக்கும். 'விருத்தத்தில்' இராகம் அமைந்திருக்கும். ஆனால் தாளம் அமையாது. 'திபதை'யில் இராகமும் தாளமும் இருக்கும். மேலும் கட்கா, தாண்டகம், நொண்டிச் சிந்து, இலாவணி, கண்ணி, கும்மி, துக்கடா, செல், ஆனந்தக் களிப்பு, அகவல் முதலிய பாடல் வகைகள் காணப்படும்.

11.1.1 நந்தனார் சரித்திரக் கீர்த்தனை

கீர்த்தனை நாடகங்களுள் மிகவும் புகழ் பெற்றது கோபாலகிருஷ்ண பாரதியாரால் இயற்றப் பெற்ற 'திருநாளைப் போவாரென்னும்' நந்தனார் சரித்திரக் கீர்த்தனையாகும். இது பெரியபுராணத்தை மூல நூலாகக் கொண்டுள்ளது. பெரியபுராணத்தில் வரும் ஒரு சிவனடியாருடைய கதையை, இசைப்பாடல்கள் விரவிவரக் காட்சியமைப்பில் நாடகமாக்கிக் காட்டுகிறது. இதில் 234 கீர்த்தனைகள் வருகின்றன.

இதில் தெய்வ வணக்கம், அவையடக்கம், புராணிகர் கூற்று, தோடயம் முதலிய பகுதிகள் முதலில் அமைந்திருக்கும். பின்னர் நூலுக்கு மங்களச் செய்யுள் கூறப்பட்டுக் கதை தொடங்கும். இசைப்பாடல்களுக்கு இடையிடையே வசனம் என்ற அமைப்பு உரைநடைப் பாங்கில் வருகிறது. இவ்வசன அமைப்புக் கதையை இடையிடையே கூறும்; இசைப் பாடல்களும் வசனமும் விரவிவரக் கதை தொடர்ந்து செல்லும்.

தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் நந்தன்: இளமனமோ இறைவன் வயப்படுகிறது. எப்பொழுதும் இறைவனைப் பற்றிய சிந்தனை. தில்லை சென்று சிவனை வழிபட வேண்டும் என்ற தாளாத ஆசை. ஆனால் பிறந்ததோ தாழ்குலம்; என்ன செய்ய! உலகம் பழிக்கிறது. தில்லை செல்லப் பல இடையூறுகள். இறுதியில் தில்லை சென்ற போதிலும் மனம்

தாழ்பிறப்பை எண்ணி உள்ளே செல்ல மறுக்கிறது; மனம் மறுகுகிறது. எனினும் உள்ளன்புடனும், உண்மையான நம்பிக்கையுடனும் இறைவனை வேண்ட இறைவன் காட்சி தருகிறான். இறுதியில் இறைவனால் நந்தனார் ஆட்கொள்ளப்படுகிறார். இதுதான் நாடகக்கதை.

ஒன்றைப் படிப்பதை விடப் பாட்டாகப் பாடினால் மனத்தில் தங்குமல்லவா! இதோ ஒரு பகுதி! இசைப்பாடலுடன் கூடியது.

நந்தனார் இறைவனை வணங்க மனத்தில் ஆசை கொண்டு பதினொரு பேருடன் திருப்புன்கூர் என்ற இடம் வந்து சேர்ந்தார்.

வசனம்:

அந்தத் தலத்திலே நந்தி மிகவம் பெரிதானவடிவினாலே
சிவலிங்க தரிசனஞ் செய்வதற்கு நந்தி மறைந்திருப்பதால்,
நந்தனார் துயரமடைந்து சொல்கிறார்
....
....

கவாயி

ராகம்-கேதாரம், தாளம்-மீச்ர ஏகம்
சிவலோக நாதன் திருச்சந்நிதானம்
மலையாகியமாடு மறைத்திடுதங்கே
பலகாலஞ்செய்த பாழ்வினைகுவிந்து
மலையாகிப்படி மறைந்ததோ வென்றார்

வசனம்:

என்று சொல்லிய நந்தனார் பின்னுஞ் சொல்லுகின்றார்.

பல்லவி

வழி மறைத்திருக்குதே மலைபோலே
ஒரு மாடுபடுத்திருக்குதே. (வழி)

அனுபல்லவி

பாவிப் பறையணிந்த வூரில்வந்து மிவன்
பாவந்தீரேனோ உன்றன்
பாதத்தில் சேரேனோ ஏறேனோ
சிவலோகநாதா மாடு (வழி)

சரணம்

தேரடியில்நின்று தரிசித்தால் போதும்
கோவில்வர மாட்டேனே ஐயே
ஓரடிவிலகினால் போதுமிங்கே நின்று
உற்றுப்பார்க்கச் சற்றே விலகாதோ மாடு (வழி)

வசனம்:

இப்படி நந்தனார் தரிசனங்காண ஓயாமல் மனம் வருந்தும்போது சுவாமி நந்தனார் மீதிரங்கி நந்தியை விலகச் சொன்னார்.

இருசொல் அலங்காரம் என்பது இருவர் மாறிமாறி உரையாடுவது போன்று பாடல்களை அமைப்பது. அவற்றில் சொல் விளையாட்டு, பொருள் புனைவு, கருத்துத் தொக்கல் ஆகியவை இடம் பெறும். நாடக உரையாடல் போன்றே இவை அமையும்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் நந்தனாரும் புலையர்களும் உரையாடும் இடம் இதற்குச் சான்றாகும்.

வசனம்:

இப்படி வாருங்களென்று அழைக்கப் புலையர் வராமலிருக்க நந்தனார் நல்ல வார்த்தையைச் சொல்லி பறையரைச் சிவநாமத்தைச் சொல்லச் சொன்னார்.

இருசொல் அலங்கார வாக்குவாதம்

நந்தனார் – தில்லையம்பலமென்று சொல்லச் சொன்னார்
புலையர் – கள்ளப்பேச்சென்று மெள்ளச் சொன்னார்
நந்தனார் – சங்கராவென்று சொல்லச் சொன்னார்
புலையர் – இங்கேவாவென்று நிற்கச் சொன்னார்
நந்தனார் – சற்றேயாகிலும் சிவனை தியானம் பண்ணென்றார்
புலையர் – நத்தையோடு பாலை பானம் பண்ணென்றார்
நந்தனார் – திருச்சிற்றம்பலமென்று ஜெபிக்கச் சொன்னார்
புலையர் – வெறுச்ச கம்பளமென்று உறக்கச் சொன்னார்

இவ்வாறு புலையர்கள் சொல்லியும் கேளாது இருந்த நந்தனாரைத் திருத்த எண்ணி, அவ்வூரில் வயதில் மூத்த பெரிய கிழவனாரை வைத்துப் புத்தி சொல்லச் சொல்கிறார்கள். பெரிய கிழவனாரும் நந்தனாரை ஒழுங்காகத் தன் வேலைகளைச் செய்யும்படி சொல்கிறார். அதற்கு நந்தனார் பெரிய கிழவனாரைப் பார்த்து பின்வருமாறு கூறுகிறார்.

மீசை நரைத்துப் போச்சே கிழவா ஆசைமறக்கலாச்சோ
பாசம் வருகலாச்சே கிழவா பாவம் விலகிப்போச்சோ
கூனிக் குறுகிப்போச்சே கிழவா கோபம் விலகிப்போச்சோ
அங்கம் தளர்ந்து போச்சே கிழவா அகங்காரமும் போச்சோ
சேரியை நினைந்தாயே கிழவா சிதம்பரம் மறந்தாயே
மானிட ஜென்மமடா கிழவா மாண்டால் வருமோடா
அம்பலத் தரசனடா கிழவா ஆளுந் தெய்வமடா
திருவடி பணியாயோ கிழவா தேறித் தெளியாயோ

என்று நந்தனார் கூறுகிறார். இதைக்கேட்ட பெரிய கிழவர் கண்டேன், என் கலிதீர்ந்தேன், அமிர்தமுண்டேன், பசி தீர்ந்தேன், பிறவி வென்றேன், வீடு நின்றேன் என்று தமக்குத்தாமே பேசிக்கொண்டு போகிறார். இவ்வசனம் ஒரு பாத்திரத்தின் அகவுணர்வை அப்படியே நாடகப் பாங்கில் படம் பிடித்துக் காட்டுகிறது.

இப்பகுதிகள் முழுவதும் மக்கள் நாடகம் காணும் உணர்வுடன் சுவைத்து இரசிக்கும்படி அமைந்துள்ளன. மேலும் கீர்த்தனை நாடகங்களில் இசைப் பாடல்கள் அதிகம் வருகின்ற போதிலும், அவற்றிடையே வருகின்ற இராக மாற்றம், மக்களின் மனச்சலிப்பை நீக்கி நாடகச் சுவையைப் பெருக்கும் வண்ணம் உள்ளது. பாடல்களில் அமைந்துள்ள வெவ்வேறுபட்ட ஒலிநயமும் இசைநயமும் சந்த அமைப்பும் குறிப்பிடத்தக்கன. நடை எளிமையும் இசை இனிமையும் இந்நூலுக்குச் சிறப்பையும் பெருமையையும் நல்குகின்றன.

தன் மதிப்பீடு : 1

I. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நாடகம் என்பதன் பொருள் விளக்கம் யாது?
2. நாடக வகைகளுள் ஏதேனும் மூன்று கூறுக?
3. சிலம்பு குறிப்பிடும் நாடகத்தின் பெயர் என்ன?
4. கீர்த்தனை நாடகம் - பெயர் விளக்கம் தருக.
5. கீர்த்தனை நாடகத்தில் வரும் பாடல் உறுப்பு, பாடல் வகைகளைக் குறிப்பிடுக.

II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. முத்தமிழ் எனப்படுவது .... என்பனவாகும்.
2. குறக்குல மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது .... நாடகமாகும்.
3. .... எனும் நந்தனார் சரித்திரக்கீர்த்தனையின் ஆசிரியர் .... ஆவார்.
4. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை .... நாடக வகையிலடங்கும்.
5. இந்நாடகத்தில் இடையிடையே .... விரவி வரும்.

11.2 கவிதை நாடகம்

செய்யுள் அல்லது கவிதை நடையைக் கொண்டு திகழும் நாடகம் கவிதை நாடகமாகும்.

1891-இல் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மனோன்மணீயம் என்ற கவிதை நாடகத்தை இயற்றினார். இது லிட்டன்பிரபு எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்ற பனுவலின் தழுவலாகும். எனினும் தழுவல் என்று எண்ணமுடியாதபடி ஆசிரியர் கதையின் கருவை ஏற்று அதன் போக்கையும் பாத்திரங்களையும் சூழ்நிலையினையும் உணர்வுகளையும் தமிழாக்கி மிகச் சிறப்பாகத் தந்துள்ளார். இதற்கு முன்னரும் சில கவிதை நாடகங்கள் தோன்றியிருப்பினும் மனோன்மணீயம் பெரும்புகழ்பெற்றது. சேக்ஷ்பியரின் நாடகங்கள் போன்ற பாங்கினை இதில் காணலாம். அகவல்யாப்பு, உரையாடல், இலக்கிய நயம் யாவும் இதற்குச் சிறப்புத் தந்தன. வீ. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பண்டித நடராஜபிள்ளை போன்றோர் கவிதை நாடகங்களை எழுதியுள்ளனர். அனிச்ச அடி, அன்னிமிஞிலி, வேங்கையின் மைந்தன், புலவர் உள்ளம், ஊமைக்குயில், முல்லைமாடம், மனைவளம் போன்ற கவிதை நாடகங்கள் பல்வேறு கருத்துக்களை மையமாகக்கொண்டு இன்று தோன்றியுள்ளன. இவை அனைத்திலும் மனோன்மணீயத்தின் செல்வாக்கைக் காணலாம்.

11.2.1 'மனோன்மணீயம்'

முன்னர்க் குறிப்பிட்ட கீர்த்தனை நாடகத்திலிருந்து இது மாறுபட்ட அமைப்பினைக் கொண்டு திகழ்ந்தது. இதில் நாடகக் கூறுகள் மிகுந்து காணப்படுகின்றன. முதன்முதலில் பாயிரமாகக் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், தமிழ்த்தெய்வ வணக்கம் ஆகிவற்றைப் புகுத்தித் தமிழ் மரபு காக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தாயை முதன்முதலில் வணங்கித் தொடங்கும் பெருமை பெற்றுத் திகழ்கின்றது இந்நாடகம். இன்றும் தமிழகமெங்கும் தமிழ் குறித்து எந்நிகழ்ச்சி நடந்தாலும் அங்கெல்லாம் ''நீராரும் கடலுடுத்த'' என்ற இத்தமிழ்த்தெய்வ வணக்கத்தினை, தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடும் மரபுள்ளது.

முதன்முதலில் இக்கவிதை நாடகம்தான் அங்கம், களம் என்ற நாடகப் பகுப்பு முறையில் பகுக்கப்பட்டுள்ளது. இது மேலைநாட்டு நாடக முறையைப் பின்பற்றிப் பகுக்கப்பட்ட மரபாகும். கதையானது பல களங்களாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு களத்திலும் அதற்குரிய செய்தி, நடைபெறும் இடம், காலம் குறிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியம், தாழிசை, வஞ்சி, விருத்தம், கலித்துறை, கட்டளைக் கலித்துறை வெண்பா ஆகிய செய்யுள் அமைப்புக்கள் இந்நாடகத்தில் உள்ளன. ஓரிடத்திலும் உரைநடை பயன்படுத்தப்படவில்லை.

ignou THE PEOPLE'S UNIVERSITY

கவிதை நடையில் எளிமை காணப்படுகிறது. ஆயினும் கருத்துச்செறிவு மிக்கு இருப்பதினாலும் உரையாடலில் பிரிவு காணப்படுவதினாலும் நடிப்பதற்கு இயலாத பல பகுதிகள் அமைந்துள்ளதாலும் மனோன்மணீயம் மேடைக்குப் பொருத்தமற்றதாக அமைந்துவிடுகிறது. இந்நாடகம் சில மாற்றங்களுடன் உரைநடையில் எழுதப்பட்டு, அரங்கேறியும் உள்ளது.

இந்நாடகம் கவிதை நாடகங்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக உள்ளது. பல பாத்திரங்கள் இடம்பெறுகின்றனர். இப்பாத்திர உரையாடல்கள் கவிதை நடையில் அமைந்தாலும், உரையாடும்பொழுது ஒருவருக்கொருவர் நேராக விளித்துப் பேசுவதுபோல் அமைந்த நாடக உரைநடைப்பாங்கு இவண் குறிப்பிடற்பாலது.

இந்நாடகத்தில் மனோன்மணி நாடகத் தலைவி; 'ஜீவகன்' என்ற பாண்டிய அரசனின் ஒரே செல்வ மகள். இவளுடைய உயிர்த்தோழி வாணி. வாணியும் நடராஜனும் மனத்தால் இணைந்த காதலர்கள். ஆனால் வாணியின் பெற்றோர்கள் அவளை அந்நாட்டு மந்திரி மகன் பலதேவனுக்கு மணமுடிக்க எண்ணுகின்றனர்.

வாணியின் காதலை மனோன்மணி நன்கறிவாள். ஆனால் தோழியிடம் அவள் மனநிலை குறித்துத் தெரிந்தும் தெரியாதவள்போல உரையாடுகிறாள். பெண்கள் காதலை உடனே வெளிப்படுத்த மாட்டா இயல்பினர். வாணியோ உயிர்த்தோழியிடம் தன் மன உறுதியை மறைமுகமாக வெளிப்படுத்துகிறாள்.

முதல் அங்கம்

இரண்டாம் களம்

இடம்: கன்னிமாடம் **காலம்: எற்பாடு**

மனோன்மணியும் வாணியும் கழல் விளையாடுகிறார்கள். அப்பொழுது மனோன்மணி விளையாட்டாகக் கேட்கும் கேள்விகளுக்கு வாணி விடை கூறுகிறாள்.

மனோன் (சிரித்து) : ஏதடி வாணி! ஓதிய பாட்டில்
ஒரு பெயரொளித்தனை பெரு மூச்செறிந்து
நன்று! நன்று! நின் நாணம்.
மன்றலு மானது போலும்வார் குழலே!

வாணி : ஏதம் மாநீ சூது நினைத்தனை?
ஒரு பொருளும் யான் கருதினே னல்லேன்.
இச்சகத் தெவரே பாடினும்,
உச்சத் தொனியில் உயிர்ப் பெழல் இயல்பே

மனோன் : மறையேல்! மறையோல்! பிறைபழி நுதலாய்?
திங்கள் கண்டு பொங்கிய கடலெனச்
செம்புனல் பரக்கச் செந்தாமரைபோற்
சிறந்தவுண் கபோலம் நுவன்று நின்மனக்
களவெலாம் வெளியாக் கக்கிய பின்னர்
ஏதுநீ யொளிக்குதல்? இயம்பாய்
காதலன் நேற்றுனக் கொதிய தெனக்கே.

வாணி : ஐயோ கொடுமை! அம்ம! அதிசயம்
எருதீன் றெனுமுனம் என்னகண் றென்று
திரிபவ ரொப்பநீ செப்பினை
நான்கண் டேநாள் நாளைந் தாமே!

மனோன் : அழுங்கலை! அழுங்கலை! அனிச்சமும் நெருஞ்சிலா
அஞ்சிய அடியாய்! அழுங்கலை! அழுதுகண்
அஞ்சனங் கரைந்துநின் கஞ்சனக் கதுப்பும்
கருத்ததே! ஏனிது! கருணைக் கடவுள்நின்
கருத்தே முடிப்பக் காண்டி.

'எட்பூ ஏசிய நாசியாய்! வேய்கொள் தோழி!' என்று மனோன்மணி வாணியை விளித்துப் பேசுவதும், ஒருத்தி 'ஏதடி என மற்றொருத்தி 'ஏனம்மா' என்றுரையாடுவதும் இந்நாடகம் உரையாடல் திறனிற்கு அழுத்தம் கொடுத்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றன. உரையாடல் நாடகப் பாங்கினைக் கொண்டு விளங்குகிறது. கதையை நடத்திச் செல்லப் பெரிதும் உதவுகின்ற ஆசிரியப்பா, உரையாடலுக்கும் நன்கு உதவிடக் காண்கிறோம்.

ஏதடி! வாணி! என்னமோ ஒளிக்கிறாய்; நேற்று காதலன் உனக்குக் கூறியது என்ன? ஐயோ! கொடுமை அம்மா! ஏதடி காதல் முடிந்ததா?! எதனைச் சொல்வேன்! என்னடி மனத்தில் கவலை; என்னிடம் சொல்; எப்படிச் சொல்வேன் அம்மா!

என்று இவ்வாறு மாற்றி மாற்றி உரையாடும் திறனை ஆழநோக்கினால், ஒருவருக்கொருவர் முன்னின்று பேசுவதுபோல உள்ளது; இதனால் கவிதை மொழி பேச்சுமொழிபோல எளிமையாகக் காணப்படுகிறது. இதிலுள்ள கவிதை மொழிகள் தேர்ந்தெடுத்துக் கையாளப்பட்டுள்ளன; எனினும், நாகரிகமாகக் கொச்சைமொழி எதுவுமின்றி, எளிதில் புரியும் வண்ணம் பேச்சு நடைப் பாங்கு மிளிர உரையாடும் திறன் குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் இந்நாடகம் கவிதை நாடகமே எனினும் அங்கம், களம் என்ற நாடகப் பகுப்பு முறைகளையும், உரையாடலான நாடகத்திற்கே உரிய உத்தி முறையினையும் திறம்படக் கையாண்டு நாடக உலகில் சிறந்து நின்றது.

தன் மதிப்பீடு : 2

1. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:

1. கவிதை நாடகம் - குறிப்பு வரைக.
2. மனோன்மணீயம் நாடக ஆசிரியர் யார்?
3. கவிதை நாடகங்களுள் ஏதேனும் மூன்றைக் குறிப்பிடுக?
4. மனோன்மணியின் உயிர்த்தோழி யார்?
5. இந்நாடகம் முதன்முதல் கையாண்ட நாடக அமைப்புகள் யாவை?

11.3 மரபுவழி மேடை நாடகம்

மேடை அலங்காரங்கள் இன்றித் தெருக்களில் பாடலும் ஆடலுமாக நடத்தப்பெறும் நாடகங்கள் தெருக்கூத்து எனப்படும். இத்தெருக்கூத்து தமிழ் மக்களிடையே பண்டுதொட்டு வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. மக்கள் பொழுது போவதற்காகவும் விழாக்களின் போதும் மகிழ்ச்சி பொங்க வேடம் கட்டி நடித்தனர். இத்தெருக்கூத்தே வாய்மொழி மரபாக மக்களிடை வழங்கி வந்தது. இதன் அடிப்படையிலும் தமிழில் நாடகங்கள் பல எழுதப்பட்டன. இவ்வாறு வாய்மொழி மரபாக உள்ள தெருக்கூத்து அடிப்படையில், புராண இதிகாசங்களைப் பெரிதும் கதைக் கருவாகக் கொண்டு நடிப்பதற்கென்றெ எழுதி, இசையுடன் பாடி நடிக்கப்பட்ட நாடகங்களை மரபுவழி மேடை நாடகம் எனலாம்.

ignou THE PEOPLE'S UNIVERSITY

முற்காலத்தில் நாடகங்களில் இசைப்பாடல்களை மிக அதிகமாக அமைத்துப் பாடுவதைப் பெருமையாக எண்ணினர்; மக்களும் விரும்பினர்; அவை வெற்றியும் பெற்றன. எனவேதான் இசைப்பாடல்கள் நிறைந்த நாடகங்கள் தோன்றின என்பர்.

1891 தொடக்கத்தில் தமிழ் நாடக உலகில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. தமிழ் நாடகத் தலைமையாசிரியர், ‘தமிழ் நாடகத் தந்தை’ என்று போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகள் பழைய நாடகங்களை ஒழுங்குபடுத்திப் புதிய நாடகங்களாக 40க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதினார். இவர் நாடகங்களைத் தாமே எழுதியும் நடித்தும் ஆசிரியராக இருந்து இயக்கியும் நாடக உலகிற்குத் தொண்டாற்றினார். இவரது நாடகங்களை முழுதும் உரைநடையில் அமைந்த நாடகங்கள் என்று கருதவியலாது. அவை பாடல்கள் நிறைந்தவை; இருப்பினும் நீண்ட உரைநடைப்பகுதி கொண்டவை. அபிமன்யு, சுந்தரி, பவளக்கொடி, சதியநுசூயா, பிரகலாதன், சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம், சுலோசனா சதி போன்ற நாடகங்கள் இவர் எழுதியவையாகும்.

11.3.1 ‘சுலோசனா சதி’ நாடகம்

சதிபதி என்றால் மனைவியும் கணவனும் எனப்படும். சதி-மனைவி. பெரிதும் உடன்கட்டை ஏறும் வழக்கு ‘சதி’ எனப்படினும் பொதுவாகக் கணவனுடன் உடன்கட்டை ஏறும் மனைவியைச் ‘சதி’ என்பர். உடன்கட்டை ஏறுவதனைச் ‘சதி செய்தல்’ என்றும் கூறுவர். இந்நாடகத்தில் சுலோசனா தன் கணவன் இந்திரஜித் இறந்தவுடன் உடன்கட்டை ஏறுகிறாள். இதனால் இதற்கு ‘சுலோசனா சதி’ என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இது நடிப்பதற்காகவே எழுதப்பட்ட நாடகமாகும். கீர்த்தனை நாடகங்கள் போல இதுவும் இசைப்பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது; எனினும் இசைப்பாடல்களின் தொகுதி என்று சொல்லுமளவு இல்லை. கீர்த்தனை நாடகங்களில் ‘வசனம்’ என்ற அமைப்பு சிறுபகுதியாகவே இடம்பெறும். இதில் நாடகம் காண்பவர்க்கு எளிதில் விளங்கும்பொருட்டு இடையிடையே நீண்ட உரையாடல் பகுதி வருகிறது.

இந்நாடகத்தில் முதன்முதல் ‘விநாயகர் துதி’ உள்ளது. நாடகக் கதையானது, காட்சி, களம் எனவும் ஒவ்வொரு களத்திலும் இடம் காலம் பாத்திரங்கள் எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காட்சியிலும் வரும் பாடல்களுக்கு இராகம், தாளம், பல்லவி, அனுபல்லவி, சரணமும் குறிக்கப்பட்டுள்ளன.

இந்நாடகங்கள் பற்றிக் குறிப்பிடும்பொழுது நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நன்கு பயன்படவேண்டும் என்ற கலையார்வத்துடன் எழுதப்பட்டன என்றும் பண்பு, அன்பு மற்றும் ஒழுக்கம் போன்ற சீரிய கருத்துக்கள் இவற்றில் பொதிந்து கிடக்கின்றன என்றும் கூறுவர்.

இந்நாடகத்திலுள்ள தனிச்சிறப்பு என்னவெனில் ‘‘திருமணம் என்பது என்ன? அது எத்தனை வகைப்படும்? நோக்கம் என்ன?’’ என்பனவற்றை யெல்லாம் விளக்கி ஒரு நீண்ட வசனம் எழுதி இருக்கிறார்கள்; இதை அந்நாளில் ‘தமிழ் வசனம்! என்றே குறிப்பிட்டுள்ளனர். டி.கே. சங்கரன் அவர்கள் இந்நீண்ட வசனத்தைத் தெளிவாகப் பேசி நடித்தபோது மக்கள் மகிழ்வோடு கைதட்டிப் பாராட்டினர் என்று குறிப்பிடுவர். இதோ அப்பகுதி!

காட்சி : 1

இடம் : நாகலோக நந்தவனம்

காலம் : முற்பகல்

பாத்திரங்கள் : இந்திரஜித்து, தோழன், சுலோசனா, மதனவல்லி, சிங்காரவல்லி

நந்தவனத்தில் இந்திரஜித்து, தனியே நிற்கும் சுலோசனாவைக் காண்கிறான். கண்டவுடன் இச்சைகொண்டு தன் ஆசையை அவளிடம் தெரிவித்து, அவளை மிரட்டுகிறான். உடனே சுலோசனா கூறுகிறாள்.

சுலோ : உமது பட்டிமிரட்டுக்கு நான் பயப்படுவேன் என்று நினையாதீர்; அப்பாலே எட்டிப்போம்.

தர்க்கப்பாட்டு

இராகம் : இந்துஸ்தான் தோடி **தாளம் : ஆதி**

இந்திர : சித்த மகிழ்வாய் நீ சேர விரைவாய் வருவாய்
சேயிழையின் மாமையலி னாலுழலும் நோயகல (சித்)

சுலோ : உத்தம மல்ல நீர் ஓதுவது தீய நெறி
உற்றபழியைத்தருவ தற்குரிய கெட்டசெயல் (உத்)

இந்திர : புத்தமு தத்துமொழி பொருந்திய மானே
பூவையர் பதிசேர்தல் புளிமுறை தானே
இத்ததி யிது கெட்டசெயலென்ப தேனே
என்னோடு வந்தா லுனக்குண்டு
எந்நாளு மின்பஞ் சொன்னேனே (சித்)

சுலோ : உமதெண்ணம் நிறைவேற உரைத்தீரிப் போது
உற்றார் பெற்றாரறியா தொரு சிறு மாது
தமதெண்ணப்படி கணவனைச் சேர்தல் தீது
சந்த்ர சூர்யருள் ளவரை
வந்த நிந்தையும் போகாது (உத்)

இந்திர : தம்பதி இருவர்கள் தாம்கூடும் கூட்டம்
தக்கவின்ப மெனுஞ்செந் தமிழ்நூலினாட்டம்
வம்பு மற்றாரிசைக்கு மணமே போராட்டம்
வந்திடுஞ்சாகும் வரையும்
தந்திடுந்துன்பந்திண்டாட்டம் (சித்)

பெண்ணே! எட்டுவிதமாக வேதத்தில் சொல்லப்பட்ட மணத்தில் தமிழ் நூல் மெச்சிப் புகழ்ந்தது காந்தருவப் பழக்கத்தையே, மற்றும் எழுவகை மணமும், நிரம்பிய அன்பைத் தராதன. அவைகளாலே துன்பமே சாகும் வரையில் உண்டென அறிவுடை முதியோரும் சொல்லுவர். நீ அறியாச் சிறுமியாகையால் அன்புக்குரிய காந்தருவ மணத்துக்குத் தக்க தருணம் நேர்ந்திருப்பதைத் தெரியாமல் வெறுத்துத் தள்ளுகிறாய். நீ என்ன சொன்னாலும் நானுன்னைவிட்டுத் தனியாகப் போகப்பட்டவனல்லன். உன் முகக்குறி, செய்கை எல்லாம் என்மீது காதலைக் கொண்டவள் போலுந் தோற்றுகின்றன; ஆனால், வார்த்தைகள் மாத்திரம் இணங்காத செய்கைப் பொருளைத் தருகின்றன. அந்த விபரத்தைச் சொன்னால், உனக்குச் சமாதான ஞாயங்களைச் சொல்லி உனது சந்தேக விபரீத அபிப்பிராயங்களை நீக்கி வைக்கலாமென நினைக்கிறேன். நீ எதற்காக காந்தருவ மணத்துக்கு உடன்பட்டு என்பின் பற்றிவர மாட்டேன் என்கிறாய்? அதனை முன்பு சொல்லு.

ignou THE PEOPLE'S UNIVERSITY

சுலோ : காவல்தானே பாவையர்க் கழகென ஓதி
கடந்து போகக்கூடாதென் பதேதமிழ் நீதி
மேவிய அதற்குவி ரோதமாஞ் சேதி
விளம்புகின்றீர் நீரேதான்
மதங்கொண்ட சாஸ்த்ரவாதி

'காவல்தானே பாவையர்க்கழகு', என்றும் தமிழ் நீதிவாக்கியத்தை மாத்திரம் நீர் படிக்கவில்லையோ? அதன் பொருளுணர்ந்தால் இப்படி எதிர்மொழி பேசவும் துணிவுண்டாகுமா? காவல் என்னும் பதம் பெண்களுக்கு ஒருக்காலும் சுதந்தரமில்லை என்பதை சந்தேகமற விளக்கும். அதாவது ஒரு பெண், இளம்பிராயத்தில் மாதா பிதா காவலுக்குள்ளும், பதிக்குப்பின் தனது புத்திரர் காவலுக்குள்ளும், புத்திரரில்லாவிடின் சுற்றத்தார் காவலுக்குள்ளும் அமைந்திருக்க வேண்டும். மேற்சொல்லிய காவலைக் கடந்து ஒரு பொழுதும் மீறலாகாது. அப்படி மீறினால் கற்புடைய மாது என்று உலகத்தார் கருதுவதற்கு இடமில்லை. பாவமும் பழியுமே தன் தலையில் சூட்டிக்கொண்டு பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் அவமானத்தை யுண்டாக்கி வைப்பாள். அழகிலும், குணத்திலும், பருவத்திலும், உருவத்திலும் நீரெனக்குத் தகுந்த மணவாளனாக நான் கருதினும், மாதா பிதா காவலுக்குரிய இக்காலத்தில் அவர்கள் சம்மதமில்லாமல் நான் எப்படி உம்மோடு வரக்கூடும்? நீரே இதற்கு மறுமொழி சொல்லும்.

இந்திர : இப்படியுள்ள அபிப்பிராயத்தை நீ முன்னமே தெரிவித்திருந்தால் இவ்வளவு காலதாமதமும், சிரமமும் ஏற்பட்டிராவே. நல்லது நீ படித்துணர்ந்த தமிழ்நூலின் உண்மைக் கருத்தை உன் மனங் கொள்ள எடுத்துரைக்கிறேன். அப்புறமேலும் இதுவரை சொல்லி வந்த பிடிவாதத்தை விட்டு என் பின்பற்றி வருகிறாயா?

சுலோ : என் மனம் ஒப்புமாறு நீர் ஞாயம் எடுத்துச் சொன்னால் உமது பின்பற்றி வரத்தடையும் ஏற்படுமோ? எங்கே? தமிழ் நூலில் உண்மைப் பொருளைச் சொல்லும் கேட்கிறேன்.

இந்திர : கவனமாகக் கேள். தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள். இனிமை என்பது என்ன? இன்பம்? அது அன்பு காரணமாக மனத்தின் கண் நிகழ்வது. இந்த அன்பே தமிழ் வடிவம் என்பது. மிக்க நுட்பமாக ஆராய்ந்து பார்ப்போருக்குத் தென்படக்கூடிய ஆழமான அர்த்தம் பொருந்தியது. அதனை உனக்கு முன்பு எளிதாக விளக்கிக் காட்டியிருக்கிறேன். தமிழ் என்னும் பாஷை முதலில் அகரத்தையும், இறுதியில் 'ன' கரத்தையும் உடையது. இவ்விரண்டு அக்ஷரமும் கூடி 'அன்' என்னும் பகுதியாக நின்று 'ப' கர 'உ' கரமாகிய 'பு' என்னும் பண்பு விகுதியை ஏற்று 'அன்பு' என்பதான சொல்லாக முடிந்தது. ஆகவே தமிழ் என்பதற்கு நேரான பொருள் இன்பத்தையுண்டாக்கும் அன்பு என்று சொல்லப்படும்''.

என்று இவ்வாறு உரையாடல் அன்பு, சிற்றின்பம், பேரின்பம், மனைவியின் சிறப்பு முதலியன பற்றிக் கூறி நீண்டுகொண்டே செல்கிறது. இறுதியில் அதாவது நற்குண நற்செய்கையுடைய மனைவியை அடைந்தவரே சுவர்க்கலோகவாசியாரால் உபசரிக்கப்படும் சிறப்பையுடைவார். அவ்வித யோக்யதையுள்ள மனைவியையடைவதற்குப் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் எட்டுவிதமான மார்க்கங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் கொடுப்பார் அடுப்பார் இல்லாமல் ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் கூடும் காந்தருவமணம், களவு மார்க்கமாயினும் களவில் வழிவந்த கற்பே சிறப்புடையதென்று பெண்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே தமிழ்நூலின் உண்மைக் கருத்து... என்று நீண்டுசென்று

உரையாடல் முடிகிறது. உரையாடலின் முடிவில் இருவரும் மனம் ஒருப்பட்டுக் கைகோத்து போகிறார்கள்.

இதில் வரும் 'தர்க்கப்பாட்டு'ப் பகுதி, இசைப்பாடல்களிலமைந்த உரைநடைப் பாங்கிற்கு ஓர் உயிர்த்துடிப்பை நல்குகிறது. மேலும் இசைப் பாடல்களும் நீண்ட உரைநடையுமாகக் கலந்து வரினும் இதன் நடை, நாடக மாந்தரின் உணர்ச்சி வேகத்திற்கு ஏற்றாற்போல அமைந்துள்ளது. மேடைப்பேச்சு போன்ற நீண்ட வசனங்களானாலும் அக்காலத்தில் மக்கள் அமைதியுடன் அமர்ந்து அவற்றை இரசித்திருக்கின்றனர். பாடலானாலும் வசனமானாலும் கருத்துச் செறிவையே அன்று விரும்பி இருக்கின்றனர்.

தன் மதிப்பீடு: 3

பின்வரும் வினாக்களுக்குக் குறிப்புத்தருக:

1. மரபுவழி மேடை நாடகம் - சிறுகுறிப்பு தருக.
2. சுலோசனா சதி - பெயர்க் காரணம் தருக.
3. சுலோசனா சதி நாடகத்தின் ஆசிரியர் யார்? அதன் தனிச் சிறப்புகள் யாவை?

11.4 மேலை மரபுவழி நாடகம்

முழுதும் மேலைநாட்டு நாடக முறைகளைப் பின்பற்றி எழுந்த நாடகங்களை இவ்வகையில் அடக்கலாம்.

இதுவரை தமிழில் உரையாடல்கள் பெரிதும் பாடல் வடிவிலேயே இருந்தன. பாடல்களே நாடகமாக இருந்தன. பின்னர் பாடல்களில் இடையே ஆங்காங்கு சிறிது வசனம் சேர்க்கப்பட்டது. பிறகு நீண்ட வசனங்களும் பாடல்களுமாக அமைந்ததுண்டு. இந்நிலை முற்றிலும் மாறி உரையாடல்களை முழுவதும் உரைநடையிலேயே அமைத்து நாடகங்கள் எழுதப்பட்டன. இவ்வசன நாடகங்களில் தேவைப்படும் இடங்களில் மட்டும் இசைப்பாடல்கள் அரிதாகக் கையாளப்பட்டன. பிறமொழிச் சொற்கலப்பு மிகுந்தது. நாடகத்தில் பாத்திரங்கள் அதிகமாக இடம் பெற்றனர்.

முதன்முதலில் நாடக உலகில் உரையாடலை உரைநடையில் அமைத்து நாடகம் எழுதத் தொடங்கியவர் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். சென்னையில் சுகுணவிலாச சபை என்ற அமெச்சூர் நாடகக் குழுவினைத் தொடங்கிப் பல சீர்திருத்தங்களை இவர் நாடகத்தில் புகுத்தினார்.

மேலைநாட்டு நாடகமுறையைப் பின்பற்றி, நடுத்தர மக்களுக்கென இவர் பல நாடகங்களை எழுதினார். மனோகரன், சாரங்கதரன், இரு நண்பர்கள், இரு சகோதரிகள், சபாபதி, யயாதி, நற்குலத் தெய்வம் போன்று 80க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதினார். நாடகக் குழுவை நிறுவியதுடன் உயர்பதவி வகித்தவர்களையும் நாடகத்தில் பங்குகொண்டு வேடம் புனைந்து நடிக்கச் செய்தார். இவ்வாறு இதனை ஒரு தொழிலாகக் கருதாது, கலை வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டு, நாடகக் கலைக்கு ஓர் உயர்வைத் தேடித் தந்தார். இதனால் இவர் 'தமிழ் நாடகப் பேராசிரியர்' என்றும் அழைக்கப்பட்டார்.

நகைச்சுவை ஒன்றையே கருவாகக் கொண்டு தொடர்ந்து பல நாடகங்களைத் தமிழில் எழுதி வழிகாட்டியவரும் இவரே. இத்தகைய நாடகங்களில் ஒன்றுதான் சபாபதி நாடகமாகும்.

11.4.1 'சபாபதி' நாடகம்

சபாபதி நாடகத்தைச் சமூக அங்கத நாடகம் (Social satire) என்பர். ஆங்கிலத்தை அரைகுறையாகக் கற்றுச் சமூகத்தில் தன் நிலையை

உயர்த்திக் கொள்ள முயலும் முதலியார் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டது இந்நாடகம். முழுக்க முழுக்க இந்நாடகத்தில் நகைச்சுவைத் தன்மை காணப்படுகிறது; பெரிதும் ஆண்களையே கதைமாந்தர்களாகக் கொண்டது; பெண் பாத்திரங்கள் குறைவு. இதில் கலைநிகழ்ச்சிகள் அதிகம் இல்லை. பெரிதும் உரையாடல் மூலமாகவும், சிறுபான்மை செயல் மூலமாகவும் இந்நாடகம் நகைச்சுவைத் தன்மையைத் தோற்றுவிக்கிறது. இதோ உங்கள் நகைச்சுவைக்கு ஒரு பகுதி:

சபாபதி முதலியார் நாற்காலியின் மீது உட்கார்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார். சபாபதி எதிரில் இருக்கிறான்.

ச.மு. : எல்லாம் பாக் (pack) பண்ணியாச்சா?

ச. : இப்பதான் அல்லாம் வைச்சுகிணு இருக்கிரேம்பா. இதுக்குள்ளே நீ கூப்டையே இண்ணு வந்தேன்.

ச.மு. : எத்தனி நாழிடா பாக் பண்ண? சீக்கிரம் ஆகட்டும், மாமா அவுங்கள்ளெம் வர்ர வேளெ ஆச்சி, வந்தவுடனேயே சாயங்காலம் பொறப்பட்டுப் போவணும் அவங்க வீட்டுக்கு.

ச. : என்னாப்பா விசேஷம்?

ச.மு. : பொங்கல் விருந்துக்கு கூப்பிட வர்ராங்க.

ச. : ஓ! அப்போ சீக்கிரம் பாக் பண்ணிடமாட்டே.

ச.மு. : இந்தா, எல்லாம் பாக் பண்ணியானப்புறம் இந்த கடிதத்தை பக்கத்து தெரு முருகேசம் கிட்ட கொண்டு போயி கொடுத்துட்டு வா.

ச. : என்னா காயிதம்பா இது?

ச.மு. : அடே அதிகப்பிரசங்கி! அதெல்லாம் ஒண்ணும் கேக்கக்கூடாது. இண்ணு சொல்லலே நானு?

சபாபதி முதலியாரின் அரைகுறை ஆங்கில அறிவை விளக்கும் ஒரு பகுதி.

(சபாபதி முதலியார் கலெக்டருடன் பேசுகிறார்)

S.M. : No Your Honour. I must say that once I got a zebra in Arithmetic.

F. : Algebra in Arithmetic. What do you mean?

S.M. : No Algebra. I got what do you call cipher.

F. : You mean Zero.

S.M. : Exactly.

இங்கு 'Zero' என்று கூறவேண்டியதைச் சபாபதி 'Zebra' என்று கூற, கலெக்டர் அதனை 'Algebra' என்று நினைத்து மயங்குகிறார்.

சபாபதி ஒரு வெள்ளித்தட்டில் ஜோட்டை வைத்து எடுத்துக்கொண்டு வருகிறான்.

ச.மு. : வாட் நான்சென்ஸ் (What-nonsense). *என்னடா இது?*

ஜோட்டைத் தட்டிலே வச்சிக் கொண்டாரையே?

ச : நீ தானே அப்பா சொன்னே, எதைக் கொண்டாரச் சொன்னாலும் தட்டிலே வைத்துக் கொண்டாரச் சொன்னே. (முன்பு சபாபதி பாக்கைக் கையில் எடுத்துக்கொண்டு வரும்போது அவனைத் திட்டி என்ன கொண்டு வந்தாலும் தட்டிலே வைத்துக்கொண்டு வரவேண்டும் என்று சொல்லி இருந்தார்.)

இவ்வாறு ஒவ்வொரு காட்சியும் தனித்தனியாக நடிக்குமளவு நகைச்சுவை கொண்டுள்ளது. ஒவ்வொரு பாகமும் மற்ற பாகங்களோடு தொடர்பில்லாது தனித்து நிற்கின்றது. அனைத்துப் பாகத்திலும் சபாபதியே

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

தலைவன். சம்பந்த முதலியார் நாடகங்களில் கதை கட்டுக்கோப்பு, பாத்திரப்படைப்பு, மொழிநடை, கருத்து சிறப்பாக அமைந்திருப்பதுடன் நடிப்பதற்குரிய தகுதியும் ஒருங்கிணைந்து காணப்படுகின்றது. இவரது உரைநடை நாடகங்களை அக்காலப் பத்திரிகைகள் பாராட்டி எழுதியுள்ளன.

தன்மதிப்பீடு : 4

I. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:

1. மேலை மரபு வழி நாடகம்: குறிப்பு வரைக.
2. தமிழ் நாடகப் பேராசிரியர் என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?
3. பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

II. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க:

1. சபாபதி நாடகத்தை .... என்பர்.
2. சம்பந்த முதலியார் சென்னையில் .... என்ற அமெச்சூர் நாடகக் குழுவினைத் தொடங்கிப் பல சீர்த்திருத்தங்களைச் செய்தார்.
3. முதன்முதலில் நாடக உலகில் உரையாடலை .... அமைத்து நாடகம் எழுதத் தொடங்கியவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார்.

11.5 சமூக நாடகம்

தமிழ் மக்களின் சமயப் பற்றும் பழமைப் பிடிப்பும் புராண நாடக வளர்ச்சிக்கு இடம் வகுத்தன. சமூக உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டிச் சமுதாய விழிப்பை ஏற்படுத்திச் சிறப்படையச் செய்யவேண்டும் என்னும் ஆவல் சமூக நாடகங்கள் தோன்றக் காரணமாக இருந்தது என்பர்.

மக்களின் சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் நாடகம் சமூக நாடகமாகும். சமூக நாடகம் பற்றிக் குறிப்பிடுகையில் அறிஞர் பெர்னார்ட்ஷா அவர்களும், இதன் முக்கியப் பண்பு சமகாலத்து வாழ்வை எடுத்துக்காட்டி, மக்களைத் திருத்துவதேயாகும் என்று குறிப்பிடுகிறார். இக்காலத்தில் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளே இலக்கியக் கருவாயின. குண்டூசி முதல் குமரி முனை வரையுள்ள அனைத்துப் பொருள்களும் கவிதைக் கருப்பொருள்களாகக் கருதப்பட்டன; இதுபோல், நாடக உலகிலும் உயர்குடி, தாழ்குடி, நடுநிலை என்று அனைத்துத் தர மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் அப்பட்டமாக அலசிப் பார்க்கப் பட்டது. மக்களின் மூட நம்பிக்கைகளையும் மக்களிடமுள்ள அடுத்துக் கெடுக்கும் செயல்கள், நம்பிக்கைத் துரோகம், கைவிடுதல், ஏமாற்றுதல், வஞ்சனை செய்தல், ஊழல் புரிதல் போன்ற தீயசெயல்களையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்தச் சமூக நாடகங்கள் எண்ணற்றவை தோன்றின. மக்களிடம் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இச்சமூக நாடகங்கள் அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தன. இத்தீய செயல்கள் தவிர கல்வியின் மாண்பு, குலப்பெருமை, மானுடப் பெருமை போன்ற நல்ல கருத்துக்களும் சமூக நாடகங்களில் எடுத்துக்காட்டப் பட்டன.

சுருங்கக்கூறின் சமூக நாடகங்கள் மூலம் சமூகச் சீர்திருத்தத்தைக் காணவே நாடகாசிரியர்கள் விரும்பினர். இத்தகைய நோக்கில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒரு சில நாடகங்களே தோன்றின. 1867-ல் காசி விசுவநாத முதலியாரால் எழுதப்பெற்ற 'டம்பாச்சாரி விலாசம்', தமிழில் தோன்றிய முதல் சமூக நாடகம் எனலாம். வேலைக்காரி, முத்துச்சிப்பி, தாசிப்பெண், இரத்தக் கண்ணீர், அந்தமான் கைதி போன்றன பல சமூக நாடகங்களிலடங்கும்.

உரையாடல்கள்

சமூக நாடகங்கள் யாவும் முழுக்க முழுக்க உரைநடைப் பாங்கினைக் கொண்டு திகழ்கின்றன. நாடகாசிரியர்கள் மேலைநாட்டு நாடகப் பகுப்பு களைப் பின்பற்றி, நல்லதொரு அமைப்புடன் எழுதினர்; இது போன்று மேடையில் அவற்றை அரங்கேற்றும் பொழுதும் அதன் காட்சி, நாடகப் பாத்திரங்கள், ஒப்பனை, பாத்திரத்திற்கேற்ற மொழிநடை முதலியவற்றில் அதிகக் கவனம் செலுத்தினர். நடிக்கும் நடிகர்களைக்கூட நாடகத்தின் பண்பு நலனிற்கேற்பத் தேர்ந்தெடுத்தனர். பிற மொழி நாடகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. புகழ்பெற்ற நாவல்களும் நாடகங்களாக மாற்றி யமைக்கப்பட்டு நடிக்கப்பட்டன.

முன்பிருந்த தொழில் முறை நாடக மன்றங்களோடு பயில்முறை நாடகமன்றங்களும் தோன்றின. சங்கீத நாடக சங்கம் அரசினரால் நிறுவப் பெற்று நாடகக் கலைக்கு நல்லாதரவு தருகிறது. நாடகக்கழகம் ஒன்றும் பணியாற்றி வருகிறது. இன்று பல்வேறு நாடகக் குழுக்கள் தோன்றி மக்கள் மனப்பான்மையினை நன்கு புரிந்து, அதற்கேற்ப மக்கள் விரும்பிப் பார்க்கும் நாடகங்களை நடித்து வருகின்றன.

நாட்டிய நாடகங்களும் இன்று நாடக உலகில் ஒரு புதுப்பாணியை வளர்த்து வருகின்றன. 'நிஜ நாடக இயக்கம்' என்ற குழு மேலை நாடகங் களையும் நாடக முறைகளையும் பின்பற்றிப் புதுப்பாணியில் இசைப்பாடல் ஆடலுடன் கூடிய நாடகங்களை நடித்து வருகின்றது. வானொலி மூலம் முழு நீள நாடகங்களும் ஓரங்க நாடகங்களும் ஒலிபரப்பப்படுகின்றன.

இவ்வாறு அச்சேறியும், அரங்கிலே ஆடப்பட்டும், நாட்டிய நாடகமாகவும், நாடக இயக்கமாகவும் உருவெடுத்து நாடகக் கலை நல்லதொரு வளர்ச்சியை இன்றைய நாளில் அடைந்து வருகிறது.

தன் மதிப்பீடு : 5

சிறு குறிப்பு வரைக :

1. தமிழில் முதன் முதல் தோன்றிய சமூக நாடகம் எது?
2. சமூக நாடகம் பற்றி 'பெர்னாட்ஷா' கூறுவது யாது?
3. சமூக நாடகத்தின் அடிப்படை நோக்கம் என்ன?
4. 'நிஜ நாடக இயக்கம்' - குறிப்பு வரைக.

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அரசினரால் நிறுவப் பெற்ற .... சங்கம் நாடகக் கலைக்கு நல்லாதரவு தருகிறது.
2. .... ஒன்றும் நாடகக் கலைக்கு நற்பணியாற்றி வருகிறது.

11.6 பாடத்தொகுப்புரை

முத்தமிழுள் ஒன்றாகிய நாடகத்தமிழ் இயற்றமிழும் இசைத்தமிழும் கலந்தது ஆகும். தெருக்கூத்து என்ற கூத்து வகையே தமிழ் நாடகம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. சிலம்பிலும் பல கூத்து வகைகள் காணப்படுகின்றன. மற்றும் பலவகை ஆடல்கள் குறித்தும் நாடக அரங்குகள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. ஆதலால் இதை முத்தமிழ்க் காப்பியம் என்றும், நாடகக்காப்பியம் என்றும் கூறுவர். 17-ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுச் செய்திகள் மூலம் நாடகங்களின் பெயர்கள் தெரியவருகின்றன. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் பள்ளு, குறம், குறவஞ்சி, நொண்டி நாடகங்கள், கீர்த்தனை நாடகங்கள் தோன்றின.

இவ்வகை நாடகங்கள் எல்லாம் பெரிதும் (இராகம் தாளத்துடன் கூடிய) இசைப்பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. இடையிடையே சிறுசிறு வசனம் மட்டும் வந்தது.

18 ஆம் நூற்றாண்டில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களால் கவிதை நாடகம் வெளிவந்து ஒருபெரும் மரபைத் தோற்றுவித்தது. பின்னர், பழைய தமிழ் நாடகங்களுக்குப் புத்துயிரும், புதிய வடிவும் கொடுக்கும் பொருட்டுப் பழைய தெருக்கூத்து மரபினைத் தழுவி நாடகங்கள் எழுந்தன. தெருக்கூத்து முறையில் இசைப்பாடல்கள் விரவி வந்த போதிலும் இடையிடையே நீண்ட உரைநடைப் பகுதிகள் இருந்தன. இக்கால கட்டத்தில் நாடகங்கள் நடிப்பதற்கென எழுதப்பட்டன.

மேலைநாட்டார் தாக்கத்தினால் புதிய நாடக முறைகளையும் நாடக அமைப்பினையும் பின்பற்றி நாடகங்கள் தோன்றின. பெரிதும் உரைநடையிலேயே இந்நாடகங்கள் எழுதப்பட்டன. ஆதலால் இவ்வடிவில் எழுந்த நாடகங்கள் உரைநடை நாடகங்கள் என்றே அழைக்கப்பட்டன. படிப்பதற்கு என்றும், நடிப்பதற்கென்றும், இவ்விரண்டிற்குமுரியதாகவும் நாடகங்கள் தோன்றின. பிறமொழி நாடகங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டன. சமூக உணர்வினைத் தூண்டும் வண்ணம் சமூக நாடகங்கள் எழுந்தன. இதனையொட்டி நாடக வகைகள் பெருகின. நாடகக்குழுக்கள் பல தோன்றி நாடகங்களை மக்கள் முன்னிலையில் நடித்து, நாடகக் கலைக்குத் தொண்டு புரிகின்றன. மற்றும் வானொலி, தொலைக்காட்சி மூலம் நாடகங்கள் இடைவிடாது ஒலிபரப்பப்படுகின்றன.

11.7 தொடர்ந்து படிப்பதற்குரிய துணைநூல்கள்

1. **தமிழ் நாடகம் ஓர் ஆய்வு**, டாக்டர் ஏ.என். பெருமாள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.
2. **உலக நாடக இலக்கியம்**, எம்.கே. மணிசாஸ்திரி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1969.
3. **நாடகவியல்**, வீ.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சென்னை, 1956.
4. **நாடகக்கலை**, தி.க. சண்முகம், சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், மீனாட்சி கலா நிலையம், சென்னை, 1956.
5. **பாட்டும் கூத்தும்**, ரா. சுப்பரமணியம், மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1977.
6. **நாடக உலகில் அண்ணா**, கலைஞர், டி.என். சிவதாணு (தொகுத்தவர்), தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், சென்னை, 1970.
7. **நாடகத்தமிழ்**, மா. இராசமாணிக்கனார், சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா மலர், சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை, 1967.
8. **நாடகச் செல்வம்**, நாடகக் கலைக்கழகம், கோவை, சிறப்பு மலர், 1971.

தன்மதிப்பீடு : விடைகள்

I. 1. நடிக்கப் பெறுதலின் நாடகம் என்பர். நாடு + அகம் உள்ளத்தால் ஒன்றி உணர்தல் என்றும் பொருள் கூறுவர். உள்ளத்துணர்ச்சியைப் புலப்படுத்தும் வண்ணம் நடிப்புடன் இயல்வது நாடகமாகும் எனலாம்.

2. வரலாற்று நாடகம், சமூக நாடகம், புராண நாடகம்

3. வால சரித நாடகம்

4. கீர்த்தனை என்ற இசைப்பாடல்களின் தொகுதியானது கீர்த்தனை நாடகம். கீர்த்தனை புகழ்பாடும் இசைப்பாட்டு. சிந்துப் பாடல் வகையின் வளர்ச்சியைத் தமிழ்க் கீர்த்தனைப் பாடல்களில் காணலாம்.

5. விருத்தம், தரு, திபதை என்பன கீர்த்தனை நாடக உறுப்புகள். மேலும் கட்கா, தாண்டகம், நொண்டிச் சிந்து, இலாவணி, கண்ணி, கும்மி துக்கடா, செல், ஆனந்தக்களிப்பு, அகவல் முதலிய பாடல் வகைகளை இந்நாடகத்துள் காணலாம்.

II. 1. இயல், இசை, நாடகம்

2. குறம், குறவஞ்சி

3. 'திருநாளைப் போவார்........ ஆசிரியர்; கோபாலகிருஷ்ண பாரதியார்

4. இசை நாடக வகை

5. வசனம் என்ற அமைப்பு உரைநடையில்

2. 1. செய்யுள் அல்லது கவிதை நடையைக் கொண்டு அமைவது.

2. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

3. அனிச்சஅடி, வேங்கையின் மைந்தன், ஊமைக்குயில்

4. வாணி

5. ஆங்கிலமரபை ஒட்டி அங்கம், களம் என முதன் முதல் பகுக்கப் பட்ட நாடகம் இது.

3. 1. வாய்மொழி மரபான தெருக்கூத்து அடிப்படையில், புராண இதிகாசங்களைப் பெரிதும் கதைக் கருவாகக் கொண்டு, நடிப்பதற் கென்றே எழுதி, இசையுடன் பாடி நடிக்கப்பட்டவற்றை 'மரபு வழி மேடை நாடகம்' எனலாம்.

2. இந்திரஜித்தின் மனைவி சுலோச்சனா தன் கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறுகிறாள். சதி-மனைவி, உடன்கட்டை ஏறும் மனைவி, உடன்கட்டை ஏறுதல். சுலோசனா உடன்கட்டை ஏறிய மனைவி என்ற பொருளில் 'சுலோசனா சதி' எனப் பெயரிடப் பட்டுள்ளது.

3. சங்கரதாஸ் சுவாமிகள், இந் நாடகவகை மிகுதியான பாடல்களைக் கொண்டது. சிறுசிறு வசனப் பகுதி மட்டும் இடையிடையே வரும். பழைய தெருக்கூத்து, கீர்த்தனை, நாடக மரபை இதில் காணலாம். நாடகத்தின் இடையிடையே அறக்கருத்துக்கள், திருமணம் என்பது என்ன - அதன் வகைகள் யாவை என்பன போன்ற செய்திகள் நீண்ட வசனங்களாக இடம் பெறும். தெளிவாக உச்சரித்து, அவற்றை நடிகர்கள் பேசும்போது மக்கள் கேட்டுக் கைதட்டி ஆரவாரிப்பர்.

4.

I 1. மேலைநாட்டு நாடக முறைகளைப் பின்பற்றி, நடுத்தர மக்களுக்கென உரையாடல்களைக் கூட்டி, நாடக மேடையில் அரங்கேற்றப் பட்டவை 'மேலை மரபுவழி நாடகம்' எனத்தக்கனவாகும்.

2. பம்மல் சம்மந்த முதலியார் 'மேலை மரபுகளைப் பின்பற்றி, ஆங்கில வசனம் கலந்த நடுத்தர மக்களுக்காகப் பெரிதும் உரையாடல் வடிவில் எழுதினார். உயர்பதவி வகித்தவர்களையெல்லாம் நாடகத் துறைக்கு இழுத்து நடிக்க வைத்தார். இதை ஒரு தொழிலாகக் கருதாது, கலை வளர்ச்சியே நோக்கமாகக் கொண்டு போற்றியதால் இவர் 'தமிழ் நாடகப் பேராசிரியர் என அழைக்கப்பட்டார்.

3. மனோகரன், சபாபதி, இரு நண்பர்கள்

II. *1.* சமூக அங்கத நாடகம்

2. சுகுண விலாச சபை

3. உரைநடையில்

5.

I. *1.* காசிவிசுவநாத முதலியார் எழுதிய ‘டம்பாச்சாரி விலாசம்’

2. ‘சமூக நாடகம் என்பது சம கால மக்கள் வாழ்வை எடுத்துக்காட்டி, மக்களைத் திருத்துவதேயாகும்’ என பெர்னாட்ஷா கூறியுள்ளார்.

3. இன்று சமூக நாடக அடிப்படை நோக்கம் மக்களிடம் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

4. ‘நிஜ நாடக இயக்கம்’ என்ற குழு மேலை நாடகங்களையும் நாடக முறைகளையும் பின்பற்றிப் புதுப்பாணியில் இசைப்பாடல் ஆடலுடன் கூடிய நாடகங்களை நடித்து வருகிறது.

II *1.* சங்கீத நாடக

2. நாடகக் கழகம்.

ignou
THE PEOPLE'S
UNIVERSITY

பாடப்பகுதி (Unit) 12
மரபுக்கவிதை (Poetry : Traditional Poems)

படிப்பு நோக்கம்

- ★ தமிழில் கவிதை இலக்கியத்திற்குள்ள பெருஞ் செல்வாக்கைக் கோடிட்டு காட்டுவது
- ★ தமிழ்க் கவிதை இலக்கிய வகைகள் பலவற்றை அறிமுகப்படுத்துவது
- ★ கவிதை இலக்கிய வளர்ச்சியை, பல படிநிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை உணரச் செய்வது
- ★ தமிழ்க் கவிதையின் கலைத்தன்மையை, அழகை, சிறப்பைச் சான்றுகள் பலவற்றின் மூலம் விளங்கச் செய்வது

பாடக்கருத்தலகுகள்

12.0 பாட முன்னுரை

12.1 இலக்கியம்

12.1.1 அகப்பாடல்கள் - விளக்கம்

12.1.2 புறப்பாடல்கள் - விளக்கம்

12.2 நீதிக்கவிதைகள் - விளக்கம்

12.2.1 திருக்குறள்

12.2.2 நாலடியார்

12.3 சந்தப்பாக்கள் - விளக்கம்

12.3.1 குற்றாலக்குறவஞ்சி

12.3.2 காவடிச்சிந்து

12.4 பாடத்தொகுப்புரை

12.5 தொடர்ந்து படிப்பதற்குரிய துணை நூல்கள்

Ignou
THE PEOPLE'S
UNIVERSITY

12.0 பாடமுன்னுரை

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.'' (தமிழ்விடுதூது)

என்று கவிஞர்கள் பாராட்டிய சிறப்புடைய தமிழ் பக்திமொழி என்றும் பாராட்டப்படுகின்றது. தமிழ் இலக்கியமோ எண்ணற்ற இலக்கிய வகைகளைத் (Genre) தன்னுள் கொண்டுள்ளது. தமிழ் இலக்கிய வகைகளின் வடிவத்தினை (Form) உற்று நோக்கினால் அது பெரிதும் கவிதை வடிவாகவே இருப்பதைக் காணலாம்.

தான் அனுபவித்த ஓர் உணர்ச்சியை அப்படியே பிறரும் அனுபவிக்கும்படி செய்யத் தூண்டும் மனவெளிபாடே கவிதை.

'கவிதை'க்கலை பார்த்ததை படம் பிடிக்கும். அறிவியல் அறிஞனுக்குக் காக்கை ஒரு பறவை; கடல் நீர் ஒரு நீர்நிலை; மணல் ஒரு மண் மேடு. ஆனால் உள்ளொளி பெற்ற கவிஞனுக்கோ பறவைகள் கூட உறவினர்கள், உடன்பிறந்தவர்கள்.

''காக்கை குருவி எங்கள்சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்''

இக்கவிதையில் பாரதியார் பறவையிடம் உறவு கொண்டாடி உள்ளம் மகிழ்வதைப் பாருங்கள். அவர் உணர்ந்த உறவு கவிதை மொழி வழி நமக்கும் சொந்தமாகிறதல்லவா?

''வஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்'.

என்று, கம்பரின் கவிதை சூர்ப்பணகை உருமாறிவரும் அழகிய தோற்றத்தை அழகு தமிழில் அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறது. வஞ்சி, நஞ்சம், வஞ்சம், அஞ்சொல் என்று வரும் எதுகை நயம் மிக்க சந்த அமைப்பினாலேயே இக்கவிதை சிறந்து நிற்கிறது. எழுத்துக்கள் இயைந்து வரும் இச்சந்த அமைப்பிற்குத்தான் தொடை இலக்கணம் இன்றியமையாமை நல்கியுள்ளது.

இத்தகைய கவிதைப் பண்பு தமிழுக்கு மிகச் சிறப்பாக – அழுத்தமாக அமைந்துள்ளது. உரைநடை வளர்ச்சி தமிழில் மிகப் பிற்காலத்தது. சங்ககாலம் தொட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை எல்லாத் துறைகளிலும் கவிதையே ஆட்சி செய்து வந்துள்ளது. அவற்றைப் பற்றி ஒரு சிறிதேனும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்பன தமிழ் இலக்கண பாக்களாகும். தாழிசை, துறை, விருத்தம் போன்றன அப்பாக்களின் இனங்களாகும். இப்பாக்கள், பா இனங்கள் ஆகிய இவற்றில் கூறப்பட்ட இலக்கணத்திற்குட்பட்டுத் திகழும் பாக்கள் மரபுக் கவிதைகள் என்ற வரிசையிலும் அடங்கும். இவ்வாறு தோன்றியவற்றுள் தமிழ்க்கவிதை வகைகளான சங்க இலக்கியம் (தன்னுணர்ச்சிப் பாக்கள்), நீதிப்பாடல்கள், பக்திப் பாசுரங்கள், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், சந்தப்பாக்கள் என்பன பலவும் அடங்கும்.

12.1 சங்க இலக்கியம்

முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த சங்க காலத்தில் தோன்றிய கவிதைகள் சங்கக் கவிதைகள் என்றழைக்கப்பட்டன. சங்கக் காலக் கவிதைகள் சங்கச் சமுதாயத்தை, இயற்கையோடு இயைந்து மக்கள் வாழ்ந்த வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. சங்கச் சான்றோர் தம் செய்யுளுக்குப் பொருளாக மக்கள் வாழ்வினை அமைத்த போது அகத்திணை, புறத்திணை என்று வகுக்கலாயினர்.

12.1.1 அகப்பாடல்கள் – விளக்கம்

'அகம்' என்பது உள்ளம்; காதல் ஒழுக்கம். அகப்பாடல் உள்ளத்து எழுந்த காதல் உணர்வினைப் புலப்படுத்துவது. காதல் வாழ்வினைச் சித்தரிப்பது; அக இன்பத்தினை எடுத்து இயம்புவது. தலைவனும் தலைவியும் சந்தித்த பொழுது உணர்ந்த இன்பத்தினைச் சொல்வது. வீட்டு வாழ்வினை வெளிப்படுத்துவது. ஒருவர் அனுபவித்த உள்ளத்து உணர்வினைச் சித்தரிப்பதால் இவை தன்னுணர்ச்சிப் பாக்கள் (Lyric Songs) எனவும் அழைக்கப்படுகின்றன.

அமைப்பு

அகப்பாட்டுக்கள் அனைத்தும் ஒருவரை முன்னிலைப்படுத்தித் தன் கருத்தை எடுத்துரைப்பனபோல் காணப்படும். கூற்று முறையில் அமைந்திருக்கும். ஆதலால் இப்பாக்கள் நாடக முன்னிலைப்பாக்கள் (Dramatic Monologues) என்றழைக்கப்படுகின்றன.

அகப்பாக்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காட்சியினைச் சித்தரிக்கும் கவிதையில் ஒருவரது பெயர் குறிப்பிடப்படாது. தலைவன் தலைவி தோழி தாய் என்ற பொதுப் பெயர்களாலேயே சுட்டப்படும். இதனால் இது கூறும் உணர்வுகள் அனுபவங்கள் எல்லாம் மக்கள் அனைவருக்கும் உரியன போல் தோன்றும்படி ஒரு பொதுமையுணர்வினை (Universal experience) நல்கும்.

குறிஞ்சித் திணையில் ஒரு பாடல். ஒரு தலைவி தலைவன் தன் மீது வைத்துள்ள மாறா அன்பினைப் பின்வருமாறு நீள நினைத்துப் பேசுகிறாள்.

முதலில் தலைவனின் அன்பைப் பெரிது என்று கூற நினைக்கிறாள். இவ்வுலகில் நிலம் தானே பரந்துபட்டது என்று நினைத்தவுடன், தலைவனின் அன்போ நிலத்தை விடப் பெரியது என்கிறாள். பிறகுதான் நினைவிற்கு வருகிறது பரந்தது மட்டுமன்று; அன்பு உயர்ந்ததல்லவா? ஆதலால் வானிலும் உயர்ந்தது என்கிறாள். அப்பொழுதும் அவ்வன்பு நிறை நெஞ்சம் அன்பின் மென்மையால் அமைதியுறாது, அன்பு ஆழமானது என்றெண்ணவே கடலின் ஆழத்தை விட அளத்தற்கரிய ஆழமானது என்கிறாள்.

குறிஞ்சி

''நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்ததன்று
நீரினும் ஆர் அளவின்றே - சாரற்
கருங் கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே'' - (குறுந். 3)

(தலை மகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டி, தோழி இயற்பழித்தவழி, தலைமகள் இயற்பட மொழிந்தது.)

ஆசிரியர் : தேவகுலத்தார்

மிகச்சிறிய குறிஞ்சிப்பூவைக் கொண்டு, மிகப்பெரிய மலைத் தேனடையைத் தேனீக்கள் உருவாக்குகின்றன. மானிடம் செய்யும் காதலும் பல பரிமாணங்களை உடையதாய் நிகரற்று விளங்குவதை இப்பாடல் விளக்குகிறது.

தலைவன் பிரிந்து சென்று விடுகிறான். கார் காலத்தில் அவன் திரும்பி வந்து விடுவான் என்று தலைவி ஆற்றி இருக்கிறாள். தலைவன் சொன்ன கார் காலமும் வந்தது. ஆனால் தலைவனோ வரவில்லை. தலைவன் இப்பொழுது வந்து விடுவான்; இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுவான் என்று எண்ணி எண்ணி எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். ஒரு நாள் மாலை மழையும் பொழிந்திருக்கிறது. ஆதலால் முல்லை மலர்கள் பூத்துக் காட்சி யளிக்கின்றன. அதைச் சூடிக்கொள்ள ஆசை. ஆனால் தலைவன் இல்லாது சூடி மகிழ்வுடன் இருக்க மனம் வரவில்லை. தலைவனை நினைத்து வருந்திய மனம், தான் தலைவன் வருகையை எதிர்பார்த்து ஏமாந்து இருப்பதைப் பார்த்துத்தான் இம்முல்லை மலர்கள் நகைக்கின்றனவோ என எண்ணுகிறது. உடனே பொய்க்கோபத்துடன் தோழியைப் பார்த்துக் கூறுகிறாள்.

முல்லை

''இளமை பாரார் வளம் நசைஇச் சென்றோர்
இவணும் வாரார்; எவணரோ?'' என
பெயல் புறந்தந்த பூங் கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கு எயிறு ஆக
நகுமே - தோழி; நறுந்தண் காரே'' *(குறுந். 126)*

(பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது)

ஆசிரியர் : ஒக்கூர் மாசாத்தியார்

என்பது அப்பாட்டு

பாரடி! கார்காலம் வந்து விட்டது. ஆனால் தலைவன் வரவில்லை. நான் இவ்வாறு வருந்தி இருக்க, இம்முல்லைக்கொடி இன்னும் உன் தலைவன் வரவில்லையா என்று தன் முல்லைப் பற்களைக் காட்டிச் சிரிக்கின்றது என்று வருந்துகிறாள். இப்பாட்டு முல்லை நிலச்சூழலையும், முல்லைத்திணைக்குரிய ஆற்றி இருத்தலையும் சுட்டுகிறது.

தன்மதிப்பீடு : 1

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரண்டு வரிகளில் விடை எழுதுக.

1. மரபுக்கவிதைகள் என்றால் என்ன?
2. அதன் வகைகள் யாவை?
3. அகக்கவிதை என்றால் என்ன?

12.1.2 புறப்பாடல்கள் – விளக்கம்

போர், வீரம், கொடை, அளி, செங்கோல் கூறும் பாடல் புறப் பாடலாகும். பெரிதும் நாட்டு வாழ்வினை, வெளியுலக நடப்பினைக் கூறும் புறப்பாடல்களில் போர் தவிர, அறம், பொருள், வீடுபேறு பற்றியும் செய்திகள் விளம்பப்படும்.

போர் ஒழுக்கமானது வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்று ஏழு திணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. போர் தொடுக்கும்பொழுது குறிப்பிட்ட போருக்கு ஒரு குறிப்பிட்ட பூவைச் சூடிச் செல்வர். அவ்வப்பூக்களின் பெயர்களால் மேற்குறிப்பிட்ட வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்றும் திணைகள் அழைக்கப்படுகின்றன. வாகை

வெற்றியையும், காஞ்சி நிலையாமையையும், பாடாண் புகழ்பாடுதலையும் குறித்தன. பிறகு இவை பனிரெண்டு திணைகள் என வளர்ந்து வகைப்படுத்தப்பட்டன.

அமைப்பு

ஒவ்வொரு பாடலும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைச் சொல்லும். யார், யார் மீது பாடியது; எந்த இடம்; என்ன காரணம்; அதன் விளைவு முதலியன வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கும். பாடப்பட்ட அரசனின் பெயர் பற்றிய குறிப்பும் காணப்படும். பெரிதும் ஒவ்வொரு பாடலும், புலவனின் நேரடிக் கூற்றாகக் காணப்படும்; பாடலுடன் திணை, துறைக் குறிப்பு இடம் பெறும். குறிப்பிட்ட வரலாற்று நிகழ்ச்சி போல் ஒவ்வொரு பாடலும் அது பாடப்பட்ட காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மாறாது எடுத்துரைக்கும்.

புலவர்கள் - புரவலர்கள் தொடர்பைப் புறநானூற்றுப் பாடல்கள் நன்கு விளக்குகின்றன. சங்ககாலத்தில் புலவர்களை அரசர்கள் மதித்துப் போற்றியுள்ளனர். புலவர்கள் மன்னர்களுக்கு மந்திரிகளாக, தூதுவர்களாக; அறிவுறுத்தும் அறிஞர்களாக, தகைசால் நண்பர்களாக விளங்கியுள்ளனர். மன்னர்களும் புலவர்களும் தம்மைப் பாடுவதைப் பெருமையாகக் கருதினர். பல பாட்டுக்கள் உலக நிலையாமையை எடுத்து உரைக்கின்றன; மறத்திலும் அறம் கடைப்பிடிக்கும் பாங்கினைக் கூறுகின்றன. இங்ஙனம் புறப்பாடல்கள் எண்ணற்ற செய்திகளை எடுத்தியம்புகின்றன. அவற்றில் ஒரு சில இங்கு காண்போம்.

ஔவையுண்ட நெல்லிக்கனியும் அவர் வாழ்த்தும்

அதியமான் குறுநில மன்னன். போரில் வெற்றிகள் பல பெற்றவன். இவனுடைய நட்புக்குப் பாத்திரமான ஔவையார் சிறந்த பெண்பாற் புலவர். அதியமானிடம் பற்றும் பாசமும் கொண்டவர். அதியமானுக்கு ஒருநாள் கிடைத்தற்கரிய நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது. அதை உண்டவர் நெடுநாள் வாழ்வர் என்று அவன் அறிவான். ஆனால் அதைத் தான் உண்ணாது, ஔவையாரிடம் கொண்ட நட்பின் மிகுதியால், அக்கனியை ஔவையாருக்கு அளித்தான். பிறகு அக்கனியின் அருமை ஔவைக்குத் தெரிய வந்தது. உடனே நெஞ்சம் நிறைய வாழ்த்தி ஔவையார் ஒரு பாட்டும் பாடினார்.

''வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின், அதியர் கோமான்
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே.'' (புறம். 91)

''மலைச்சரிவிலே கடுமுயற்சியுடன் பெற்ற நெல்லியின் கனியிது. அதனைப் பெறுதற்கு, அரிது என்றும் கருதாது, அதனால் விளையும் பேற்றினையும் கூறாது நின்னுள்ளத்திலேயே அடக்கிக் கொண்டு, எம் சாதல் ஒழிய எமக்கு அளித்தனையே! நீ, பிறையணிந்த நீலமணி மிடற்று இறைவனைப்போல் நிலைபெற்று வாழ்வாயாக!'' என்று வாழ்த்துகின்றார். நெல்லிக்கனி உண்ட ஔவையார் நெடுநாள் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இவ்வாழ்த்துப் பாடலால், வாழ்ந்த காலத்தையும் விஞ்சி அஞ்சியின் புகழ் நிலைபெற்றுவிட்டது என்னவோ உண்மை!

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு

புறப்பாடலில் கோப்பெருஞ்சோழன் என்ற அரசனும் பிசிராந்தையார் என்ற புலவரும் கொண்டிருந்த நட்பு சிறப்பாகப் பேசப்படுகிறது. இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் பாராது செவியளவில் கேள்விப்பட்டு உள்ளார்ந்த நட்புக் கொண்டவர்கள்.

மானம் கருதியும், புறப்புண் நாணியும், துறவுபூண்டும் இதுபோன்ற பல காரணங்களால் அன்று வடக்கிருப்பர். வடக்கிருத்தலாவது, ஊர்ப்புறத்தே தனியிடம் கண்டு, அறமுறைக்கும் சான்றோர் புடைசூழப் புல்லைப் பரப்பி, அதன் மீதிருந்து உண்ணா நோன்பு மேற்கொண்டு, அறம் கூறும் தவம் செய்து உயிர்விடுதலாகும்.

தன் மக்கள் செயலால் மானம் பொறாத கோப்பெருஞ்சோழன் துறவுபூண்டு உயிர்துறந்து புகழ்நிறுவக் கருதி வடக்கிருந்தான். தான் வடக்கிருத்தலைக் கேட்டவுடன் பிசிராந்தையார் அங்கு வருவார்; இருவரும் சந்தித்து உரையாடலாம் எனச் சோழன் எண்ணினான். சந்திக்காமலே பல ஆண்டுகளாக உள்ளம் கலந்து உறவாடி வருபவர்கள் அவர்கள். எனவே சோழன் தன் உடனிருந்தவர்களிடம், ''அவர் என் உள்ளம் கலந்தவர்; அவர்தம் பெயரையும் மறந்து என் பெயரையே தம் பெயராகச் 'சோழன்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பேரன்பு கொண்டவர். ஆதலால் எங்கள் நட்பில் ஐயம் கொள்ளாது, அவருக்கும் என் அருகில், என்னுடன் வடக்கிருக்க இடம் ஒதுக்கி வையுங்கள்'', என்கிறான். தான் சாகும் நேரத்தில், தன் ஆருயிர் நண்பர் தன்னைத் தேடிவந்து சேர்வார் என்ற நம்பிக்கையில் சோழன் இவ்வாறு கூறுகின்றான்.

''கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமையர் ஆயினும்
அரிதே, தோன்றல்! அதற்பட ஒழுகல் என்று
ஐயம் கொள்ளன்மின். ஆரறிவாறீர்!
இகழ்விலன்; இனியன், யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய் வேண்டலனே;
தன்பெயர் கிளக்கும் காலை, என் பெயர்
பேதைச் சோழன் என்னும், சிறந்த
காதற் கிழமையும் உடையவன், அதன் தலை
இன்னதோர் காலை நில்லலன்;
இன்னே வருகுவன்; ஒழிக்க, அவற்கு இடமே!''

குறிப்பு : வடக்கிருந்த சோழன் பிசிராந்தையாருக்கும் தன்னருகே இடம் ஒழிக்க என்று கூறிய செய்யுள் இது.

''கேட்ட அளவே அல்லாமல் கண்டுபழகிய நட்புரிமையுடையவர் அல்லர் என ஐயப்படாதீர்கள்! ஒட்டிய நண்பினனாகிய பிசிராந்தையார் காதற்கேண்மை உடையவர். நிச்சயம் வருவர்; அவருக்கு இடம் ஒதுக்கி வைத்திடுக!'' என்பது கருத்து.

முன்னர் உள்ள பாடலில் நட்பிற்காக அரிய பொருளைக் கொடுத்தான் ஓர் அரசன். இப்பாடலில் நட்பின் பொருட்டு ஒரு புலவன் தன் உயிரினையே கொடுக்க முன்வந்த செய்தியை அறியமுடிகிறது. இவ்வாறு புரவலரும் புலவரும் கொண்ட கெழுதகை நட்பு போற்றற்குரியதாகப் புறப்பாடல்களில் திகழ்கிறது.

"Two things greater than all things are
one is love; and other is War"

ignou THE PEOPLE'S UNIVERSITY

என்று கிரேக்கப் பெருங்கவிஞர் ஹோமர் செவ்வியல் இலக்கியங்கள் (Classical Literature) குறித்துச் சொல்லியுள்ளார். இக்கூற்று, தமிழ்ச் சங்க இலக்கியத்திற்கு மிகவும் பொருந்திவருகிறது.

தன்மதிப்பீடு : 2

அ. பொருத்திக்காட்டுக

1. போர், வீரம் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறும் பாடல்	கோப்பெருஞ்சோழன்
2. வெட்சி, வாகை	புறப்பாடல்
3. வடக்கிருந்து உயிர்நீத்த மன்னன்	திணை வகை.

ஆ. பின்வரும் வினாக்களுக்குச் சிறுகுறிப்பு வரைக.

1. புறம் சார்ந்த ஏழு திணைகளைக் குறிப்பிடுக?
2. பெரும்பாலான புறப்பாடல்கள் யாருடைய கூற்றாகக் காணப்படும்?
3. வடக்கிருத்தல் என்றால் என்ன?
4. கோப்பெருஞ்சோழனின் உயிர் நண்பர் யார்? அவர் சிறப்பு யாது?

12.2 நீதிக் கவிதைகள் – விளக்கம்

தொடக்க காலத்தில் காதல், வீரம் முதலிய உணர்ச்சிகளையும், இன்பத்தையும் பாடுவதில் ஈடுபட்டிருந்த புலவர்களின் உள்ளம் அதற்கடுத்த காலப்பகுதியில் நீதிகளைப் பாடும் நிலைக்கு மாறியது. எனவே தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்தை அடுத்த காலம் நீதிநூற்காலம் என்று அழைக்கப்படுகிறது.

நீதி நூற்காலத்தில் தோன்றிய நூல்கள் பல பதிணென்கீழ்க்கணக்கு என்ற பிரிவில் அடங்கியுள்ளன. இப்பதினெட்டில் அகநூல்கள் ஆறு; புறம் பற்றியது ஒன்று; நீதிநூல்கள் பதினொன்று.

	நீதிநூல்கள்
1. நாலடியார்	- சைன முனிவர்கள்
2. நான்மணிக்கடிகை	- நாகனார்
3. இன்னாநாற்பது	- கபிலர்
4. இனியவை நாற்பது	- மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்
5. திரிகடுகம்	- நல்லாதனார்
6. ஏலாதி	- கணிமேதாவியார்
7. முதுமொழிக்காஞ்சி	- மதுரைக்கூடலூர்கிழார்
8. முப்பால் (திருக்குறள்)	- திருவள்ளுவர்
9. ஆசாரக்கோவை	- பெருவாயின் முள்ளியார்
10. பழமொழி	- முன்துறையரையனார்
11. சிறுபஞ்சமூலம்	- காரியாசான்.

இந்நீதி நூல்கள் ஒவ்வொன்றும் தனித்தனி அமைப்புடையன. இவற்றுள் தலையாயது திருக்குறளாகும். இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் இவற்றைப் பின்பற்றிப் பல நீதிநூல்கள் தோன்றின.

12.2.1 திருக்குறள்

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும் உடையது. அதிகாரத்திற்குப் பத்துப் பத்துப் பாக்களாக மொத்தம் 1330 குறட்பாக்களைக் கொண்டது.

கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கு அதிகாரங்களும் இந்நூலுக்குப் பாயிரங்களாக விளங்குகின்றன. அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்று மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது; 38 அதிகாரங்களைக் கொண்டது.

பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என 7 இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. 70 அதிகாரங்களைக் கொண்டது.

காமத்துப்பால் களவியல், கற்பியல் என்ற இரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. பண்டைத் தமிழரின் காதல் வாழ்வு கற்பனை நயமும், கலைநுட்பமும் திகழ அழகாக 25 அதிகாரங்களில் படைக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் மேலை, கீழை நாட்டைச் சார்ந்த 40-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இலத்தீன் மொழியில் வீரமாமுனிவரும் ஜெர்மன் மொழியில் டாக்டர் கிராஸ் என்பவரும், ஆங்கிலத்தில் போப் ஐயரும் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளனர். தமிழில் இந்நூலுக்கு முன்னதாகப் பதின்மர் உரையெழுதி உள்ளனர். இவற்றுள் பரிமேலழகருரை சிறந்ததாகக் கருதப்படுகிறது.

வள்ளுவர் அறக்கருத்துக்களைச் சொல்லும்பொழுதே, அதைக் கற்பவர் ஏற்கும் படியும் பதியும் படியும் அதேநேரம் எளிமையாகவும் அழுத்தமுடனும் எடுத்துரைக்கிறார்.

கல்வி

'கல்வி' என்ற அதிகாரத்தில் வள்ளுவர், கல்வி குறித்துக் கூறும் கருத்துக்களைக் காண்போம்.

''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.''

அதாவது, ஒருவன் கற்க வேண்டும். அதை எப்படிக் கற்க வேண்டும்? குற்றமற ஐயம் திரிபின்றிக் கற்கவேண்டும். இப்படிக் கற்றால் மட்டும் போதாது; அதனுடைய பயனாகக் கற்றபடி நிற்கவேண்டும்; அதாவது கற்ற கல்வியின்படி வாழ்க்கையிலும் நடக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு முதல் குறளிலேயே கல்வியை எப்படிக் கற்க வேண்டும்; எப்படி நடக்க வேண்டும் என்று பொதுவாகக் கூறிவிட்டுப் பின்னர் வரும் குறள்களில் அதன் சிறப்பு, புகழ், கற்றதனால் ஏற்படும் பயன், கற்றவர் தன்மை முதலியவற்றை வரிசைப்படுத்தித் திறம்பட உரைக்கிறார்.

''எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.''

என்றும்,

''கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர்.''

என்றும் கூறுகிறார். கல்வியில்லாதார்க்குக் கண்களிருந்தாலும் அவை பயனின்றிக் குழிகளாக இருத்தலால், அவற்றைப் புண்கள் என்கிறார்.

யாருடன் பேசினாலும் அவர் மனம் உவக்குமாறு மகிழ்வுடன் பேச வேண்டும்; பழக வேண்டும். அதுமட்டுமன்று; அவ்வாறு பழகியவர் மீண்டும் மீண்டும் நாம் அவருடன் எப்பொழுது பேசுவோம் என்று நீள நினையும்படி அறிவுத்திறம்பட மகிழ்வுடன் அளாவுதல் வேண்டும்.

''உவப்பத் தலைக்கூடி உள்ளம் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்''

என்கிறார். இதுமட்டும் போதாது. செல்வர் முன் ஏழை எப்படிப் பணிவுடன் உடல்நெளிய நிற்கிறானோ அதுபோலக் கற்பவரும் தம் ஆசிரியர் முன் மிகவும் பணிவுடன் நின்று, அறிவகந்தை இன்றிக் கற்க வேண்டும்; இப்படிக் கற்பவரே கற்றவராவார். பணிவாகிய நிலைக்கு நாணிக் கல்லாதவர் என்றும் இழிந்தவர் ஆவார்.

''உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.''

மணலின்கண் தோண்டும் அளவிற்கேற்ப நீர் ஊறும். அதுபோல கற்கும் அளவிற்கேற்பத்தான் அறிவு பெருகும்.

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் தறிவு''

அறிவு வளர என்றென்றும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.''

என்ற குறளில் கற்றவனுக்குத் தன் நாடும் தன் ஊரும் மட்டுமின்றி, எந்த ஊரும் எந்த நாடும் சொந்தமாகும் என்கிறார். இத்தகு திறத்தினை நல்குங் கல்வியை ஒருவன் கற்காமல் இருந்து என்ன பயன் என்பது அவர் வினா. கல்வியின் பெருமையையும் பயனையும் கண்டு,

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.''

என்கிறார். ஏழு பிறவியிலும் பயன்தரும் கல்வியை ஒருவன் மறவாது கற்க வேண்டும் என்று இக்குறளின்வழி அவர் எடுத்துரைக்கின்றார்.

''தாமின்புறுவது உலகுஇன் புறக் கண்டு
காமுறுவர் கற்ற றிந்தார்.''

கல்வி கற்பவரையும் இன்புறுத்தி, அதனால் அவரைச் சுற்றி இருக்கும் உலகத்தையும் இன்புறுத்தும் பாங்குடையது என்கிறார் திருவள்ளுவர்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பதுபோல, ஒருவனுக்குப் பொன்னும், மணியும், பணமும் மட்டும் சிறந்த செல்வமல்ல; இவையெல்லாம் அழிந்துபடும். ஆனால் அழிக்க முடியாத செல்வம் கல்விச் செல்வமேயாகும் என்பதை

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை''

என்ற குறளில் தெளிவுபடுத்துகிறார்.

இவ்வாறு கல்வி என்றால் என்ன? கல்வி நமக்குக் கண் போன்றது. கண் போன்ற கல்வியை அதன் சிறப்புணர்ந்து தெளிவாகக் கற்கவேண்டும்; கற்றால் மட்டும் போதாது, அதன்படி நடக்கவும் வேண்டும். கல்வியை மேன்மேலும் ஆர்வத்துடன் விரும்பிக் கற்றால்தான் அறிவு வளரும். இத்தகு கல்வியினால் பிறப்புத்தோறும் சிறப்படைவதுடன் சென்ற இடமெல்லாம் சீர் பெருகும். சிறப்புடைக் கல்வியை ஆசான் முன் அடக்கத்துடன் ஆணவ மின்றிக் கற்கவேண்டும். அப்பொழுதுதான் பயன்நல்கும். உலகிலுள்ள செல்வங்கள் அனைத்தும் அழியக் கூடியவை. ஆனால் கற்ற கல்வியானது என்றென்றும் அழியாத்தன்மை உடையது என்று கல்வியின் தன்மையை அழகுற வரிசைப்படுத்தி மனங்கொள்ளுமாறு திருக்குறள் எடுத்துரைக்கிறது.

12.2.2 நாலடியார்

திருக்குறளுக்கு அடுத்து நீதி நூல்களுள் நாலடியார் குறிப்பிடத்தக்கது.

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி''

என்ற பழமொழியில் 'நாலு' என்று நாலடியாரையும் 'இரண்டு' என்று திருக்குறளையும் ஒப்பவைத்துப் பேசுவதைக் காணலாம்.

இதற்குப் 'பதுமனார்' உரையெழுதி உள்ளார். இந்நூலும் திருக்குறள் போல அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டு திகழ்கிறது. ஜி.யு. போப் இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

நிலையாமை முதலியவற்றை அழகிய சொல்லோவியங்களால் இலக்கியச் சுவையுடன் எடுத்துணர்த்தும் பாங்கு இந்நூலின் சிறப்புத் தன்மையாகும். நிலையாமையை வற்புறுத்தும் ஒரு பாட்டு.

''அறுசுவை யுண்டி யமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறியராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனில் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற் றன்று.'' (நாலடி - 1)

என்பது அப்பாடலாகும். அதாவது அறுசுவையுடன் கூடிய உணவை இல்லாள் உடனமர்ந்து ஊட்டுகிறாள்; கணவனோ போதும் போதும் என்று தடுக்கின்றான். அவளோ இன்னும் இன்னும் என்று சொல்லிப் பரிவோடு உண்ணச் செய்கிறாள். இவ்வாறு வாழ்ந்த செல்வரும் பிறிதொரு காலத்தில், ஏழைகளாய் மாறி, ஓரிடத்திற்குத் தேடிச்சென்று கூழ் கிடைத்தாலே போதுமென்று இரந்துண்ண நேரலாம். ஆதலால் செல்வம் ஒரு நிலையான பொருளாகக் கருதத் தக்கதாகாது என்று இப்பாடல் நிலையாமையை மிகத்தெளிவாக எடுத்தியம்புகிறது.

தன்மதிப்பீடு : 3

1. நீதிக் கவிதைகள் என்றால் என்ன?
2. பதினெண்கீழ்க்கணக்கில் நீதிநூல்கள் எத்தனை உள?
3. திருக்குறள் எத்தனை பெரும்பிரிவுகளாகக் கொண்டது? அதில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

12.3 சந்தப் பாக்கள் - விளக்கம்

தமிழிலுள்ள கவிதை இலக்கிய வகைகள் எண்ணற்றன. தமிழ் ஒரு செய்யுள் மொழியாகவே வளர்ந்துவிட்டது. இன்றுதான் அதனை உரைநடை மொழியாக வளர்க்க மிகவும் முயல்கின்றோம். கவிதை வகைகளுள் சந்த இசைப்பாடல்கள் குறிப்பிடற்பாலன. வரிப்பாடல், பரிபாடல், கலிப்பாடல் எல்லாம் இசை இனிமை மிக்க சந்தப் பாடல்களின் முன்னோடிகளாகும். அருணகிரிநாதரின் திருப்புகழ் இச் சந்த வடிவத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நிலையைக் காட்டுகிறது. பிற்காலத்தில் பள்ளு, குறம், குறவஞ்சி, சிந்துப் பாடல்களில் இச் சந்த இசை துள்ளி விளையாடியது. இவற்றுக்கு ஓரிரு சான்றுகளேனும் கண்டால்தான் தமிழ்க்கவிதையின் சிறப்பியல்பை ஓரளவேனும் உணர்தல் கூடும்.

12.3.1. குற்றாலக் குறவஞ்சி

முதற்கண் திருக்குற்றாலக் குறவஞ்சியிலிருந்து ஒரு பாடலைப் பார்க்கலாம். குற்றாலநாதர் மீது காதல் கொண்டு, அவரை அடையத்

துடிக்கும் தலைவியிடம் குறமகள் ஒருத்திவந்து குறி கூறுவதாகப் புனையும் இதில், இசையும் மெய்ப்பாடும் இணைந்த பாடல்கள் மிகுதி. அதனால் இதை இசை நாட்டியமாக இன்றும் ஆடிப்பாடுகின்றனர்.

குறத்தி குறி கூறுவதற்கு முன்னால் வசந்தவல்லியிடம் தன் மலைநாட்டு வளங்களை விவரிக்கின்றாள். ''உன் சொந்தமலை எந்த மலை? அந்த மலை வளம் சொல்'' என்று வசந்தவல்லி கேட்டதற்கு, விடையாக வருகிறது பாடல்:

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து, வானவரை அழைப்பர்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே
முழங்குதிரைப் புனலருவி கழங்கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் செண்பக வாசம்வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவின் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே.

இப்பாடலில் இயற்கைப் புனைவு உயர்ந்து காணப்படுகிறது. குற்றாலத்துக்குப் போனவர்களே குரங்கின் மகிமையை அறிவார். எடுத்தவுடன் மந்தியுடன் கொஞ்சும் வானரத்தைக் காட்டுவதால் நாம் குற்றாலத்துக்கே போய்விடு கிறோம். எவ்வளவு உயரமான மலை... அதனால் கானவர்கள் விழியை வீசி வானவர்களைக் கீழே வருமாறு அழைக்கிறார்களாம். சித்தர் கூட்டம் வருதல், தேனருவி இசைபாடுதல் எல்லாம் அழகுதான். கதிரவனின் தேரும் குதிரையும் வழுக்குகிறதாம் - ஆம் சூரியவெப்பம் குறைவதையல்லவா இது நயப்படுத்திக் கூறுகிறது! வேணியாகிய சடையையுடைய குற்றாலநாதரின் தோற்றமும் மலையின் தோற்றமும் ஒன்றுபோலவே உள்ளன! அடுத்த பாடல் மலைக்குற மக்களின் வாழ்வைப் படம் பிடிக்கிறது. யானைக் கொம்பால் தினை இடிப்பவர்கள் சாதாரணமா? அவர்கள் வசிக்கும் இடமும் சிறப்பு; அவர்கள் வாழ்வோ மிகுந்த சிறப்பு எனுமாறு பாடல் அமைந்துள்ளது. இயைபுத்தொடை என்பது இறுதி அசை, சீர், சொல் முதலியன அடி எதுகை நயம்பட இணைந்து வருவதாகும்.

கொஞ்சும் கெஞ்சும், அழைப்பார் விளைப்பார், நடிப்போம் இடிப்போம், ஒழுகும் வழுகும் என்று இவ்வாறே சொல்லிப் பாருங்கள். இத்தகைய பாடல்களைப் படிக்கப் படிக்க, எதுகை மோனை நயமும் இயைபுத்தொடை அழகும் உங்களுக்கும் கைவந்த கலையாகும்.

12.3.2 காவடிச் சிந்து

அண்ணாமலை ரெட்டியார் கழுகுமலையில் அமர்ந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி பேரில் பாடிய காவடிச்சிந்து, பலமுறை படித்தோமானால் ஒருவித இசைச்சந்தத்தை நமக்குப் பழக்கமாக்கிவிடும். பாரதியார் இக்காவடிச்சிந்தைத் தம் இளமையில் பாடிப்பாடி மகிழ்ந்தார் என்பார்கள்.

மலைக்குறவள்ளி மீது காதல் கொண்ட மாமயில் முருகன், அவள்பால் சென்று தன் வருத்தம் சாற்றுவதாக ஒரு பாடல் வருகிறது. அதில் வரும் மோனை எதுகை நயத்தைக் சுவனியுங்கள்.

வன்னத்தினைமாவைத் தெள்ளியே உண்ணும்
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே உயிர்
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே இரு
வடமேருவை நிகராகிய புயமீதணி பலமாமணி
மாலை படீரெனத் துள்ளியே விழ
வான்மதி வீசுந்தீ அள்ளியே

'வ' என்ற எழுத்தில் தொடங்கி, அடிதோறும் வருகிற மோனையும், தெள்ளி வள்ளி என இவ்வாறு வரும் எதுகையும் நம் உள்ளத்தைக் கவரும் உத்திகளாகும். பாடலை மறுமுறை படித்துப் பாருங்கள். அடுத்துவரும் பகுதிகளையும் படித்துப்பாருங்கள். உங்களுக்கு அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து அத்தனையையும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றும்.

கண்ணத்திற்குயிற் சத்தமே கேட்கக்
கன்றதுபார் என்றன் சித்தமே மயக்
கம்செய்யுதே ஆசைப் பித்தமே உடல்
கனலேறிய மெழுகாயின தினியாகிலும் அடிபாதகி
கட்டாயம் நீஒரு முத்தமே தந்தால்
கைதொழுவேன் உனை நித்தமே!

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோஉன் நெஞ்சமோ கொண்ட
மையல் பைத்தியம் கொஞ்சமோ சிலை
மதனாகம முதுகாவிய மதிலேமொழி சுகமாகிய
மார்க்கமுனக்கென்ன நஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும் பஞ்சமோ?

தேடக்கிடையாத சொர்ணமே உயிர்ச்
சித்திரமே மட அன்னமே அரோ
சிக்குதுபால்தயிர் அன்னமே பொரு
சிலை வேள் களை கொலை வேலென விரிமார்பனில் நடுவேதொளை
செய்வது கண்டிலை இன்னமே என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே.

இப்பாடலுக்கு இராகம் பைரவி என்றும் தாளம் ரூபகம் என்றும் குறிக்கப் பட்டுள்ளன. எதுகைகள் சிறிதும் கடினமின்றி, எளிதாக வந்து விழும் அழகைப் பாருங்கள். பாடலின் கட்டமைப்பும், கருத்துப் பொலிவும் இணைந்து கைகோத்து நடம் புரிகின்றன. இசையோடு பாடிப் பரவசமடைய வேண்டிய பாடல்கள் இவை.

பரணி இலக்கிய வகையில் இத்தகைய சந்த அமைப்புடன் தாழிசைப் பாடல்கள் விளங்கும். கீர்த்தனை நாடகங்கள் பலவற்றிற்கு இச் சந்த அமைப்புள்ள பாடல்களே முதுகெலும்பாகும். வள்ளலார் இத்தகு பாடல்களையும் பாடி தமிழ் வளம் சேர்த்தார். பாரதியார், பாரதிதாசன் வரை இச்சந்த இனிமையைக் காணலாம். இன்றைய கவிஞர்களில் முடியரசனிடம் இச் சந்த இனிமையைக் கண்டு மகிழலாம். மறுமலர்ச்சிக் கவிதைகள் பற்றிய அடுத்த பாடத்தில் அவருடைய பாடலையும் மற்றும் பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் போல்வாரின் பாடல்களையும் படித்துப் பாருங்கள். தமிழ்க் கவிதையின் இனிமை அப்போது புலனாகும்!

தன்மதிப்பீடு : 4

1. தமிழில் சந்தப் பாக்கள் எவை எவை?
2. குறவஞ்சி நாட்டிய நாடகமாக நடிக்கப்படுவதேன்?
3. இயைபுத் தொடையை விளக்கி ஒரு சான்று தருக.

12.4 பாடத்தொகுப்புரை

தமிழ் கவிதை மொழியாக வளர்ந்தமைந்தது. சங்கக் கவிதை முதல் சந்தக் கவிதை வரை, தமிழில் தோன்றிய கவிதை வகைகளும் வடிவங்களும் மிகப் பலவாகும். அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கனவற்றை இப்பாடத்தில் பார்த்தோம். கவிதைகளின் கலை வெளிப்பாடு, மனித நேயம், அறநெஞ்சம் யாவும் சில சான்றுகளால் அறிந்து கொண்டோம். எதனையும் செறிவான நடையில் அழகாகச் சொல்வது தமிழ்க் கவிதையின் பண்பாகும். மரபைப் போற்றுவது தமிழ்க் கவிதையின் உயிர்ப்பாகத் திகழ்கிறது. இந்தியக் கவிதை இலக்கிய வரிசையில் தமிழ்க்கவிதைக்கு ஒரு சிறப்பான இடமிருப்பது இதனால் புலனாகியது.

12.5 தொடர்ந்து படிப்பதற்குரிய துணை நூல்கள்

1. **தமிழ் இலக்கிய வரலாறு**, மு. வரதராசன், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1983 (ஐந். ப.).
2. **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு**, தமிழண்ணல் மீனாட்சி புத்தக நிலையம் (வி.உ), மதுரை, 1985 (ஐந். ப.).
3. **தமிழ் இலக்கிய வரலாறு**, ம.து.ச. விமலானந்தம், சி. நாகையா செட்டி அன் கம்பெனி, சென்னை, 1987 (மு.ப.).
4. **பக்தி இலக்கியம்**, ப. அருணாசலம், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1973. (மு.ப.).
5. **தமிழ்க்காதல்**, வ.சுப. மாணிக்கம், பாரிநிலையம், சென்னை, 1962 (மு.ப.).
6. **திருக்குறள்**, கழகப் பதிப்பு, சென்னை.
7. **திருப்பாவை**, கழகப்பதிப்பு, சென்னை.
8. **திருவெம்பாவை**, கழகப் பதிப்பு, சென்னை.

தன்மதிப்பீடு : விடைகள்

1.

1. தமிழில் உள்ள பா, பாவினம், வகைகளுக்குட்பட்டும் வாய்மொழி மரபுகட்குட்பட்டும் தொன்றுதொட்டு வழங்கிவருவன மரபுக் கவிதைகள் எனப்படும்.
2. சங்கத்திணைப்பாடல், நீதிப்பாடல், பக்திப்பாசுரம் காப்பியம், சிற்றிலக்கியம், சந்தப்பாக்கள் யாவும் மரபுக்கவிதை வகைகளாகும்.
3. உள்ளத்துள் எழுந்த காதல் உணர்வினைப் புலப்படுத்துவது; காதல் இன்பத்தை நுகர்வது; வீட்டு வாழ்வை வெளிப்படுத்துவது 'அகம்' ஆகும்.

2. அ.

1. புறப்பாடல் 2. திணைவகை 4. கோப்பெருஞ்சோழன்.

ஆ.

1. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்.
2. புலவர்களுடைய நேரடிக் கூற்றாகக் காணப்படும்.
3. மானத்திற்குக் கேடுவந்த காலத்தில், உணவுண்ணாது வடக்கு நோக்கி யிருந்து உயிர்விடுவது வடக்கிருத்தலாகும். ஊர்ப்புறத்தே தனியிடம் கண்டு அறமுறைக்கும் சான்றோர் சூழ, புல்லைப்பரப்பி, அதன்

மீதிருந்து, உண்ணா நோன்பு மேற்கொண்டு, அறம் கூறும் தவம் செய்து உயிர்விடுதலே அன்றிருந்த ஒரு வழக்கமெனலாம்.

4. பிசிராந்தையார்; காணாமலே கோப்பெருஞ்சோழனிடம் நட்புக் கொண்டு 'நும்பெயர் யாதெனக்' கேட்டவழி, 'சோழன்பெயரையே' தம்பெயராகக் கூறி வாழ்ந்த கெழுதகை நண்பர்.

3.

1. உலக மக்கள் நல்வாழ்வின் பொருட்டு, மனிதப் பண்புகளையும்; அறம் பொருள் இன்பங்களையும் எடுத்துரைப்பன நீதி இலக்கியம் எனப்படும். மக்கள் இங்ஙனம் ஒழுகவேண்டும் என இவை வழிகாட்டின; வேண்டாதவற்றை விலக்குமாறு அறிவுரை கூறின.

2. பதினெண் கீழ்க்கணக்கில் நீதிநூல்கள் பதினொன்று.

3. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது; 133 அதிகாரங்கள் அதில் உள்ளன.

4.

1. வரிப்பாடல், பரிபாடல், கலிப்பாடல், திருப்புகழ், பள்ளு, சிந்து, கீர்த்தனை எனத்தமிழில் சந்தப்பாக்கள் பலவகைப்படும்.

2. குறவஞ்சியில் இசையும், மெய்ப்பாடும் இணைந்த பாடல்கள் மிகுதி; உரையாடலும் நாடகப்பாங்கும் உள்ளன.

3. இயைபுத் தொடையில் இறுதி இயைபுத்தொடை பாடல்களுக்கு அழகூட்டும்; இசைவண்ணத்தை மிகுவிக்கும். வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு **கொஞ்சும்** மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் **கெஞ்சும்** இதுவே இயைபுத்தொடையாகும். அழைப்பார், விளைப்பார்; ஒழுகும், வழுகும் - இவ்வாறு வருகின்ற பகுதிகளைச் சொல்லிச் சொல்லி, பாடிப்பாடிப் பாருங்கள். தமிழ்ச் சந்த இனிமை புலனாகும்.

பாடப்பகுதி (Unit) *13*
மறுமலர்ச்சிக் கவிதைகள் (Renaissance Poetry)

படிப்பு நோக்கம்

- ★ தமிழ் மறுமலர்ச்சிக் கவிதைகளின் அரசியல், சமுதாயப் பின்னணி
- ★ ஐரோப்பிய இலக்கியச் செல்வாக்கால் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள்
- ★ இக்காலக் கவிதை மலர்ச்சிக்குக் காரணமான பாவலர்கள் பற்றிய அறிமுகம்
- ★ குழந்தைக் கவிதை வளர்ச்சி - புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்.

பாடக் கருத்தலகுகள்

13.0 பாட முன்னுரை

13.1 மறுமலர்ச்சி

13.2 பாரதியார்

13.2.1 தேசிய உணர்வு

13.2.2 தமிழ் உணர்வு

13.3 கவிமணி

13.3.1 குழந்தைக் கவிதை

13.4 நாமக்கல் கவிஞர்

13.4.1 விடுதலை இயக்கம்

13.5 பாரதிதாசன்

13.5.1 பொதுவுடைமை

13.6 குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா.

13.7 அறிவியல் கவிஞர் குலோத்துங்கன்

13.8 காதல் தத்துவக் கவிஞர் கண்ணதாசன்

13.9 புதுக்கவிதை

13.10 பாடத் தொகுப்புரை

13.11 தொடர்ந்து படித்தற்குரிய துணைநூல்கள்

13.0 பாடமுன்னுரை

தமிழில் தொன்றுதொட்டுக் கவிதைகளுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. உரைநடைக் காலமாகிய இன்றும் அதன் செல்வாக்கு போற்றப்படுகிறது. முன்பு 'செய்யுள்' என்ற சொல்தான் கவிதையையும் குறித்தது. இன்று செய்யுள் வேறு; கவிதையாகிய பாட்டு வேறு எனப் பிரித்து உணர்கிறோம். டாக்டர் மு.வ. அவர்கள் தம் 'இலக்கியத்திறன் ' என்ற நூலில் இதை நன்கு விளக்குகிறார்;'' செய்யுள் சீரும் தளையும் அடியும் உடையது; ஒலிநயம் உடையது. உரைநடை மக்கள் பேசும் முறையில் சொற்கள் அமைய வாக்கியங்களாக எழுதப்படுவது. செய்யுளாக எழுதப்படும் இலக்கியத்தில் விழுமிய உணர்ச்சி மிக்கு விளங்குமாயின் அதுவே பாட்டு எனக் கூறப்படும். பாட்டு என்பது கலை; உணர்ச்சியை முதலாகக் கொண்டது; ஆகையால் அது அறிவியலுக்கு (Science) மாறானது. பாட்டு அழகிய வடிவம் உடையது; ஒலிநயம் உடையது; அதற்குத் துணை உறுப்புக்களான எதுகை, மோனை முதலியனவும் உடையது; ஆகையால் அது உரைநடைக்கு வேறுபட்டது. உணர்ச்சியும் கற்பனையும் பொருந்திய செய்யுள் (Verse) எல்லாம் பாட்டு (Poetry) எனத்தகும்''. தமிழில் மருத்துவம் சோதிடம் எல்லாம் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன. அவை பாட்டு எனப்படுவதில்லை இப்'பாட்டு' என்பதையே இங்குக் கவிதை என்றும் கூறுகிறோம்.

மறுமலர்ச்சிக் கவிதைகளும் மரபுவழியாகப் பாடப்பட்டு வருவனவே. எனினும் அவை 'சொல் புதிது பொருள் புதிது சுவை புதிது' எனக் கூறுமாறு வளர்ந்தவையாகும். இந்திய விடுதலை இயக்கமும் தேசிய உணர்வும் இம் மறுமலர்ச்சிக்கு வித்திட்டன. மேலை இலக்கியத் தாக்குரவு இதற்கான அடித்தளமாக அமைந்து உரமூட்டியது. முறையான தமிழ் உணர்வும் முழுமை பெற்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்வும் இம்மறுமலர்ச்சி இயக்கத்தை முரண்படாத வகையிலே முன்னேறச் செய்தன. காந்திய இயக்கம், பொதுவுடைமை இயக்கம், திராவிட இயக்கம், யாவும் இக்கவிதையின் விளைவையும் பயனையும் தழைக்கச் செய்தன.

13.1 மறுமலர்ச்சி

முந்தைய பாடத்தில் 'மரபுக்கவிதைகள்' பற்றித் தெரிந்துகொண்டோம். அவை அனைத்தின் செல்வாக்கையும் மரபையும் புதுவரவையும் புதுமையையும் இன்றைய கவிதை இலக்கியத்தில் காணலாம். இன்று உதிரிக் கவிதைகள் பல தனித்தனிப் பொருளில் - தலைப்பில் பாடப்பட்டுத் தொகுப்புக்களாக வெளிவருகின்றன. மேலை இலக்கியவழி வந்த புதுவரவு இதுவாகும்.

முதலில் ஆங்கிலத்திலிருந்து தனிப்பாடல்களை மொழி பெயர்க்கும் வழக்கம் தோன்றியது. ந. பலராமையர், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை போன்ற பலரிடம் இப்பணியின் தொடக்ககால நிலையைக் காணலாம். பின்னர் ஆங்கிலப் பாடல்கள் போலத் தமிழிலும் எழுதும் வழக்கம் மிகுந்தது.

முன்னைய இலக்கிய வகைகளான ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ், பரணி போன்ற பலவற்றைப் புதிய முறையில், புதிய பொருள்களில் படைக்கும் மரபும் இடையிடையே காணப்பட்டது.

பெருங்காப்பியங்களாக எழுதக்கூடிய சூழலும் படிக்கும் ஆர்வமும் இன்மையால் சிறுகாப்பியங்களையும் நெடுங்கவிகளையும் படைக்கும் முறை ஒன்று தோன்றியது. தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியாரின் பாஞ்சாலி சபதம், குயில்பாட்டுப் போல்வன இதற்கு வித்திட்டன. பாரதிதாசன்,

நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை, முடியரசன், கண்ணதாசன் போன்ற பலரிடமும் இப் படைப்பைக் காணலாம்.

கவிதை நாடகச் செல்வாக்கை மனோன்மணீயம் பரப்பியது. இன்று நூற்றுக்கணக்கான கவிதை நாடகங்கள் தோன்றியுள்ளன. இவை சேக்ஷ்பியரின் நாடகங்கள் போன்ற அமைப்புடையவை. முடியரசன், அ.நா. பெருமாள், ஆ. பழனி, சொ. சிங்காரவேலன் எனப் பலர் இத்துறையில் எழுதி யுள்ளனர்.

திரைப்படப் பாடல்களும் சிறந்த கவிதைகளாக - இலக்கியமாகப் போற்றத் தக்கனவே. உடுமலை நாராயண கவி, மருதகாசி, கண்ணதாசன், பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் அனைய பலர் நினைவில் நிற்பவராவர். தமிழில் குழந்தை இலக்கிய வகை ஒன்றும் கிளைத்து வளர்ந்துள்ளது. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இவ்வகைமை வளர்ச்சியில் குறிப்பிடத் தக்கவராவார்.

கவியரங்கம் அமைத்து கவிதைகளை அரங்கேற்றி மகிழும் பாங்கு இன்றும் காணப்படுகிறது. வானொலியினரும் கவியரங்குகளை அமைத்தும் கவிஞர்கட்கு நல்வாய்ப்புத் தந்தும் இதன் வளர்ச்சிக்கு உறுதுணை செய்து வருகின்றனர். இதழ்கள், தாளிகைகள் கவிதைகளுக்குப் போதிய இடமளிப்பதில்லை.

'புதுக்கவிதை' என ஒரு தனிவகை தமிழில் தோன்றி நன்கு வளர்ச்சி கண்டுளது. இவ்வாறு மறுமலர்ச்சிக் கவிதை வளர்ச்சியை நாம் ஒரு கண்ணோட்டமிட்டு அறிதல் கூடும்.

பொங்கிவழிந்த புதிய உணர்வுகள்

விடுதலை இயக்கத்தின் தொடர்ச்சியாகப் பெண்ணடிமை தீர்தல், தொழிலாளர் அடிமைத்தளை அகற்றுதல் போன்ற புரட்சிக் கருத்துகள் பரவின. சமுதாய விடுதலையும் பொருளாதார விடுதலையும் வேண்டிப் பாடல்கள் எழுந்தன. சுதந்திர தாகம் கவிதைக் களத்தில் பொங்கி எழுந்தது. சமூகச் சீர்திருத்த எழுச்சியும் இதன் தொடர்ச்சியே தவிர வேறன்று.

தாய்மொழி உணர்வு, தமிழுணர்வு தழைக்கத் தொடங்கியது. மொழியின் பெருமையை உணர்தல், எல்லாக் கலைகளையும் அறிவியலையும். தாய்மொழியில் கொணரும் வேட்கை, ஆட்சிமொழி நீதிமொழி ஆக்கும் ஆர்வம் என இவ்வாறு இது பல்வேறு துறைகளில் பீறிட்டெழுந்தது.

இந்திய தேசிய உணர்வும், தேச ஒருமைப்பாட்டுணர்வும் மிக நல்ல முறையில், பாரதியார் தொடங்கிப் பாடல்களின் வழி வளர்க்கப்பட்டன. மாநில மொழியுணர்வும் இத்தேசிய உணர்வும் முரண்படா வகையில் பொங்கி எழுவதைத் தமிழ்ப் பாடல்களில் தெளிவாகக் காணலாம். உலக சகோதரத்துவம், பொதுவுடைமை, மனித்துவம் என அரிய பொருள்கள் எல்லாம். தமிழ்க்கவிதைகளில் ஆழமாக வெளிப்படுத்தப்பட்டன.

மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த கவிஞர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி தொடங்கி, மறுமலர்ச்சிக்கான முளைகள் துளிர்க்கத் தொடங்கின. ஆயினும் விடுதலை இயக்க வேகத்தோடு தான் அஃது உந்துதல் பெற்றது. இச்சூழ்நிலையில், தமிழ்க் கவிதையுலகில் பெரும் புகழ் பெற்று, அரிய மாற்றங்களை ஏற்படுத்திய, சிறந்த கவிஞர்கள் நால்வராவர். சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் வே. இராமலிங்கம்பிள்ளை,- பாரதிதாசன் ஆகிய இந்நால்வரும் கவிதை இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை விளைவித்தனர். மறுமலர்ச்சியின் ஊற்றுக்கண்ணாக விளங்கியவர் பாரதியாரே எனலாம்.

13.2 தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார்

பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தவர். தமிழில் நல்ல புலமை நிறைந்தவர். சுதந்திர வேட்கை கொண்டு வீறுடன் பாடியவர். 'உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்ற தம் வாக்கிற்கேற்ப உண்மையான அறிவொளி திகழ வாழ்ந்தவர். அவர், பழம் பாடல் வகை களைப் புதுப்பித்து, விடுதலை இயக்க உணர்வுக்கும் தேசிய உணர்வுக்கும் தமிழ்ப்பற்றுக்குமாகப் பாடி வெற்றி கண்டார். அவரிடம் பழைய மரபின் தொடர்ச்சியையும் புதிய மறுமலர்ச்சியின் தொடக்கத்தையும் காணலாம். குறைந்த வயதளவே வாழ்ந்த அவர், தமிழ் இலக்கிய உலகில் ஒரு திருப்பு மையத்திற்கு அடிப்படை ஆனார். இன்று புதுமையில் மலர்பவர் பலருக்குப் பழைமைப்பிடிப்பே கிடையாது. பழைமையில் பிடியுண்ட பலருக்குப் புதுமையில் ஆர்வமே கிடையாது. பாரதியார் இவர்களில் வேறுபட்டவர். பாரதியார் நாட்டுப்புறப் பாவடிவங்களையும் சிறந்த கருத்துக்களைக் கூறக் கருவியாக்கிக் கொண்டார். அவருடைய 'பாஞ்சாலி சபதம்' பெரிதும் சிந்து நடையிலேயே கதையை நடத்திச் செல்கிறது. அவர் எதை எழுதினாலும் அதில் ஒரு புதுமையும் பொலிவும் அமைந்தன. தமிழகத்தில் விடுதலை இயக்க உணர்வையும் தமிழுணர்வையும் பெருகச் செய்த பெருமை அவருக்கு உண்டு. இவை இரண்டும் அவருக்கு முரண் பட்டனவாகத் தோன்றாமல், ஒன்றுக்கொன்று இணையும் உறவுடையனவாகவே தோன்றின. இந்திய ஒருமைப்பாட்டிற்கு, பாரதியார் ஊட்டியது போன்ற மனவுணர்வையே வளர்க்க வேண்டும்.

13.2.1 தேசிய உணர்வு

'எங்கள்தாய்' என்று பாரதத்தாயை உரிமை கொண்டாடிப் பாரதி பாடும் பாடலொன்று. அப்பாட்டுப் பாரதத்தின் தொன்மையைப் பாராட்டுகிறது. உலக நாடுகள் பல தோன்றிய காலம் தெரியும். பாரதத் தாய் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே சிறப்புற்றுத் திகழ்பவள். ஆனால் இன்றும் அவள் கன்னிகையாகவே விளங்குகிறாள். அவளுடைய பண்பு நலன்களையும் சிறப்புக்களையும் விவரிக்கிறபொழுது நம் உள்ளம் பெருமிதமடைகிறது. தோள்கள் பூரிக்கின்றன. நெஞ்சம் நிமிர்கிறது. வங்கக் கவி தாகூர் பாடல்கள் சில நிகராகுமாயினும், பாரதி காட்டும் பாரதத்தாய் பற்றிய உருவகம் இந்திய மொழிகள் அனைத்திலும் எடுத்தியம்பப்பட வேண்டிய தாகும். ஒவ்வோர் இந்தியனும் உணரவேண்டியதாகும்.

தொன்று நிகழ்ந்த தனைத்து, முணர்ந்திடு
    சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
    இயல்பின ளாமெங்கள்தாய்

யாரும் வகுத்தற்கரிய பிராயத்த
    ளாயினு மேயெங்கள்தாய் - இந்தப்
பாருளெந் நாளுமோர் கன்னிகை யென்னப்
    பயின்றிடு வாளெங்கள்தாய்

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
    மொய்ம்பிற வொன்றுடையாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள்எனிற்
    சிந்தனை யொன்றுடையாள்

நாவினில் வேதமுடையவள் கையில்
    நலந்திகழ் வாளுடையாள் - தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
    வீட்டிடு தோளுடையாள்

அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள்தாய் - தனைச்
செறுவது நாடி வருவ ரைத்துகள்
செய்து கிடத்துவள்தாய்

அந்தக் காலத்தில் 'காவடிச்சிந்து' மிகப் புகழ்பெற்று, மக்களால் பாடப் பட்டது. 'ஆறுமுகவடி வேலவனே' என்ற காவடிச் சிந்தின் வர்ணமெட்டில் இப்பாடலை யாத்துள்ளார் பாரதியார். சந்தத்தால் சொற்புணர்ப்புகளைப் பிரிக்காமல் அவ்வாறே பதிப்பிக்கப்பெற்றுள்ள அழகைக் கவனியுங்கள். இசையோடு பாடும்போது பிரித்துப்பாட முடியாது. தமிழைச் 'செய்யுள்மொழி' எனலாம், என்று முன்னர்க் குறிப்பிட்டது அதனால்தான் தமிழ்ப்புணர்ச்சி விதிகள் பல செய்யுளமைப்பை நோக்கியெழுந்தனவே தவிர, இன்றைய உரைநடையமைப்பை நோக்கி எழுந்தனவல்ல என்பதும் அதனால்தான். பாரதத்தாயின் தொன்மை, இளமை; வீரம், ஈரம்; அறம், மறம்; சிவனையும் திருமாலையும் தொழுதல்; யோகம், போகம் என்று அனைத்தும் அழகுறக் கூறப்பட்டுள்ளன. ஏமாய்ம்பு - வலிமை, செறுவது - அழிப்பது, தோம் - குற்றம், என்ற அருஞ்சொற்களும் சந்தம் நோக்கச் சேர்க்கப்பட்டனவே. மறையாள் - நித்தம் என்பது மறையாணித்தம் என வருவது, சற்றுக் கடுமையானது தான். எனினும் சந்தம் ஓசை சிதையாதிருக்க அது தேவைப்படுவதை உணருங்கள்.

செப்புமொழி பதினெட்டுடையாள் - எனில்
சிந்தனை ஒன்றுடையாள்

என்ற அடிகளில் அமைந்துள்ள கருத்து, வேற்றுமையிடையே ஒற்றுமையை எவ்வளவு சிறப்பாக விளக்குகிறது பார்த்தீர்களா? சிவனையும், திருமாலையும் பாடாத தமிழ்ப்பாக்களா? எனினும் 'கற்றைச் சடைமதி வைத்த துறவி', 'ஒற்றைத் திகிரிகொண்டு ஏழுலகாளும் ஒருவன்' என்னும் போது தொனிக்கும் புதுமையை எண்ணி மகிழ்கின்றோம். பின்னாளில் பாரதநாட்டில் தனியரசோச்சிய மன்னர்கள் எல்லோருமே அகற்றப்பட்டார்கள். இந்திய தேசப்படத்திலிருந்த சிறுசிறு புள்ளிகள் மறைந்து, தேசம் ஒன்றாகியது. 'அல்லவராயின் அவரை விழுங்கி' என்று அதற்காகத்தான் அன்றே பாடி வைத்தாரோ? இளமையிலேயே அரிய செய்திகளை, நுட்பமாகப் பாடிய திறம் வியந்து போற்றற்குரியது. பாடல்களை ஈடுபாட்டோடு படியுங்கள். பாரதி போன்ற மாபெரும் கவிஞர்களைத் தமிழகம் மீண்டும் தராதென்றா நினைக்கிறீர்கள்?

13.2.2 தமிழ் உணர்வு

அடிமைப்பட்ட காலத்தில் தேசஉணர்வு, மொழிஉணர்வு, சமய உணர்வு, பண்பாட்டுணர்வு யாவும் அற்றுப்போயிருந்தன. மொழியுணர்வையும் முறையாக வளர்க்கப்பாடிய பெருமை பாரதிக்கு உண்டு. இன்றும் பலர் சொந்தமொழி உணர்வு இந்திய நாட்டின் ஒற்றுமையைப் பாதிக்குமோ என அஞ்சுகின்றனர். தவறாகப் பயன்படுத்தினால் அந்தக் கதிதான் ஏற்படும். பாரதி முறையான மொழியுணர்வுக்கு வழி வகுக்கின்றார். 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்பது அவர் ஆசை. 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை' என்பது அவர் கணிப்பு. இவ்வாறு வரும் அவர் பாடலின் செய்தி ஒவ்வொரு தமிழனும் கருத்திற் கொண்டு கடமையாற்ற வேண்டியதாகும்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை
உண்மைவெறும் புகழ்ச்சியில்லை

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! (தேசீய கீதங்கள் - தமிழ்நாடு)

பாரதியின் விருப்பங்கள் இன்றளவும் முழுமைபெற நிறைவேறவில்லை. அவற்றுட் சில இன்னும் எண்ணப்படவேயில்லை. காரணம் பாரதியையும் பாராட்டக் கற்றிருக்கிறோமே தவிர, ஐயமறக் கற்று மனத்தில் பதிய வைத்துக்கொள்ளவில்லை. 'கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவ வேண்டும்' என்கிறார். 'வெளிநாட்டோர் வணக்கம் செய்ய' வாழவேண்டும் என்கிறார். இறவாத புகழுடைய புது நூல்கள் இயற்றவேண்டுமாம். நாம் எதைத்தான் செயற்படுத்தினோம். 'கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்திற்கொள்ளாரடி' என்று அவர் தமிழரைப் பற்றிக் கணித்துக்கூறியது ஒன்றுதான், இன்றளவும் மெய்ம்மையாயிருக்கிறது!

தமிழ்மொழி ஓங்குவதால், உலகம் துலங்கும் என்ற பாரதி வாக்குப் பலிக்கும் காலம் வந்துளது. நாம் அனைவரும் அதற்கு ஆயத்தமாக வேண்டும். 'எங்கள் தமிழ்மொழி என்றென்று பாடும்போது நமக்கும் நமது தாய் மொழிக்கும் இடையிலான உறவு மேன்மேலும் வலுப்படுகிறது. ''சுவை புதிது, பொருள் புதிது, வளம்புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவகவிதை, எந்நாளும் அழியாத மகாகவிதை'' என்று தம் கவிதை பற்றிப் பாரதியார் கணிப்பதும் முற்றிலும் சரியென்பதை, அவர் பாடல்களை ஆழக்கற்பார் அனைவரும் அறிவர்.

தன் மதிப்பீடு : 1

1. ஆங்கிலப் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்த கவிஞர்கள் சிலரைக் கூறுக.
2. தேசிய உணர்வு, தேச ஒருமைப்பாடு - இவை பாரதியாரால் எவ்வாறு பாடப்படுகின்றன.
3. தமிழ் உணர்வைப் பாரதியார் எடுத்துரைக்கும் திறம் யாது?

13.3 கவிமணி சி. தேசிகவிநாயகம்பிள்ளை

கவிமணி தமிழ்க்கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பல புதிய பணிகளைச் செய்தார். அவர் நீண்டநாள் வாழ்ந்த பல்துறை அறிஞர். ஆங்கிலத்திற்போலப் பலபொருள் பற்றிய உதிரிக்கவிதைகள் எழுதலானார். பல ஆங்கிலக் கவிதைகளை நல்ல தமிழாக்கம் செய்து வழிகாட்டினார். குழந்தைகளுக்கெனப் பாடல்கள் எழுதி அவ்வாறு ஒருவகை தமிழில் வளரத் தோற்றுவாய் செய்தார். அதற்கு முன்னரும் குழந்தைப் பாடல்கள் உண்டெனினும், மிக எளிய, சிறிய குழந்தைகள் பாடக்கூடிய, பாட வேண்டிய பாடல்களை எழுதியவர் இவரே. இவருடைய 'மருமக்கள்வழி மான்மியம்' ஒரு நகைச்சுவைக் காப்பியம். மருமக்கள்தாயம் அல்லது தாய்வழியுரிமையையும் ஒருவரே பலதாரம் மணப்பதையும் கிண்டல் செய்யும் இது, முதலிலிருந்து முடிவுவரை 'சமுதாய அங்கதப் பாட்டாக'

(Social Satire) அமைந்து, நகைச்சுவையை அள்ளிஅள்ளித் தருவதாகும். குறிப்பிட்ட ஒரு சமூகப் பிரச்சினை பற்றியதாகையால், இது மற்ற மக்களிடம் செல்வாக்குப் பெறாமல் போய்விட்டது. கவிமணியின் மலரும் மாலையும், ஆசியஜோதி, உமார் கய்யாம் பாடல்கள், தே.வி.யின் கீர்த்தனங்கள் போல்வன படிக்கவேண்டிய பாடல்களாகும். கவிமணியின் 'சரஸ்வதிதுதி' எனப்படும் கலைமகள் வணக்கப்பாட்டு, உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகும். பாரதியாரின் கலைமகள் துதிப்பாடல்களும் படித்துப்படித்து மனங்கொள்ளவேண்டியன. பாரதி 'வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள், வீணைசெய்யும் ஒலியிலிருப்பாள், கொள்ளை இன்பம் குலவி கவிதை கூறுபாவலர் உள்ளத்திருப்பாள்' என்று இவ்வாறு சரசுவதியை நினைந்து போற்றுவார். கவிமணி உழவர் கையிலும் கவிஞர் நாவிலும் அறிஞர் நெஞ்சிலும் நடமிடும் மயிலாகக் கலைமகளைக் காணும் அழகு களிப்பூட்டுகிறது.

நாடிப் புலங்கள் உழுவார் கரமும், நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே

(மலரும் மாலையும்)

இத்தகைய முறையில் எளிமையாக அரிய கருத்துக்களை எடுத்துரைப்பது கவிமணியின் இயல்பாகும். இப்பாடல் 'கட்டளைக் கலித்துறை' என்னும் யாப்பு. வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் தமிழில் மிகச் செவ்விய பாக்கள். தம்மைக் கையாள்வோர் திறமையை வெளிப்படுத்தும் பாங்குடையன இப்பாடல்கள்.

13.3.1 குழந்தைக் கவிதை

குழந்தைகளைப் பாடுவது குழந்தைகளை நினைத்துப் பாடுவதை விடக் குழந்தைகளே பாடுமாறு பாடுவதுதான் 'குழந்தைக் கவிதை' என்பதற்கு மிகவும் பொருத்தமுடையதாகும்.

பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது
    வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
    கன்றுக்குட்டி
அம்மா என்குது
    வெள்ளைப்பசு - உடன்
அண்டையில் ஓடுது
    கன்றுக்குட்டி
நாவால் நக்குது
    வெள்ளைப் பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது
    கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது
    வெள்ளைப்பசு மடி
முட்டிக் குடிக்குது
    கன்றுக்குட்டி

வெள்ளைப்பசுவும் கன்றுக்குட்டியும் சிறுபிள்ளைகளின் மனத்தைவிட்டு அகலாதபடி இப்பாடல் படம்பிடித்துக் காட்டுகிறது. அத்துடன் எளிய சந்தம், எளிய சொற்கள். பாரதியார் புதுமையில் நாட்டங்கொண்டார். கவிமணி எளிமையில் மனத்தை வைத்தார்.

13.4 நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை

பாரதியாரோடு சமகாலத்தவர்களில் நாமக்கல் கவிஞரும் ஒருவர். இவர் தேசியக் கவிஞராய்த் தேச உணர்வும் தமிழ் உணர்வும் சிறக்கப்பாடினார். சிறந்த ஓவியராகிய இவர் காவியம் பாடுதலிலும் வல்லவராய் 'அவனும் அவளும்' என்றதொரு நூலினை யாத்துள்ளார். நீதி, ஒழுக்கம், இறையுணர்வு, சமய ஒருமை போன்றவற்றிலும் இவர் கருத்தைச் செலுத்தி யுள்ளார்.

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்.

என்று தமிழனையும் தமிழையும் பற்றிச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தமிழன் இதயம், சங்கொலி, காந்தி அஞ்சலி, தமிழ்த்தேன் முதலியன அவருடைய கவிதை நூல்களாகும்.

13.4.1 விடுதலை இயக்கம்

பாரதியாருக்குப் பிறகு, தொடர்ந்து தேசியத் தொண்டர்களுக்கு உணர்வூட்டி, சுதந்திரப் போர்ப் பாடல்களைப் பாடி வந்தவர் நாமக்கல் இராமலிங்கமே யாவர். காந்தியடிகளின் வழியில் இயங்கிய விடுதலைப் போர்ப் பரணியை, எதுகை நயம் மிகப்பாடி முரசறைந்தார் நாமக்கல் கவிஞர்.

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்

ஒட்டிஅண்டிக் குண்டுவிட்டு
உயிர்பறித்த லின்றியே
மண்டலத்தில் கண்டிலாத
சண்டையொன்று புதுமையே

கண்டதில்லை கேட்டதில்லை
சண்டையிந்த மாதிரி
பண்டை செய்த புண்ணியம்
பலித்ததே நாம்பார்த்திட

காந்தியென்ற சாந்தமூர்த்தி
தேர்ந்துகாட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமைகுன்ற
வாய்ந்ததெய்வ மார்க்கமே (கத்...)

வீரர்களை முரசறைந்து உற்சாகப்படுத்துவனபோல் இக் கண்ணிகள் சந்தமுரசறைகின்றன. காந்தியடிகள்பால் இவருக்குள்ள பக்தியும் தெரிகிறது.

தன் மதிப்பீடு : 2

1. கவிமணியின் சமுதாய அங்கதப் பாட்டு எது?
2. கவிமணியின் இசைப்பாடல்கள் எத்தொகுதியில் அடங்கியுள்ளன?
3. 'தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்று பாடியவர் யார்?

13.5. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

கனக சுப்புரத்தினம் என்ற இயற்பெயருடைய பாரதிதாசன் பாரதியாருடன் நெருங்கிய தொடர்புடையவர். பாரதியின்பால் பெருமதிப்பும் பக்தியும் பூண்டு, தம் பெயரையும் பாரதிதாசன் என அமைத்துக் கொண்டவர். தமிழ்

இலக்கிய மரபுத் தொடர்ச்சியாகப் பெரும் வளர்ச்சி ஏற்படுத்திக் கொண்டவர். பாரதிதாசன். மூட நம்பிக்கைகளைச் சாடி, சமூகசீர்த்திருத்தற்திற்செனப் பாடிய இவரை மக்கள் புரட்சிக் கவிஞர் என அழைக்கத் தலைப்பட்டனர். இவர் புதுச்சேரியில் தோன்றி வாழ்ந்தவராதலால் உலக சகோதரத்துவம் பற்றிய பிரஞ்சுக் கோட்பாடுகள் இவரிடம் இயல்பாக அமைந்தன. தேசியம் மற்றும் பக்திக் கவிஞராக அரும்பி சமூகப் புரட்சிக் கவிஞராக மலர்ந்தவர் இவர். இவருடைய கவிதைகளைப் படித்த பி. ஸ்ரீ ஆசார்யா ஒருமுறை இவரைக் 'குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர்' எனப் புகழ்ந்தார். தமிழ் மறுமலர்ச்சியை ஓர் இயக்கமாகவே பாடிவளர்த்த பெருமை இவருக்கு உண்டு. அழகிய இயற்கையைப் புனைந்துபாடி 'அழகின் சிரிப்பு' என வருணித்தார். நற்குணம் மிக்க இல்லத்தரசி ஒருத்தியைப் படைத்து 'குடும்ப விளக்கு' எனப் பெயரிட்டார். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என அதன் முன்னுரையில் இவர் குறிப்பிட்டார். அதிலிருந்து குடும்ப அமைப்பிலும் கடமைகளிலும் இவர் கொண்டிருந்த பிடிப்புப் புலனாகும். எதிர்பாராத முத்தம், பாண்டியன் பரிசு போன்ற சிறு காப்பியங்களையும் பாடியுள்ளார். இசையமுது என்பது இசைப்பாடல்களின் தொகுதி. 'பாரதிதாசன் கவிதைகள்' மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. முதல் தொகுதியிலுள்ள சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய் போன்ற நெடும்பாடல்கள் படித்தின்புறத்தக்கன. 'பில்கணீயம்' என்ற வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்டதே புரட்சிக்கவி என்பதாகும். இதன் பயனாகவே கவிஞர் பெயரிலும் 'புரட்சிக்கவிஞர்' என்ற அடைமொழி சேர்ந்தது. இயல்பாகவே சமூகப் புரட்சிக்கு வித்திட்ட அவர் குரலைக் கேட்டவர்கட்கு, இப்பாடலின் செல்வாக்கும் சேர்ந்து அவரைப் 'புரட்சிக் கவிஞர்' என அழைக்க வைத்தது.

13.5.1 பொதுவுடைமை

இதுபோலவே தொழிலாளர்களுக்குரிய உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்களை ஒடுக்குவதை அறவே ஒழிக்கவேண்டு மென்றும் இவர் பல பாடல்களில் வற்புறுத்தியுள்ளார்.

புதியதோர் உலகு செய்வோம்! கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்! (புதிய)

பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம் (புதிய)

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
இதுஎனதென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம் (புதிய)

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள்தனி' எனும் மனிதரைச் சிரிப்போம் (புதிய)

இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாமெனில் அனைவரும் புசிப்போம் (புதிய)

இத்தகைய 'எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்பதான' புதிய உலகம் காண்பதில் அவருக்குள்ள ஈடுபாட்டை, முதல் தொகுதியில் பல பாடல்களில் காணலாம். சிறந்த நடையும் மோனை எதுகை அமைப்பும் இசையும், ஓசையும் இவர் பாடல்களில் மிக இயல்பாக அமைந்து காணப்படும். நம்மை அவை திரும்பப் பாடி மகிழுமாறு தூண்டும். எதனையும் நறுக்குத் தெறித்தால்போல் கூறுவார். எதற்கும் அஞ்சாமல் மனத்தில் பட்ட கருத்தை, வெளிப்படக் கூறுவார். பாரதியார் போல பாரதிதாசனின் கவித் திறனும் நிகரற்றது. அவருடைய கருத்துக்களும் மனிதநேயமுடையவையாய், எட்டுத்திசையிலும் எதிரொலிக்கத் தக்கனவாகும்.

தன்மதிப்பீடு : 3

1. பாரதிதாசனிடம் புதுச்சேரி வாழ்வால் ஏற்பட்ட கோட்பாடு யாது?
2. குடும்பவிளக்கு முன்னுரையில் பாரதிதாசன் குறிப்பிட்ட வாசகம் எது?

13.6 குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா

குழந்தைகளுக்கென்றே பாட்டுப்பாடி வாழ்பவர் அழ. வள்ளியப்பா. குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கெனவே வாழும் அவரை, எல்லோரும் அன்போடு 'குழந்தைக் கவிஞர்' என அழைக்கின்றனர். குழந்தைகளே பாடுமாறு அவர் பாடல்களைப் பாடியுள்ளார்.

ஏழும் ஏழும் பதினாலாம்
எலியாருக்கு முழம்வாலாம்
அறைக்குள் எலியார் புகுந்தாராம்
அங்கும் இங்கும் பார்த்தாராம்
இரண்டு தட்டில் பணியாரம்
இருந்தது கண்டு மகிழ்ந்தாராம்
கடித்துக் கடித்துத் தின்றாராம்
கணக்கைக் கூட்டிப் பார்த்தாராம்
ஏழும் ஏழும் பதினாலாம்
எலியார் ஏப்பம் விட்டாராம்

எவ்வளவு எளிமையாகச் சின்னக் குழந்தைகளுக்கு ஏற்ப இப்பாடல்கள் ஒலிக்கின்றன! தாமும் குழந்தையாக மாறிப்பாடினாலன்றி இவ்வாறு பாடுதல் இயலாது. இவர் குழந்தைகள் வளரும்போதே நல்ல உணர்வோடும் அன்போடும் பண்போடும் வளருமாறு, தம் பாடல்களை மிகக் கருத்துடன் பாடி அமைத்துள்ளார்.

கொடிபோல் ஆட்டி ஆபத்துணர்த்தும்
    முயலின் வால்
கோபம் வந்தால் சிலிர்த்துநிற்கும்
    பூனைவால்
நன்றியைக் காட்ட நன்றாய் உதவும்
    நாயின் வால்
நமக்கு மிருந்தால் எப்படி உதவும்?
    எண்ணிப் பார்!   (சிரிக்கும் பூக்கள்)

நகைச்சுவையோடு வால்களின் பயன்பாடுகளை இப்பாடல்கள் விளக்குகின்றன. வேடிக்கையாகப் படிக்கும்போதே, ஒரு நல்ல கருத்தையும் மனத்தில் பதியவைத்துவிடுவது இவர் வழக்கம். உள்ளடக்கம், வடிவம், உத்தி எல்லாமே குழந்தைகளுக்கு ஏற்ப அமையுமாறு பாடும் இவர் திறமையை அறிஞர்களும் கவிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

13.7 அறிவியல் கவிஞர் குலோத்துங்கன்

தொழில்நுட்ப மேதை, பொறியியல் வல்லுநர், அறிவியல் அறிஞர் என்று சிறந்து விளங்கும் டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், குலோத்துங்கன் என்ற புனைபெயரில், மரபுநலமும் கருத்துவளமும் மிக்க பாடல்களைப் பாடிவருகிறார். பாரதிதாசனுக்குப் பிறகு தோன்றிய மரபுவழிச் செல்வங்களுள் இவர் நடைமுறை வாழ்வைப் பிரதிபலிக்கும் சிறந்த கவிச்செல்வமாகத் திகழ்கின்றார்.

நம் நாட்டில் மாநாடு, கருத்தரங்குகள் பொய் நடிப்போடும், கற்பனைப் பெருமைகளோடும் வெற்று ஆரவாரமாக நடத்தப்பட்டுப் பயனற்றுப் போவதை அவர் காண்கிறார்; கேலிக்கூத்தான அதைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

புதியபாதை

மாநாடு சென்றிருந்தேன் இருவர் தூக்க
மாளாத மாலைகளும் குனியக் கூன
நாணாத பிறவிகளும் எண்சாண் மெய்யும்
நடுங்குவதும் ஒடுங்குவதும் நடப்பா னோரும்
வாய்திறந்தால் வரம்பிறந்து துதிப்ப தொன்றே
வாழ்வதற்கு வழியென்னும் மரபினோரும்
பேய்புகுந்தால் எனமிரண்ட பார்வையோடு
பின்னாலும் முன்னாலும் அலையு வோரும்
கருத்தரங்கு நடத்துவது கண்டேன் ஐயா
கண்கூசும் அவலமிது அறிஞர்கட்குப்
பொருத்தமிலா நடைமுறைதன் மானம் முற்றும்
புதைத்தவர்கள் வாழ்வதற்குப் புதிய பாதை (விண் சமைப்போர் வருக)

உலகம் அறிவியலில் மிக முன்னேறுகிறது. தமிழ்மொழி அந்த அறிவியலைச் சொல்வதற்குக் கூடத் தகுதியற்றதாகப் பின்தங்கிக் கிடக்கிறது. இந்த அவலத்தை எண்ணிக் குலோத்துங்கன் கூறும் செய்தி இது:

அறிவியல் உலகம் விரிகிறது

அறிவியல் உலகம் விரிகிறது - நிதம்
அதுசெலும் வேகம் மிகுகிறது!
பொறியியல் கருவிகள் சமைகின்றன - நிதம்
புதுமைகள் புதுமைகள் புலர்கின்றன

அந்நிய மொழிக்குலம் முன்னடக்கும் - புது
அறிவின் துறைகளை வழிநடத்தும்
என்னுடைய மொழிஅவண் இல்லையடா - அது
எங்கோ தேங்கி ஏங்குதடா

நாளும் நம்மொழி - பிந்துதடா - புவி
நம்மைப் பிரிந்து முந்துதடா
ஆளும் தருவது கல்வியடா - நமக்கு
அன்னை மொழித்துணை இல்லையடா!

இவ்வாறு எங்கும் அவர் தாமும் முன்னேறி, தமிழையும் முன்னேற்ற உணர்வும் செயலும் உள்ளவர்களை உடனழைக்கின்றார்.

இவருடைய கவிதைகள் 'குலோத்துங்கன் கவிதைகள்' என முதற் பதிப்பாக வெளிவந்தன. இப்போது இரண்டாம் பதிப்பாகப் புதிய பல பாடல்களும் சேர்த்து மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன. விண் சமைப்போர் வருக, வளர்க தமிழ், வாயில் திறக்கட்டும் என்பன அவை. இவர் கவிதைகளின் சிறப்பையும் வலுவையும் நாடு போதிய அளவு அறிந்து போற்றத் தொடங்க வேண்டும். ஏனெனில் இவை காலத்தேவையை மிகவுணர்ந்து, எதிர்கால வளர்ச்சிக்குத் திட்டமிட்டு, இன்றே - இக்கணமே மேற்கொள்ளவேண்டிய செய்திகளைப் பகர்கின்றன.

13.8 காதல் தத்துவக் கவிஞர் கண்ணதாசன்

கண்ணதாசன் திரைப்படப் பாடல்களைக் கற்பனைவளம் மிக்க இலக்கியமாக்கியவர். அவர்தம் தனிக்கவிதைகளும், சிறு காப்பியங்களும், பக்திப் பாடல்களும் சிறப்புடையன. அவருடைய பாடல்களில் பழைய சான்றோர்களின் கருத்துக்கள் பளிச்சிடும்; முன்னைய கவிதைகளின்

கற்பனைகளும் கருத்துக்கூறுகளும் கலந்து வரும். ஆனால் அவை மறுபிறப்பெடுத்துப் புதுமையோடு வருவதனால் நம்மைச் சலிப்படையச் செய்வதில்லை; மாறாக நம்மை மகிழ்ச்சியிலாழ்த்தும். கண்ணன் கீதையில் 'காலங்களில் யான் வசந்தமாக இருக்கிறேன்' என்று இவ்வாறு கூறிய கருத்துக்களை, இவர் காதலியை நினைந்து காதலன் கூறும் கவிதையாக மாற்றியுள்ளார். அவை நம்முள்ளத்தை ஈர்ப்பதுடன், காதலுக்குகந்தன வெல்லாம் தத்துவத்திற்கும் பொருந்துமென்ற உண்மையை மெய்ப்பிக்கின்றன.

பகவத் கீதையில் பார்த்தனுக்குக் கண்ணன் தன்னை உணர்த்துமிடங்கள் பலவாகும். அவை எல்லாம் இறைவனதியல்பை அழகுற, அழுத்தமாக எடுத்தியம்புவன. பத்தாம் அத்தியாயம் விபூதியோகத்தில், அர்ஜுனன், ''நீயே பரப்பிரம்மம்! நீயே பரவீடு.... ஜனார்த்தனா, நின் யோகத்தையும் பெருமையையும் விரித்து மற்றொரு முறை சொல்க! அமிர்தம் போன்ற நின் சொற்கள் எனக்குத் தெவிட்டவில்லை'' என்று கேட்கின்றான். அதற்கு பகவான் சொல்லும் பதிலில் இக்கருத்து இடம்பெறுகிறது. கீதைக்கு தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியாரின் மொழி பெயர்ப்பிலிருந்து இப்பகுதி தரப்படுகிறது.

''அர்ஜுனா! உயிர்களனைத்தின் உள்ளேநிற்கும்
ஆத்மா நான்; அவ்வுயிர்களின் ஆதி நான்;
இடையும் அவற்றின் இறுதியும் யானே''. (10:20)

''ஆதித்தயர்களில் நான் விஷ்ணு; ஒளிகளில்
நான் கதிர்சான்ற ஞாயிறு; காற்றுக்களில்
மரீசி; நட்சத்திரங்களில் சந்திரன்'' (10:21)

''அங்ஙனமே ஸாமங்களில் நான் ''ப்ருஹத்
சாமம்'' என்ற பெரிய ஸாமம்; சந்தங்களில்
நான் காயத்திரி; மாஸங்களில் நான் மார்கழி;
பருவங்களில் மலர் சான்ற இளவேனில்'' (10:35)

இந்த நினைவில்தான், கண்ணனின் தாசனான கண்ணதாசன் ஒரு காதல் பாடலை, நிலைபெற்ற இலக்கியமாகப் புத்துயிர்ப்போடு பெற்றுத் தந்துள்ளார்.

காலங்களில் அவள் வசந்தம்
கலைகளிலே அவள் ஒவியம்
மாதங்களில் அவள் மார்கழி
மலர்களிலே அவள் மல்லிகை!

பறவைகளில் அவள் மணிப்புறா
பாடல்களில் அவள் தாலாட்டு
கனிகளிலே அவள் மாங்கனி
காற்றினிலே அவள் தென்றல்?

பால்போல் சிரிப்பதில் பிள்ளை -அவள்
பனிபோல் அணைப்பதில் கன்னி
கண்போல் வளர்ப்பதில் அன்னை - அவள்
கவிஞனாக்கினாள் என்னை!

கண்ணன் தன்னை அறிமுகம் செய்வதையும் கண்ணதாசன் ஒரு பெண்ணை அறிமுகம் செய்வதையும் ஒப்பிட்டு நோக்கினால் காதலுக்கும் தத்துவத்திற்கும் வேறுபாடில்லை என்றே தோற்றுகிறது, காதலைத் தனியாகவும் தத்தவத்தைத் தனியாகவும் பாடியுள்ள கண்ணதாசன், மிகப் பெரும்பான்மையான இடங்களில் காதலையே தத்துவாக்கித்தான் பாடி யுள்ளார். இன்றைய வளர்ச்சியில் அவர் பங்கு இன்னும் மதிப்பீட்டு நிலையிலேயே உளது. எனினும் தமிழ்க்கவிதை வரலாறு அவரை மறப்பதற்கோ, மறைப்பதற்கோ இடமில்லை.

13.9 புதுக்கவிதை

புதுக்கவிதை என்பதற்கான வரைவிலக்கணம் பல்வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. இலக்கண அமைப்பு இல்லாத ஒரு கவிதை முறையாகவே புதுக்கவிதை பார்க்கப்படுகிறது. மரபுக்கவிதை சீர், தளை, அடி, தொடை என்னும் கட்டுப்பாடுகளைக் கொண்டது. இக்கட்டுப்பாடு களைப் புதுக்கவிதை புறந்தள்ளிப் புதுத்தோற்றத்துடன் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் New poetry, Modern Poetry என அழைக்கப்பட்ட கவிதை வடிவம் தமிழுக்கே உரிய முறையில் புதுக்கவிதையாகத் திகழ்கின்றது.

13.9.1 புதுக்கவிதை என்றால் என்ன?

உள்ளடக்கம், உருவம், உத்தி மூன்றிலும் புதுமையுடையதே - புதுமை படைப்பதே புதுக்கவிதை என்பார் கவிஞர் மீரா. கருத்துகள் தம்மைத்தாமே ஆளக்கற்றுக்கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை என்பது கவிஞர் மேத்தாவின் விளக்கம். சொற்கள் கொண்டாடும் சுதந்திர தின விழா என்பார் கவிஞர் வைரமுத்து. சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம், பழைய யாப்பில் உள்ளதைவிட அர்த்த ஆழமுடைய சந்த நுட்பம், சுண்டக் காய்ச்சிக் கடைசி நிலைக்குக் கெட்டிப்படுத்தும் வடிவ அமைப்பு, உள்ளடக்கமே வார்த்து அமையும் உத்திப் புதுமை, இவை எல்லாவற்றையும் விடப் புதிய பார்வை, புதிய உள்ளடக்கம். இவைதாம் புதுக்கவிதையின் அவசியத் தேவை என்று விளக்குவார் கவிக்கோ அப்துல்ரகுமான். தொடக்க காலத்தில் புதுக்கவிதை இருண்மை மிக்கதாய், படிமங்களின் சுடராய்க் காணப்பட்டது. தற்காலத்தில் அது எளிமையையும் நுட்பத்தையும் பேணுகிறது.

13.9.2 புதுக்கவிதை படைப்பாளிகள்

ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா முதலியோர் புதுக்கவிதையின் முன்னோடிகள் ஆவர். எழுத்து, தீபம் முதலிய இலக்கிய இதழ்கள் புதுக்கவிதை வளர்ச்சிக்குத் தொடக்கத்தில் மிகுந்த இடமளித்தன. மீ. ராசேந்திரன்(மீரா), அப்துல்ரகுமான், மேத்தா, தமிழன்பன், சிற்பி பாலசுப்பிரமணியம், சி.மணி, நா. காமராசன், எஸ். வைத்தீஸ்வரன், தமிழ்நாடன், புவியரசு, ஞானக்கூத்தன், இரா. வேலுச்சாமி, இரா. வைரமுத்து முதலியோர் புதுக்கவிதை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். சான்றுக்கு ஓரிரு புதுக்கவிதைகளை இங்குக் காண்போம்.

என்னுடைய சம்பளநாளில்
எண்ணி வாங்குகிற
பளபளக்கும் நோட்டுகளில்
எவரெவர் முகமோ
தெரியும்
என் முகத்தைத் தவிர (முதல் தேதி)

என மாதச்சம்பளம் வாங்கும் ஒருவரின் மனநிலையைக் கவிஞர் மு. மேத்தா நம் கண்முன் கொண்டு நிறுத்துகிறார். மாணவர்களைக் குதிரைகளாகப் காண்கிறார் சிற்பி; மாணவக் குதிரைகள் எகிறித் தாவிப் பறப்பதைப் புதுக்கவிதையாக்கித் தருகிறார். அக்கவிதை வருமாறு:

திசைகளில் தாவியோர்
வெண்குதிரைப் படை
தேசம் நடுங்க நடக்கிறது!
இசையில் கனல்வெறி
        ஏறித் ததும்பிட
எல்லைகள் தாண்டிக் கடக்கிறது!
விட்ட குளம்படி

பட்ட இடத்தில் தீ
மட்டுப் படாமல் தெறிக்கிறது
சட்டக் கயிறுகள்
வெட்டுக் கடிவாளம்
விட்டுக் குதிரை பறக்கிறது
பாட்டனும் பூட்டனும்
காட்டிய லாயத்தின்
பாசித் தரையை மிதிக்கிறது
தோட்டத்துப் புல்வெளி
வாசனை நாடியோர்
யோசனை தூரம் குதிக்கிறது *(மாணவப் புரவி)*

இத்தகைய புதுக்கவிதைகள் தோன்றி வளர்ந்த காலகட்டத்தில் 1980-களுக்குப் பிறகு புதிய நோக்கம் தென்பட்டது. அதன் விளைவாகப் பெண்ணியம், தலித்தியம் முதலிய பொருண்மைகளில் புதுக்கவிதை கிளைபரப்பத் தொடங்கியது.

13.9.3 பெண்ணியக்கவிதைகள்

பெண்ணியம் என்பது ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. பெண்களுக்குக் கல்வியறிவை மேம்படுத்துதல், அனைத்து வகையான வாய்ப்புகளையும் தருதல் ஆகியவற்றைக் கொள்கையாகக் கொண்டது. பெண்ணுக்குச் சம உரிமை என்பதில் அழுத்தமான கருத்தார்வம் கொண்டதுடன் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டது. தற்போது பெண்கள் தமக்கான வெளியையும் மொழியையும் உருவாக்கி வருகின்றனர். பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்துப் பேசும் பெண் கவிஞர்கள் அனைவரும், பெண்களுக்கு முக்கியத்தேவை கல்வி என்பதில் ஒருமித்த கருத்துக் கொண்டுள்ளனர். இத்தகைய தமிழ்ப் பெண்கவிஞர்களாக லீனா மணிமேகலை, தாமரை, கனிமொழி, கொற்றவை, குட்டிரேவதி, மாலதிமைத்ரி, பரமேசுவரி, சல்மா, ஆண்டாள் பிரியதர்ஷினி, திலகபாமா முதலியோர் விளங்குகின்றனர். சான்றுக்கு ஓரிரு கவிதைகளைக் காண்போம்.

ஊர்ப்புற, நகர்ப்புறக் குடிசைப் பகுதியில் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கிற பெண்களுக்கு இன்றும் கூடத் தொடக்க கல்வி கிடைக்க வில்லை. இத்தகைய வாழ்க்கையை அனுபவித்து வரும் பெண்களின் மனங்களில் கல்வி பயில வேண்டும் என்ற எண்ணம் துளிர்விட்டாலும் அதனை முளையிலே கிள்ளி விடுகிறார்கள் என்ற மன வேதனையை விவசாயத்தோடு ஒப்பிட்டுக் கீழ்வருமாறு கவிதையாக்கியுள்ளார் திலகபாமா.

விவசாயம் தெரிஞ்சவளுக்கு
விளைவதென்னவோ சமையலுக்கு
உங்களுக்கு மாகாது; கட்டிப்போகும்
ஊரனுக்கும் உதவாது
அவசாயம் வெளுத்துப்போகும்
விவசாயம் அவளுக்கு வேண்டாம் *(அக்கினிப் பூக்களாய்)*

வறண்ட நிலமானது மழைக்காகக் காத்திருப்பதைப் போன்று வயதுக்கு வந்த பெண்கள் வரதட்சணை சிக்கலால் திருமணமாகாமல் முதிர்கன்னிகளாய் வாழும் நிலையை,

பருவக்கோளாறு திசைமாறியதால்
குணம்விட்டுப் பணம் நாடும்
மழையாய் இங்கு மாப்பிளைகள்
வறண்ட நிலமாய் வாடுவது
வயதுக்கு வந்த வயல்தான் *(சூரியனுக்கும் கிழக்கே)*

எனச் சமூகத்தின் கோரப்பிடியைப் பறைசாற்றுகிறார்.

13.9.4 தலித்தியக் கவிதைகள்

தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், உழைக்கும் மக்கள், நில மற்றவர்கள், அரசியல் அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் சுரண்டப்படும் மக்கள் ஆகியோரைப் பற்றிப் படைக்கப்பட்ட நாவல், சிறுகதை, கவிதை இலக்கியங்கள் தலித் இலக்கியங்கள் என்று அழைக்கப் படுகின்றன. அடக்குமுறைக்கு எதிராகவும் விடுதலைக்காகவும் குரல் கொடுப்பவை தலித் கவிதைகள் ஆகும். பண்பாட்டு ஆதிக்கக் கட்டுகளை உடைப்பதாகவும் தங்கள் மீது திணிக்கப்பட்டுள்ள குற்ற உணர்ச்சியை உதறுதல் என்பதற்காகவும் தலித் கவிஞர்கள் கவிதைகளைப் படைக்கின்றனர். என்.டி. ராஜ்குமார், அன்பாதவன், மதிவண்ணன், ராஜமுருகு பாண்டியன், விழி.பா. இதயவேந்தன், பாரதிவசந்தன் முதலியோர் தலித் கவிஞர்களாக அறியப்படுகின்றனர். விழி.பா. இதயவேந்தனின் கீழ்வரும் கவிதை அடிகள் ஒடுக்கப்பட்டோரின் குரலுக்குச் சான்றாக அமைகின்றன.

தலித்துக்களின் கலையாய்
பறைகள் விறைக்க
துவண்டுபோன வாழ்வை
எமது போர்ப்பறைத் துவக்கும்

எங்கோ ஓர் மூலையாய்
உலகின் உச்சியில் நின்றுகொண்டு
விளிம்பின் நிலைகண்டு
பரிகசிக்கும்
உனக்கு முன்னால்
எமது பறைகள்
பேரிடியாய்த் தாக்கும்

கரைக்குத் திரும்பிய கடலலையாய்
உன் சுவடுகள் அழித்து
திரும்பிய எனக்குள்
சுதந்திரம் என்பது
இனி இருக்கும் எப்போதும்
எனக்குள்ளதாய் (எவரும் அறியாத நாம்)

13.9.5 ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ கவிதைகள்

கி.பி. 1916 ஆம் ஆண்டு மகாகவி பாரதியார் சுதேசமித்திரன் என்ற இதழில் ஜப்பானிய கவிதை என்ற தலைப்பில் ஹைக்கூ கவிதை குறித்த கட்டுரை ஒன்றை எழுதி அதில் இரண்டு கவிதைகளை மொழி பெயர்த்திருந்தார். அதுவே தமிழில் ஹைக்கூ கவிதையின் அறிமுகம் ஆகும். அதனைத் தொடர்ந்து அப்துல் ரகுமான் சில ஹைக்கூ கவிதைகளை எழுதி அவற்றைப் பால் வீதி என்னும் கவிதை நூலில் இடம்பெறச் செய்தார். அவரைத் தொடர்ந்து 1980-களில் ஹைக்கூ கவிதை நூல்கள் பல வெளிவந்தன. அமுதபாரதியின் புள்ளிப்பூக்கள், ஐக்கூ கவிதைகள், அறிவுமதியின் புல்லின் நுனியில், பனித்துளி; ஈரோடு தமிழன்பனின் சூரியப் பறைகள்; கழனியூரனின் நிரந்தர மின்னல்கள் ஆகியன குறிப்பிடத் தக்கன. கவிஞர் அமுதபாரதியின் கீழ்வரும் ஹைக்கூ கவிதைகள் சமூகத்தில் வரதட்சணை வகிக்கும் பங்கையும் பள்ளிக் குழந்தைகள் சுமக்கும் புத்தகச் சுமையையும் நம் கண்முன் நிழலாடச் செய்கின்றன.

துளியாய்ச் சேமிப்பு
சேர்ந்தது பெருந்தொகை
சீச்சீ வரதட்சணைக் கொள்கை (புள்ளிப்பூக்கள்)

வலிக்கிறது நெஞ்சம்
எத்தனை புத்தகங்கள்
சுமக்கும் குழந்தை முதுகு (புள்ளிப்பூக்கள்)

13.9.6 சென்ரியு கவிதை

தமிழில் மரபுக் கவிதைகளுக்குப் பின் புதுக்கவிதை தோற்றம் பெற்றது போல, ஹைக்கூ கவிதைக்குப் பிறகு சென்ரியு கவிதை வடிவம் தோற்றம் பெற்றது. ஹைக்கூவிலிருந்து மாறுபட்டு மக்களைப் பற்றிய கவிதைகளாகச் சென்ரியு உருவாகத் தொடங்கியது. 2001-ஆம் ஆண்டு ஈரோடு தமிழன்பன் ‘ஒரு வண்டி சென்ரியு’ என்னும் நூலை வெளியிட்டார்.

தொகுதிதான்
முடிவாகவில்லை
தோல்வி முடிவாகி விட்டது

பணம்
எதையும் செய்யும், தெரிந்தவர்கள்
பணம் செய்தார்கள்

தமிழன்பனின் மேற்குறித்த இரு கவிதைகளும் தேர்தலில் தோல்வி குறித்தும் சமூகத்தில் பணத்தின் பங்கு குறித்தும் எடுத்துச் சொல்கின்றன.

13.9.7 லிமரைக்கூ கவிதை

சென்ரியு கவிதையைத் தொடர்ந்து லிமரைக்கூ கவிதை என்ற ஒரு வடிவம் தமிழில் அறிமுகம் ஆனது. ஐந்து அடிகளைக் கொண்ட இந்தக் கவிதையைத் தமிழில் ஈரோடு தமிழன்பன் எழுதி அறிமுகம் செய்தார். இதனை வேடிக்கை, விநோதம், நகைச்சுவை, சமூக விழிப்புணர்வு என்னும் வகையில் எழுதலாம். இக்கவிதை வடிவம் ஹைக்கூ மற்றும் சென்ரியு ஆகியவற்றின் கலவை என்று கூறுவர். லிமரைக்கூ கவிதைக்குச் சான்றுகள் சில காண்போம்

மாப்பிள்ளைக்கும் பணம்
காலமாய் காதல் செய்தவரின்
மாறியது குணம்

அரசு துறையில் தனியார்
தொழிற்சங்கத் தலைவர் இரட்டை வேடம்
இவரைக் கேட்போர் இனியார்

புதுக்கவிதைக்குப் பின்னர் அதன் மொழி அமைப்பிலும் வெளியிடும் பாங்கிலும் மேற்சொல்லியவாறு பல மாறுதல்கள் ஏற்பட்டன. இவை புதுக்கவிதையின் சாராம்சமாய் நாளுக்கு நாள் பல வடிவங்களில் தழைத்து வருகின்றன.

13.10 பாடத் தொகுப்புரை

தமிழில் அரும்பி வளர்ச்சி பெற்ற கவிதை மறுமலர்ச்சியை- கவிதை இலக்கிய வளர்ச்சியை ‘மறுமலர்ச்சிக் கவிதைகள்’ என்னும் பாடம் வழியாகக் கண்டோம். பாரதியார், கவிமணி, நாமக்கல் கவிஞர், பாரதிதாசன் என்ற முதல் நால்வரைப் பற்றிச் சான்றுப் பாடல்களுடன் நன்கு தெரிந்து கொண்டோம். நூற்றுக்கணக்கான கவிஞர்கள் இருப்பினும் அறிமுக நிலையில் குறிப்பிடத்தக்க சிலரைப்பற்றித் தெரிந்து கொண்டோம். மேலும் புதுக்கவிதையின் வளர்ச்சியில் பெண்ணியக் கவிதை, தலித்தியக்கவிதை,

ஹைக்கூ, சென்ரியூ, லிமரைக்கூ ஆகிய கவிதைகளையும் கவிஞர்களையும் தெரிந்துகொண்டோம். தற்காலக் கவிதை இலக்கியம் எளிமையானது, அத்துறையில் நீங்கள் விருப்பமாகப் படித்து, உங்களுக்கு விருப்பமான - திறமை மிக்க கவிஞர்களின் பாடல்களைப் படித்து இன்புறலாம். நீங்களும் சிறந்த கவிஞர்கள் ஆகலாம். முயன்று பாருங்கள்.

13.11 தொடர்ந்து படித்தற்குரிய துணைநூல்கள்

1. **பாரதியார் கவிதைகள்**, வானவில் பிரசுரம், சென்னை
2. **மலரும் மாலையும்**, கவிமணி, பாரி நிலையம், சென்னை
3. **பாரதிதாசன் கவிதைகள்**, பாரி நிலையம், சென்னை
4. **சிரிக்கும் பூக்கள்**, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, பாரி நிலையம், சென்னை
5. **விண் சமைப்போர் வருக**, குலோத்துங்கன், பாரதி பதிப்பகம், சென்னை
6. **பாடுங்குயில்**, முடியரசன், அகரம் வெளியீடு, சிவகங்கை
7. **வாழையடி வாழை,** சி. பாலசுப்பிரமணியன், பாரி நிலையம், சென்னை
8. **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு**, தமிழண்ணல், மதுரை
9. **புதுக்கவிதை அணிவகுப்பு,** இரா. மோகன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
10. **சூரியனுக்கும் கிழக்கே**, திலகபாமா, மின்னூல், தமிழ் ஆதர்ஸ்
11. **அக்கினிப் பூக்களாய்**, திலகபாமா, மின்னூல், தமிழ் ஆதர்ஸ்
12. **எவரும் அறியாத நாம்**, விழி.பா. இதயவேந்தன், மாருதா பதிப்பகம், சென்னை
13. **பால்வீதி**, அப்துல் ரகுமான், யூனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை
14. **புள்ளிப்பூக்கள்**, அமுதபாரதி, நர்மதா பதிப்பகம், சென்னை
15. **ஐக்கூ கவிதைகள்**, அமுதபாரதி, நர்மதா பதிப்பகம், சென்னை
16. **ஒரு வண்டி சென்ரியு,** ஈரோடு தமிழன்பன், கிழக்குப் பதிப்பகம், சென்னை
17. **ஈரோடு தமிழன்பன் கவிதைகள் (மின்னூல்)**, நிலாச்சாரல் லிமிட்டெட்

தன்மதிப்பீடு : 4

1. வெள்ளைப்பசு பற்றிப் பாடியவர் யார்?
2. அறிவியல் கவிஞர் குலோத்துங்கனின் 'மாநாடு சென்றிருந்தேன் இருவர் தூக்க' என்னும் கவிதை இடம் பெற்றுள்ள நூல் எது?
3. 'காலங்களில் அவள் வசந்தம்' பாடலை எழுதிய கவிஞர் யார்?
4. புதுக்கவிதை முன்னோடிகள் இருவரைக் குறிப்பிடுக.
5. புதுக்கவிதைக்கு மீரா, மேத்தா ஆகியோர் தரும் விளக்கங்கள் யாவை?
6. பெண்ணியத்தின் கொள்கை என்ன?
7. பெண்ணியக் கவிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.
8. தலித் இலக்கியங்கள் என்றால் என்ன?
9. தமிழில் ஹைக்கூ கவிதையின் அறிமுகம் குறித்துக் குறிப்பிடுக.
10. ஈரோடு தமிழன்பனின் சென்ரியு நூல் எது?
11. தமிழில் முதலில் லிமரைக்கூ கவிதையை அறிமுகம் செய்தவர் யார்?

தன்மதிப்பீடு-1 : விடைகள்

1. ந. பலராமையர், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.
2. பாரதத்தாய் பற்றிப் பாடும்போது தேசிய உணர்வையும், தேசிய ஒருமைப்பாட்டையும், பாரதியார் வெளிப்படுத்துகிறார். 'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும் என்று பிறந்தவள் என்றுணராத' பாரதத்தாயின் சிறப்பைப் பாடும்போது தேச உணர்வு கிளர்ந்தெழுகிறது. 'செப்புமொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்' என்று, தேசிய ஒற்றுமையை ஒருமைப்பாட்டை அவர் மிக அழுத்தமாகப் பாடுகிறார்.
3. தமிழர்களைத் தட்டி எழுப்பித் தமிழின் பெருமையையும் தமிழ்ப் பெரும்புலவர்களின் பெருமையையும் அவர் எடுத்துரைக்கிறார். தமிழைத் தெருவெல்லாம் பரப்பிச் செழிக்கச் செய்ய வேண்டும் என்று அனைவரையும் அழைக்கிறார்.

தன்மதிப்பீடு-2 : விடைகள்

1. மருமக்கள் வழி மான்மியம்
2. தே.வி.யின் கீர்த்தனங்கள்
3. நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை

தன்மதிப்பீடு-3 : விடைகள்

1. உலக சகோதரத்துவம் பற்றிய பிரெஞ்சுக் கோட்பாடு
2. நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்

தன்மதிப்பீடு-4 : விடைகள்

1. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை
2. விண் சமைப்போர் வருக
3. கவிஞர் கண்ணதாசன்
4. ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா
5. மீரா : உள்ளடக்கம், உருவம், உத்தி மூன்றிலும் புதுமையுடையதே - புதுமை படைப்பதே புதுக்கவிதை.

   மு. மேத்தா : கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக்கற்றுக்கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை.
6. பெண்ணியம் என்பது ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. பெண்களுக்குக் கல்வியறிவை மேம்படுத்துதல், அனைத்து வகையான வாய்ப்புகளையும் தருதல் ஆகியவற்றையே கொள்கையாகக் கொண்டது.
7. ஆண்டாள் பிரியதர்ஷினி, திலகபாமா
8. தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், அரசியல் அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் சுரண்டப்படும் மக்கள் ஆகியோரை மையமாகக் கொண்டு படைக்கப்படும் இலக்கியங்கள்.
9. கி.பி. 1916 ஆம் ஆண்டு மகாகவி பாரதியார் சுதேசமித்திரன் என்ற இதழில் ஜப்பானிய கவிதை என்ற தலைப்பில் ஹைக்கூ கவிதை குறித்த கட்டுரை ஒன்றை எழுதி அதில் இரண்டு கவிதைகளை மொழி பெயர்த்திருந்தார். அதுவே தமிழில் ஹைக்கூ கவிதையின் அறிமுகம் ஆகும்.
10. ஒரு வண்டி சென்ரியு
11. ஈரோடு தமிழன்பன்